

கனவுத்தீவு
2 ஆம் பாகம்
எஸ்.டேவிட் ஜெரோம்தாஸ்
சுசீலா கோகுல்நாத்

கூண்டுக்குள் குருவி

(இரண்டாம் பாகம்)

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டி பஜார்
தியாகராய நகர், சென்னை - 600 017

கூண்டுக்குள் குருவி

பாகம் இரண்டு

தீபாவளிப் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது. விஸ்வநாதன் ஆர்ப்பாட்டங்களைப் பண்ணத் தொடங்கினார். ரேகா அவர் விரும்பியபடி இனிப்புக்களைத் தயாரிக்க வேண்டியிருந்தது.

பண்டிகைக்கு நான்கு நாட்களுக்கு முன்னால் அவர் ரேகாவைக் கூப்பிட்டு ரஞ்சிதாவை அழைத்துக் கொண்டு போய் தேவையான உடைகளையும், பொம்மை, பட்டாசு, மத்தாப்புக்களையும் வாங்கித் தரச் சொல்லி பணம் தந்தார்.

ரேகாவுக்கு இந்த ஷாப்பிங் மிகவும் பிடிக்கும். பணத்தைக் கணக்குப் பார்த்துப் பார்த்துச் செலவழிக்காமல், கையிலிருக்கும் பணம் போதுமா, தீர்ந்துபோய் கொண்டிருக்கிறதே என்ற கவலை எதுவும் இல்லாமல் வேண்டியதை வாங்கிக்கொள்ள முடிந்தது ஆர்வத்தை ஊட்டிற்று.

அவள் குடும்பத்திலும், அவளைச் சுற்றி இருந்தவர்களின் வீடுகளிலும் கவனித்திருக்கிறாள். ஒரு பண்டிகைக்காகக் கொஞ்சம் செலவழித்து விட்டால் அப்புறமாய் அந்த வீட்டார் பலவிதங்களில் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

சொந்தக்காரர்கள் யாராவது நான்கு நாள் வந்து தங்கிவிட்டால் போதும், அப்பொழுது ஆன கடனைத் தீர்ப்பதற்காக அந்தக் குடும்பம் வாரக்கணக்கில் ரசமும் சாதமும் மட்டுமே சாப்பிட வேண்டும்.

இதென்ன வாழ்க்கை என்று தோன்றிற்று ரேகாவுக்கு! நடுத்தரக் குடும்பத்தாரின் வாழ்க்கை சந்தோஷத்தையெல்லாம் இந்த வறுமை சூறையாடிக் கொண்டிருந்ததாய் தெரிந்து கொண்டாள்.

விஸ்வநாதன் கடைக்குப் போய் விட்டு வரச் சொன்னதுமே ரேகா லலிதாவின் அறைக்கு வந்து அவளையும் தம்மோடு வரச்சொல்லி வற்புறுத்தினாள்.

"நான் எதற்கு? நீங்கள் போய் வாங்க." என்றாள் லலிதா.

அந்த வார்த்தைகளில் தந்தை தன்னிடம் சொல்லவில்லையே என்ற மனத்தாங்கல் தென்பட்டது.

ரேகா அதைப் புரிந்து கொண்டவளாய்—"அப்பா, நம் மூவரையும் போயிட்டு வர சொன்னார்" என்றாள்.

''நான் நிஜமாய் போகணும் என்று அவர் எண்ணி யிருந்தால் என்னிடமே சொல்லியிருப்பார். சொல்லா விட்டால் போகட்டும், தப்பித்தேன், எனக்கு வர ஒழி வில்லை. கிளப்பில் தீபாவளியன்றைக்கு ஸ்பெஷல் புரோகிராம் இருக்கிறது. ஒத்திகை பார்த்துக் கொள்ள ணும். நீங்கள் போய் வாருங்கள். என்னால் வரமுடி யாது'' என்றாள் நிலைக்கண்ணாடிக்கு முன்னால் ஒய்யாரமாய் நின்று தன்னை சிங்காரித்துக் கொண்டே.

ரேகா லலிதாவின் மூடை தெரிந்து கொண்டவ ளாய் அதிகமாய் வாதாடாமல் ரஞ்சிதாவை அழைத்துக் கொண்டு அங்கிருந்து வந்து விட்டாள்

வாசலில் கார் சித்தமாய் இருப்பதாய் டிரைவர் வந்து சொல்லி விட்டுப் போனான்.

''சீக்கிரமாய் போய்விட்டு வாங்கம்மா''விஸ்வநாதன் எச்சரித்தார்.

ரேகா தலையாட்டி விட்டு, ரஞ்சிதாவின் கையைப் பிடித்துக் கொண்டு வெளியே வந்தபொழுது விமலன் உள்ளே வந்தான்.

விஸ்வநாதன் விமலனையும் ரேகாவுடன் கடைக்கு போகச் சொல்லி வற்புறுத்தினார்.

விமலனைப் பார்த்ததும் ரஞ்சிதாவின் முகம் மலர்ந்தது.

விமலன் சட்டென்று ரஞ்சிதாவை தூக்கிக் கொண் டான்.

ரேகாவின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த ரஞ்சிதா கையை விடாததால், ரேகாவின் கைகூட ரஞ்சிதாவோடு மேலே போய் விமலனைத் தொட்டது. ரேகா சட்டென்று கையை இழுத்துக் கொண்டாள். வினாடி நேரம் விமலனின் பார்வை ரேகாவின்

கண்ணோடு கலந்து சட்டென்று விடுபட்டுப் போயிற்று.

சமையல்காரன் தந்த காபியைக் குடித்து விட்டு விமலனும் அவர்களோடு புறப்பட்டான்.

காரை ஓட்டுவதற்கு டிரைவர் இருந்ததால் விமலன் கூட ரஞ்சிதாவோடு சேர்ந்து பின்சீட்டிலேயே ஏறி உட்கார்ந்து கொண்டான்.

விமலனோடு சேர்ந்து அவ்வாறு காரில் போவது ரேகாவுக்கு ஏதோ போலிருந்தது.

அந்த பயங்கரமான ஞாபகம் அவளுக்கு மட்டுந் தானா? அவனுக்கும் இல்லையா? திரும்பி அவனைப் பார்க்க வேண்டுமென்றும், அவன் முகத்தில் எப்படிப் பட்ட உணர்ச்சி தென்படுகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவள் மனம் தவித்த போதிலும் தைரியம் போதாமல் பேசாமலிருந்து கொண்டாள்.

உற்சாகமில்லாமல் புறப்பட்ட ரேகா ஒன்றிரண்டு கடைகளைச் சுற்றியதுமே அதையெல்லாம் மறந்து போனாள்.

துணிக்கடையில் முதலாளிகள் விமலனோடு நன்றாய் பரிச்சியமானவர்களைப் போல பேசினார்கள். விஸ்வநாதனின் உடல் நலத்தைப் பற்றி குசலம் விசாரித்தார்கள். குளிர்பானங்களை வரவழைத்து தந்தார்கள். எதுவும் பேசாமல் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதே ஒரு சிறப்பாய் தோன்றிற்று ரேகாவுக்கு.

விமலன் ரஞ்சிதாவுக்கு வேண்டிய கௌன்களை தேர்ந்தெடுத்திருந்த நேர்த்தியைப் பார்த்து அவள் வியப்படைந்தாள்.

அவளுக்கு கமலன் வீட்டில் சாமான்களைத் தேர்ந்தெடுத்திருந்த விதத்தில் விமலனின் கை ஒவ்வொரு அணுவிலும் சிறப்பாய் இருந்தது ஞாபகத்திற்கு வந்தது.

கௌன்கள் அடங்கிய பெட்டியை டிரைவரிடம் தந்துவிட்டு, பக்கத்திலேயே 'எல்லாவிதமான புடவைகளும் எங்களிடம் கிடைக்கும்' என்ற போர்டு தொங்கிய கடையை நோக்கி அடியெடுத்து வைத்தான்.

புடவைகள் விஷயத்தை விஸ்வநாதன் ரேகாவிடம் சொல்லவில்லை. விமலன் அந்தக் கடைக்கு ஏன் போகிறான் என்று ரேகாவுக்குப் புரியவில்லை.

விமலன் புடவைகள் வேண்டுமென்று சொன்னதுமே கடைக்காரன் விதவிதமான புடவைகளைக் கொண்டு வந்து பரப்பினான். விமலன் அவற்றில் சிறிய பூக்கள் போட்ட ஜரிகை பார்டருடன் இருந்த நான்கு புடவைகளைத் தேர்ந்தெடுத்து பேக் பண்ணச் சொன்னான்.

ரேகாவுக்குப் புடவைகள் விஷயத்தில் அவன் தன்னைக் கலந்து ஆலோசித்திருந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று. அவளையறியாமலேயே கோபம் வந்தது.

வந்து எவ்வளவு நேரம் ஆகிவிட்டது! அவன் ஒரு சின்ன வார்த்தை மரியாதைக்காகக்கூட பேசவில்லை.

உடைகள், பொம்மைகள் வாங்கிய பிறகு மூவரும் பட்டாசு கடைக்குப் போனார்கள். ஒரிடத்தில் சில கடைகள் வரிசையாய் இருந்தது. கடைகளில் விளக்கு வெளிச்சங்கள் பட்டப்பகலாய் எரிந்துகொண்டிருந்தன. எல்லாக் கடைகளிலும் எள் விழ இடமில்லாதவாறு ஜனத்திரள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

விமலன் ஒரு கடைக்குள் கும்பலை விலக்கிக் கொண்டு போய் என்னென்ன வேண்டும் என்பதைச் சொல்லிவிட்டு பேக் பண்ணித் தரச்சொன்னான். அந்த கும்பலில் ஆள் கண்மறைவாகிவிட்டால் கண்டு பிடிப்பது கஷ்டம். அந்த பயத்தால் ரேகா விமலனை விடாமல் கூடவே நடந்து கொண்டிருந்தாள். அவளுக்கு வேறு ஏதோ உலகத்திற்குள் நுழைந்து விட்டாற்போல இருந்தது. வியப்போடு அச்சூழ்நிலை களையெல்லாம் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்த ரேகா, தனக்குப் பக்கத்தில் வந்து நின்ற ஒரு ஆளைப் பார்த்ததுமே திடுக்கிட்டாள்.

அவன் சரியாய் தென்படாதவாறு நடுவில் யாரோ குறுக்கிட்டுவிட்டார்கள். ரேகா சட்டென்று முன்னுக்கு வந்து அந்த ஆளைக் கூர்ந்து பார்த்தாள். உடனே தாங்க முடியாத சந்தோஷத்தோடு தன்னை மறந்து போனவளாய், இரண்டடிகள் அவனை நோக்கிப் போய் கையைப் பிடித்துக் கொண்டே, ''சேகர்'' என்றாள்.

விலையுயர்ந்த ஃபுல்சூட்டில் இருந்த அவன் திடுக்கிட்டுப் போனவனாய் அவளைப் பார்த்தான். சங்குசக்கிரம் எவ்வளவு வேண்டும் என்று கடைக்காரனிடம் சொல்லிக் கொண்டிருந்த விமலன்கூட நின்று இந்த பக்கமாய் பார்த்தான்.

''சேகர்! நீ பம்பாயிலிருந்து எப்பொழுது வந்தாய்?'' தாங்க முடியாத ஆச்சரியத்தோடு பரபரப்புடன் கேட்டாள்.

ஃபுல் சூட்டில் இருந்த அந்த ஆள் ரேகா பிடித்துக் கொண்டிருந்த தன் கையை மென்மையாய் விடுவித்துக் கொண்டே 'சாரீ, மேடம்! யூ ஆர் மிஸ்டேக்கன் மீ ஃபர்

சம்படி! ஐயாம் லால். என்ஹெச் லால்!'' என்றான் அழுத்தி உச்சரித்துக் கொண்டே.

''வாட் ஈஸ் தட் டார்லிங்?'' குட்டையான ஸ்கர்ட்டும் ப்ளவுஸும் அணிந்து கொண்டிருந்த ஆங்கிலோ இந்தியப் பெண் ஒருத்தி சட்டென்று கிட்டே வந்தாள். அவள் கண்களில் தென்பட்ட பயமும் கலக்கமும் விமலனின் கூரிய பார்வையில் படாமலில்லை.

''நத்திங். ஷீ ஈஸ் மிஸ்டேக்கன் மீ ஃபர் சம்படி'' அவன் வந்த காரியம் முடிந்துவிட்டது போலிருந்தது. பாக்கெட்டை எடுத்துக் கொண்டு கடைக்காரன் தந்த சில்லறையை வாங்கிக்கொண்டு, ரேகாவுக்கும் விமலனுக்கும் தலை குனிந்தபடி மிக வினயமாய் வணங்கிவிட்டு அப்பெண்ணோடு போய்விட்டான்.

''யார் அவன்?'' விமலன் ரேகாவைக் கேட்டான். ஆனால் ரேகாவுக்கு அது காதில் விழவில்லை. சலனமில்லாதவளாய் அப்படியே பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள். சேகரும் அந்தப் பெண்ணும் போய், வெளியே நிறுத்தியிருந்த கருப்புக் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். சேகரே டிரைவ் பண்ணினான். கார் நகர்ந்தது. ரேகா பார்த்துக் கொண்டிருந்த பொழுதே கார் கண்மறைவாகி மறைந்து போய்விட்டது.

சேகர் குறைந்தபட்சம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. ரேகா இன்னும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள். ''இனி போகலாமா?'' விமலன் வந்து ரேகாவின் மணிக்கட்டின் மீது பட்டும் படாமலுமாய் தட்டியபடி கேட்டான்.

ரேகா திரும்பிப் பார்த்தாள். விமலனின் மனமெல்லாம் ஏதோபோலாகிவிட்டது. காரணம் ரேகாவின் கண்களில் நீர் துளிர்த்திருந்தது.

''யார் அவன்?'' மறுபடியும் கேட்டான்.

"என் தம்பி சேகர்" தன்னையறியாமல் நாக்கு நுனி வரையிலும் வந்துவிட்ட வார்த்தைகளை ஒருவாறு விழுங்கிக் கொண்டாள். அவன் தன் தம்பி என்று சொன்னால் விமலன் போய் இச்சம்பவத்தை விஸ்வநாதனிடம் சொல்லலாம். சேகரைப் பார்க்க வேண்டும் என்று அவரோ தவித்துக் கொண்டிருக்கிறார். சேகர் ஊரிலிருந்து வந்ததும் அவனால் தன்னிடம் வர முடியாவிட்டால் தன்னையே அவனிடம் கூட்டிக் கொண்டு போகச் சொல்லி அடிக்கடி அவளை வற்புறுத்திக் கொண்டேயிருந்தார். ரேகா அவனைக் கூப்பிட்டதும், அவன் அடையாளம் தெரிந்து கொள்ளாதது போல நடித்து விட்டு இன்னொரு பெண்ணோடு போய் விட்டதும், ரேகா கலங்கிப் போய் கண்ணீர் விட்டதும் இதெல்லாம் விமலனுக்கு வேறு அர்த்தங்களைக் கற்பித்தன. அவன் யாரோ மிகப் பணக்காரனாகவே தென்பட்டான். ரேகாவுக்குப் பணக்காரர்களைத் தவிர வேறு யாருமே தட்டுப்படமாட்டார்களோ?

இருவரும் வெளியே வந்துவிட்டார்கள். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் ஏறக்குறைய தன் தோளில் உராய்ந்தாற்போல தன்னோடு நெருக்கமாய் நடந்து வந்து கொண்டிருந்த ரேகா, அவனுக்கு மிக சிநேகமானவளாய் தோன்றினாள்.

அந்த சிநேகிதம் அவனுக்கு இனிமையானதாய் தோன்றிற்று. இந்த ஷாப்பிங் முடிந்ததுமே ரேகாவை காபி குடிக்கலாம் என்ற சாக்கில் ஏதாவது ஓட்டலுக்கு அழைத்துக் கொண்டு போய் கமலன் விஷயத்தில் அவசரப்பட்டு துடுக்காய் நடந்துகொண்டுவிட்டதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று நிகழ்ந்த இச்சம்பவத்தால் அவன் யோசனை சிதறிப்போய்விட்டது.

விமலன் அன்றிரவு படுத்துக் கொண்டானே தவிர, அவனுக்கு உறக்கமே வரவில்லை. அடிக்கடி கண்ணீர் மல்கியபடி நின்ற ரேகாவின் முகமும் விலையுயர்ந்த உடைகளோடு பணக்காரனைப் போல தென்பட்ட அவனும்தான் நினைவிற்கு வந்து கொண்டிருந்தார்கள். அவன் தவறு பண்ணிவிட்டான். ரேகாவின் தோளைப் பிடித்து உலுக்கியாவது அவன் யார் என்று கேட்டிருக்க வேண்டும். ஆனாலும் ரேகாவுக்கு தான் எத்தனைபேர் சிநேகிதர்கள் இருக்கிறார்கள்? யார் இந்த சேகர்? ஏன் பேசவில்லை அவன்? பக்கத்தில் தான் இருந்ததாலா? அல்லது அவனுக்குப் பக்கத்தில் அந்தப் பெண் இருந்ததுகூட காரணமா? விமலனுக்கு முன்போல் ரேகாவின் மீது கோபம் வரவில்லை. என்ன இருந்தாலும் பெண். துணை எதுவும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ரேகாவைப் பார்த்தபோது அவனுக்கு இரக்கமாய் இருந்தது. ஒரு முறை அவனும் ரேகாவும் நேருக்குநேராய் உட்கார்ந்து கொண்டு மனதைத் திறந்து சங்கோஜமில்லாமல் பேசிக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ரேகா ஒளிவு மறைவில்லாமல் தன் கடந்த காலத்தைப் பற்றியெல்லாம் சொல்லிவிட்டால்? அது எப்படிப்பட்டதாய் இருந்தாலும் மன்னித்து, மனப்பூர்வமாய் ரேகாவை ஏற்றுக் கொள்ள அவன் சித்தமாய் இருந்தான். ஆனால் இது நடக்குமா! கொஞ்ச நாட்களாய் அவனுக்கு ஒரு விஷயம் மட்டும் நன்றாய் தெரிந்துவிட்டது. மனைவி என்று ஒருத்தி தன் வாழ்க்கையில் வரவேண்டும் என்று விரும்பினால் அது ரேகாவாகவே இருக்க வேண்டும். பகை என்ற பெயரிலோ, துவேஷம் என்ற பெயரிலோ அப்பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டான் அவன். அந்தப் பெண்ணை மனைவியாய் அடைவது முடியாத காரியமாயிருந்தால் வாழ் நாளெல்லாம் அவன் பிரம்மச்சாரியாகவே இருந்துவிடுவான். அவன் மீது கொஞ்சமும்

மதிப்பில்லாமல், அணுவணுவும் அவனை வெறுத்துக் கொண்டேயிருக்கும் பெண்ணிடம் சலனத்தைக் கொண்டு வந்து, அன்பைத் தோற்றுவிப்பது என்பது உண்மையிலேயே அவன் சாமர்த்தியத்திற்கு ஒரு சவால்தான். ரேகா அந்த விதமாய் தனக்குத் தெரியாமலேயே விமலனை சவாலிட்டு அழவைத்துக் கொண்டிருந்தாள்.

தூக்கம் வராத விமலன் எழுந்து உட்கார்ந்து கொண்டு கமலனுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினான். அதில் ரேகாவும் அவனும் சேர்ந்து கடைக்குப் போன பொழுது நடந்த இச்சம்பவத்தைச் சுருக்கமாய் தெரியப் படுத்திவிட்டு சேகர் என்ற ஆள் யார், அவனுக்கும் ரேகாவுக்கும் என்ன சம்பந்தம், அவர்கள் பரிச்சியம் எப்படிப்பட்டது என்று தெரியப்படுத்தும் படியாய் கேட்டு எழுதினான்.

2

அன்றிரவு ரேகாவுக்குத் தூக்கமே வரவில்லை. தாங்க முடியாத துக்கம் வந்தது. ரயில்வே ஸ்டேஷனைத் தாண்டி ஒரு இடுக்கான சந்தில் இருந்த ஓட்டலில் சேகரை சந்தித்துப் பேசியது நினைவிற்கு வந்தது அவளுக்கு. அவள் விடியும் வரை உட்கார்ந்து சேகரைப் பற்றித் தான் பட்டுக் கொண்டிருந்த துன்பத்தையெல்லாம் கடிதத்தில் எழுதினாள்.

காலையில் எழுந்ததுமே காம்பவுண்டுச் சுவற்றிற் கருகில் போய், அனுமந்துவைக் கூப்பிட்டாள். கொல்லையில் உடற்பயிற்சி பண்ணிக்கொண்டிருந்த அவன் ரேகாவின் அழைப்பைக் கேட்டுவிட்டு டக்கென்று நிறுத்திவிட்டு ஓடிவந்தான்.

''அனுமந்து! உன்னோடு ஒரு சின்ன வேலை இருக்கு எனக்கு ஒரு உதவி பண்ணித்தருவாயா?'' அன்பொழுகக் கேட்டாள் ரேகா. அனுமந்தன் 'பண்ணுகிறேன்' என்று தலையாட்டினான்.

''உன்னோடு ஒரு இடத்துக்கு துணையாய் வரணும். வருவாயா?''

அனுமந்தன் அன்றைக்கு ஓட்டலில் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்து சந்தேகத்துடன் பார்த்தான்.

''ரோம்ப நேரமாகாது. வெறுமே போகணும், வரணும், அவ்வளவுதான். உனக்கு எந்த தொந்தரவும் ஏற்படாது.''

ரேகாவோடு தான் பேசுவதை பாட்டி எங்கேயிருந்தாவது பார்க்கிறாளா என்று — பயந்து பயந்து சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''சரி வரேன்'' என்றான்.

''தாங்க்ஸ். ரெண்டு பேருமாய் சேர்ந்து போக வேண்டாம். நான் சரியாய் ஒன்பது மணிக்கு நம்பர் டூ பஸ் ஸ்டாண்டில் உனக்காகக் காத்துட்டிருக்கிறேன். நீ வந்து விடு. என்ன சொல்கிறாய்?''

'சரி' என்று தலையாட்டினான். ரேகா நிம்மதியடைந்தவளாய் அங்கிருந்து வந்துவிட்டாள்.

சரியாய் ஒன்பது மணிக்கு ரேகா பஸ் ஸ்டாண்டிற்கு வந்தபொழுது அனுமந்தன் அதற்குள் அங்கே வந்து காத்திருந்தான்.

ரேகா காலியாய் போய்க் கொண்டிருந்த டாக்ஸி ஒன்றைக் கூப்பிட்டாள். இருவரும் ஏறிக்கொண்டதும் டாக்ஸி சென்ட்ரல் ஸ்டேஷனைத் தாண்டிக்கொண்டு சென்றது. ஜாக்கிரதையாய் திரும்பத் திரும்ப ஞாபகப் படுத்திக்கொண்டே எப்படியோ ஒருவாறு அன்றைக்கு சேகர் தன்னை அழைத்துக்கொண்டு போன ஓட்டலை

கண்டு பிடித்துவிட்டாள். அந்தப் பழைய ஓட்டல் கட்டிடத்தைப் பார்த்ததுமே உயிர் திரும்பி வந்தாற் போல ''இங்கேதான்! நிறுத்து! நிறுத்து'' என்று இரைந்து கத்தினாள். டாக்ஸி நின்றது.

ரேகா இறங்கிக்கொண்டு டாக்ஸி டிரைவரிடம்''நான் இதோ வரேன். நீ இருக்காயா போய் விடுகிறாயா? இருக்கிறேன் என்றால் வெயிட்டிங் சார்ஜ் தரேன்'' என்றாள். டிரைவர் இருக்கிறேன் என்று தலையாட்டினான். ரேகா இந்த ஓட்டலுக்கு ஏன் வருகிறாள் என்று அனுமந்துவுக்குப் புரியவில்லை. வேறு வழியில்லாமல் அவளை பின் தொடர்ந்து உள்ளே போனான்.

ரேகா நேராய் முதலாளியிடம் போய், ''சேகர் இருக்கானா?'' என்று கேட்டாள். நேராய் உள்ளே வந்துகொண்டிருந்த ரேகாவைப் பார்த்துக்கொண்டிருந்த முதலாளி அவள் கேள்வி காதில் விழாதது போல சட்டென்று பதில் சொல்லவில்லை. ரேகா நயந்து சொல்ல தொடங்கினாள்.

''நான் அவன் சிஸ்டர். எங்கம்மாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாய் இருக்கு. அவனோடு ஒரு நிமிஷம் பேசிவிட்டு போய்விடுகிறேன். என்னை நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். இதற்கு முன்பே சேகரோடு ஒரு தடவை வந்திருக்கேன்'' என்றாள்.

முதலாளி என்ன நினைத்துசொண்டாரே தெரியாது. சர்வரை கூப்பிட்டு மலையாளத்தில் ஏதோ கேட்டார். அவன் ரேகாவைப் பார்த்து தலையாட்டிவிட்டு பதில் சொன்னான் — 'அன்றைக்கு சேகரோடு வந்த பெண் இதுதான்' என்று அவன் உறுதிமொழி சொன்னாற் போலிருந்தது. சர்வர் உள்ளே போனான்.

முதலாளி குடும்ப அறையை காட்டி ''அங்கே போய் உட்கார்ந்திருங்க, சொல்லியனுப்பியிருக்கேன். இதோ வந்துவிடுவான்'' என்றான்.

"அனுமந்து! நீ இங்கேயே இந்த காபி செக்ஷனில் உட்கார்ந்து காபி குடித்துக் கொண்டிரு. நான் இப்பொழுதே வரேன்" என்றாள். அனுமந்தனின் முகம் சுருங்கிவிட்டது. விருப்பமில்லாமலேயே தலையாட்டினான். ரேகா குடும்ப அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

பம்பாயிலிருந்து வந்ததுமே கண்டிப்பாய் தன்னை வந்து சந்திப்பான் என்று ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது குறைந்த பட்சம் வந்ததாய் கூட தெரியப்படுத்தாமல், பார்த்தும்கூட பாராததை போல போய்விட்டானே! பதினைந்து நிமிஷங்களுக்கு பிறகு சேகர் வந்தான். அவளை பார்த்ததுமே சட்டென்று "நீயா?" என்றான்.

"பின்னே யாருன்னு நினைத்தாய்?"

சேகர் சட்டென்று தன் வியப்பை அடக்கிக்கொண்டு கிட்டே வந்து— "நீ என்று கனவிலும் நினைக்கவில்லை. உனக்காக ஒரு பெண் வந்திருக்கிறாள் என்றதும் வேறு யாரோன்னு நினைத்துக்கொண்டேன்" என்றான்.

"உனக்காக நிறைய பேர் பெண்கள் வருவார்கள் போலிருக்கே?"

"ரேகா! ஏன் வந்தாய் இங்கே?" சேகர் முகத்தில் கோபம் தெரிந்தது.

"வரும்படியாய் நீ செய்துவிட்டாய்."

"நானா?"

"இல்லையா பின்னே? ராத்திரி பார்த்தும் ஏன் பேச வில்லை? தெரியாதவனைப்போல ஏன் போனாய்?"

ஒரு வினாடி ரேகாவின் முகத்தை கண்கொட்டாமல் பார்த்த சேகர் ரேகாவின் கோபத்தை புரிந்துகொண்டவனாய், தன் நாற்காலியை கிட்டே இழுத்து போட்டுக்

கொண்டே— ''உட்காரு! காபி குடிக்கிறாயா?'' என்று கேட்டான் பரிவோடு.

''வேண்டாம். மொதல்ல கேட்டதற்கு பதில் சொல்லு.''

''என்னோடு வந்தவங்க உன்னையும், உன்னோடு இருந்தவங்க என்னையும் கவனிப்பதை விரும்பாததால் அப்படி பண்ணினேன்.''

''உன்னோடு இருந்த அந்தப் பெண் யார்?''

''என்னை போன்ற துரதிர்ஷ்டசாலிதான்! ஆனாலும் ரேகா உனக்கு புத்தி இருக்கா? அப்படி பொது இடத்தில் பெயரை சொல்லியா கூப்பிடுவாங்க? அது எவ்வளவு ஆபத்துன்னு உனக்கு தெரியாதா? அந்த சுற்றுப் பக்கத்தில் எங்கேயாவது சி. ஐ. டி. இருந்தால் என் கதி என்னவாறது? அவங்க நான் யாருன்னும், நீ யாருன்னும் விசாரணையை தொடங்கிவிட்டால்?''

ரேகா தன் தவறை புரிந்து கொண்டவளாய் தலை குனிந்தபடி சொன்னாள் — ''எதிர்பாராமல் உன்னை திடீரென்று அப்படிப் பார்த்ததுமே என் மூளையே குழம்பிவிட்டது. எதையுமே யோசித்துப் பார்க்காமல் போய் விட்டேன்.''

''சரி. அதை விடு! உன் பக்கத்தில் இருந்த அந்த ஆள் யார்?''

''விமலன்! கமலனின் அண்ணன்!''

''உங்களிருவருக்கும் எப்படி பரிச்சியம் ஏற்பட்டது? என்னிடம் அவனைப் பற்றி சொல்லவேயில்லையே?''

''எங்களுக்குள் உண்மையில் எந்தப் பரிச்சியமும் இல்லை. நான் வேலை பண்ணிக்கொண்டிருக்கிற விஸ்வநாதனுக்கு அவர் சிநேகிதர்.''

''அந்த சின்னப்பெண் யார்?''

''விஸ்வநாதனின் பெண். சேகர், ராத்திரியெல்லாம் எனக்குத் தூக்கமே வரவில்லை,'' கண்ணீர் மல்கச் சொன்னாள் ரேகா.

''நானும் தூங்கவில்லை.'' தீவிரமாய் சொன்னான் சேகர்.

ரேகா பதில் சொல்லாமல் போகவே ''ஏன் என்று கேட்கமாட்டாயா?'' என்றான்.

''தெரியும் எனக்கு. உன்னைப் போன்ற வாழ்க்கையைக் கழிக்கிறவனுக்கு தூக்கம் எப்படி வரும்?''

சேகர் சிரித்தான்.

''உன் மூஞ்சி! என்னைப் பற்றிய பயம் எனக்கு என்றோ போய்விட்டது. என் வருத்தமெல்லாம் உன்னை பற்றிதான். நீ ஞாபகத்திற்கு வந்துவிட்டால் எனக்குத் தூக்கமே வராது.''

''சேகர்...''

''ஆமாம் ரேகா. மாமா மாமியின் பாதுகாப்பு நமக்கு எவ்வளவு தூரம் உண்டுன்னு எனக்கா தெரியாது? நீ தனியாய் இருக்கிறாய். உத்தியோகம் கித்தியோகம் என்று வெளியுலகத்தில் சுற்றி கொண்டிருக்கிறாய். நான் இருந்தாலும் இல்லாதவனாகிவிட்டேன். நேற்றைக்கு உன்னையும் அவனையும் அந்தக் குழந்தையையும் பார்த்தபோது எனக்கு என்ன தோனிற்று தெரியுமா? என்றாவது ஒரு நாள் நீ நல்லமனிதன் ஒருவனை கணவனாய் அடைந்து அப்படி குழந்தை குட்டிகளோடு சுகமாய் இருக்கிறதைப் பார்க்கணும்னு ஆசையாய் இருக்கு. உன்னை அப்படிப் பார்த்த பிறகு, தான் என் ஜென்மம் தரித்தாற்போல உணர்வேன்.''

திருமணத்தைப் பற்றி பேச்சு வந்ததும் ரேகாவின் முகம் வாடிவிட்டது.

குனிந்த தலை நிமிரவில்லை.

குரல் கம்மச் சொன்னாள்—"என் விஷயத்தை விடு. உன்னைப் பற்றி சொல்லு, சேகர்! என் யோசனைகள் சதா உன்னைப் பற்றியேதான்! நீ மாற வேண்டும். எங்கள் எல்லோரையும் போல மறுபடியும் பயமில்லாமல் வாழணும் நீ. எனக்கு இதைக்காட்டிலும் வேறொன்றுமே வேண்டாம்."

ரேகாவின் முகத்தில் ஆவேசத்தைப் பார்த்த சேகர் பேச்சை மாற்ற எண்ணி. "அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு?" என்று கேட்டான்.

"நான் சொல்லமாட்டேன். வீட்டிற்கு வந்து பார். ஏன், கடைவீதிகளில் எல்லாம் பயமில்லாமல் சுற்றுகிற வன் வீட்டுக்கு வந்தால் என்ன?"

"உனக்குத் தெரியாது ரேகா. நான் வீட்டிற்கு வந்தால் சந்தேகம் வரும். கடைவீதிகளில் நான் சுற்று வதுகூட புலிக்கூண்டிற்குள் தலையை நீட்டிக் கொண்டி ருப்பது போலத்தான். ரேகா! போகட்டும். அம்மாவை ஏதாவது கோவிலுக்கோ சினிமாவுக்கோ கூட்டிட்டு வரக்கூடாதா?"

"அம்மாவையா? நானா? அழகுதான்! அம்மா தன் அறையைத் தாண்டி வெளியே வருவதையே விட்டு விட்டாங்க." என்று சொன்ன ரேகா, சட்டென்று நிறுத் தினாள்.

"சேகர்! என்ன ஆச்சரியம்! விஸ்வநாதன்கூட சரியாய் இதேபோலத்தான் கேட்டார். இதே பதிலைச் சொன்னேன். வினோதமாய் இல்லையா?"

விஸ்வநாதனின் பேச்சு வந்ததுமே சேகரின் புரு வங்கள் முடிச்சேறின.

இப்பொழுதெல்லாம் ரேகா அவரைப் பற்றி அதிகமாய் பேசிக் கொண்டிருக்கிறாள்.

அவன் கேட்டான், ''அம்மாவைப் பாப்பதற்கு அவருக்கென்ன அவசரம்?''

''என்னவோ, எனக்குத் தெரியலை.''

''அவ்வளவு தூரம் பார்க்கணும்னு இருக்கிறவர் நம் வீட்டிற்கே நேரமாய் வரலாமோனோ?''

''வரலாம். ஆனாலும் அவர்கூட ரொம்ப நோயாளிதான். வீட்டை விட்டு எப்பொழுதாவதுதான் வெளியே வருவார். சேகர், நீ அவரை சந்திக்க எப்பொழுது வரப் போகிறாய்?''

''நான் அவரைச் சந்திப்பது அவ்வளவு முக்கியம் என்கிறாயா ரேகா?''

''ரொம்ப முக்கியம். உன்னை அவருக்கு ரொம்பவும் பிடிக்கும்.''

சேகர் தோளைக் குலுக்கிக் கொண்டான். ''என்னைப் பார்க்காமலேயா?'' என்றான்.

''நான்தான் உன்னைப் பற்றி சொல்லிக் கொண்டிருப்பேனே! சொல்லு! எப்பொழுது வருகிறாய்? இன்றைக்கே போகலாமா?''

''இன்றைக்கேவா? எனக்கு ரொம்ப வேலை இருக்கு.''

''பின்னே எப்பொழுது? இம்முறை நீ தட்டிக் கழித்து விடமுடியாது. என்னால் சும்மாயிருக்க முடியாது.''

''அப்படின்னால் தீபாவளிக்கு அடுத்த நாள் வரேன்.''

''நிஜமாகவா?''

''நிஜந்தான்.''

''எங்கே? அவங்க வீட்டுக்கு வந்துவிடுகிறாயா நேராய்?''

''ஊஹூம். அவரையே நீ ஏதாவது பார்க்குக்குக் கூட்டிட்டு வா.''

''ஏன், வீட்டிற்கு வந்தால் என்னவாயிடுத்து?''

''ஒன்றுமில்லை. எங்கேயானாலும் சரி, முன்பின் அறிமுகமில்லாத சூழ்நிலையில் நான்கு சுவர்களுக்கு நடுவே இருக்கவேண்டுமென்றால் மூச்சுவிட முடியாதபடி திணறத் தொடங்கிவிடுகிறது.'' திறந்த வெளி என்றால் சுதந்திரமாய் நிம்மதியாய் தோன்றுகிறது. சேகர் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். ரேகா எழுந்து நின்றாள். சேகர் கூட எழுந்து நின்ற ரேகா, ''இப்பொழுது என்னவோ வந்துவிட்டாய். இனி ஒருபோதும் இப்படி வராதே! தெரிந்ததா? இது உன்னைப் போன்ற பெண்கள் வரக்கூடிய இடமில்லை.''

''நீயே அழைத்துக் கொண்டு வந்தாயே ஒரு தடவை?'' என்றாள் பழிப்பது போல.

''உன்னோடு கொஞ்ச நேரம் கழிக்கவேண்டும் என்று விரும்பியதால் வேறு வழியில்லாமல் அந்தக் காரியத்தைச் செய்து விட்டேன். தயவுசெய்து இனி என்றுமே வராதே. அது உனக்கும் எனக்கும் இருவருக்குமே நல்லதில்லை.''

ரேகாவுக்கு சேகரின் பயம் புரிந்தது. அதை ஆயுதமாய் பயன்படுத்திக் கொண்டு மிரட்டினாள். ''நீ எனக்குக் கொடுத்த வாக்குறுதி பிரகாரம் தீபாவளிக்கு மறு நாள் அவரைச் சந்தித்தால் நான் பிறகு இந்த பக்கமாய் வரமாட்டேன். வராமல் போனாயோ பார்! என்றாவது ஒரு நாள் அவரை அழைத்துக் கொண்டு இங்கேயே வந்துவிடுவேன்.''

சேகர் ரேகாவின் மிரட்டலுக்குச் சிரித்துவிட்டான். இருவரும் தீபாவளிக்கு அடுத்த நாள் பார்க்கில் எத்தனை மணிக்குச் சந்திக்க வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டார்கள்.

''வாக்குக் கொடுத்தது போலதானே, மறந்து போய் விடமாட்டாயே?'' போகும்பொழுது கேட்டாள்.

''ஊஹூம். உன் மேல் ஆணை. போதுமா?'' சேகர் வாக்குறுதி தந்தான்.

3

தீபாவளிப் பண்டிகை நெருங்கிற்று. ரேகா விஸ்வநாதனின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் பட்சணங்களைப் பண்ணத் தொடங்கினாள். என்றுமே சமையலறைப் பக்கமே எட்டிப் பார்த்திராத விஸ்வநாதன் சிறுபையனைப்போல ரேகா சமைக்குமிடத்திற்கு வந்து 'ரேகா இதெப்படி, அதெப்படி' என்று ரேகாவுக்குப் பின்னாடியே சுற்றிச் சுற்றி வந்து தானும் சிரித்துக் கொண்டு அவளையும் சிரிக்க வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்த லலிதாவுக்குத் தலை சுழன்றது. தந்தை, விமலன், கமலன், ரஞ்சிதா, வேலைக்காரர்கள் அத்தனைப் பேரையும் தன் பார்வைகளாலும் வார்த்தைகளாலும் கவர்ந்திழுத்துக் கொள்வது ரேகாவுக்குக் கைவந்த கலை போலும். லலிதாவுக்கு ரேகா தன் சாம்ராஜியத்தைக் கொள்ளையடித்து ஓட்டாண்டியாக்கி விட்டதாய் தோன்றிற்று.

சமையல் வேலைகளை முடித்துக்கொண்டு நடுவில் ஏதோ வேலையாய் ஹாலுக்கு வந்த ரேகா, விஸ்வநாதன் யாருடனோ போனில் அவளைப்பற்றி பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு நின்றாள்.

"கண்டிப்பாய் வரணும் விமல்! நொண்டிச் சாக்கெல்லாம் சொல்லாதே. ரேகா இன்றைக்கு லட்டும், பாதுஷாவும் பண்ணியிருக்கிறாள். அதைச் சாப்பிடாமல் போனால் உன் ஜென்மம் வீண்."

ரேகாவின் கன்னங்கள் சிவந்துவிட்டன.

விஸ்வநாதன் போனை வைத்துவிட்டுச் சொன்னார்.

"ப்சு! லாபமில்லை. விமலனுக்கு வேறு எங்கேயோ லஞ்ச் இருக்காம். வர முடியாதாம். மாலையில் முடிந்தால் வரேன் என்றான்."

ரேகாவுக்கு ஒரு வினாடி விமலன் வரமாட்டேன் என்றதற்கு அம்மாடா என்று நிம்மதியாய் இருந்தாலும் தொடர்ந்து ஏமாற்றந்தான் ஏற்பட்டது அவளுக்குத் தன் மீதே தனக்கு வெறுப்பு ஏற்பட்டது. ஒரு பக்கத்தில் அவன் நிழலைக் கூட பார்க்கப் பிடிக்காதது போலச் சொன்ன மனது, இன்னொரு பக்கத்தில் அவனுக்கு சுயமாய் சாப்பாடு பரிமாற வேண்டும் என்றும், காபி போட்டுத் தரவேண்டுமென்றும் விரும்பிற்று. அவனுக்கு முன்னால் ஒரு விதச் சந்தோஷம் ஏற்பட்டது. எவ்வளவு வெட்கப்படக்கூடிய விஷயம்! எவ்வளவு தன்மானம் இல்லாத தனம்! வெறுத்து ஒதுக்க வேண்டிய நபரைப் பற்றி அடிக்கடி இவ்வாறு யோசிப்பது! இது பலவீனம் இல்லாமல் வேறென்ன?

சாப்பிட உட்காருவதற்கு முன்னால் விஸ்வநாதன் சமைத்ததையெல்லாம் கொண்டு வரச்சொன்னார். கேரியரையும் எடுத்து வரும்படிச் சொன்னார். அதில் தானே சுயமாய் எடுத்து வைத்தார். காரியரை டிரைவரிடம் தந்து, "இதைக் கொண்டுப் போய் ரேகாவின் வீட்டில் கொடுத்து விட்டு வா" என்றார்.

யாருக்காகவோ செய்கிறார் என்றெண்ணிக் கொண்டிருந்த ரேகா வாயடைத்துப் போனாள். 'வேண்டாம்'

என்று தடுக்கப் போனாள். விஸ்வநாதன் பேசாமலிரு என்பது போல கையால் ஜாடை காட்டி விட்டு, டிரைவரை ''நீ போ'' என்றார்.

அப்பொழுது தான் வெளியேயிருந்து வந்து கொண்டிருந்த லலிதா படிக்கட்டில் காரியரோடு எதிர்ப்பட்ட டிரைவரைப் பார்த்து ''யாருக்கு?'' என்று கேட்டாள்.

''ரேகா அம்மாவின் வீட்டில் கொண்டு போய் கொடுத்து விட்டு வரச்சொன்னார்.''

''யார்?''

''ஐயாவே தந்தாரும்மா'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான் டிரைவர்.

கண்கள் சிவக்க உள்ளே வந்தாள் லலிதா.

லலிதா கூட வந்துவிட்டதால் சாப்பிடுவதற்கு வரச் சொல்லி கூப்பிட்ட ரேகா, ''ஜானை இன்றைக்குக் கூப்பிடுவதாய் சொன்னீங்களே?'' என்றாள் முறுவலுடன்.

''கூப்பிடவில்லை. ஏன்? உன்னிடம் சால்ஜாப்புச் சொல்லிக்க வேண்டுமா?'' கடுமையாய் சொன்னாள் லலிதா.

ரேகா பதில் பேசமுடியாதவளானாள். லலிதா துடுக்காய் சொன்னாள் ''எனக்குத் தெரியவில்லை. இந்த வீடு முன் போல இல்லை. ஒவ்வொன்றுக்கும் உன் பர்மிஷன் வாங்கிக் கொள்ளணும் என்று இப்பத்தான் தெரிஞ்சுது.''

லலிதாவின் மூட் நன்றாயில்லை என்றுணர்ந்து கொண்ட ரேகா வாதாடாமல் கீழே இறங்கி வந்து விட்டாள். ஆனால் வெகுநேரம் வரை லலிதாவின் வார்த்தைகளில் இருந்த கடுமை அவள் இதயத்தைப் புண்படுத்திக் கொண்டேயிருந்தது.

பிற்பகலில் கமலனிடமிருந்து கடிதம் வந்தது அவளுக்கு. தீபாவளி வாழ்த்துக்களைத் தனித்தனியாய்

எல்லோருக்கும் அனுப்பியிருந்தான். அவள் கமலனுக்கு வாக்களித்திருந்தபடி ஒரு நாள் விட்டு ஒரு நாள் கடிதம் எழுதிக் கொண்டேதான் இருந்தாள். ஆனால் கமலன் தான் தான் சொன்னபடி நடந்து கொள்ளவில்லை. போன புதிதில் ஓரிரண்டு கடிதங்கள் எழுதினாலும் மெல்ல மெல்ல குறைந்து விட்டது. சமீபத்தில் வந்த கடிதங்களில் வத்ஸலா என்ற பெண்ணைப் பற்றி எழுதியிருந்தான். வத்ஸலா மகாராஷ்ட்டிரத்தைச்சேர்ந்த வளாம். சிறு வயதிலேயே கணவனை இழந்துவிட்டா ளாம். மிக நன்றாய் பாடுவாளாம். வாழ்க்கையில் விரக் தியையும் வைராக்கியத்தையும் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்த வத்ஸலாவின் மீது அவனுக்கு இரக்கம் ஏற்பட்டதாய் எழுதினான்.

அதைப் படித்து விட்டுச் சிரித்துக் கொண்டாள் ரேகா. சிநேகமான கமலனின் பார்வையில் படும் அனா தைகள், ஆபத்தில் இருப்பவர்கள் எல்லோருமே அவனுக்கு இரக்கத்திற்குரியவர்கள் தாம்!

மாலையில் விஸ்வநாதன் எல்லோருக்கும் வாங்கி யிருந்த உடைகளைத் தந்தார். ரேகா உடுத்திக் கொண் டிருந்த புடவையைப் பார்த்ததும் லலிதா தந்தை தனக் குத் தந்த புடவையை எடுத்துக் கொண்டு மளமள வென்று அவர் அறைக்கு வந்தாள். தந்தையைத் தீவிர மாய் பார்த்துவிட்டு, ''உங்கள் உத்தேசம் என்ன? எனக்கும் ரேகாவுக்கும் ஒரே விதமான புடவைகளை வாங்கியிருக்கீங்களே? அப்படியென்றால் நானும் அந்த வேலைக்காரியும் சமம் என்பதா உங்கள் உத் தேசம்?'' என்றாள்.

''வெறுமே ரேகாவை இப்படி 'வேலைக்காரி' 'வேலைக்காரி' என்று சொல்லாதே. நீயேதானே பார்த்துக்கொண்டிருக்கிறாய், வீட்டுப் பெண்ணையும்

விட அதிக பொறுப்பை தலை மேல் போட்டுக்கொள் கிறாள்.''

''அதைத்தான் நானும் கேட்கிறேன், எதுக்கு போட்டுக்கணும் என்று? அந்த உரிமையை யார் கொடுத்தாங்க? ஏன் கொடுத்தாங்க?''

''உன் திமிர் பிடித்த கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. பண்டிகை அன்றைக்கு வீட்டில் ரகளை பண்ணாதே'' என்றார் அவர் எரிச்சலோடு.

''இந்த ஒளிவு மறைவுதான் எதுக்குங்கிறேன்? உங்கள் மனதில் உள்ள உத்தேசம் என்னங்கிறதை தெளிவாய் சொல்லிவிடுங்களேன். நான் வாயை திறக்க மாட்டேன் அப்புறமாய்.''

''அப்புறமாய் சொல்றேன். இப்பொழுது நீ போய் விடு. என் முன் நின்றுகொண்டு இப்படி வாயாடாதே.''

''ஆமாமாம். நான் எது பேசினாலும் உங்களுக்கு வாயாடுவது போலதான் இருக்கும். ரஞ்சிதாவைப் போல ஊமைப் பெண்ணாகவாவது இருந்திருக்கலாம். கண்ணில்லாத குருடியாய் இருந்திருந்தால் இன்னும் நன்றாயிருக்கும். உங்கள் கொட்டத்திற்கு குறுக்கே வராமல் இருந்திருக்கலாம்.''

''மூடு வாயை'' விஸ்வநாதன் கையை ஓங்கியவர் சட்டென்று தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு கையைத் தாழ்த்திக்கொண்டார். வாசலை நோக்கி விரலை சுட்டிக் காட்டி, ''போ! போய்விடு! ஒரு நிமிஷம் கூட என் முன்னால் நிற்காதே! உன் பாவ மனதில் தோன்றாத யோசனைகளே கிடையாது'' என்றார் ஆவேசமாய். லலிதா வேகமாய் திரும்பி வந்துவிட்டாள் ரோஷத்துடன்.

ரஞ்சிதாவோடு சேர்ந்து பால்கனி முழுவதும் அகல் விளக்குகளை ஏற்றிக் கொண்டிருந்த ரேகாவுக்குத் தந்தை மகளுக்கிடையே இந்த வாக்கு வாதங்களைப்

பற்றித் தெரியாது. இருட்டி வெகு நேரமாகிவிட்டது. வீதியெல்லாம் விளக்கு வெளிச்சங்களால் பட்ட பகலாய் இருந்தது. ரஞ்சிதாவின் கையைப் பிடித்துக்கொண்டு மத்தாப்புக்களைக் கொளுத்த செய்து கொண்டிருந்தாள் ரேகா. புஸ் வானங்களை கொளுத்துவதற்கு ரஞ்சிதா பயந்தபொழுது ரேகா அவளை தேற்றி பயம் இல்லை என்று சொல்லி தானே கொளுத்திக் காட்டிக்கொண்டிருந்தாள்.

விஸ்வநாதன் பால்கனிக்கு வந்தார். புதுப் புடவையில் சந்தோஷமான முகத்துடன் பொம்மையைப் போல இருந்த ரேகாவைப் பார்த்த அவருக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது.

லலிதாவை மிக ஜாக்கிரதையாய், கட்டுப்பாடுகளுடனும் நல்ல பயிற்சியோடும்தான் அவர் வளர்த்தார். ஆனால் அவளிடம் கொஞ்சமும் நிதான சுபாவம் படியவில்லை. மதர்த்தக் குதிரையைப் போலவே அங்குமிங்கும் அலைபாய்ந்து கொண்டிருக்கும் அவள் புத்தி, எந்தப் பயிற்சியும் இல்லாமல் எந்த ஜாக்கிரதையும் எடுத்துக்கொள்ளாமல் வளர்ந்திருந்த ரேகாவுக்கு இவ்வளவு பணிந்த சுபாவமும் நல்லது கெட்டதை உணர்ந்துகொள்ளக்கூடிய பகுத்தறிவும் எப்படித்தான் வந்ததோ? அவருக்கு ரேகாவைப் பார்த்தபொழுது திருப்தியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

பால்கனிக்கு வந்து கொஞ்சம் ஓரமாய் நின்று கொண்டிருந்த லலிதா தந்தையின் பார்வை ரேகாவின் மீதே படிந்திருந்ததையும் அவர் அடிக்கடி அவளை பார்த்துவிட்டு கனவில் ஆழ்ந்து போய்க்கொண்டிருந்ததையும் கவனிக்கத் தவறவில்லை.

லலிதாவின் பார்வை ரேகா கட்டிக்கொண்டிருந்த புடவையின் மீது நிலைத்தது. பிறகு சந்தோஷத்தால்

மலர்ந்துகொண்டிருந்த அவள் முகத்தின் மீது படிந்தது. சோற்றுக்கு கதியில்லாமல் இந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தவள் வேலைக்காரி ரேகா. ஆனாலும் இந்த நிமிஷத்தில் ரேகாவைக்காட்டிலும் அதிர்ஷ்டசாலி வேறு யாருமில்லை என்று தோன்றிற்று.

அவளுக்கோ இவ்வளவு செல்வம் இருந்தது. ஆனாலும் எந்த சந்தோஷமும் இல்லை. லலிதாவின் இதயம் ஆத்திரத்தால் குப்பென்று பற்றிக் கொண்டது. மெதுவாய் தன் இதயத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த இந்த தீயை அடக்கிக் கொண்டு ரேகா முதலியவர்களுக்குப பக்கத்தில் வந்து நின்று தானும் மத்தாப்புக்ளை கொளுத்தத் தொடங்கினாள்.

அதற்குள் எதிர்த்த வீட்டு மொட்டைமாடியில் புஸ் சென்று மேலே எழும்பிய புஸ்வாணத்தை ரேகா, ரஞ்சிதா, விஸ்வநாதன் முதலியவர்கள் வியப்போடு சிறு குழந்தைகளைப் போல் பார்த்துக் கொண்டே தம்மை மறந்துபோய் ஒரு வினாடி அப்படியே நின்று விட்டார்கள்.

மத்தாப்புக்களைக் கொளுத்திக் கொண்டிருந்த லலிதா எதற்காகவோ குனிவதுபோல கீழே தழைந்தாள். வினாடி நேரத்திற்குள் லலிதாவின் கையிலிருந்த மத் தாப்பு ரேகா கட்டிக் கொண்டிருந்த புடவையின் நுனியை முத்தமிட்டது.

மெல்லிய சில்க் புடவை, அந்த தீயை சட்டென்று பிடித்துகொண்டுவிட்டது. கண் மூடித் திறப்பதற்குள் எழுந்துகொண்டு விட்ட லலிதா ஏதும் அறியாத வளைப் போல மத்தாப்புக்களைக் கொளுத்தத் தொடங்கினாள்.

ரேகாவிற்குக் கால்களுக்கருகில் உஷ்ணமாய் தோன் றவே அதென்னவென்று குனிந்து பார்ப்பதற்குள்ளேயே

புடவைப் பிடித்துக்கொண்டு விட்டது. வீலென்று அலறிய ரேகா சட்டென்று குனிந்து இரண்டு கைகளாலும் அதை அணைக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. அதற்குள் பின்னால் படிக்கட்டிற்கருகில் விமலன் எப்பொழுது வந்து நின்றானோ, எவ்வளவு நேரமாயிற்றோ யாருமே பாக்கவில்லை. அவன் மின்னலாய் ஒரே பாய்ச்சலாய் ரேகாவிடம் ஓடி வந்து அந்தத் தீயை அணைக்க, விஸ்வ பிரயத்தனம் பண்ணத் தொடங்கினான்.

"ரேகா, புடவையை அவிழ்த்து எறிந்துவிடு" விஸ்வநாதன் கத்தினார்.

ரேகா தடுமாற்றமடைவதற்குள், விமலன் அதற்குள் தனக்கும் அதே எண்ணம் தோன்றியவனாய் புடவைக் கொசுவங்களை உருவி விட்டு, ரேகாவின் தோளைப் பிடித்து கிர்ரென்று திருப்பி சுற்றிக் கொண்டிருந்த புடவையை இழுத்து தொலைவில் வீசியெறிந்தான். அரும்பாடுபட்டு உள்ளே பாவாடையில் பிடித்துக் கொண்டிருந்த தீயையெல்லாம் பரவி விடாமல் கைகளால் கசக்கி அணைத்துவிட்டான். எல்லாம் கண்முடித் திறப்பதற்குள் முடிந்து விட்டது.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே இரண்டே நிமிஷங்களில் புடவை கபகபவென்று பற்றியெரிந்து சாம்பலாயிற்று. ஒரு வினாடி அவ்வெல்லை முழுவதும் துணி எரிந்த நாற்றம் பரவி நின்றது.

மார்பிற்கு குறுக்காய் கைகளை வைத்துக்கொண்டு முழங்காலிட்டு அமர்ந்துகொண்டுவிட்ட ரேகா பீதியோடு வெளுத்த முகத்துடன் கண்கள் அகல விரிய பயந்து போய் தென்பட்டாள். எல்லோருக்கும் தோன்றியது ஒன்றுதான். மயிரிழையில் எவ்வளவு ஆபத்து தப்பி விட்டது! விஸ்வநாதன் தோளில் இருந்த உத்தரீயத்தை

எடுத்து ரேகாவின் தோள்களைச் சுற்றிப் போர்த்திவிட்டு "கீழே போம்மா" என்றார். தாறுமாறாய் அதைச் சுற்றிக்கொண்டே எழுந்து கீழே ஓடினாள்.

"எப்படி பற்றிக்கொண்டது?"

கீழேயெல்லாம் பார்த்துக்கொண்டே கேட்டார் விஸ்வநாதன்.

மத்தாப்பு பற்ற வைத்துக்கொள்வதற்காக கீழே வைத்திருந்த அகல் அணைந்திருந்தது. ஆனாலும் அது ரேகா நின்றிருந்த இடத்திற்கு கொஞ்சம் தூரத்திலேயே இருந்தது.

தீப்பட்ட கைகளைப் பார்த்துக்கொண்டே, வாயால் ஊதி எரிச்சலைத் தணித்துக்கொள்ள முயன்று கொண்டிருந்த விமலன் லலிதாவைப் பார்த்தான்— அவன் பார்வை கடுமையாய் கோபமாய் இருந்தது. வாயைத் திறந்து ஏதோ சொல்லப்போனான் அவன்.

ஆனால் லலிதாவின் கண்களில் ஏதோ கெஞ்சல், தீனம், பயம் இம்மூன்றும் தெரிந்து விமலனின் வாயிலிருந்து வரப்போன வார்த்தைகளை விழுங்கி விடும்படியாய் செய்துவிட்டன. வெளியே சொல்லிதான் என்ன பிரயோஜனம் என்று தோன்றியது அவனுக்கு.

அரை மணிக்குப் பிறகு—

எல்லோரும் கீழே வந்துவிட்டார்கள்.

லலிதா தலை வலிப்பதாய் சொல்லிவிட்டு அறைக்குள் போய் கதவைச் சாத்திக்கொண்டுவிட்டாள்.

விஸ்வநாதன் பர்னாலைக் கொண்டு வரச்சொல்லி விமலன் மறுத்த போதும் கேட்காமல் தானே அவன் கைகளில் தடவிவிட்டார்.

ரேகாவுக்கு ஏதோ போல இருந்தது. விஸ்வநாதன் மிக அன்போடு தந்த புடவை இப்படி திடீரென்று

தீக்கிரையாகிவிட்டது. ஏனோ அது தீங்கை எடுத்துக் காட்டிற்று. மனதிற்குள் ஏதோ அபசகுனமாய், நடக்கக் கூடாதது ஏதோ நடந்துவிட்டாற்போல வேதனையாய் தோன்றிற்று. தன் ஆபத்து தப்பியதற்குக் காரணம் விமலன் என்றும் புரிந்தது. அவன் தன்னை பிடித்துக் கொண்டதும், கிர்ரென்றுச் சுற்றியதையும், அந்த ஸ்பரிசமும், அந்த பயமும் கூட ஏதோ போலிருந்தன அவளுக்கு. இதயத்தில் ஏதோ புரியாத நெகிழ்ச்சி கலக்கமூட்டும்படியாய் செய்துகொண்டிருந்தது.

இன்றைக்கு எவ்வளவு பெரிய ஆபத்து தப்பிற்று என்றெண்ணிக்கொண்டார் விஸ்வநாதன் தனக்குள்.

விமலனுக்கும் அப்படியேதான் தோன்றிற்று. ஆனால் லலிதாவுக்கு ரேகாவின் மேல் ஏன் இந்தப் பகை? பொறாமைக்குக் காரணம் என்ன? எவ்வளவு யோசித்துப் பார்த்த போதிலும் அவனுக்குப் புரிய வில்லை.

●

சேகர் விஸ்வநாதனை சந்திப்பதாய் சொல்லியிருந்தது அன்றைக்குத்தான். ரேகாவுக்கு அன்றைக்கு எழுந்ததிலிருந்தே பரபரப்பாய் இருந்தது.

சேகர் வீட்டிற்கு வரவில்லை என்றும் பார்க்கில் அவரை சந்திப்பதாய் சொன்னதையும், அவள் விஸ்வநாதனிடம் சொன்னபொழுது அவர் சந்தேகத்துடன் பார்த்தார்.

"வீட்டிற்கு நேராய் வருவதற்கு அவனுக்கென்ன ஆட்சேபணை" என்று கேட்டார்.

ரேகாவால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. பிறகு மெதுவாய்— "அவன் ஒரு மாதிரியான ஆள். தான் ஒன்றைச் சொல்லிவிட்டால் அப்படியேதான் நடக்கணும். விடாக்கண்டன். நீங்கள் அவ்வளவு

தூரம் மறுத்தால் நான் போய் அவனிடம் நயமாய் பே சி இங்கே கூட்டிக்கொண்டு வரேன்'' என்றாள்.

''வேண்டாம். நாமே அங்கே போவோம் அதுவும் நல்லதுதான். இங்கேயானால் யாராவது ஒருத்தர் வந்து கொண்டேயிருப்பாங்க. கொஞ்சம் சாவதானமாய் பேசிக்கொள்ளக்கூட நம்மால் முடியாது'' என்றார் அவர். ரேகா தலையாட்டிவிட்டு அப்பால் வந்து விட்டாள்.

அன்று முழுவதும் லலிதா அறையை விட்டு வெளியே வரவேயில்லை. சாப்பிடக் கூப்பிடுவதற்காகப் போன ரேகா, கட்டிலில் வாடிய முகத்துடன் படுத்துக் கொண்டிருந்த லலிதாவைப் பார்த்து வியப்படைந்த வளாய் ''இதென்ன, உடம்பு சரியாயில்லையா உங்களுக்கு?'' என்று கேட்டாள் கவலையோடு கிட்டே போய்.

லலிதா முகத்தைத் திருப்பிக்கொண்டாள். ரேகாவைப் பார்க்கப் பிடிக்காதவளைப் போல சுவர் பக்கமாய் திரும்பிக்கொண்டு — ''நன்றாய்தான் இருக்கு ராத்திரி யெல்லாம் தூக்கம் இல்லை, எனக்கு பசிக்கவில்லை. நான் சாப்பிடப்போவதில்லை'' என்றாள்.

ரேகா பலவந்தமாய் லலிதாவை சாப்பிடச் செய்தாள். ரேகா காட்டிய கள்ளங்கபடமில்லாத சிநேகத்திற்கு லலிதாவின் மனது தப்பு பண்ணி விட்டோமே என்ற குற்ற உணர்ச்சியால் ஏற்பட்ட வெட்கத்தால் கூனிக் குறுகிப் போனாள்.

என்ன இருந்தாலும் ரேகாகூட அவளை போன்ற ஒரு பெண்தான்! அவளுக்கு ஒரு தினுசு கவலை இருந்தால் ரேகாவிற்கு இன்னொரு தினுசு கவலை! தந்தைக்கு புத்தி இருக்க வேண்டுமே தவிர, அவள் என்ன செய்வாள்? இந்த நிமிஷத்திலிருந்து ரேகாவுடன்

முன்போல சிநேகமாய், அன்பாய் இருக்க வேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டாள்.

மாலை வந்தது. ரேகா விஸ்வநாதனை அழைத்துக் கொண்டு பார்க்கிற்குப் புறப்பட்டிருந்தாள். லலிதா மளமளவென்று தயாராகி கீழே வந்து— ''எனக்கும் பொழுதே போகவில்லை. நானும் உங்களோடு வரேன்'' என்றாள்.

''நீங்களா? எங்களோடா?'' சிக்கலில் ஆழ்ந்து போனாள் ரேகா.

ரேகாவின் கண்களில் தெரிந்த உணர்ச்சியைப் படித்தறிந்துகொண்டுவிட்ட லலிதா, ''ஏன், வரக் கூடாதா?'' என்று கேட்டாள்.

''சே, அதெல்லாம் இல்லை. ஆனால்...'' தயக்கத் துடன் நிறுத்திக்கொண்டாள்.

''இருங்க, அப்பாவைக் கேட்கிறேன்'' என்று அவர் அறைக்குள் போனாள்.

''நாங்கள் அதிக நேரம் இருக்கமாட்டோம். உடனேயே வந்துவிடுவோம்னு சொல்லு'' அறைக்குள் ரேகா கேட்டதற்கு அவர் சொன்ன இந்த பதில் லலிதாவின் காதில் நன்றாகவே விழுந்தது.

''பிடிக்கவில்லைன்னு சொல்லிவிட்டு போகக் கூடாதா?'' என்றாள்.

அதற்குள் விஸ்வநாதன் செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே வந்தார்.

''சரி, பிடிக்கவில்லைன்னே வெச்சுக்கோ. சரி தானே? போ. ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் தர்க்கத்திற்குக் கொண்டுவந்து அருவருப்பாய் பேசுவது இப்பல்லாம் உனக்கு பழக்கப்பட்டு போய்விட்டது'' என்றார். லலிதா சிலையாய் நின்றுவிட்டாள். ரேகா,

விஸ்வநாதன், ரஞ்சிதா மூவரும் பார்க்கிற்கு போய் விட்டார்கள்.

தந்தையின் வார்த்தைகளில் இருந்த எரிச்சலை உணர்ந்த லலிதா அவர் தன்னை அலட்சியப்படுத்துவ தாய் பாவித்து அவமானத்தால் கொதித்தெழுந்தாள். மனம் சிலுக்க துவேஷம் என்ற நெருப்பால் எரிந்து போய்க்கொண்டிருந்த அவள் எவ்வளவு நேரந்தான் அப்படியே நின்றுகொண்டிருந்தாளோ தெரியாது.

அதற்குள் "ஹலோ" என்ற குரல் கேட்டது. லலிதா திரும்பிப் பார்த்தாள். விமலன் உள்ளே வந்தான்.

"என்ன தனியாய் இப்படியே நின்றுகொண்டிருக் கிறாய்?" சாதாரணமாய் கேட்ட அவன் பதிலை எதிர்பாராமலேயே— "அப்பா எங்கே?" என்று கேட்டான்.

"இல்லை."

"இல்லையா? எங்கே போனார்?"

"பார்க்கிற்கு அவரும் ரேகாவும் சேர்ந்து போயிருக் காங்க" கவனமாய் அவன் முகத்தைப் பரிசோதித்துக் கொண்டே சொன்னாள்.

லலிதா எதிர்பார்த்ததே நிஜமாயிற்று. ரேகா இல்லை என்று சொன்னதுமே விமலனின் முகத்தில் தென்பட்ட ஏமாற்றம் லலிதாவின் பார்வையிலிருந்து தப்பவில்லை.

"சரி, நான் வரேன்" விமலன் சட்டென்று வேலை வாசலிலேயே முடிந்துவிட்டாற்போல புறப்பட முற் பட்டான்.

"ஏன்? உனக்குக்கூட நான் தேவையற்றவளாகி விட்டேனா?" லலிதா கேலியாய் பழிப்பது போல சொன்னாள்.

போகத் திரும்பிய விமலன் சட்டென்று திரும்பிப் பார்த்தான். ஒரு வினாடி லலிதாவைப் பார்த்துவிட்டு— ''இதென்ன? அப்படி இருக்கிறாயே? என்னவாயிடுத்து?'' என்றான்.

விமலனின் கண்களில் தென்பட்ட சிநேகத்திற்கும், அவன் குரலில் பிரதிபலித்த பரிவிற்கும் மனம் உருகிப் போய்விட்ட லலிதா சட்டென்று அவனிடம் போய் கைகளைப் பிடித்துக்கொண்டு ஓவென்று கதறினாள். எதிர்பாராத இச்சம்பவத்திற்கு விக்கித்துப் போய் விட்ட விமலன் சலனமில்லாமல் அப்படியே நின்று விட்டான்.

''இரு, இதென்ன? என்னவாச்சு?'' லலிதாவைத் தன்னிடமிருந்து விடுவிக்க முயன்றவனாய் ஆறுதலாய் கேட்டான். லலிதா அவனை விடவில்லை. அவன் தோளில் தலையை சாய்த்துக்கொண்டே அழுது கொண்டு இடையிடையே ரேகாவுக்கு ஏற்பட்ட துரோக மனப்பான்மையைப் பற்றிச் சொன்னாள். விமலனின் முகம் சிவந்துவிட்டது.

''சீ, சீ! என்ன பேசுகிறாய் என்று உனக்கே தெரிகிறதா? அப்பாவைப் போய் அப்படியா சொல்லு வாங்க?'' என்றான் கண்டிப்பது போல.

''உனக்குத் தெரியாது விமல்! அப்பா என்றால் மட்டும் அவர் மனிதரில்லையா? பார்த்துக்கொண்டேயிரு. ஒரு நாள் நீயே கண்ணால் பார்க்கப்போகிறாய். இப்படிப்பட்ட விஷயங்கள் உங்க ஆண்களைவிட எங்க பெண்பிள்ளைங்களுக்குதான் சீக்கிரமாய் தெரியும்...'' என்றாள்.

''ரேகா அவ்வளவு நீச்சமானவள் என்று என்னால் நம்ப முடியாது.''

''அதுதான் பெரிய சிக்கல், நல்லவளைப் போல நடித்துக்கொண்டே உங்கள் எல்லோருடைய கண்களிலும் மிளகாய்ப் பொடியைத் தூவப் பார்க்கிறாள். ரொம்ப சாமர்த்தியசாலி ரேகா. நீயே யோசித்துப் பார். அப்பா இல்லை, அந்த நிலையில் இருக்கிற யாராயிருந்தாலும் அப்படிப்பட்ட நபரை வெறுக்கத்தான் செய்வாங்க.''

விமலனும் லலிதாவும் எதிரெதிரேயிருந்த சோபாக்களில் உட்கார்ந்துகொண்டு வெகுநேரம் இந்த விஷயத்தைப் பற்றியே பேசிக் கொண்டார்கள். லலிதா எவ்வளவு அழுத்திச் சொன்னபோதிலும் விமலனால் நம்பவே முடியவில்லை.

நேற்றிரவிலிருந்து ரேகா அவன் நினைவுகளில் நன்றாய் மூழ்கிப்போயிருந்தாள். இன்று காலையில் எழுந்ததுமே அவன் ரேகாவை பார்க்கத் தவிதவித்துக் கொண்டிருந்தான். காலையிலிருந்தே முடியவில்லை. கோர்ட்டிலிருந்து திரும்பியதுமே நேராய் இங்கே வந்தான். விஸ்வநாதனுக்கும் ரேகாவுக்குமிடையே இப்படிப்பட்ட சம்பந்தம் இருப்பதாய் லலிதா சொன்னதைக் கேட்ட அவன் வாயடைத்துப் போய்விட்டான். விவேகம் இல்லை இல்லை என்று எச்சரித்த போதிலும் அவன் மனம் ஏதோ வெறுப்போடு பின்வாங்கத் தொடங்கிவிட்டது.

ரேகாவின் மேல் பொங்கி வந்த அன்பின் மீது ஒரு துளி விஷத்தைத் தெளித்துவிட்டாற் போல இருந்தது.

4

ரேகாவும் விஸ்வநாதனும் பார்க்கில் வந்து உட்கார்ந்துகொண்டார்கள். ரேகா சேகரின் குண நலன்களைப் பற்றியும், சிறு வயதில் எப்படி மென்மை யான சுபாவத்தோடு கோழையாய் இருந்து வந்தான் என்றும், வயது வந்த பிறகு தனக்கு நினைவில் இருந்த சின்னச் சின்ன சம்பவங்களையும் சொல்லத் தொடங் கினாள்.

ரேகா சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளையும் அவர் சிரத்தையாய் ஆர்வத்துடன் கேட்கத் தொடங் கினார். அவர் கண்களில் பார்க்கிற்கு வந்து போய் கொண்டிருக்கும் நபர்களைப் பார்க்கும்பொழுதெல்லாம் உணர்ச்சி அலைகள் எழும்பிக்கொண்டிருந்தன. அடிக்கடி ''அதோ வந்து கொண்டிருக்கானே, அவன் தானா?'' என்பது போல ரேகாவைப் பார்க்கத் தொடங் கினார். ரேகா அவர் பார்வையைப் புரிந்து கொண்டாற் போல இல்லை என்று தலையாட்டிக் கொண்டிருந்தாள்.

பார்க்கிற்கு அவர்கள் வந்து அரை மணி ஆயிற்று. ஒரு மணி ஆயிற்று. இரண்டு மணி நேரமும் ஆகி விட்டது. ஆனால் சேகர் வரவில்லை. வரும் ஜாடையே காணோம். சாதாரணமாய் சேகர் கொடுத்த வாக்கைத் தவறமாட்டான். ''வர முடியாமல் போய்விட்டதோ என்னவோ?'' என்றார் அவர் உற்சாகமிழந்தபடி. ரஞ்சிதா ரேகாவின் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்டுவிட்டாள். இருட்டி வெகு நேரமாகிவிட்டதால் பார்க்கில்கூட ஜனங்கள் பிசுபிசுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள்.

''அவன் இந்த இடத்துக்குதானே வரேன்னு சொன்னான்?'' என்று கேட்டார் விஸ்வநாதன்.

"இதே இடத்துக்குதான் வருவதாய் சொன்னான். உங்களிடம் நான் இதுவரை சொல்லவேயில்லை. சேகர் யாருடனோ சேர்ந்து வீட்டில் இருப்பதில்லை. மாமிக்கும் அவனுக்கும் ஒத்து வராது" ரேகா மெதுவாய் தொடங்கினாள்.

"என்னது?" விஸ்வநாதன் கலக்கத்தோடு புதிய விஷயத்தைக் கேட்க நேர்ந்தாற்போல பார்த்தார். ரேகா சேகர் எப்பொழுதிலிருந்து ஊர்ச்சுற்றியாய் மாறத் தொடங்கினான் என்றும் போகப்போக அவன் தோரணை எப்படி மாறிப் போய் விட்டது என்றும், தான் எவ்வளவு பயப்படுகிறாள் என்றும் சுருக்கமாய் சொல்லி விட்டாள்.

"பெரியவரான உங்கள் ஒத்துழைப்போடு அவனை எப்படியாவது நல்ல வழிக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது என் தவிப்பு. இப்பொழுதெல்லாம் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு இந்த ஸ்மரனையாகி விட்டது. தாய் தந்தையரின் கட்டுப்பாடான பயிற்சி இல்லாவிட்டால் பிள்ளைகள் எப்படிக் கெட்டுப் போய் விடுவார்கள் என்றும், அவங்கமேல் யாராவது கொஞ்சம் சிரத்தை வகித்துக் கொஞ்சம் பிடிவாதமாய் இருந்தால் எப்படி அவங்க நல்ல வழிக்கு வரமுடியும் என்றும் புரிகிறது. நீங்கள் கொஞ்சம் சிரமத்தைப் பார்க்காமல் எப்படியாவது சரி, எனக்கு இந்த ஒரு உதவியைப் பண்ணித் தரணும்" என்றாள்.

வாயடைத்துப் போய் கேட்டுக் கொண்டிருந்த விஸ்வநாதன், ரேகா சொல்லி முடித்ததுமே நீண்ட பெரு மூச்சு விட்டார்.

இவ்வளவு நாட்களாய் சேகர் ஏன் தன் கண்ணில் படவில்லை என்றும், சேகரைப் பற்றி ரேகா சொன்ன சின்ன விஷயங்கள் ஏன் அசாதாரணமாய் இருந்தன வென்றும் இப்பொழுதுதான் புரியத் தொடங்கிற்று

அவருக்கு. ஆனாலும் இதென்ன வினோதம் ரேகா. சேகர் இருவருமே ஒரே சூழ்நிலையில் வளர்ந்தவர்கள் தாம். சேகர் அவ்வாறு வக்கிரமான வழியில் போவது சகஜந்தான். ஆனால் ரேகாவிடம் இந்த நல்லது கெட்டதைப் பகுத்தறியும் குணமும் இந்த பண்பும் எப்படி வந்து சேர்ந்தன? இதுதான் அவருக்கு ஆச்சரியமளித்துக் கொண்டிருந்தன.

இரவு எட்டு மணி ஆன பிறகு சேகர் இனி வரமாட்டான் என்று தெளிவறத் தெரிந்துகொண்டதும் புறப்பட்டு வீட்டிற்கு வந்து விட்டார்கள்.

ரேகாவிற்கு விவரம் தெரிந்த பிறகு இவ்வளவு ஏமாற்றம் என்றுமே ஏற்பட்டதில்லை. இவ்வளவு ரோஷமும் ஏற்பட்டதில்லை.

சேகர் தன் வாக்கைக் காப்பாற்றாமல் போவது இதுதான் முதல் தடவை. உண்மையில் அவனால் முடியாமல் போய்தான் வரவில்லையா அல்லது வேறு ஏதாவது நிகழ்ந்து—நினைத்துப் பார்த்தபோதே ரேகாவின் இதயம் பகீரென்றது.

சேகருக்கு திருட்டுத்தனம் படிந்துவிட்டது என்றும், அவன் பெயர் போலீசு லிஸ்டில் இருக்கிறதென்றும் விஸ்வநாதனிடம் எவ்வளவு முயன்றபோதிலும் ரேகாவால் சொல்ல முடியவில்லை.

கெட்ட சகவாசங்களினால் பாழாகிக் கொண்டிருக்கிறான் என்றும், போகக்கூடாத வழிகளில் போகிறான் என்றும் மட்டுமே சொன்னாளேயொழிய அது என்ன வழி என்று மாத்திரம் சொல்லவில்லை.

விஸ்வநாதன் வீட்டிற்கு வந்த பிறகு சாப்பிட்டார். அவரிடம் ரேகா—''உங்களுக்கு இன்றைக்கு ரொம்பவும் சிரமம் தந்து விட்டேன். அவன் வரமாட்டான் என்று எண்ணியிருக்கவில்லை'' என்றாள் முகம் சிறுக்க.

"பரவாயில்லையம்மா. ஏன் வரலைன்னு தெரிந்து கொள். வந்தால் இப்படி வேறேங்கேயோ வேண்டாம், நம்ம வீட்டிற்கே நேராய் கூட்டிட்டு வா" என்றார் அவர்.

ரேகா வீட்டிற்குப் புறப்படப் போனாள். மாடியில் லலிதாவின் அறையில் விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருந்தவதப் பார்த்து விட்டு அங்கே போனாள். சில சமயம் லலிதா ஏதாவது புத்தகத்தை படித்துக் கொண்டே விளக்கை அணைக்காமல் கொசு விளக்கை போட்டுக் கொள்ளாமல் தூங்கி விடுவது வழக்கம். ரேகா அதை கவனித்தால் போய் விளக்கை அணைத்து விட்டு, கொசு விளக்கைப் போட்டு விட்டு வருவாள்.

மாலையில் பார்க்கிற்குப் புறப்படும்பொழுது தந்தைக்கும் மகளுக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தால் லலிதா முகத்தை முறுக்கிக் கொண்டது நினைவிற்கு வந்தது ரேகாவுக்கு.

லலிதா விழித்துக் கொண்டிருந்தால் ஆறுதலாய் இரண்டு வார்த்தைகள் சொல்ல வேண்டும் என்றெண்ணி கொண்டே மாடிக்கு வந்தாள். லலிதா விழித்துக் கொண்டுதான் இருந்தாள். ரேகா அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

"என்ன?" என்றாள்.

"ஒன்றுமில்லை. சும்மாதான் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்."

"கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றாள் லலிதா.

ரேகா கீழே போய் தண்ணீர் கொண்டு வந்து தந்தாள்.

''தூக்கம் வருது. விளக்கை அணைத்து விட்டுப் போ.''

கழுத்திலிருந்த நெக்லெஸ்ஸைக் கழற்றி மேஜை மேல் வைத்துக் கொண்டே சொன்னாள் லலிதா.

''அங்கே எதுக்கு அது? உள்ளே வைக்கக் கூடாதா'' என்றாள் ரேகா.

''பரவாயில்லை'' லலிதா திரும்பி படுத்துக் கொண்டாள்.

ரேகா விளக்கை அணைத்து விட்டு, கதவை ஒருக்களித்துச் சாத்தி விட்டு வெளியே வந்துவிட்டாள்.

ரேகா வீட்டிற்குத் திரும்பி வந்தபொழுது சுந்தரி வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தாள்.

''இன்றைக்கு ஏன் இவ்வளவு தாமதமாகி விட்டது'' என்று கேட்டாள்.

''கொஞ்சம் வேலை இருந்ததால் இருக்க வேண்டியிருந்தது மாமி. ஏன்?''

''யாரோ ஒரு பையன் உனக்காக இரண்டு தடவை வந்து விட்டுப் போனான். இரண்டாவது தடவை வந்தபோதுகூட நீ இல்லை என்றதைக் கேட்டு விட்டு இதோ இந்தக் கவரைத் தந்து விட்டுப் போனான்.'' என்று மாடப்பிறையில் இருந்த கவர் ஒன்றை எடுத்துத் தந்தாள். கவர் பிரிக்கப்பட்டிருந்தது. சுந்தரி எடுத்துப் படித்திருப்பாள் போலும். கடிதம் ஆங்கிலத்தில் இருந்தது. சேகர் எழுதியிருந்தான். மளமளவென்று பரபரப்போடு படித்தாள் ரேகா. அதில் இவ்வாறு இருந்தது.

''ரேகா!

நான் பார்க்கிற்கு வந்தேன். உங்களைப் பார்த்தேன். உன்னோடு உட்கார்ந்துகொண்டு எனக்காக காத்துக்

கொண்டிருந்த அந்தப் பெரியவரைப் பார்த்ததுமே என் தலை சுழன்றது. இவ்வளவு நாளாய் என்னைப் பரிதவிக்க வைத்துக் கொண்டிருக்கிற அந்தப் பெரியவர் யார் தெரியுமா? அன்றைக்கு சென்ட்ரல் ஸ்டேஷனில் என்னை போலீசாரிடம் பிடித்துக் கொடுத்த மகானுபாவர்! நீ உத்யோகம் பார்த்துக் கொண்டிருப்பதாய் சொன்னது அவரிடந்தான் என்று கனவிலும் ஊகித்திருக்கவில்லை நான். ரேகா, நீ இந்த நிமிஷமே அவரிடம் வேலை பண்ணுவதை விட்டுவிடு. நான் இன்றிரவு பெங்களூருக்கு போகிறேன். மைசூரில் எனக்கு வேலை இருக்கிறது. ஒரு வாரமாகும் திரும்பி வருவதற்கு. வந்த பிறகுகூட இப்போதைக்கு உன்னைச் சந்திக்க முடியாது. நான் வரவில்லை என்று நீ வருந்துவாய் என்றுதான் இதை எழுதி அனுப்புகிறேன்.

ரேகா, நான் இதுவரை உன்னை எந்த விஷயத்திலும் பலவந்தப்படுத்தியதில்லை. இந்த ஒரு விஷயத்தில் என் வார்த்தைகளைக் கேட்கும்படியாய் உன்னை வற்புறுத்துகிறேன். நீ உடனடியாய் அவரிடம் பண்ணிக் கொண்டிருக்கும் வேலையை விட்டுவிடு. இல்லாவிட்டால் அம்மாவும் நானும் செத்துப் போய்விட்டதற்கு சமானம்.

மறுபடியும் வெள்ளிக்கிழமையன்று இந்த நம்பருக்கு போன் பண்ணு. சேகர் என்று கேட்காதே. ஜான் வேண்டும் என்று சொல்.

—உன் சேகர்''

பி. எஸ்.: இப்பொழுதே நான் எங்கள் நியமங்களுக்கு விரோதமாய் பலமுறை உன்னைச் சந்தித்து விட்டேன். நேற்று தான் மேலிடத்திலிருந்து எனக்கு வார்னிங் வந்தது. உனக்கு மிகத் தேவையாய் இருந்தாலேயொழிய அந்த போனைக்கூட பண்ண

வேண்டாம். நான் எங்கேயாவது நலமாகவே இருப்பேன். உனக்கெந்த பயமும் வேண்டாம். என்னைப் பற்றி நீயும் அம்மாவும் எந்தக் கவலையும் பட வேண்டாம்.''

அக்கடிதத்தைப் பல முறை படித்த ரேகாவிற்கு நடுக்கம் ஏற்படத் தொடங்கிற்று. உள்ளங்கை வியர்த்துக் கொட்டிற்று.

சேகரைப் பிடித்துக் கொடுத்தவர் விஸ்வநாதனா? அவரிடமா சேகர் திருடப் பார்த்தான்? ரேகாவுக்கு ஒரு வினாடி பூமி, வானம் இரண்டும் கிர்ரென்று சுழன்றாற் போல இருந்தது.

இரவெல்லாம் விழித்துக் கொண்டே கழித்த ரேகா, விடியற்காலையில் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

விஸ்வநாதன் ஆதரவில்லாதவர். பண்புள்ள மனிதர். தன் கஷ்டங்களையெல்லாம் வாய்விட்டுச் சொன்னால் புரிந்து கொள்ளாமல் போகமாட்டார். அவர் மூலமாய் சேகரைத் தன்னால் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போனால் இனி இந்த ஜென்மத்தில் சேகர் தமக்கு தரிக்க மாட்டான். நாளைக்குப் போனதுமே ஆதியிலிருந்து இறுதிவரை நடந்ததையெல்லாம் சொல்லி என்ன நியாயம் பண்ணலாம் என்ற தீர்மானத்தை அவரிடமே விட்டு விட்டால் போதும். என்ன பண்ணலாம் என்று அவரே ஆலோசனை வழங்குவார். ரேகா இந்த விதமாய் தனக்குள் தைரியத்தையும் பொறுமையையும் வரவழைத்துக் கொண்டாள்.

●

இரவெல்லாம் தூக்கம் இல்லாததால் ஏற்பட்ட சோர்வோடும், யோசனை வேகத்தால் ஏற்பட்ட குழப்பத்தோடும் தினத்தைக்காட்டிலும் மிகத் தாமதமாய் விஸ்வநாதனின் வீட்டிற்கு வந்தாள் ரேகா.

ரேகா உள்ளே அடியெடுத்து வைத்ததுமே லலிதா, விஸ்வநாதன், விமலன், வேலைக்காரர்கள் எல்லோரும் முன் ஹாலில் நின்று கொண்டிருந்தார்கள்.

இவ்வளவு காலையிலேயே அவர்கள் அத்தனை பேரும் வேலைகளைப் போட்டு விட்டு அங்கே எதற்காக வந்து கூடியிருக்கிறார்கள் என்று ரேகாவுக்குச் சட்டென்று புரியாமல் போனாலும், ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்கிறது என்றுமட்டும் புரிந்தது.

ரேகாவைப் பார்த்ததுமே லலிதா கேலியாய், கடுமையாய் சொன்னாள்—''அதோ! வந்து விட்டாள். கேளுங்கள் நீங்களே! ஆனாலும் நாம்ப பைத்தியந்தான். எடுத்தவங்க எங்கேயாவது எடுத்தேன்னு சொல்லிப்பாங்களா?''

ரேகா புரியாதவளாய் விஸ்வநாதனைப் பார்த்தாள். அவர் முகம் கோபத்தை பலவந்தமாய் அடக்கிக் கொண்டிருந்தாற்போல, வெறுப்பை மென்று விழுங்கிக் கொண்டிருந்தாற்போல தோன்றிற்று!

ரேகா கலக்கத்துடன் அவரிடம் பொனாள்.

''என்ன? என்னவாச்சு?''

அவர் நிமிர்ந்து ரேகாவைப் பார்த்தார், அப்பார்வையிலிருந்த வேதனையை கவனித்த ரேகாவுக்கு பகீர் என்றது. ஏனோ இவர்கள் எல்லோருமாய் சேர்ந்து அவரை சித்திரவதை பண்ணிக் கொண்டிருந்தாற் போல தோன்றிற்று.

அதைப் பொறுத்துக்கொள்வதற்காக அவர் உடம்பிலிருந்த சக்தியையெல்லாம் அணுவணுவாய் கூட்டிக் கொண்டிருந்தாற்போல இருந்தது. அவருக்குக் கொஞ்சம் தூரத்தில் நின்றுகொண்டிருந்த விமலன் கண்கொட்டாமல் ரேகாவையே பார்த்துக்கொண்டிருந்தான்.

''கேளுங்கள். ஏன் பேசமாட்டீங்கிறீங்க? வந்ததுமே கேட்கிறேன்னீங்களே?'' லலிதா தந்தையை உலுக்கி எடுத்தாள்.

''என்ன லலிதா?'' ரேகா பயந்தபடியே லலிதாவைப் பார்த்துக் கேட்டாள்.

''என்னவா? ராத்திரி நான் படுத்துக் கொண்ட பிறகு என் அறைக்கு நீ வந்தாயா இல்லையா?''

''வந்தேன்.''

''மேஜை மீது நான் வைத்திருந்த நெக்லெஸைப் பார்த்தாயா இல்லையா?''

''பார்த்தேன்.''

''ராத்திரி உன்னைத் தவிர வேறு யாவும் என் அறைக்குள் வரவில்லை. காலையில் எழுந்ததும் பார்த்த போது மேஜை மீது நெக்லெஸ் இல்லை. என்னவாச்சு?''

ரேகா வாயடைத்துப் போனவளாய் அப்படியே நின்றாள்.

''லலிதா! எனக்கு... எனக்குத் தெரியாது. நிஜமாய் தெரியாது'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''நீ இப்படிச் சொல்லுவாய் என்று எனக்கு முன்பே தெரியும், அதனால்தான் டிரைவர் வந்ததுமே நாங்களிரு வரும் போய் உங்கள் வீட்டில் தேடிப் பார்க்கிறோம்னு சொன்னதற்கு அதோ அவர் ஒப்புக்கவே முடியாதுன்னு வாசலுக்கு குறுக்காய் நின்று விட்டார்! பாவம், நீ நொந்துகொள்வாய் என்ற பயம் போலும்!''

''லலிதா'' விஸ்வநாதன் உறுமினர்போல கத்தினார்.

லலிதா அலட்சியமாய் பார்த்தாள்.

''நீங்கள் கத்தினாலும் எனக்கொன்றும் பயமில்லை. இந்தக் குடும்பம் என்றோ நடுவீதிக்கு வந்து விட்டது.

''இப்பொழுது புதிதாய் வரவேண்டியது எதுவும் இல்லை.

''இவள் இந்த வீட்டில் வந்து புகுந்து கொண்டு ஆடிக் கொண்டிருக்கிற நாடகம் எனக்கு நன்றாய் தெரியும்.''

''நீ வாயை மூடப் போகிறாயா இல்லையா?'' விஸ்வநாதன் மகளை நோக்கிப் போனார்.

''மூடமாட்டேன். இவ்வளவு நாட்களாய் இந்த விஷயத்தை மூடி மறைக்க முடியாமல் என் இதயம் துடித்துக் கொண்டிருந்தது. உண்மையைச் சொல்லுங்கள், வேலைக்காரியாய் வந்து சேர்ந்த இவளுக்கு இந்த வீட்டில் இவ்வளவு உரிமை எதுக்கு? நீங்கள் கொடுத்த இடந்தானே இது? இன்றைக்கு என் நகை போச்சு. நாளைக்கு இன்னொன்று போய் விடும். எவ்வளவு நாளைக்குதான் வாயை மூடிக்கொண்டு சும்மாயிருக்க முடியும்? சரி போகட்டும். நடந்ததென்னவோ நடந்து விட்டது, போன நகை திரும்பி வராது என்று மனதைக் கல்லாக்கிக் கொண்டு விடுவோம். ஆனால் இந்த ரேகாவை இந்த நிமிஷமே கழுத்தைப் பிடித்து வீட்டை விட்டுத் தள்ளுங்கள். இல்லையென்றால் நான் இப்பொழுதே போலீசுக்குப் போன் பண்றேன். எவ்வளவு நாளைக்கு இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருப்பது. இனி என்னால் முடியாது.''

''மூடு வாயை'' விஸ்வநாதனின் கை காற்றில் வேகமாய் எழும்பி லலிதாவின் கன்னத்தைப் பதம் பார்த்து விட்டது.

வினாடி நேரம் எதிர்பாராத இச்சம்பவத்திற்கு எல்லோரும் விக்கித்துப் போய் நின்று விட்டார்கள்.

இவ்வளவு பேர்களுக்கு நடுவில் தன்னைத் தந்தை இவ்வாறு அவமானப்படுத்துவார் என்று லலிதா கனவிலும் கருதவில்லை. கன்னத்தைக் கையால் பிடித்துக் கொண்டு தந்தையைச் சுட்டெரித்து விடுப வளைப் போல பார்த்துக் கொண்டே நின்றாள்.

அதற்குள் வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது. வந்தது டாக்ஸி என்பது போல மீட்டரை சரி பண்ணிய சப்தம் கிரீச்சென்று கேட்டது.

வெளியே ஓடிப் போய் பார்த்து விட்டு வந்த டிரைவர் விஸ்வநாதனைப் பார்த்து—"சார்! பூனாவிலி ருந்து மிஸ். ஜோஷியும் அவங்களோடு இன்னும் இருவரும் வந்திருக்காங்க சார்" என்று சொன்னான்.

லலிதா சட்டென்று திரும்பி தன் அறைக்கு ஓடினாள்.

மிகச் சங்கடத்துடன் பார்த்த விஸ்வநாதன் தன் அறைக்குப் போய் விட்டார்.

வேலைக்காரர்கள் அவரவர்கள் தம் வேலையைப் பார்க்கப் போய் விட்டார்கள்.

ஹாலில் தனியாய் எஞ்சி நின்றாள் ரேகா.

விமலன் வாசலுக்குப் போக முற்பட்டவன், திரும்பி ரேகாவைப் பார்த்து—"உள்ளே போ" என்றான் மிக மென்மையான குரலில்.

வினாடி நேரம் இருவர் பார்வையும் கலந்தன. விமலனின் கண்கள் இரக்கம் ததும்ப, சிநேகபூர்வமாய் இருந்தன.

ரேகாவுக்கு ஏனோ திடீரென்று துக்கம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

அதற்குள் வாசலில் ''ஹலோ விமல்!'' என்ற மிஸ். ரோஸியின் குரல் கேட்டது.

''ஹலோ'' என்றான் அவன்.

அங்கே நிற்கப் பிடிக்காமல் ரேகா வேறு வழியில்லாமல் விஸ்வநாதனின் அறைக்குள் புகுந்து கொண்டாள். உள்ளே விஸ்வநாதன் ஆயாசப்பட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தார்.

ரேகா அவரிடம் போனாள்.

''நான்... நான்... நீங்கள்'' என்ற ரேகாவுக்கு அதற்கு மேல் வார்த்தைகள் பெயரவில்லை.

''ரேகா'' அவர் சட்டென்று ரேகாவின் கையைப் பிடித்து கிட்டே இழுத்துக்கொண்டு அவள் தலையை மார்போடமுத்திக் கொண்டார்.

''ரேகா! அம்மா! இந்த சமயத்தில் இந்த துர்பலமான வனுக்கு நீதான் கதி. இதைக்காட்டிலும் வேறெதுவும் சொல்ல முடியவில்லை என்னால். நீ இந்த வீட்டில் இருப்பது லலிதாவுக்கு பிடிக்கவில்லை. அவ்வளவுதான். அதை தவிர வேறொன்றும் இல்லை. நீ இதையொன் றும் மனதில் வைத்துக்கொள்ளாதே. உனக்கு வருத்த மாயிருந்தாலும் உன் தந்தையைப் போன்ற எனக்காகப் பொறுத்துக்கொண்டு தீரணும். தந்தையை போன்ற என்ன? நான் உன் தந்தையேதான்.'' அவர் ரேகாவின் தலையை இன்னொரு முறை மார்போடு அழுத்திக் கொண்டார். அந்த ஸ்பரிசத்தில் அன்பு, இன்னும் ஏதோ வேதனை நன்றாய் தெரிந்தது.

ரேகாவின் இதயத்திலிருந்து மலையத்தனை பாரம் நீங்கினாற்போலிருந்தது.

லலிதா தன் மீது போட்ட திருட்டுப் பழியை அவர் நம்பவில்லை, அவளுக்கு அது நிம்மதியாய்

இருந்தது. ஆனால் இந்தச் சந்தோஷம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

இச்சம்பவம் நிகழ்ந்த பிறகு சேகர் விஷயத்தை எப்படி சொல்வது என்று தெரியவில்லை. திருட்டுப் பழி சுமத்தப்பட்ட ஒருத்தி தான் குற்றமற்றவள் என்று சொல்லி விட்டு திரும்பவும் என் தம்பி திருடன் என்று எப்படிச் சொல்ல முடியும்?

அச்சம்பவத்தால் ரேகாவுக்கு அந்த வழி முழுவது மாய் அடைபட்டுப் போய்விட்டற்போல தோன்றிற்று.

5

சேகர் விஸ்வநாதனைச் சந்திப்பது என்பது இனி நடக்காத காரியம் என்று உணர்ந்ததுமே ரேகாவின் நவநாடிகளும் தளர்ந்து போய்விட்டன.

சேகரின் எதிர்காலத்தைப் பற்றி அந்த விதமாய் கனவு கண்டுகொண்டிருந்த அவளுக்கு தாங்க முடியாத ஏமாற்றம் ஏற்படத் தொடங்கிற்று. சேகர் விஷயத்தில் நம்பிக்கை இல்லாத பொழுது, தன் மீது போட்ட பழியோடு இனியும் விஸ்வநாதனிடம் தொடர்ந்து வேலை செய்வது அசாத்தியமாய் தோன்றிற்று அவளுக்கு. ஆனால் இப்பொழுது திடீரென்று தான் வேலையிலிருந்து நின்றுகொண்டால் அந்தப் பழி உண்மைதான் என்று எல்லோரும் நினைத்துக்கொள்ள ஏது உண்டு. அதனால் அவளால் எந்த வழிக்கும் போக முடியாமலிருந்தது. மானசீகமாய் இப்படிப்பட்ட ஊமை வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்ததால் ரேகாவின் கண்களில் உற்சாகம் குன்றி சோர்வு வந்து சூழ்ந்து கொண்டது.

ரேகாவிடம் மாறுதலை முதல் முதலில் கவனித்தவன் விமலன்தான்! வெளுத்த முகத்துடன் திகிலடைந்த கண்களோடும், நிலையை மறந்து போனபடி நின்று கொண்டிருக்கும் ரேகாவைப் பலமுறை கவனித்தான் அவன். ரேகாவிடம் திடீரென்று ஏற்பட்டிருக்கும் இந்த மாறுதலுக்கு காரணம் அன்றைக்கு நகை விஷயமாய் லலிதா செய்த ரகளையாய்தான் இருக்கும் என்றெண்ணினான். அவ்வளவு தன்மானமுள்ள ரேகா உடனே இந்த வீட்டிற்கு வராமல் நிறுத்திக்கொள்வது போக இன்னும் வந்துகொண்டேயிருந்தது அவனுக்கு விநோதமாய்தான் இருந்தது. ரேகாவிடமுள்ள தன்மான உணர்ச்சியைப் பற்றி அவன் அறியாதவனில்லை. யோசித்துப் பார்த்தபொழுது, கேவலம் பணத்தொல்லையினால் தான் வேலையை விட முடியாமல் வேறு வழியில்லாமல் இவ்வாறு வருகிறாளோ என்று தோன்றிற்று. ரேகாவின் ரோஷத்தைப் பற்றி அவன் அறியாதவன் இல்லை. யோசித்துப் பார்த்தபொழுது பொருளாதார தொல்லையினாலேயே இந்த அவமானத்தைக்கூட மென்று விழுங்கிக்கொண்டு வேறு வழியில்லாமல் வருவதாய் தோன்றிற்று. இது உண்மையாயின், எவ்வளவு நரகம்! தன்மானத்தையே உயிராய் பாவிக்கும் நபர்களுக்கு அதை கொன்றுகொண்டு வாழ்வது என்பது மிக மோசமான சித்திரவதைதான். அவன் மனம் ரேகாவின் பால் இரங்கத் தொடங்கிற்று.

எவ்வளவோ தடவை— ''நடந்ததென்னவோ நடந்துவிட்டது. நமக்கு நடந்த விவாகத்தை ஒப்புக்கொண்டு என் மனைவியாய் வந்து என் வாழ்க்கையைப் பங்கிட்டுகொண்டு உன்பால் பொறுப்புள்ள மனிதனாய் உன் கஷ்டங்களை நான் எதிர்த்து நிற்பதற்கு அவகாசம் எனக்குக்கொடு'' என்று கேட்கவேண்டும் போலிருக்கும் அவனுக்கு. ஆனால் அவன் எதிர்பட்டாலே முகத்தை திருப்பிக்கொண்டு போய்விடும் ரேகாவிடம் அவனால்

தன் மனதை திறந்து பேசக்கூடிய அவகாசமே கிடைக்க வில்லை. அவன் சில சமயம் விஸ்வநாதனிடம் தனக்கும் ரேகாவுக்குமிடையே நடந்ததையெல்லாம் சொல்லி விட்டு, ரேகா தன்னைக் கணவனாய் ஏற்றுக்கொள்ளும் படி அவளை சம்மதிக்க வைத்துவிடச் சொல்லி கேட்டுக் கொள்ள வேண்டும் என்று தோன்றும். ஆனால் அவரிடம் கேட்டுவிட்ட பிறகு ரேகா ஒப்புக் கொள்ளாமல் போனால்? அந்த திருமணம் அவள் விருப்பத்தோடு நடந்ததில்லை என்றும் கேவலம் பல வந்த கல்யாணந்தான் என்றும், என்று சொல்லி விட்டால் அதை காட்டிலும் வேறு அவமானம் உண்டா? இந்த தயக்கத்தால்தான் அவன் அந்த யோசனைகளை அடக்கிக்கொண்டான்.

மிஸ் ஜோஷி தாய் தந்தையரை அழைத்துக்கொண்டு ஏன் வந்திருக்கிறாள் என்று எல்லோருக்குமே தெரிந்து தான் இருந்தது. மிஸ் ஜோஷி இதற்கு முன்பே தென்னிந்தியச் சுற்றுப் பயணத்திற்காக வந்திருந்த பொழுது விமலனின்பால் அவளுக்கு மிகவும் ஈடுபாடு ஏற்பட்டிருந்தது. அதனால்தான் தாய் தந்தையரை அழைத்துக்கொண்டு திருமணப் பேச்சை எடுக்க விரும்பி வந்திருந்தாள். மிஸ். ஜோஷி அதற்குள் விமலனின் மீது தனக்கு எல்லா அதிகாரங்களும் இருப்பதுபோல மிக உரிமையோடு நடந்துகொண்ட தைப் பார்த்து ரேகாவால் சாதாரணமாய் இருக்க முடிய வில்லை. விமலனின் மீது தனக்கு எந்த உரிமையும் இல்லை என்று தெரிந்தும்கூட மனம் ஏன் இவ்வாறு வருத்தப்பட வேண்டும்? தன்னை தயையின்றி வருத்தப் படுத்தியவரைப்பற்றி ஏன் இவ்வாறு யோசிக்கவேண்டும்? ரேகாவுக்குத் தன் புத்திசாலித்தனத்தின் மீது தனக்கே வெறுப்பு ஏற்படத் தொடங்கிற்று.

மிஸ். ஜோஷி முதலியவர்கள் வந்து ஒரு வாரமாகி விட்டது. அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. கோர்ட்டிற்கு விடுமுறை. அதனால் விமலன்கூட சாப்பாட்டிற்கு வந்தான்.

எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் பேச்சிற்கிடையே மிஸ். ஜோஷியின் தந்தை தாம் வந்த காரியத்தை வெளிப்படுத்தினார்.

விஸ்வநாதனைப் பார்த்து சொன்னார். ''விமலனை என் மகளுக்கு மிகவும் பிடித்து விட்டது! நீங்கள் பெரியவர். அவனுக்கு உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. அவனைச் சம்மதிக்க வைக்கும் பொறுப்பு உங்களுடையது.''

விஸ்வநாதன் சங்கடத்தில் ஆழ்ந்தார்.

''என்னால் என்ன பண்ண முடியும்? எல்லாம் அவன் இஷ்டம்.'' என்று சொல்லி விட்டார்.

லலிதா இடைமறித்து, ''இப்படி ஒளிவு மறைவு எதுக்கு? விமலனையே கேட்டு விட்டால் போகிறது! என்ன சொல்கிறாய் விமல்? வெட்கப்படாமல் சொல்லி விடு.'' என்றாள்.

''சீ, வெட்கம் எதற்கு? இந்த காலத்தில் பெண்கள் அதை விட்டு விட்ட பிறகு இனி ஆண்களுக்கு எதுக்கு?'' என்றான் விமலன்.

''அதையெல்லாம் அப்புறமாய் சொல்லிக் கொள்ளலாம். மொதல்ல இவங்களுக்கு பதில் சொல்லு'' என்றாள் லலிதா.

மிஸ். ஜோஷியைப் பற்றிய அவன் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று துடிப்பாய் இருந்தது லலிதாவுக்கு.

''அவ்வளவு அவசரம் எதுக்கு? யோசித்துக் கொண்டு சொன்னால் போதும்'' என்றாள் மிஸஸ். ஜோஷி.

எல்லோரும் அவனையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

விமலன் ஒரு வினாடி அவர்கள் எல்லோருடைய முகங்களையும் பார்த்தான். பிறகு நிதானமாய், கம்பீரமாய் பதில் சொன்னான்.

''ஸாரி! உங்களுக்கு ஏமாற்றத்தை உண்டாக்குகிறேனோ என்னவோ?''

''அப்படின்னால்?'' என்றார் ஜோஷி சட்டென்று.

''மன்னிக்கணும். எனக்குக் கல்யாணம் ஆயிடுத்து.''

''வாட்?'' மிஸ். ஜோஷியும் அவள் தந்தையும் ஏக காலத்தில் உரக்கக் கேட்டார்கள்.

விஸ்வநாதன் நம்பமாட்டாமல் பார்த்தார்.

லலிதா கோபத்துடன் முறைத்துப் பார்த்து விட்டு, ''விமல்! போதும் உன் தமாஷ்! பெரியவங்க! அவங்களோடு உனக்கென்ன விளையாட்டு?''

''இல்லை லலிதா! நான் நிஜந்தான் சொல்கிறேன்.''

''இதப்பார்! யாரிடம் காதுக்குத்துகிறாய்? எனக்குத் தெரியாமல் உன் கல்யாணம் எப்படி ஆகியிருக்கும்?''

''ஆயிடுத்துன்னுச் சொன்னேன், நம்பாவிட்டால் போ.''

''யார் அந்தப் பெண்? எங்கள் யாருக்கும் தெரியாமல் திடீரென்று வானத்திலிருந்து வந்து குதித்தாளா?''

''உங்களுக்கு யாருக்கும் தெரியாது'' கம்பீரமாய் பதிலளித்தான் விமலன்.

லலிதா சந்தேகத்துடன் பார்த்தாள்.

விமலனின் தோரணையைப் பார்த்தால் வேடிக்கை பண்ணுவதுபோல இல்லை.

''எப்பொழுது ஆயிற்று கல்யாணம்?''

''ரொம்ப நாளைக்கு முன்னாடி.''

''தேதியைச் சொல்லு.''

''ஞாபகமில்லை.''

லலிதா எல்லோரையும் 'கேட்டுக் கொள்ளுங்கள்' என்பதுபோல பார்த்தாள்.

''போகட்டும், கல்யாணம் பண்ணி வைத்த அந்த புரோகிதர் யாருன்னுச் சொல்லு. அவரைக் கேட்கிறேன்.''

''ஊஹூம், அப்படிப்பட்டவர் யாருமில்லை.''

''என்னது? புரோகிதர்கூட இல்லையா? அப்படீன்னால் காந்தர்வ விவாகமா? அல்லது ரெஜிஸ்தர் கல்யாணமா?''

''ஒரு விதத்தில் சொல்ல வேண்டுமென்றால்— ராட்சசக் கல்யாணம்.'' அவன் குரல் வினோதமாய் ஒலித்தது.

அதுவரை சந்தேகத்துடன் கேட்டுக் கொண்டிருந்த லலிதா இதைக் கேட்டதும் 'ஓஹோ ஹோ' என்று சிரித்தாள்.

''நீ எதை வேண்டுமானாலும் பண்ணுவாய் அவ்வளவு சாமர்த்தியக்காரன். அது... அது யார் என்று சொல். பார்த்துப் பொறாமைப்படுகிறேன்.''

''ஊஹூம். சொல்லமாட்டேன். சொன்னால் நீ எங்கள் இருவருக்கும் ஆகாமல் பண்ணி விடுவாய்'' என்றான் பயந்தாற்போல நடித்தபடி.

லலிதா மறுபடியும் வாய்விட்டு சிரித்தாள்.

சூழ்நிலை மறுபடியும் வேடிக்கையாய் மாறிவிடவே எல்லோர் முகங்களிலும் சந்தோஷம் ஏற்பட்டது.

லலிதா சிரித்துக் கொண்டே மிஸ்டர் ஜோஷியைப் பார்த்தாள்.

"நீங்கள் விமல் வார்த்தையைப் பொருட்படுத்தாதீங்க. மனிதர்களை முட்டாளடிப்பதில் எங்கள் விமலன் கெட்டிக்காரன். எனக்குத் தெரியும், அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை, அவனுக்கு என்னைத் தவிர வேறெந்தப் பெண்களோடும் பரிச்சியமே இல்லை."

லலிதாவின் வார்த்தைகளை ஏனோ தடைச் சொல்லவில்லை விமலன். அவன் கவனம் வேறிடத்தில் இருந்தது.

சமையலறையில் ரேகா இருந்தாள்.

ரேகாவின் காதில் விழவேண்டும் என்றே அவன் அவ்வாறு பேசினான். அவனுக்கு அந்தச் சமயத்தில் ரேகாவின் முகத்தை பார்க்கவேண்டும் போலிருந்தது. சாதத்தைப் பிசைந்துக் கொண்டிருந்த விமலன், "இதென்ன, நெய் ஊற்ற மறந்துப் போய் விட்டாங்களா? ஏன் கொண்டு வரவேயில்லை?" என்றான் ரேகாவை உத்தேசித்து.

விஸ்வநாதன் ரேகாவை இரைந்து கூப்பிட்டார். ஆனால், ஆனால் ரேகாவுக்கு பதில் சமையல்காரன்தான் நெய்யை எடுத்துக் கொண்டு வந்தான். சாப்பாடு ஆன பிறகு விமலன் தனியாய் இருந்தபொழுது லலிதா கேட்டே விட்டாள். "விமல்! உண்மையைச் சொல்லு. மிஸ் ஜோஷி உனக்குப் பிடிக்கவில்லையென்றுதானே அப்படி நாடகமாடினாய்?"

"நீதானே எனக்கு உன்னைத் தவிர வேறெந்தப் பெண்ணையுமே தெரியாது என்றாய். அதற்குள்

சந்தேகம் வந்துவிட்டதா?'' கேட்டதற்கு பதில் சொல்லாமல் எதிர் கேள்வி கேட்டான் விமலன்.

லலிதா அவனை கேலி பண்ணிவிட்டு போய் விட்டாள். வீட்டிற்குப் புறப்படுவதற்கு முன்னால் விமலன் விஸ்வநாதனின் அறைக்குள் வந்தான்.

''உட்காரு, போகலாம்'' என்றார் அவர். விமலன் உட்கார்ந்ததும் அவர் தன் சொத்து விஷயத்தில் திருத்தங்கள் செய்து விவரமாய் எழுத வேண்டும் என்று சொன்னார்.

''விமல்! ஜோஷி கேட்ட விஷயத்தைப்பற்றி என்ன சொல்கிறாய்? இன்று மாலைக்குள் உன்னை இன்னொரு தடவை சந்தித்து, உன் அபிப்பிராயத்தைத் தெரிந்துக் கொண்டு சொல்லச் சொன்னார்.''

''எனக்கு பிடிக்கவில்லைன்னு சொன்னதாய் சொல்லுங்கள்.''

விஸ்வநாதனுக்கு பெரிய பாரம் நீங்கினாற் போல இருந்தது.

''விமல்! வெகு நாளாய் உன்னை ஒன்று கேட்கணும் என்றிருந்தேன். சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லை.''

''என்ன?''

''ரேகாவைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?''

விமலன் திடுக்கிட்டவனாய் அவரைப் பார்த்தான்.

அவர் தரையைப் பார்த்துக்கொண்டே சொன்னார்— ''விமல்! ரேகாவை நான் லலிதாவுக்கு சமானமாய் பாவிக்கிறேன். அவளுக்குத் தகுந்தப் பையனைப் பார்த்து மணம் செய்து வைக்கவேண்டும் என்ற சங்கல்பம் இருக்கிறது எனக்கு. இப்பொழுதெல்லாம் அடிக்கடி உங்கள் இருவரையும் சேர்ந்தாற்போல கண்ணெதிரே பார்க்கும்போது அந்த வரன் நீயாகவே

ஏன் இருக்கக்கூடாது என்று தோன்றத் தொடங்கி விட்டது. ரஞ்சிதாவை நீங்களிருவரும் நன்றாய் பார்த்து கொள்வீங்க. ரேகாவை நீ மனைவியாக்கிக்கொண்டால் உங்களிருவரிடமும் என் எஞ்சிய வாழ்க்கை நிம்மதியாய் கழிந்துபோய் விடும். அதுமட்டுமில்லை. எனக்கப்புறம் ரஞ்சிதாவுக்கு உங்கள் நிழலில் எந்தக் குறையும் இருக்காது என்ற நம்பிக்கையும் இருக்கிறது எனக்கு'' விமலனின் முகம் சிவந்துவிட்டது.

''நீங்கள்... நீங்கள் அந்தப் பெண்ணைக் கேட்டீங்களா?'' என்றான் விமலன்.

''மொதல்ல உன் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வது முக்கியம் என்று தோன்றிற்று. ரேகா என் பேச்சைத் தட்டமாட்டாள் என்ற நம்பிக்கை இருக்கிறது எனக்கு.''

''முதலில் கேட்டுப் பாருங்கள்'' அவன் எழுந்தான்.

''ஆமாம், விமல், கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நீ சாப்பாட்டு மேஜைக்கருகில் ஏன் அப்படி சொன்னாய்? அது விளையாட்டிற்காகச் சொன்னதுதானே?''

எழுந்து வாசலை நோக்கிப் போன அவன் நின்று திரும்பிப் பார்த்தான். அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அவன் இதயத்தில் உணர்ச்சி அலைகள் பொங்கிக்கொண்டு வெளிவந்தது. அதிர்ஷ்டவசமாய், அதே சமயத்தில் மிஸ். ஜோஷி அறைக்குள் நுழைந்ததால் விமலன் பதில் சொல்ல வேண்டிய ஆபத்திலிருந்து தப்பித்தான்.

''அப்பாவும் அம்மாவும் சீட்டாட உட்கார்ந்து விட்டாங்க. நீயும் வா விமல்!'' என்று கொஞ்சலாய் கேட்டாள்.

''எனக்கு வேலை இருக்கு. இன்னொரு தடவை வரேன்'' என்று சொல்லி விட்டு போய்விட்டான் விமலன்.

6

மறுநாள் மிஸ். ஜோஷி முதலியவர்கள் ஊருக்குப் புறப்படவிருந்ததால் லலிதா விமலனிடம் அவர்களை அவன் வீட்டிற்கு மறுநாள் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினாள்.

''நான் எதற்காகக் கூப்பிடணும்?'' என்றான் அவன்.

லலிதா கோபத்தை வரவழைத்துக்கொண்டே, ''என்ன மனிதன் நீ? இதைக்கூட ஊகித்துக்கொள்ள முடியவில்லையே? அவங்க இந்த ஊருக்கு வந்ததே உனக்காக! மரியாதைக்காகவாவது ஒரு தடவை சாப்பிடக் கூப்பிட வேண்டாமா நீ?'' என்றாள்.

''மரியாதைக்காக என்றால் எனக்கெந்த ஆட்சேபணையும் இல்லை.''

விமலன் அவர்களை மறுநாள் சாப்பிடக் கூப்பிட்டான். அவர்களோடு கூட விஸ்வநாதனையும் லலிதாவையும் கூட கூப்பிட்டான். இதன் மூலமாய் மிஸ். ஜோஷிக்கு லலிதாவின் வார்த்தைகளின் பலம் புரிந்தது. தான் இங்கேயிருந்துகொண்டு விமலனின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்வது மட்டும் போதாது. தேவையானால் அவனை எப்படியாவது தன்பக்கமாய் திருப்பிக்கொள்வதற்கு வழியைக்கூட தேடிக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் முற்றிலுமாய் லலிதாவின் உதவி துணை

யாய் இருக்கும் என்றெண்ணினாள். அதனால் அவள் லலிதாவுக்கு இன்னும் நெருக்கமாய் நடந்துகொள்ளத் தொடங்கினாள்.

லலிதாவுக்குகூட விமலன் மிஸ். ஜோஷியை மணந்துகொண்டால் நன்றாயிருக்கும் என்று தோன்றத் தொடங்கிவிட்டது. விமலனிடம் எப்படியும் சுதந்திரம் இருந்தது. மிஸ். ஜோஷியும் பரவாயில்லை. சிநேகிதி தான்! தந்தையிடம் தன்னால் அடையமுடியாத ஆதரவை அவர்களிடமிருந்து பெறலாம் என்று தோன்றிற்று.

மறுநாள் காலையில் ரேகா வந்தபொழுது விஸ்வ நாதன் அதற்குள் குளித்து முடித்துவிட்டு வாசலில் தயாராய் காத்திருந்தார். உள்ளே வந்ததுமே ''வந்தாயம்மா, வா... வா'' என்றார்.

ரேகா அவரிடம் போய் ''என்ன?'' என்றாள்.

''விமலன் உனக்காக வந்துவிட்டு போனான். அதற்குள் இரண்டு தடவை போன் பண்ணிவிட்டான்.''

ரேகாவின் இதயம் நின்றுவிட்டது. ''எதுக்கு?'' என்றாள்.

''இன்றைக்கு எங்கள் எல்லோரையும் சாப்பிடக் கூப்பிட்டான். சமையல் பண்ண யாரையோ வரச் சொல்லி நேற்று சொல்லியிருந்தானாம். அவன் இன்னும் வரவில்லையாம். வேலைக்காரி எப்படியும் இருக்கிறாள். ரேகாவைக் கொஞ்சம் வரச்சொல்லுங்கள் என்று வந்து சொன்னான்.''

அவர் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்ட ரேகாவின் முகம் சிவந்துவிட்டது.

ஜீவனில்லாமல் இருந்த அக்கண்களில் வெகு நாட்களுக்கப்புறம் ரோஷம் மின்னிற்று. சமையல்காரன்

வரவில்லையாம்! அவள் வேண்டுமாம்! என்ன திமிர்! அப்படியென்றால்... அவள் சமையல்காரிக்குச் சமம் என்றுதானே அர்த்தம்! தன்மானத்தால் அவள் மனம் கொதித்தது. அவள் தலையைச் சிலித்துக்கொண்டாள். இருக்கட்டும்! நினைத்துக்கொள்ளட்டும். இதற்கும் மேல் மதிப்பை அந்த ராட்சசனிமிடருந்து எதிர்பார்ப்பது கேலிக்குரியதுதான்!

ஆனால் விஸ்வநாதனின் வற்புறுத்தலை அவளால் மறுக்க முடியவில்லை. வேறு வழியில்லாமல் அவள் சம்மதித்தாள். மிஸ். ஜோஷி குடும்பத்தார் கடைவீதிக்கு போயிருந்தார்கள். ரேகா விஸ்வநாதனின் உத்தரவுப்படி வீட்டைப் பூட்டி விட்டு அவரோடு புறப்பட்டாள்.

விமலனின் வீட்டிற்குள் திரும்பவும் இந்த விதமாய் அடியெடுத்து வைக்க வேண்டியிருக்கும் என்று அவள் கனவிலும் கருதவில்லை. அவள் இதயம் படபடத்தது. மாடியறையில் ஏதோ ஃபைல்களைப் பார்த்துக்கொண் டிருந்த விமலன் இவர்கள் வந்ததை அறிந்ததுமே கீழே இறங்கி வந்தான்.

படியிறங்கி வந்த அவன் ரேகாவைப் பார்த்ததுமே நின்று விட்டான்.

இருவரும் ஒருவர் சாமர்த்தியத்தை இன்னொருவர் கண்களாலேயே கண்டுப் பிடித்துவிட வேண்டும் என்று பரிசோதித்துக் கொள்ளும் எதிரிகளைப் போல பார்த்துக்கொண்டார்கள்.

விமலனைப் பார்த்தமே விஸ்வநாதன், ''விமல்! எனக்காக லாயர் வரப்போவதாய் சொன்னார். நான் இங்கே இருக்கிறேன் என்றும் நேராய் இங்கேயே வரச்சொல்லியும் போன் பண்ணு'' என்றார்.

விமலன் ஆபீசு அறையை நோக்கிப் போனான். விஸ்வநாதன் ரேகாவை சமையலறைக்கு அழைத்து வந்தார்.

சமையலறையில் அன்றைக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் சித்தமாய் வைக்கப்பட்டிருந்தன. கங்கம்மா காய் நறுக்கிக் கொண்டிருந்தாள்.

''இந்தப் பொண்ணு யாருங்க சாமி?'' கங்கம்மா கேட்டாள்.

''எங்களுக்கு வேண்டியவங்க பெண்தான்.''

முதல் நாள் விமலன் சமையல்காரியாய் அவமானப் படுத்திவிட்டதாய் தன்மானத்தால் மனம் புண்பட்ட ரேகாவின் இதயத்தில் பன்னீரைத் தெளித்தாற்போல ஆறுதலடைந்தது.

விமலன் உள்ளே வந்து அன்றைக்கு பண்ண வேண்டியவைகளை சொன்னான். கொஞ்ச நேரங் கழித்து விஸ்வநாதன் தனக்காக லாயர் வந்ததால் எழுந்துபோய் விட்டார் முன் அறைக்கு. அவர்களோடு பேசிக்கொண்டிருந்த விமலன் நடுவில் எழுந்து உள்ளே வந்தான், கங்கம்மா இல்லை. கடைவீதிக்கு இஞ்சி வாங்கிவருவதற்காக போயிருந்தாள்.

சமையலறை வாசற்படியில் வந்து நின்ற விமலனை கவனிக்காதது போலவே ரேகா தன் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

''நாலு கப் காபி வேண்டும்?'' விமலன் சமையல் அறையைப் பார்த்துச் சொல்லிவிட்டு திரும்பிப் போய் விட்டான்.

அவன் திரும்பி வருவதற்குள் ரேகா டைனிங் டேபிளின் மீது ட்ரேயில் நான்கு கப்புகளை வைத்து அவற்றில் காபியை ஊற்றிக்கொண்டிருந்தாள்.

அவன் காபியை எடுத்துகொண்டு போய்விட்டு பத்து நிமிஷங்களில் திரும்பி வந்து ட்ரேயை மேஜைமேல் வைத்தான்.

''தாங்க்ஸ்! காபி ரொம்ப நன்றாயிருக்கு'' என்றான்.

ரேகா ஏதோ வேலை இருந்தாற்போல சமையல் அறைக்குள் போய்விட்டாள்.

''மை காட்! உனக்கு காது கேட்காதோ?''

விமலன் சொன்ன விதத்தைப் பார்த்து விட்டு ரேகாவால் திரும்பி பார்க்காமல் இருக்க முடியவில்லை. விமலனின் கண்களில் குரும்புத்தனம் பளபளத்துக் கொண்டிருந்தது. ஆம்! அவனுக்கு இது விளையாட்டு! அவளை வருத்தப்படுத்துவது அவனுக்கு ஒரு வினோத மான விளையாட்டு! அவளுக்கு கோபம் வந்தது. தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள். விமலன் அவள் எதிர்பார்த்தாற்போல அங்கிருந்து போய்விடவில்லை. கதவிற்கருகில் வந்து இரு பக்கங்களிலும் கைகளை ஊன்றிக்கொண்டு நின்றான்.

''ரேகா'' பரிவோடு கூப்பிட்டான்.

என்றுமே யார் வாயிலிருந்தும் அவ்வளவு பரிவான வார்த்தைகளை கேட்டிராத ரேகாவிற்கு இதயத்தை சுண்டி இழுத்தாற்போல இருந்தது.

''ரேகா! நான் உன்னோடு பேசணும்'' மிக சரளமாய் சொன்னான் அவன்.

ரேகா அவன் வார்த்தைகளில் அவ்வளவு சரளத்தை என்றுமே கண்டதில்லை.

விமலன் மரியாதையாய் பேசத் தொடங்கியிருக் கிறான் என்றால் ஏதோ இருந்து தீர வேண்டும். ரேகாவுக்கு இதற்கு முன்னால் நடந்த சம்பவம் நினைவிற்கு வந்தது. அவள் ஒரு பக்கம் பயந்து

கொண்டும் இன்னொரு பக்கம் அவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற பரபரப்போடும் எதிர்பார்த்து கொண்டிருந்தாள்.

"ரேகா" விமலன் ஏதோ சொல்லப்போனான்.

அதற்குள் கதவிற்கருகில் கங்கம்மாவின் குரல் கணீரென்று கேட்டது.

திரும்பிப் பார்த்து விட்டு பெருமூச்செறிந்துக் கொண்டே விமலன் அங்கிருந்து நகர்ந்தான். ரேகா நிம்மதியாய் மூச்சு விட்டுகொண்டாள்.

பதினோறு மணியளவில் லலிதா மிஸ். ஜோஷி குடும்பத்தாரோடு வந்தாள். அவர்களுக்கு வீட்டை யெல்லாம் சுற்றிக் காட்டினாள் லலிதா. சமையலறைக் குள் இருந்த ரேகாவைப் பார்த்த லலிதா எதுவும் விசாரிக் காமல் முகத்தை சுளுக்கிக்கொண்டு போய்விட்டாள்.

விமலன் யாரோ அவசரமாய் வரச்சொல்லி போன் பண்ணியதால் "அரை மணிக்குள் வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

சமையல் வேலைகள் முடிவடைந்ததும் ரேகா எல்லாவற்றையும் டைனிங் டேபிள் மீது எடுத்து ஒழுங்காய் வைத்து விட்டு விஸ்வநாதனிடம் போனாள்.

"ஏம்மா, ஆயிடுத்தா?" என்றார் அவர்.

"ஆயிடுத்து. நான் இனி வீட்டிற்குப் போய் விடுகிறேன்" என்றாள் ரேகா.

"இதற்குள்ளேயா? ஏன்?"

"ஒன்றுமில்லை. தலை வலிக்கிறது."

"இதென்ன? ஏன் இப்படி இருக்கிறாய்? உடம்பு சரியாய் இல்லையா?" கவலையோடு கேட்டார்.

ரேகா 'இல்லை' என்று தலையாட்டினாள்.

''சாப்பிடாமலேயே போய்விடப் போகிறாயா?''

''பசிக்கவில்லை.''

''விமலன் வரட்டும் சொல்லிவிட்டுப் போகலாம்.''

ரேகா வலிய முறுவலை வரவழைத்துக்கொண்டே, ''அவர் விருப்பத்திற்கிணங்க நான் வரவில்லையே இந்த வீட்டிற்கு? நீங்கள் வரச் சொன்னீங்க வந்தேன். வேலை ஆகிவிட்டது, போகிறேன்.''

விஸ்வநாதன் என்ன நினைத்துக்கொண்டாரோ தெரியாது. ரேகாவை அதற்குமேல் வற்புறுத்தவில்லை. லலிதாவும் மிஸ். ஜோஷியும் வந்ததிலிருந்தே அவர் பார்த்துக்கொண்டிருந்தார். ரேகாவை அவர்கள் ஆத்திரத்தோடு முறைத்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். ரேகா அவர்களுக்கு முன்னால் இருப்பது அவருக்கும் பிடிக்கவில்லை. அதனால் டிரைவரைக் கூப்பிட்டு ரேகாவை வீட்டில் இறக்கி விட்டு விட்டு வரச் சொன்னார்.

விமலன் திரும்பி வந்தான். சாப்பாடு மேஜை மீது எல்லாம் அழகாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. ரேகா போய்விட்டது கங்கம்மா மூலம் தெரியவந்ததும் அவன் ஆச்சரியமடைந்தவனாய் விஸ்வநானைக் கேட்டான்.

''ஆமாம் விமல்! உடம்பு சரியாயில்லைன்னு சொன்னதால் நான்தான் அனுப்பிவிட்டேன். வேலை யெல்லாம் முடிந்துவிட்டது'' என்றார் அவர்.

விமலனுக்கு என்றுமில்லாமல் கோபம் அவர் மீது வந்தது. வேலையெல்லாம் முடிந்துவிட்டதால் போய் விட்டாள்! அவன் வேலைக்காகத்தானா ரேகாவை அந்த வீட்டிற்குக் கூப்பிட்டான்! லலிதா மிஸ், ஜோஷி முதலியவர்களைச் சாப்பிட கூப்பிடும்படியாய் சொல்லவே, சங்கோஜத்தால் தட்ட முடியாமல் ஒப்புக்

கொண்டுவிட்ட அவனுக்கு, இரவு படுத்துக்கொண்டிருக்கையில் இந்த விதத்திலாவது ரேகாவை வீட்டிற்கு கூப்பிட வேண்டுமென்றும், எப்படியாவது தனிமையை வரவழைத்துக்கொண்டு, தன் மனதிலுள்ள விஷயத்தை பற்றி கேட்டுவிட வேண்டுமென்றும் யோசனைத் தோன்றிவிட்டது. முதலில் ரேகா வருவாளோ மறுத்து விடுவாளோ என்று பயந்தான். ரேகா வீட்டிற்குள் அடியெடுத்து வைக்கும்வரை அவனுக்கு சந்தேகமாகவே இருந்தது. ஆனால் ரேகா வந்தாள்.

சமையலறையில், வீட்டு மனுஷியைப் போல, சுதந்திரமாய் வளைய வந்து கொண்டிருந்த ரேகாவைப் பார்த்தபொழுது அவனுக்கு அவளைத் தன் வீட்டிற்கு தீபமாக்கிக்கொண்டுவிட வேண்டும் என்ற ஆசை உறுதியாகிவிட்டது. எவ்வளவுதான் 'இல்லை' என்று மறுத்தாலும் ரேகாவைத் தான் மனப்பூர்வமாய் மணம் செய்துகொண்டுவிட்டாற் போலவும், அவள் மீது தனக்கு உரிமை ஏதோ இருப்பது போலவுமே தோன்றத் தொடங்கிற்று. ரேகாவோடு பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதுபோல கிடைத்துவிட்டு கை நழுவிப் போய் விட்டது. விமலனுக்கு சற்று முன்னால் அந்த வீட்டில் தென்பட்ட சந்தோஷமெல்லாம் காற்றில் பறந்து விட்டாற்போல தோன்றிற்று.

7

விஸ்வநாதனின் வாயிலிருந்து திரும்பவும் சேகரைப் பற்றிய பேச்சு அடிபட்டுவிடுமோ என்று பயந்து கொண்டேயிருந்த ரேகாவுக்கு அந்த நேரம் வந்தே விட்டது.

அன்று பிற்பகலில் ரேகா விஸ்வநாதனுக்கு ஹார்லிக்ஸ்ஸைக் கலந்துகொண்டு போய் தந்தாள்.

''ஏம்மா, சேகர் ஊரிலிருந்து வந்துவிட்டானா?'' தம்ளரை வாங்கிக்கொண்டே கேட்டார் அவர். ரேகாவின் இதயம் வேகமாய் படபடத்தது. அவர் கேட்டது காதில் விழாததுபோல தலை குனிந்தபடி அங்கிருந்து போய்விடத் திரும்பினாள். ''ஊரில் இருக்கானா?'' அவர் திரும்பவும் கேட்கவே அவள் நின்று திரும்பிப் பார்த்தாள். மறைத்து வைப்பதால் என்ன லாபம்? இந்தப் பொய்த்திரைக்குள் எவ்வளவு நாட்கள்தான் கழித்துக் கொண்டிருக்க முடியும்? 'இருக்கிறான்' என்று தலையாட்டினாள்.

''இருக்கானா? பின்னே அன்றைக்கு ஏன் வரவில்லை?''

''வந்தானாம்.''

''வந்தானா? எப்பொழுது? நாம்ப வந்த பிறகா?''

சரேலென்று நிமிர்ந்து கேட்டார்.

''இல்லை, நாம்ப இருந்தபோதே.''

விஸ்வநாதன் குடித்துக்கொண்டிருந்த ஹார்லிக்ஸ் தம்ளரைக் கீழே வைத்துவிட்டு, ''நாம்ப இருந்தபோதே வந்தானா? பின்னே ஏன் நம் கண்ணில் படவில்லை?''— என்று கேட்டார் வியப்போடு.

''உங்களை...உங்களை அவனுக்குத் தெரியுமாம்.'' பாதாளத்தில் குறுகிப் போய்க் கொண்டேயிருந்தாற் போல இருந்தது ரேகாவுக்கு. அவருக்கு இந்த விஷயத்தை வெளிப்படுத்துவது நினைத்தாற்போல அவ்வளவு எளிதாய் இல்லை அவளுக்கு. நாக்கு வற்றிப் போய் விட்டாற்போல இருந்தது.

''என்னைத் தெரியுமா சேகருக்கு?'' அவர் நம்ப மாட்டாதவராய் கேட்டார்.

''ஆமாம், எப்படியென்றால்?''

ரேகா தன் உடம்பிலிருந்த சக்தியையெல்லாம் கூட்டிக்கொண்டாற்போல பேசத் தொடங்கினாள்.

"நீங்கள் ஒருநாள் சென்ட்ரல் ஸ்டேஷனில் நகையை இழந்தது ஞாபகமிருக்கா?" ரேகா என்ன சொல்ல விரும்புகிறாள் என்றும் அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்றும் அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஆமாம். அதனால்?"

"அந்த நகையைத் திருடப் போனவன் சேகர் தான்."

விஸ்வநாதன் இடி விழுந்தாற்போல பார்த்தார்.

"உங்களைப் பார்த்துவிட்டு உங்களுக்கு முன்னால் வர பயந்துவிட்டான். நீங்கள் என்னையும் அவனையும் மன்னித்து விடணும்." என்றாள் ரேகா கண்ணீர் மல்க தரையைப் பார்த்துக்கொண்டே.

விஸ்வநாதன் நம்ப முடியாதவராய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார். அன்று சென்ட்ரல் ஸ்டேஷனில் நகையைத் திருடப்போய், பிடிபட்டுத் தன் கையால் கன்னத்தில் அறை வாங்கிய திருடனா? கடவுளே!

ரேகா துக்கத்தை அடக்கிக்கொண்டே, "நீங்கள் என் தந்தையைப் போன்றவர். எங்களை மன்னித்து விடுங்கள். இந்த விஷயத்தை உங்களிடம் அப்பொழுதே சொல்லியிருப்பேன், ஆனால் லலிதாவின் நெக்லெஸ் தொலைந்த ரகளையில் இதைச் சொல்ல பயந்தேன். கடவுள் சாட்சியாய் சொல்கிறேன், அந்த நெக்லஸ் விஷயம் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும், திருடனின் அக்காதான்திருடி. இல்லை என்றாலும் யாரும் நம்பமாட்டாங்க." கைகளைக் கூப்பிக்கொண்டே துக்கம் அடைக்கச் சொன்னாள்.

''ரேகா! என் கண்ணே'' அவர் கைகளை நீட்டி ரேகாவைக் கிட்டே இழுத்துக்கொண்டார். ரேகா அழுதுகொண்டே, அந்த துக்கத்துடனேயே சேகர் விஷயமாய் தான் பட்டுக் கொண்டிருக்கும் கலக்கத்தைப் பற்றியும், அவனை அவர் உதவியோடு எப்படியாவது திருத்திக்கொண்டு வருவதற்காகத் தான் படும் அவஸ்தை யைப் பற்றியும் சொல்லிவிட்டாள்.

விஸ்வநாதன் பரிவோடு சொன்னார். ''என்னிடம் ஏம்மா சொல்லவில்லை? நான் இருந்தும் உனக்கு இல்லாதவனாகவே ஆகிவிட்டேன். என்னைப் போன்ற துரதிர்ஷ்டம் பகைவர்க்குக்கூட வேண்டாம்மா.''

ரேகாவுக்கு திடீரென்று மிகச் சோர்வு வந்து சேர்ந்துகொண்டது. அவள் இதயத்திலிருந்து பெரிய பாரம் நீங்கினாற் போலிருந்தது.

''ரேகா! என் கண்ணே! உன்னிடம் எப்படிம்மா சொல்லுவேன் நான்?'' அவர் அவள் தலையை மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டேகேசங்களை கோதிவிடத் தொடங்கினார்.

அதே சமயத்தில் அன்று மாலையில் கிளப்பில் நடக்கவிருந்த புரோகிராமிற்காக நல்ல உடைகளைத் தேர்ந்தெடுத்து வைத்த லலிதா அவைகளை இஸ்திரிப் போட்டுத் தரச் சொல்லலாம் என்பதற்காக ரேகாவைத் தேடிக்கொண்டு விஸ்வநாதனின் அறைக்கருகில் வந்து நின்று திரைச்சீலைகளை விலக்கிய லலிதா பாம்பைக் கண்டுவிட்டாற்போல அப்படியே நின்றாள். அறைக்குள் ரேகாவை மார்போடணைத்துக்கொண்டே பரவசமாய் கண்களை மூடிக்கொண்டே நின்றிருந்த தந்தை தென்பட்டார்.

லலிதாவுக்கு அக்காட்சியைக் கண்டதுமே அதுயை பற்றிக்கொண்டு வந்தது. அவள் இவ்வளவு நாட்களாய் எது நடக்கக்கூடாது என்று பயந்துகொண்டிருந்தாளோ அது நடந்தேவிட்டது. ஒரு விநாடி கதவிற் கப்பால் மார்பில் கையை வைத்துக்கொண்டு செய்வ தறியாமல் நின்றுகொண்டிருந்த லலிதா அடுத்த நிமிஷம் ஓட்டமாய் வெளியே வந்தாள்.

அதே சமயத்தில் விமலன் உள்ளே வரவே, "விமல்! ஒரு நிமிஷம் இப்படி வா! சட்டென்று வா" என்றாள்.

"என்ன?" என்றான் விமலன்.

விமலன் விஸ்வநாதனின் அறைக்கு முன்னால் வந்ததும் திரைச்சீலையை விலக்கி, "உள்ளே பார்" என்றாள். உள்ளே ரேகாவும் விஸ்வநாதனும் மிக நெருக்கமாய் இருந்த காட்சியை விமலன் பார்த்தான். கண்டதுமே காண சகிக்காதவனாய் சட்டென்று அப்பால் வந்துவிட்டான். அவன் முகம் ரத்தமில்லாதது போல வெளுத்துவிட்டது. லலிதா அவனைத் தொடர்ந்து வந்துகொண்டே, "விமல் நான் சொன்னபோது நீ நம்பவேயில்லையோனோ? இப்பொழுதாவது அந்த வேஷக்காரியின் போக்கைத் தெரிந்துக்கொண்டாயா? இன்னும் எடுத்துக்காட்ட வேண்டுமா?"

அவன் காலடியில் பூமி சுழன்றாற்போல இருந்தது. ரேகாவா இவ்வாறு செய்தாள்? ஆனால் கண்ணார இந்த சத்தியத்தைக் கண்டும்கூட அவனால் நம்பத்தான் முடியவில்லை.

லலிதா கடுமையாய் சொன்னாள்.

"விமல்! இனி என்னால் சும்மாயிருக்க முடியாது, இதைவிட சாட்சி வேறென்ன வேண்டும். இப்பொழுதே போய் அப்பாவை நாலு வார்த்தைக்கேட்டு விடுகிறேன்.

ரேகாவுக்கும் பாடம் கற்பிக்கிறேன். நாம்ப கையாலாகா தவர்கள் இல்லை என்று நிரூபித்து விடுகிறேன்.''

ஆவேசமாய் சொல்லிக் கொண்டே தந்தையின் அறைக்குள் நுழையப் போன அவளை விமலன் தடுத்து நிறுத்தினான்.

''என்னைத் தடுக்காதே. கண்ணாரக் கண்டுவிட்ட பிறகும் நமக்கு பயம் என்ன?''

''லலிதா! ப்ளீஸ், ரேகா வெளியே வரட்டும்.''

வெளியே பேச்சுக் குரல்கள் கேட்டதும் விஸ்வ நாதன் ரேகாவை மெதுவாய் விட்டார்.

அவருக்கு இதயத்தில் வலி ஏற்பட்டத் தொடங்கிய தற்கு அறிகுறியாய் நெற்றியில் வியர்த்துக் கொட்டிற்று.

''நீங்கள் ஆவேசப்படாதீங்க. உட்காருங்கள்.''

ரேகா அவர் கையைப் பிடித்து அழைத்து வந்து நாற்காலியில் உட்கார வைத்தாள்.

மேஜை மேல் இருந்த ஹார்லிக்ஸ் சில்லிட்டுப் போயிருந்தது.

''கொஞ்சம் தண்ணீர் கொண்டாம்மா. மார்பில் வலியெடுக்கிறாப்போலிருக்கு. மருந்துச் சாப்பிடு கிறேன்.''

காய்ந்த சருகைப்போல நடுங்கிக் கொண்டிருந்தது அவர் உடல்.

தண்ணீருக்காக அறையைத் தாண்டி வெளியே வந்துக் கொண்டிருந்த ரேகா, அறைக்கு வெளியே சலனம் ஒடுங்கினாற்போல சப்தமில்லாமல் நின்று கொண்டிருந்த லலிதாவையும் விமலனையும் பார்த்து திகைத்துப் போய் நின்று விட்டாள்.

விமலனின் பார்வை ரேகாவின் முகத்தின்மீது நின்று விட்டது.

மின்னலாய் அவன் பார்வையோடு பார்வை கலந்த ரேகா, அவனைப் பாராதது போலவே முகத்தைத் திருப்பிக்கொண்டுவிட்டாள்.

ரேகாவை ஏறயிறங்கப் பார்த்து விட்டுக் கடுகடுப்பாய் கேட்டாள் லலிதா.

''சரஸ சல்லாபங்கள் முடிந்து போய்விட்டதா?''

ரேகா முகம் சிவக்க, லலிதாவையும் விமலனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''பாவம், ஏதும் அறியாதவளைப் போல எப்படி நடக்கிறாள் பார்.''

லலிதாவின் தோரணை ரேகாவிற்குப் புரிந்து விட்டது மேலும் அங்கேநின்றால் இன்னும் கடுமையான வார்த்தைகளைக் கேட்க நேரிடலாம். என்றெண்ணி அகிங்குந்துப் போய்விட முற்பட்டாள்.

அவர்களைத் தாண்டிக் கொண்டு போய் கொண்டிருந்த அவளுடைய தோளின் மீது விமலனின் கை வந்து படிந்து அவளை அழுத்திப் பிடித்து நிறுத்திற்று. திடுக்கிட்ட ரேகா அப்படியே நின்று விட்டாள். ஒரு வினாடி ரேகாவின் தோள் வலியெடுக்கும்படியாய் பிடித்துக் கொண்ட அவன் சட்டென்று அவளைத் தனக்கு எதிராய் திருப்பிக் கொண்டான். ரேகாவும் விமலனும் எதிரெதிராய் நின்றார்கள்.

ரேகா பயமில்லாமல், அவன் கண்களை நேருக்கு நேராய் பார்த்தாள். விமலனின் கண்கள் நெருப்புக் கோளங்களாய் இருந்தன.

தப்புப் பண்ணி பிடிபட்டுவிட்ட போதிலும்கூட இந்தப் பெண்ணிடந்தான் எவ்வளவு துணிச்சல்!

அவனுக்கு அறுவருப்பாய் இருந்தது. விஷயத்தை அவள் வாயிலிருந்தே கக்க வைத்துவிட வேண்டும் என்ற பிடிவாதம்கூட ஏற்பட்டது. ரேகா விமலனின் கையில் சிக்கிய தன் தோளை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் அவளால் முடியவில்லை.

''லலிதாவின் வார்த்தைக்கு பதில் சொல்லிவிட்டுப் போ'' கடுமையாய் இருந்தது அவன் குரல்.

ரேகா வினாடி நேரம் அவனைக் கண்கொண்டாமல் பார்த்தாள். பிறகு மிடுக்காய், அலட்சியமாய் பதிலளித்தாள்.

''வேலை வெட்டி இல்லாதவங்க கேட்கிற ஆகா வெட்டி கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.''

ரேகாவின் தோளைப் பிடித்துக் கொண்டிருந்த விமலனின் கை திடீரென்று காற்றில் எம்பிற்று, தொடர்ந்து ரேகாவின் கன்னம் சுளிரென்றது.

லலிதா 'திக்'கென்றபடி முச்சை இழுத்து விட்டுக் கொண்டாள்.

ரேகாவின் கண் முன்னால் ஒரு நிமிஷம் எல்லாம் இருட்டாய் வலையம் வலையமாய் தெரிந்தது.

அறையிலிருந்து விஸ்வநாதன் வெளியே வந்தார்.

''விமல்! இதென்ன? என்னவாச்சு?'' அவர்கிட்டே வந்து கலங்கிப் போனபடி கேட்டார்.

விமலன் அவரை நோக்கித் திரும்பவில்லை. இன்னும் ரேகாவையே தீவிரமாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

''விமல், என்ன இது? ரேகா, என்னவாச்சு?''

இருவரையும் பார்த்துக் கேட்டார் அவர்.

ரேகா, கன்னத்தைப் பிடித்துக் கொண்டு உயிரற்றச் சிற்பத்தைப் போல விமலனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

லலிதா இடைமறித்துச் சொன்னாள்.

''என்னவா? இன்றைக்கு இந்த வேஷக்காரி போட்ட நாடகத்தை நானும் விமலும் கண்ணாரக் கண்டு விட்டோம்.''

''மூடு வாயை'' மகளைப் பார்த்துக் கத்தினார் அவர்.

விமலன் அவரைப் பார்த்து, ''லலிதா வாயை மூடிக் கொள்ள வேண்டிய தேவையில்லை, இந்தப் பெண்ணோடு நீங்கள் உரிமைக் கொண்டாடுவதற்கு சால்ஜாப்பு கேட்கிற உரிமை லலிதாவுக்கு உண்டு'' என்றான்.

''விமல்! உனக்கு புத்தி பிசகி விட்டதா? அவள் பாவக் கண்களுக்கு ஒவ்வொன்றுமே விகாரமாய் தான் தென்படும். ஆனால் நீ?''

''ஆமாம். நானும்கூட சால்ஜாப்பு கேட்கிறேன்'' பற்களை கடித்துக் கொண்டே சொன்னான்.

''விமல்! உனக்கு புத்தி பிசகிவிட்டது. நீ இப்படி வா; என்னோடு வா, நான் சொல்கிறேன்!'' அவர் அவன் கையைப் பிடித்துக் கொண்டு அறைக்குள் இழுத்துச் சென்றார். அறைக்குள் நுழைந்த அடுத்த நிமிஷம் அவ்வறைக் கதவுகள் சாத்திக் கொண்டு விட்டன.

வெளியே நின்று கொண்டிருந்த ரேகாவை லலிதா அணுவணுவாய் துவேஷிப்பது போல சொன்னாள்.

''இப்பொழுதாவது உனக்கு வெட்கம் என்பது இருந்தால் இந்த வீட்டு வாசல்படியை மிதிக்காதே. நம்பிக்கை துரோகி! பாலூற்றியப் பாம்பு இப்படி கடித்து

விடும் என்று நினைக்கவேயில்லை. சோற்றுக்கு கதியில்லாமல் வேலைப் பண்ணுவதற்காக என் வீட்டிற்கு வந்த உன்னை சக மனுஷியாய் மிககௌரவமாய் நடத்தினேன். கடைசியில் நீ தந்தை வயதுடையவர் என்றும் கூட பார்க்காமல் பண்ணிய காரியம் இதுவா? நட வெளியே! திரும்பவும் இந்த வீட்டு வாசல்படியை மிதித்தால் பார்! பாவம், இந்த வீட்டு வேலைக்காரியாய் வந்து விட்டு, வீட்டுத் தலைவியாய் குலுங்கலாம் என்று நினைத்தாயோ?''

''என்ன லலிதா? என்னவாச்சு?'' என்று மிஸ். ஜோஷி வந்தாள்.

லலிதா நடந்ததையெல்லாம் சுருக்கமாய் சொன்னாள்.

''ஐயோ, இந்த காலத்தில் வேலைக்காரிகளையெல்லாம் நம்பவே கூடாது. நல்லவேளை உங்கள் யாருக்கும் சொக்குப்பொடி போட்டு விடவில்லையே? அன்றைக்கு எங்க ஊரில் என்னவாச்சு என்றால்...'' ஆரம்பித்தாள்.

லலிதாவும் மிஸ். ஜோஷியும் ரேகாவைப் புழுவைப் பார்ப்பது போல பார்த்து விட்டுப் போய் விட்டார்கள்.

ரேகா மெதுவாய் வெளியே வந்தாள். தூக்கத்தில் நடப்பதுபோல அந்த வீட்டு எல்லையைத் தாண்டி வெளியே வந்து கொண்டிருக்கையில் ரேகாவிற்கு உயிரே பறந்துப் போய் விட்டாற்போல தோன்றிற்று.

8

காலை ஒன்பது மணியாகியும் இன்னும் எழுந்திருக்காமல், சோம்பலுடன் படுத்துக் கொண்டிருந்த ரேகாவைப் பார்த்து சுந்தரி, ''ஏன் இப்படிப் படுத்துக்

கொண்டிருக்கிறாய்? இன்றைக்குப் போகவில்லையா?'' என்று கேட்டாள்.

''உடம்பு சரியில்லை மாமி.''

''அப்படீன்னால் கொஞ்சம் வீட்டைப் பார்த்துக் கொள். நான் கோவிலுக்குப் போய் விட்டு வரேன்.''

''சரி மாமி.''

சுந்தரி சமையலறைக் கதவைச் சாத்திவிட்டு, காபியை சுடவைத்துச் சாப்பிடச் சொல்லி ரேகாவிடம் சொல்லிவிட்டு போய்விட்டாள்.

ரேகா இன்னும் அப்படியே உட்கார்ந்திருந்தாள் கட்டிலில். நிந்தனை என்பது மனிதர்களை எவ்வளவு சித்திரவதைப் பண்ணவல்லது என்பதைக் கண்கூடாய்க் கண்டாள். தந்தையைப் போன்ற விஸ்வநாதனுடனா நீச்சமான உறவை உருவாக்கியிருக்கிறாள்! லலிதா வேண்டுமென்றே சொன்ன வார்த்தைகள்தானா அவை? அல்லது உண்மையிலேயே நம்பி வெளியிட்ட சத்தியமா? எதுவாயிருந்தாலும் அந்த வார்த்தைகளுக்கு நிறைய சக்தி உண்டு. அது ஒவ்வொரு நிமிஷமும் நினைவிற்கு வந்து மனதை சூலமாய் தாக்கிக்கொண்டிருந்தது.

யோசனையில் ஆழ்ந்தபடி உட்கார்ந்திருந்த ரேகா வீட்டிற்கு முன்னால் கார் வந்து நின்றதை கவனிக்க வேயில்லை. காரை விட்டிறங்கி ரஞ்சிதா உள்ளே ஓடி வந்தாள். ரேகாவை வந்து கட்டிக் கொண்டதுந்தான் ரேகா இந்த உலகத்திற்கு மீண்டு வந்தாள்.

டிரைவர் உள்ளே வந்து ஜேபியிலிருந்து ஒரு சீட்டை எடுத்துத் தந்தான்.

''ஐயா உங்களிடம் தரச் சொன்னாரும்மா.''

ரேகா பிரித்துப் படித்தாள். விஸ்வநாதனின் எழுத்துக்கள் எப்பொழுதும் போலில்லாமல் கோணல் மாணலாய் இருந்தது. அதில் இவ்வாறு இருந்தது.

''ரேகா! கண்ணே! நேற்று நடந்தச் சம்பவம் உன் மனதை எவ்வளவு பாதித்திருக்கும் என்று என்னால் ஊகித்துக்கொள்ள முடிகிறது. விமலன் கூடதன்தப்பைப் புரிந்துகொண்டு விட்டான். நேற்றிரவு எனக்கு உடம்பு ரொம்பவும் மோசமாயிருந்தது. ஏறக்குறைய மரணத்தின் கடைவாயிலிருந்து வெளிப்பட்டேன்.

நேற்று நடந்ததை மனதில் வைத்துக்கொள்ளாமல் உடனே புறப்பட்டு வா! உன்னோடு நிறைய பேச வேண்டும். உனக்காக ஆயிரம் கண்களுடன் காத்திருப்பேன். டாக்டர் கட்டிலை விட்டு எழுந்திருக்கக் கூடாது என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டார். இல்லாவிட்டால் ரஞ்சிதாவோடு நானே வந்திருப்பேன்.

உன் தந்தை
விஸ்வநாதன்''

ரேகாவுக்கு அக்கடிதத்தைப் பார்த்ததுமே கண்கள் கலங்கிவிட்டன. எவ்வளவு மென்மையான இதயம் அவருக்கு! ரேகாவின் பார்வை அவர் கையெழுத்தின் மீது, 'உன் தந்தை' என்ற பதத்தின் மீது நிலைத்து நின்றது. அந்த பரப்பரப்பிலோ, வேற்று யோசனையிலோ, அல்லது உன் தந்தையைப் போன்றவர் என்று எழுத மறந்துப்போய் தந்தை என்று எழுதிவிட்டார். உண்மையில் அவரைப் போன்ற தந்தை எனக்கு இருந்திருந்தால்! ரேகாவின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று.

''சீக்கிரமாய் புறப்படுங்கம்மா! டாக்டருக்காகக் காரை எடுத்துட்டுப் போகணும். அவரோட கார் கெட்டுப் போயிடுத்தாம்'' என்றான் டிரைவர்.

"வரேன், இதோ ஒரு நிமிஷம்" கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

சற்று முன்னால் அவளிடம் ஏற்பட்டிருந்த நிராசையும் திகிலும் விஸ்வநாதனின் கடிதத்தைப் பார்த்ததும் மாயமாகிவிட்டான். எந்த தப்பும் பண்ணாதபொழுது தான் எதற்காக பயப்பட வேண்டும்? ஏன் வெட்கப்பட வேண்டும்?சேகர்பற்றி எல்லாம்தெரிந்ததும்.சந்தேகமோ கோபமோ ஏற்படாத விஸ்வநாதனைவிடவா இந்த உதவாக்கரை மனிதர்களின் வார்த்தைகள் பெரிது! உடம்பு சரியில்லாத பொழுது அவர் எவ்வளவு துடிதுடித்துக் கொண்டிருப்பார் என்றும், தான் அருகில் இருக்க வேண்டும் என்று எவ்வளவு தவித்துப்போவார் என்றும் ரேகாவுக்குத் தெரியாததில்லை. அதனால்தான் அவள் தயாராகி, ரஞ்சிதாவோடு வந்து காரில் உட்கார்ந்து கொண்டாள்.

ரேகா ஏறிய கார் விஸ்வநாதனின் வீட்டிற்கு பதிலாய் நேராய் விமலனின் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது.

"இதென்ன? இங்கே எதற்கு?" ரேகா கோபமாய் கேட்டாள்.

"ஐயா இங்கேதான் இருக்காறாம்மா! நேற்று சாயந்திரம் ஐயாவுக்கும் லலிதா அம்மாவுக்கும் பெரிய சண்டை வந்ததுங்க, ஐயா மகளை அடிக்கப்போய், பிடித்தவறி குப்புற விழுந்துட்டார். மார்வலி அதிகமாயிருந்தது. ராத்திரி விமலன் ஐயா இங்கே கூட்டிட்டு வந்துவிட்டார் ஐயாவை."

வாசலில் கார் வந்து நின்றதுமே விமலன் வெளியே வந்தான்.

ரேகா காரைவிட்டிறங்கவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தாள். விமலன் காருக்கருகில் வந்து தானே கதவைத் திறந்தான். ரேகாவால் என்னதான்

வேண்டாம் என்றாலும் அவனை நிமிர்ந்து பார்க்காம லிருக்க முடியவில்லை. அவன் அப்பொழுதுதான் தலைக்குக் குளித்துவிட்டு வந்திருந்தான் போலிருந்தது. கேசங்கள் தனித்தனியாய் விலகி காற்றிற்கு அசைந்துக் கொண்டிருந்தன. தூக்கமில்லாமையால் முகம் வாடி யிருந்தபோதிலும், கண்களில் ஆண்மைக்குரிய கம்பீரம் கவர்ச்சியாய் தென்பட்டது.

ஒரு வினாடி ரேகாவை முறுவல் ததும்ப கவனித்த அவன் ரேகாவின் மனதிலிருந்த உத்தேசத்தைப் புரிந்துக்கொண்டவனாய், "இறங்கித்தீரணும், வேறு வழியில்லை. அவர் இங்கேதான் இருக்கிறார்" என்றான்.

அந்த முறுவலில் ரேகாவை பயமுறுத்தும் குறும்புத் தனத்திற்கு பதில் சிநேகந்தான் இருந்தது. பேச்சில் நெருக்கமும் அன்பும் நன்றாய் தென்பட்டன. அவன் தோரணையைப் பார்த்தால் நேற்று நடந்த சம்பவத் தினைப் பற்றிய ஞாபகமே இல்லாதது போல தோன்றிற்று.

ரேகாவுக்கு விமலனின் இந்த சரளத்தன்மையைப் பார்த்தபொழுது இது தன் பிரம்மையா என்றும் கூட தோன்றத் தொடங்கிற்று. அதற்குள் ரஞ்சிதா இறங்கத் தொடங்கவே அவளை தூக்கி கீழே இறக்கிவிட்டு விட்டு ரேகாவுக்காக கையை நீட்டினான். ஆனால் ரேகா அந்தக் கையைப் பார்க்காதது போலவே, அதைப் பிடித்துக்கொள்ளாமல் காரிலிருந்து இறங்கிவிட்டாள்.

"மாடியில் இருக்கிறார்" முன் அறைக்கு வந்ததுமே ரேகாவுக்குப் படிக்கட்டுகளைக் காட்டிவிட்டு அப்பால் போய்விட்டான்.

ரேகா நடுங்கும் கால்களோடு, ஒவ்வொரு படியாய் ஏறிவந்தாள். அறைக் கதவு திறந்தேயிருந்தது. திரைச் சீலையை இழுத்து ஒருபக்கமாய் கட்டப்பட்டிருந்தது.

அறையில் கமலன் படுத்துக்கொள்ளும் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தார் விஸ்வநாதன்.

வாசலில் வந்து நின்ற ரேகா ஒரு வினாடி அவ்விடத்திலேயே நின்றுவிட்டாள். கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்த விஸ்வநாதனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கன்னத்தில் உருண்டுகொண்டிருந்தது. ரேகா தன்னையறியாமல் மார்பில் கையை வைத்துக் கொண்டாள். அந்த சமயத்தில் அவரிடம் போகலாமா கூடாதா என்று தெரியவில்லை அவளுக்கு.

ஏனோ கண்களைத் திறந்த விஸ்வநாதன், கண்ணெதிரே வாசலில் பொம்மையைப் போல நின்று கொண்டிருந்த ரேகாவைப் பார்த்துவிட்டு, ''ரேகா'' என்று எழுந்திருக்கப் போனார்.

ரேகா ஒரே பாய்ச்சலாய் அவர் கட்டிலுக்கருகில் வந்து அவரை எழுந்திருக்கவிடாமல் படுக்கச்செய்தாள். ''ரேகா'' அவர் தொண்டையடைக்க கைகளை நீட்டினார். ரேகா சட்டென்று கட்டிலுக்கருகிலேயே முழங்காலிட்டு அமர்ந்துகொண்டு நீட்டிய அவர் கைகளில் முகத்தைப் பொத்திக்கொண்டாள்.

''வந்தாயாம்மா, வரமாட்டாயோன்னு நினைத்தேன்'' அவர் கை ரேகாவின் தலையைத் தடவி கொடுத்தது.

அவர் வார்த்தைகளில் என்ன மகத்துவம் இருந்ததோ தெரியாது, ரேகாவுக்கு துக்கம் கட்டுமீறிக் கொண்டு வெளிவரத் தொடங்கிவிட்டது. இதயத்தைப் பிளந்துகொண்டு வெளிவந்த அந்த அழுகையை அடக்கிக்கொள்ள அவளால் முடியவில்லை. அக் கண்ணீரில் நேற்றிரவு அவள் பட்ட துன்பங்கள், நிராசை எல்லாம் அடித்துக்கொண்டு, போய்விட்டன. வெகு நேரங்கழித்து ரேகா எழுந்திருந்து விஸ்வநாதனின்

கட்டிலில் உட்கார்ந்துகொண்டு, அவர் கையைத் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டாள். அவர் முகத்தைப்பார்த்து ஆச்சரியமடைந்தாள். ஒரே நாள் இரவிற்குள் அவரிடம் இவ்வளவு மாறுபாடா? அவர் என்னதான் சாதாரணமாய் பேசுவதற்கு முயன்ற போதிலும் அவர் குரலில் பலவீனமும், திகிலும், வருத்தமும் மிதந்து கொண்டிருந்தன. அவர் ரேகாவைப் பார்த்துச் சொன்னார்— "சேகரைப்பற்றி இப்பொழுதாவது நீ இப்படிச் சொல்லிவிட்டது நல்லதாய் போச்சும்மா. சேகரைப்பற்றி நீ திகிலடையாதே. அந்தப் பொறுப்பையெல்லாம் விமலனிடம் ஒப்படைத்திருக்கிறேன்."

ரேகா திடுக்கிட்டுப்போய் பார்த்தாள். அவர் புரிந்து கொண்டாற்போல சொன்னார்— "பாரும்மா, நான் உயிரோடிருந்தாலும், செத்துப் போய்விட்டாலும் ஒன்றை மட்டும் நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள். எனக்கப்புறம் உன் நலனைக் கருதுபவர்களில் விமலன் முதன்மையானவன் என்று தெரிந்துகொள். நான் போய்விட்டாலும் ரஞ்சிதாவோடு கூட உன் நல்லது கெட்டதையும் அவன் ஏற்றுக் கொள்வதாய் வாக்குறுதி வாங்கிக்கொண்டு விட்டேன். நீ என்னை எப்படி மதிக்கிறாயோ அதையும்விட இருமடங்கு விமலனின் வார்த்தைகளை மதிக்கவேண்டும். எங்கே, மதிக்கிறேன் என்று எனக்கு வாக்குத் தா."

அதற்குள் படிக்கட்டிற்கருகில் காலடிச் சப்தம் கேட்டது. ரேகா எழுந்து விஸ்வநாதனின் தலைமாட்டிற்கருகில் போய் நின்று கொண்டாள். டாக்டரும் விமலனும் உள்ளே வந்தார்கள். விஸ்வநாதனைப் பரிசோரித்து விட்டு, "கொஞ்சம் வெந்நீர் வேண்டும்" என்றார் டாக்டர் சிரஞ்சைக் கையிலெடுத்துக் கொண்டு.

விமலன் ரேகாவைப் பார்த்தான். ரேகா வெந்நீருக்காகப் படியிறங்கி மெதுவாய் சமையலறைப் பக்கம் வந்தாள்.

9

ரேகா அறையை விட்டு இயந்திரமாய் வெளியே வந்து விட்டாளே தவிர, சமையலறைப் பக்கமாய் அவளால் போகமுடியவில்லை. சிலையாய் அங்கேயே நின்று விட்டாள்.

அறையிலிருந்து அவர் குரல் தீனமாய், பாரமாய் கேட்டது.

"டாக்டர், ஒரு மாதம், குறைந்தபட்சம் ஒரு வார மாவது என்னைப் பிழைக்க வையுங்கள். நான் பண்ண வேண்டிய முக்கியமான காரியங்கள் ஒன்றிரண்டு இருக்கிறது. அதைப் பண்ணாமல் கண்ணை மூடிவிட்டால் என் ஆத்மா சாந்தியடையவே அடையாது."

"இதப்பாருங்கள், இதைத்தான் கூடாதுங்கிறேன். நீங்கள் இப்படி ஆவேசப்படாமலிருந்தால் ஒரு வார மென்ன, நிம்மதியாய் பத்து வருஷங்கள் வாழ முடியும்" கண்டிப்பது போல சொன்னார் டாக்டர்.

"என்னவோ, எப்பொழுது கண்ணை மூடி விடுவேனோ தெரியவில்லை, விமல்! உனக்கும் சொல்கிறேன். நான் சொன்ன காரியத்தைச் சீக்கிரமாய் முடித்து விடு. தாமதம் பண்ணாதே."

"நீங்கள் கவலையில்லாமல் இருங்கள். எல்லாம் நல்லபடியாய் நடக்கும்படியாய் பார்த்துக்கொள்கிற பொறுப்பு என்னுடையது. போதுமா!" என்றான் விமலன் வாக்குறுதி அளிப்பதுபோல.

ரேகா பெருமூச்செறிந்தாள். மெல்ல படியிறங்கி கீழே வந்தாள். ஆனால் என்ன முயன்றபோதிலும் சமையலறைப் பக்கமாய் அவளால் அடியெடுத்து வைக்க முடியவில்லை. ரேகாவுக்கு அந்த வீடு ஒரு கூண்டைப் போலவும், தன் தன்மானத்தையும் ரோஷத்தையும் சிறைப் பிடித்து வைத்திருப்பதுபோலவும் தோன்றத் தொடங்கிற்று. கேவலம் விஸ்வநாதனுக்காய் இந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் அவள் எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக இந்த வீட்டை விட்டு போய்விட வேண்டும்.

மனதில் அடிக்கடி 'இது கமலனின் வீடு. இங்கே விமலனுக்கு கொஞ்சமும் உரிமை இல்லை, என்று ஞாபகம் வந்தாலும் அது அமைதியுறவில்லை. வீட்டில் நேர்த்தியாய் அடுக்கிவைக்கப்பட்டிருந்த அந்த சாமான்களும், அழகான திரைச்சீலைகளும், பூந்தொட்டிகளும், எல்லாம் ஏக குரலெடுத்து இங்கே அணுவணுவிலும் விமலனின் பிரபாவமே உள்ளதாய் எச்சரிக்கத் தொடங்கின.

ஐந்து நிமிஷங் கழித்து வெளியே வந்த விமலன் படிக்கட்டில் அப்படியே நின்று கொண்டிருந்த ரேகாவைப் பார்த்துவிட்டு — "வெந்நீர் எங்கே? இதென்ன இங்கேயே நின்று விட்டாய்?" என்றான்.

ரேகா பதில் பேசவில்லை.

அவன் சமையலறைப் பக்கமாய் போனான்.

கொஞ்ச நேரத்தில் வெந்நீரை எடுத்துக்கொண்டு போன விமலன் படிக்கட்டிற்கருகில் ஒரு நிமிஷம் நின்று விட்டு சொன்னான் — "இப்படி நிற்பதை சமையலறையில் நிற்கலாமே? டாக்டருக்கு காபி கொடுக்கணும். கியாஸின் மீது பால் வைத்திருக்கிறேன்."

போய்க்கொண்டிருந்த அவனை திரும்பிப் பாராமலிருக்க முடியவில்லை ரேகாவால்.

அவன் திரும்பினான் — ''பொங்கினால் பக்கத்தில் தண்ணீர் இருக்கிறது. கொஞ்சம் தெளித்தால் நன்றியுடையவனாயிருப்பேன். காபி போடணுமோ என்று பயப்படவேண்டாம். நான் வந்து கலந்துக் கொள்கிறேன்.''

அவன் உதட்டில் முறுவலைப் பார்த்ததும் ரேகாவிற்கு ரோஷம் வந்தது. அவள் ஊகித்தாற்போலவே விமலன் சட்டென்று திரும்பி வந்துவிடவில்லை. பாலை மறந்தே போய்விட்டாற் போல மாடியிலேயே இருந்து விட்டான். ரேகா சமையலறைப் பக்கம் வந்தாள். பால் பொங்கத் தயாராய் இருந்தது. ரேகா சட்டென்று போய் நீரைத் தெளித்தாள்.

விமலன் வருவானோ என்று கொஞ்ச நேரம் எதிர் பார்த்த ரேகா அவன் எவ்வளவு நேரமாகியும் வராததால் அதை இறக்கி பக்கத்திலேயே வைத்திருந்த பில்டரில் ஊற்றி ஸ்டவ்வை அணைத்து விட்டாள்.

அதற்குள் விமலன் வந்தே விட்டான். கதவிற் கருகில் வந்த அவன் உள்ளே வராமல் வெளியேயே நின்றுவிட்டான். கதவின் இரு பக்கங்களிலும் கைகளை நீட்டிக்கொண்டு — ''டாக்டர் இந்த வேளையில் காபி குடிக்கமாட்டாராம். அதோ அந்த நாலு ஆரஞ்சுப் பழங்களையும் பிழிந்து தந்தால், கொண்டுபோய் கொடுத்துவிட்டு மரியாதையுடைய குடும்பத் தலைவனாய் காட்டிக்கொள்வேன். இப்பொழுதெல்லாம் எல்லோரிடமிருந்தும் 'நல்லவன்' என்று பெயரெடுக்கணும் என்ற தவிப்பு அதிகமாகிகொண்டேயிருக்கிறது.''

வாசற்படிக்கு குறுக்காய் நின்றுகொண்டிருந்த அவன் தோரணையைப் பார்த்தால், அந்த ஜ்லைப்

பிழிந்து தரும்வரை வெளியே போகவிடமாட்டேன் என்பது போல இருந்தது. எதிரே ஜூஸ் பிழியும் மிஷினும், கத்தியும், பழங்களும் இருக்கவே இருந்தன. ரேகா அவனோடு வாதாடவில்லை. சமையலறைக்குள் சிறைப்பட்டு விட்டாற்போல நின்றுவிட்ட ரேகா, ஜெயில் அதிகாரி வந்து எதிரே நின்று உத்தரவிட்ட காரியத்தை கைதி மறுபேச்சு பேசாமல் செய்தாற்போல செய்து முடித்தாள்.

ஜூஸைப் பிழிந்து கண்ணாடித் தம்ளரில் ஊற்றி அவ்விடத்திலேயே வைத்துவிட்டாள்.

அதை கவனித்த விமலன் குறும்புத்தனமாய் சொன்னான்— "பெண்பிள்ளை தனியாய் இருக்கிற அறைக்குள் நுழைகிற பழக்கமில்லை. கடைசியில் சமையலறையாய் இருந்தாலும் சரி. அந்த தம்ளரை அங்கேயே வைத்துவிட்டால் லாபமில்லை. இப்படி கொடுத்தால் கொண்டுபோய் கொடுப்பேன்."

ரேகா பதில் பேசவில்லை. தம்ளரைத் தரவில்லை. அவன் பேச்சு காதில் விழாதது போல இருந்தாள்.

"சொல்றது உனக்குத்தான். இதற்கு முன்பே என்னை ரொம்பவும் கெட்டவனாக்கி விட்டிருக்கிறாய். நான் உள்ளே வந்தால் உனக்குத்தான் நல்லதில்லை. மொதல்லேயே சொல்கிறேன்."

ரேகா சரேலென்று அவனை பார்த்தாள். விமலனின் முகம் தீவிரமாய் இருந்தது. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அவன் வரவழைத்துகொண்டிருந்த வேடிக்கையான தோரணை மாயமாகி விட்டிருந்தது. விமலன் தீவிரமாய் இருந்தான் என்றால் சொன்னபடி செய்தே தீருவான். ரேகா என்ன நினைத்துகொண்டாளோ

தெரியாது, சட்டென்று போய் தம்ளரை அவனிடம் தந்தாள்.

தம்ளரை மேலே பிடித்துக்கொண்டால் எங்கே அவன் விரல் பட்டுவிடுமோ என்றஞ்சியவளாய் உள்ளங் கையில் வைத்துக்கொண்டு தந்தாள்.

விமலன் உடனே தம்ளரை வாங்கிக்கொண்டு விட வில்லை. ஒருவினாடி கண்ணாடித் தம்ளரையும் குனிந்த தலையுடன் நின்றுக் கொண்டிருந்த ரேகாவையும் மாறி மாறிப் பார்த்தான். ''ரேகா'' அவன் குரல் மென்மை யாகவும் கம்பீரமாகவும் கேட்டது.

''ரேகா! நேற்று நடந்ததற்கு நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன். என்னுடையது மன்னிக்க முடியாத அவசரத்தனம் என்று ஒப்புக் கொள்கிறேன். சில சமயம் கண்ணிருந்தும் குருடனாகிவிடுவாங்க சிலர். நேற்று நானும் அப்படித்தான் ஆகிவிட்டேன். விஸ்வ நாதன் எனக்கு தந்தைக்கும் மேலானவர். அவருடைய நல்ல குணத்தை நான் அறியாதவனில்லை. ஆனாலும் சந்தேகம் என்பது பேய்! என்று ஏன் சொல்லுகிறார்கள் என்று எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. சந்தேகப் பேர்வழிகளுக்குக் கயிறு கூட பாம்பாய் தோன்றுவது சகஜந்தான். நேற்றிரவெல்லாம் நான் தூங்கவேயில்லை. நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் உண்மை இதுதான்.''

ரேகா நிமிர்ந்து மலர்ந்த முகத்துடன் அவனை வினோதமாய் பார்க்கத் தொடங்கினாள்.

ரேகாவின் கண்களையே பார்த்துக் கொண்டு சொன்னான் அவன். ''காலையில் கார் அனுப்பியதுமே நீ வந்துவிட்டது நல்லதாய்ப் போச்சு. இல்லாவிட்டால் நானே உங்கள் வீட்டிற்கு வரவேண்டியிருந்திருக்கும். இதுமட்டுமில்லை. கமலன் விஷயத்தில் உன்னை நான் தப்பாய் புரிந்துக்கொண்டுவிட்டதாய் தெரிந்து

கொண்டதிலிருந்தே உன்னோடு ஒரு ஐந்து நிமிஷம் தனியாய் பேசவேண்டும் என்று எவ்வளவு முயற்சிப் பண்ணினேன் என்று உனக்கு தெரியாது. தவறு பண்ணுவது மனிதனின் இயற்கைதான். ஆனால் தப்பு என்று தெரிந்த பிறகு திருத்திக் கொண்டு மன்னிப்புக் கேட்பது உத்தமமான பண்பு. ஆனால் நம் விஷயத்தில் நான் ''ஸாரி'' என்று சொல்லி விட்ட மாத்திரத்தில் என் அபராதம் தீர்ந்துப் போய்விடும் என்று நான் நினைக்க வில்லை. தெரிந்து செய்திருந்தாலும், தெரியாமல் செய் திருந்தாலும் என்னால் உனக்கு நிறைய கஷ்டங்கள் ஏற்பட்டது.

''அதற்கு பிரதிபலனாய் நீ என்ன கேட்டாலும் தரு வதற்குத் தயாராய் இருக்கிறேன். நீ என்ன பண்ணச் சொன்னாலும் அப்படியே பண்ணுகிறேன். உண்மை யில் மனப்பூர்வமாய் சொல்கிறேன், என்னிடமிருந்து உனக்கு ஏதாவது நன்மை ஏற்படவேண்டும். அது எப்படி ஏற்பட வேண்டுமோ, நான் என்ன செய்தால் அது ஏற்படும் என்று நீதான் சொல்ல வேண்டும். ரேகா, இதுவரை உன்னை அழவைத்துக் கொண்டிருந்த அந்த விமலன் வேறு, இப்பொழுது உனக்கெதிரே நின்று கொண்டிருக்கும் இந்த விமலன் வேறு. இவன் உனக் குத் துணையாய் சிநேகமாய் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவன். இந்த விமலனைப்பற்றி அவனைத் தெரிந்தவர்களைக் கேளுங்கள். சிநேகத்திற்காக உயி ரையே தருபவன் என்று சொல்வார்கள்'' அவன் தம்பரை எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

ரேகா சிலையாய் நின்றுவிட்டாள். விமலனின் வாயி லிருந்து வெளிவந்த இந்த வார்த்தைகள் சுழற்காற்றாய் அவளைச் சூழ்ந்து கொண்டு திணறடிக்கத் தொடங்கின. கொஞ்ச நேரங்கழித்து டாக்டரும், அவரோடு விமலனும்

போய்விட்டார்கள். ரேகா விஸ்வநாதனின் அறைக்கு வந்தாள்.

"வாம்மா" என்றார் அவர்.

அவள் உள்ளே வந்தாள்.

"உட்கார்."

கமலனின் கட்டிலில் படுத்திருந்த அவர் ரேகாவுக்கு விமலனின் கட்டிலைக் காட்டினார்.

ரேகா அந்தக் கட்டிலில் உட்காரவில்லை. வராந்தாவிலிருந்த நாற்காலியைக் கொண்டு வந்து அவர் கட்டிலுக்குப் பக்கத்தில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

"விமலன் இன்னும் வரவில்லையா?"

"இல்லை."

ஒரு வினாடி நிசப்தம் ஏற்பட்டது.

வெகு நாட்களுக்குப் பிறகு திரும்பவும் இந்த அறைக்குள் நுழைந்த ரேகா பழைய ஞாபகம் மனதில் மிதக்கவே, அறை முழுவதையும் கண்களால் துழாவிய படி உட்கார்ந்திருந்தாள்.

"ரேகா" திடீரென்று அவர் மிகப் பரிவோடு கூப்பிட்டார்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

"விமலனிடம் சேகரைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் சொல்லி விட்டேன். அவனை வழிக்குக் கொண்டு வருகிறப் பொறுப்பை விமலனிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவனால் முடிந்த வரைக்கும் முயற்சி பண்ணுவான்."

"விமலனிடமா? சேகரை பற்றியா?" திடுக்கிட்டாள் அவள்.

''ஆமாம். ஏன்? விமலனைத் தவிர இந்த பொறுப்பை யாரும் எடுத்துக்க முடியாதுன்னு தோன்றுகிறது. அவங்களிருவரையும் கூடிய சீக்கிரத்தில் பரிச்சியம் பண்ணி வை. நடுவில் என் விஷயத்தையே எடுக்க வேண்டாம்.''

ரேகா யோசனையில் ஆழ்ந்தாள்.

'விமலனுக்கு சேகர் திருடன் என்று தெரிந்து விட்டதா? தெரிந்த பிறகு தான் தன்னோடு அவ்வாறு பேசினானா?' ரேகாவுக்கு வினோதமாய் இருந்தது.

''இன்னொரு விஷயத்தைக்கூட உன்னை ரொம்ப நாளாய் கேட்கனும்னு இருக்கும்மா.''

''கேளுங்கள். என்ன?'' என்றாள் பணிவோடு.

''விமலனைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?''

மனதிற்குள் திடுக்கிட்டுப் போன ரேகா சட்டென்று எழுந்து ஜன்னலுக்கருகில் போனாள். திரைச்சீலையை விலக்கி சரி பண்ணத் தொடங்கினாற்போல நின்றாள்.

முதுகைக் காட்டிக் கொண்டு நின்றிருந்த ரேகாவைப் பார்த்துக் கொண்டே சொன்னார் அவர்.

''ரேகா! உன்னை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டு. நீ ஒரு வீட்டுத் தலைவியாவதைக் கண்ணாரக் கண்ட பிறகுதான் எனக்குத் திருப்தியும் நிம்மதியும் ஏற்படும். அது எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு நல்லது.''

அவள் திரும்பினாள்.

''அப்புறமாய் பேசிக்கலாம். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.''

"ஊஹூம், உன் வாயிலிருந்து இந்த விஷயமாய் பதில் வந்தாலேயொழிய எனக்கு நிம்மதி இல்லை. உன் மனதில் யாராவது இருக்காங்களா?"

ரேகா 'இல்லை' என்று தலையாட்டினாள்.

"அப்படியென்றால் நீ விமலனை ஒப்புக்கொண்டால் நான் சந்தோஷப்படுவேன். நீயும் விமலனும் கணவன் மனைவியாகவேண்டுமென்பதில் என் சுயநலம் கூட இருக்கிறது."

"சுயநலமா?"

"ஆமாம். எனக்கப்புறம் ரஞ்சிதாவையும் அவள் பெயரில் உள்ளச் சொத்தையும் உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது என் எண்ணம். ரஞ்சிதா மட்டுமேயில்லை, லலிதாவின் நலனைக்கூட நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள். விமலனைக் கணவனாய் அடையும் பெண் அதிர்ஷ்டசாலி. அந்த அதிர்ஷ்டக்காரி நீயாகவே இருக்க வேண்டும் என்பது என் ஆசை. சொல்லும்மா, விமலனை மணக்க உனக்கு ஏதாவது தடை இருக்கா? உன் மனதிலிருப்பதைச் சொல்லிவிடு."

ரேகா பதில் சொல்ல முடியாதவளாய் தலையைக் கவிழ்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

"சொல்லும்மா, உன் தந்தையாய் இப்படிக் கேட்கிற உரிமையும் அதிகாரமும் எனக்கு இருக்கிறது என்ற தைரியத்தில்தான் இப்படிக் கேட்கிறேன்."

தந்தை என்ற பதத்தைக் கேட்டதுமே மறுத்துத் தலையசைத்தாள் ரேகா.

"இல்லையா? தந்தையோடு ஒப்பிடக்கூடிய நபராய் இல்லையா நான்?"

"ஊஹூம், இல்லை." உறுதியாய் சொன்னாள்.

"ரேகா."

ரேகா அவரிடம் வந்தாள்.

"உங்களோடு ஒப்பிடக்கூடிய நபர் என் தந்தை மட்டுமேயில்லை, இந்த உலகத்திலேயே யாரும் கிடையாது. நான் மனதார நம்பிய உண்மையைத்தான் சொல்கிறேன். நீங்கள் எனக்குத் தந்தையைக்காட்டிலும் தாயைக்காட்டிலும், எல்லோரையும்காட்டிலும் அதிகம். மனிதர்கள் எப்பொழுதும் தெய்வம், பூஜை. விரதம் என்று பண்ணிக் கொண்டிருக்காங்க. அந்த தெய்வம் வேறெங்கேயோ இல்லை. உங்களைப் போன்ற நல்ல மனுஷங்களின் மனதில் தான் இருக்காங்க என்பது என் நம்பிக்கை. எனக்கு வேண்டியது சேகர் வழிக்கு வருவது. இதைத் தவிர எனக்கு வேறெதுவும் தேவை யில்லை."

"அதற்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல் லைம்மா. சேகரின் நல்லது கெட்டதைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றால், விமலனுக்கு ஒரு விதமான அதிகாரம்கூட வேண்டும் இல்லையா? இந்த விதமாய் ஆனால் நீங்கள் எல்லோரும் நெருங்கிவிடலாம் என்பது என் நம்பிக்கை. யாரோ முன்பின் அறிமுகமில்லாத நபராய் விமலன் போனால் சேகர் விமலனின் வார்த்தை களைப் பொருட்படுத்துவானா? அதுவே உன் கணவ னாய் போனால் அவ்வளவு மறுக்க முடியாது. நான் பல விதங்களில் யோசித்துப் பார்த்து விட்டுதான் இந்த முடிவிற்கு வந்தேன்ம்மா."

"நீங்கள் தூங்குங்கள்."

"நீ... நீ ஒப்புக்கொள்வதாய் சொல்."

"நீங்கள்... நீங்கள் முதலில் அவர் அபிப்பிரா யத்தை தெரிந்து கொள்ளுங்கள்."

அவர் உதட்டில் குறுநகைப் படர்ந்தது.

"முதலில் உன் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமில்லையா? அதற்கப்புறம் அவனுடையது."

ரேகா கிட்டே வந்து அவர் தலையணைகளை சரி செய்தாள்.

அவர் சரியாய் படுத்துக் கொண்டே ரேகாவின் கையை பிடித்துத் தன் மார்பின் மீது வைத்துக் கொண்டார்.

"ரேகா! சற்று முன்னால் நீ ஏதோ தெய்வம், நல்லவர் என்றெல்லாம் சொன்னாயே, அதெல்லாம் எனக்குக் கொஞ்சமும் பொருந்தாதும்மா. நீ ஊகித்துக் கொண்டிருப்பதில் ஆயிரத்தில் ஒரு பாகம்கூட நல்ல குணம் என்னிடம் இல்லைம்மா. நான் எவ்வளவு பாவி, சுயநலக்காரன் என்று ஒருநாள் உனக்குத் தெரியாமல் போகாது. தெரிந்ததும் நீ உன் அபிப்பிராயத்தைமாற்றிக் கொண்டுவிடுவாய்."

"ஊஹூம். உங்களைப் பற்றி எனக்கு இருக்கும் அபிப்பிராயத்தை என்றுமே யாராலுமே மாற்றிவிட முடியாது" திடமாய் சொன்னாள் ரேகா.

கொஞ்ச நேரத்தில் அவர் உறங்கி விட்டார்.

ரேகா வெகுநேரம் அவருக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.

விமலன் இப்போதைக்கு வருவானா என்று தெரியவில்லை. அவன் சாப்பிடவில்லை. வீட்டில் சமையல் செய்த சுவடுக்கூட இல்லை. ரேகா விமலனின் ஆபீசு அறைக்குள் வந்தாள். மேஜை மீது அவன் ஃபைல்களுக்கருகில் சில பத்திரிகைகள் கிடந்தன. அவற்றைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் கவனத்தை அதில் நிலைக்கச் செய்த போதிலும் மனம் பந்தயக் குதிரையாய் யோசனைகளை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

அதற்குள் கீழேயிருந்து காலிங்பெல் சப்தம் கேட்டது. ரேகா கீழே வந்தாள். தன்னையறியாமல் அவள் மார்பு வேகமாய் அடித்துக் கொள்ளத் தொடங்கிற்று. வந்தவன் கண்டிப்பாய் விமலனாய்தான் இருக்கும். ஆனால் வந்தது விமலன் இல்லை. கங்கம்மா.

சமையலறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய், ''என்ன, இன்றைக்கு சமையல் கிமையல் இல்லை போலிருக்கே, பாத்திரங்களையே காணோம். என்னையாவது சமைத்து வைக்கச் சொல்லியிருந்தால் செய்திருப்பேனே! ஆனால் நானே சமைத்து வைத்தேன்னு வையுங்க, வெச்சது வெச்சாற்போலவே இருக்கும்!''

நொந்துக்கொண்டே இருந்த ஓரிரு கிண்ணங்களைத் தேய்த்துக் கவிழ்த்து வைத்துவிட்டு, குளியலறைக்குள் போய் இருந்த துணிகளைத் தோய்த்து உலர்த்திவிட்டு, வீட்டைப் பெருக்கி விட்டுப் போய்விட்டாள்.

ரேகா கதவைச் சாத்திவிட்டு வந்தாள். கங்கம்மா மளமளவென்று பேசிவிட்டுப் போன பிறகு வீடு வெறிச் சென்று ஆகிவிட்டது. சுவர் கடிகாரத்தின் டிக்டிக் ஓசையைத்தவிர வேறெந்த ஓசையும் இல்லை. அந்த வீட்டில் வளைய வந்துகொண்டிருந்த ரேகாவுக்கு விதம்விதமான காட்சிகள் கண் முன் நிழலாடத் தொடங்கின. போகட்டும், விஸ்வநாதனின் விருப்பப்படியே அவள் விமலனை மணந்துகொண்டால்...விமலன்? மிகக் கோபக்காரன்! அந்தக் கோபத்தைத் தூண்டிவிடக்கூடிய காரியங்களையெல்லாம் பண்ணுவாள் அவள். அவன்

வரும் வேளைப் பார்த்து வீட்டில் இருக்கமாட்டாள். ஒன்றென்ன? அவனுக்குப் பிடிக்காத காரியங்கள் அத்தனையையும் பண்ணுவாள். பழி வாங்க எவ்வளவு நல்ல அவகாசம்! ரேகாவுக்கு ஆர்வம் தாங்கமுடிய வில்லை.

வீட்டிற்கு முன்னால் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது. கதவைத் தாழிடவில்லை. அதனால் ரேகா மாடிக்குப் போய்விட்டாள்.

விமலனோடு கூட இன்னும் யாரோ வந்தாற்போன்ற சப்தம் கேட்டது. படியேறி வந்த சப்தம், ரேகா உள்ளே வந்ததும் விஸ்வநாதன் ''விமலன் வந்து விட்டானாம்மா?'' என்று கேட்டார்.

'வந்துவிட்டான்' என்று தலையாட்டினாள் ரேகா.

''நீ சாப்பிட்டாயா?''

''இல்லை.''

''இல்லையா? ஏன்?''

ரேகா பதில் சொல்வதற்குள்ளாகவே அறைக்குள் ஓடிவந்த ரஞ்சிதா அவளைக் கட்டிக் கொண்டாள்.

''ரஞ்சிதா! கீழே வாருங்கள் சாப்பிடலாம்''

ரஞ்சிதா, ரேகா இருவரையும் பார்த்துச் சொன்னான் அவன்.

''கங்கம்மா வந்தாளா?'' விஸ்வநாதன் கேட்டார்.

''இல்லை. ஓட்டலிலிருந்து கேரியர் வரவழைத் தேன்.''

ரஞ்சிதா ரேகாவின் கையைப் பிடித்து இழுத்தாள்.

''போம்மா, போய் சாப்பிட்டுவிட்டு வாங்க'' விஸ்வநாதனும் வற்புறுத்தவே ரேகா கீழே போய்த்தீர வேண்டியிருந்தது.

அறையைத் தாண்டி வரப்போன அவளுக்கு உள்ளேயிருந்து விஸ்வநாதன் கேட்டது காதில் விழுந்தது.

''விமல்! லலிதா என்ன பண்ணுகிறாள்?''

''நான் போனபோது வீட்டில் இல்லை. எங்கேயோ போயிருந்தாள். வீட்டைப் பூட்டிவிட்டுத் தோட்டக் காரனை வாசலில் உட்கார வைத்துவிட்டு, வந்ததுமே இங்கே வரச் சொன்னதாய் சொல்லச் சொல்லிவிட்டு வந்தேன்.''

விமலன் சொன்னது காதில் விழுந்தது. ரேகா கீழே வந்தாள். டைனிங் டேபிள் மீது கேரியர் இருந்தது. இரண்டு தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. ரேகா கேரியரைத் திறந்து ரஞ்சிதாவுக்குப் பறிமாறினாள். அவள் சாப்பிட்டு முடிக்கும் தறுவாயில் விமலன் கீழே வந்தான்.

ரஞ்சிதா மட்டுமே சாப்பிடுவதைப்பார்த்துவிட்டு, ''நீ ஏன் சாப்பிடவில்லை?'' என்றான்.

''பசிக்கவில்லை'' நிமிர்ந்து பார்க்காமலேயே பதிலளித்தாள்.

''பசிக்கவில்லையா, சாப்பிட வேண்டும் என் றில்லையா?''

விமலன் கேரியரிலிருந்த சாதம் குழம்புகளை எடுத்து ரேகாவிற்காக வைத்திருந்த பிளேட்டில் பறிமாறிவிட்டு, ''எங்கே பார்க்கலாம், நான் பறிமாறியது எவ்வளவு ருசியாய் இருக்கும் பார்'' ஏன்றான்.

ஆபீசு அறையிலிருந்து போன் மணியடித்ததால் விமலன் போய்விட்டான். போகும் முன்னால் திரும்பி, ''சீக்கிரமாய் சாப்பிடு. நான் உன்னோடு நிறைய பேசணும்.'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

விமலன் போனில் பேசிவிட்டுத் திரும்பி வந்தபோது ரேகா பிளேட்டில் இருந்த சாதத்தையெல்லாம் எடுத்து கேரியருக்குள் போட்டுக்கொண்டிருந்தாள்.

விமலன் புருவங்கள் நெளிந்தன. "ரேகா, ஒரு விஷயத்தை நேராய் சொல்லிவிடு. நான் சேகர் விஷயத்தில் உனக்கு உதவி செய்யணுமா, வேண்டியதில்லையா?"

கேரியரை மூடி வைத்துக்கொண்டிருந்த ரேகா நின்று விட்டாள்.

"அந்த விஷயத்தில் நான் உனக்கு மனப்பூர்வமாய் உதவிப் பண்ணணும் என்றிருந்தால் ஒரு நிபந்தனை. நீ நமக்குள் இருக்கும் பழைய விரோதத்தை மறந்துப் போய்விட வேண்டும். அடிக்கடி நான் கெட்டவன் என்பதை ஞாபகப்படுத்துவதை விட்டுவிட வேண்டும். அது உனக்கு வருத்தத்தை தரலாம். ஆனால் உன்னால் முடியாதது மட்டும் இல்லை. குறைந்த பட்சம் சேகருக்காகாவது இந்த விஷயத்தை மறந்துப்போய்தான் ஆகணும்."

சங்கோஜமில்லாமல் நேரிடையாகவே சொல்லி விட்ட விமலன் ரஞ்சிதாவைக் கூப்பிட்டு— "ரஞ்சிதா வா, நாம்ப டீவி பார்க்கலாம். அக்கா அதற்குள் சாப்பிட்டு முடிப்பாள்" என்றான்.

ரஞ்சிதா அவனிடம் போனாள். விமலன் ரஞ்சிதாவை அழைத்துக்கொண்டு போய்விட்ட பிறகு ரேகா கொஞ்ச நேரம் சலனமில்லாத சிலையைப் போல உட்கார்ந்திருந்தாள். பிறகு மெதுவாய் கேரியரில் இருந்த சாப்பாட்டைத் திரும்பவும் தன் தட்டில் போட்டு கொள்ளத் தொடங்கினாள். சேகர் விஷயத்தில் உதவி பண்ணி, அவனை வழிக்கு கொண்டுவர முடியுமானால், நடந்ததை யெல்லாம் மென்று விழுங்கிக்கொண்டு,

விமலனை மன்னித்துவிடுவதற்கே தீர்மானித்துக் கொண்டாள் ரேகா.

சுமார் ஒரு மணி நேரங்கழித்து— விஸ்வநாதன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்க— விமலன் பக்கத்தில் நின்றிருக்க— ரேகா சேகர் தந்திருந்த நம்பருக்கு டயல் பண்ணத் தொடங்கினாள்.

''ஹலோ'' மறுமுனையிலிருந்து கேட்டது.

''ஹலோ! ஜான் இருக்காரா?''

''இருக்கார். ஒரு நிமிஷம் லைனில் இருங்கள் கூப்பிடுகிறேன்'' மறுமுனையிலிருந்து யாரோ மிக மரியாதையாய் சொன்னார்கள். ரேகா படபடக்கும் இதயத்துடன் காத்திருக்கத் தொடங்கினாள்.

சரியாய் அதே சமயத்தில் மிக நவீனமான ஓட்டல் ஒன்றின் ஏர்கண்டிஷன் பண்ணப்பட்ட அறையில் சேகர் நிலைக்கண்ணாடிக்கு முன்னால் நின்றுகொண்டு டை கட்டிக்கொண்டிருந்தான். சுவற்றோரமாய் இருந்த சோபாவில் லலிதா உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் தூக்கமில்லாததால் நலிந்து போயிருந்தது. வெகு நேரமாய் அழுதுகொண்டிருந்ததால் கண்கள் சிவந்து உப்பியிருந்தன. கைக்குட்டையால் கண்களை துடைத்துக்கொண்டே— ''ஜான்! இந்த உலகத்தில் எனக்கு யாருமே இல்லை'' என்றாள் அழுகுரலில்.

''அப்படி பார்த்தால் யாருக்குமே யாருமே இல்லை. ஒருத்தருக்கு ஒருத்தர் இருக்கிறதாய் நினைத்துகொள்வது வெறும் பிரம்மை!''

''போதும் உங்கள் வேதாந்தம். நான் இவ்வளவு கஷ்டத்தில் ஆழ்ந்துபோய் உங்களிடம் வந்தால் உங்களுக்கு அது விளையாட்டாய் இருக்கா?'' கோபமாய் சொன்னாள் லலிதா.

"என்னை என்ன பண்ண சொல்கிறாய்? போகட்டும், உங்கப்பாவை வலையில் போட்டுகொண்டு உன்னை இவ்வளவு கஷ்டப்படுத்திய அந்த வேலைக்காரி யார் என்று காட்டு. மூக்கணாங்கயிறு கட்டி மேற்கூரையில் தொங்க விட்டுவிடுகிறேன்."

லலிதாவின் முகம் மலர்ந்தது. ரோஷத்துடன் சொன்னாள்— "பெற்ற மகளான என்னையும்விட அந்த சனியன் மூஞ்சிதான் மேல் என்றுதானே எண்ணி விட்டார்? இந்த தடவை அவருக்கு நன்றாய் பாடங் கற்பித்துவிடப் போகிறேன்."

"என்ன செய்வாய்?"

"நான் அவர் கண்ணில் படவே போவதில்லை. உங்களை விட்டுப் போகப்போவதில்லை. எனக்குத் தெரிஞ்சவங்களுக்கெல்லாம் எங்கப்பாவிடம் படும் தொல்லைகளை சகித்துக்கொள்ள முடியாமல் போய் தற்கொலைப் பண்ணிக்கொள்வதாய் கடிதங்கள் எழுதிப் போட்டுவிடுகிறேன். அப்பொழுது உலகத்தார் அத்தனைப் பேரும் அவரைப் பிடுங்கித் தின்னத் தொடங்கிவிடுவாங்க."

"அப்புறமாய் நீ உயிரோடிருப்பதாய் தெரிந்து விட்டால்?"

"எப்படித் தெரியும்? நான் இந்த ஊரில் இருந்தால் தானே?"

"பின்னே எங்கே போவாய்?"

"நீங்கள் எங்கே அழைச்சிட்டுப் போறீங்களோ அங்கே வரேன்."

ஜான் சங்கடமடைந்தான் முதலில். அதற்குள் முறுவல் பூத்தான். அழகான அந்தப் புன்னகை

லலிதாவின் இதயத்தில் ஆயிரம் புல்லாங்குழல்களை ஊதினாற்போல இருந்தது.

''ஜான் இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு இனி திறை மறைவில் இருந்துகொண்டு இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் எதற்கு? நிஜத்தைச் சொல்லிவிடுங்கள். என்னைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''நீ மிகவும் அழகானவள். வெறும் அப்பாவி.''

''இந்தப் புகழ்ச்சியெல்லாம் வேண்டாம்.''

''பார்த்தாயா? பெண் என்பதைக் காட்டிக்கொண்டு விட்டாய். நீங்கள் பெண் பிள்ளைங்களே வினோதமான வங்க. புகழ வேண்டும் என்று விரும்புவீங்க. புகழ்ந்தால் பிடிக்காதது போல முகத்தை வைத்துக் கொள்வீங்க. நம்ப மாட்டாது போல பார்ப்பீங்க.''

''பெண்களைப் பற்றி உங்களுக்கு நிறைய தெரியும் போலிருக்கே?''

''ஒன்றும் தெரியாமல்தான் இவ்வளவு பெரியவனா னேனா?''

''ஜான்! என்னை என்ன பண்ணச் சொல்றீங்க, சொல்லுங்கள்.''

''நேராய் வீட்டிற்குப் போ. உங்கப்பாவிடம் இன் னொரு தடவை இப்படி நடந்தால் சும்மாயிருக்கமாட் டேன் என்று சொல்லிவிடு. அந்த வீட்டுப் பெண்ணாய் எல்லா விதத்திலும் ஜாக்கிரதைகளை எடுத்துக்கொள்ள வேண்டிய உரிமை உனக்கு இருக்கிறது என்றுச் சொல்லு.

லலிதாவின் முகம் சிறுத்துவிட்டது ஏமாற்றத்தால்.

''அதானே தவிர, உங்கள் நிழல் எனக்குக் கிடைக் காது என்கிறீர்கள். அவ்வளவுதானே?''

சேகர் லலிதாவிற்கெதிரே வந்து நின்றான். பேன்ட் ஜேபிக்குள் கைகளை நுழைத்துக் கொண்டு லலிதாவைக் கூர்ந்து பார்த்தான்.

''என்ன பார்க்கிறீங்க?''

''உன்னைத்தான்.''

ஒரு வினாடி பொறுத்துச் சொன்னான். ''லலிதா! உன்னிடம் அப்பாவித்தனம் இருக்கிறது. அதற்கு முன்னால் என் மனம் தலைகுனிந்துவிடுகிறது. அதனால் தான் நீ எவ்வளவு உரிமை தந்த போதிலும் நான் வரம்புக் கடந்துவிடவில்லை. உலகத்திற்கு முன்னால் கெட்டவன் என்று மார்பில் கைவைத்துக்கொண்டு சொல்லிக்கொள்ள முடிந்த நான், உனக்கு முன்னால் நல்லவனாகவே எஞ்சி நின்றுவிட்டேன். லலிதா என் பேச்சைக் கேளு வீட்டிற்குப் போ. என்னவானாலும் அவர் உன் தந்தை. அவரைத்தவிர வேறு யாருமே உன் நலனைக் கருதமாட்டார்கள்.''

''ஜான்! நீங்கள் வேறு எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள், கேட்டுக்கொள்கிறேன். அவரிடம் போ என்று மட்டும் சொல்ல வேண்டாம். அவரைப் போன்ற தந்தைக்கு மகளாய் பிறந்தது என் துரதிர்ஷ்டம்.''

''என்னை என்னதான் பண்ணச் சொல்கிறாய் சொல்லு?'' சேகர் செய்வதறியாது கேட்டான்.

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளுங்கள்.''

''லலிதா'' இடி விழுந்தாற்போலான சேகர், இரண்டடிகள் பின்வாங்கினான்.

''ஏன் அப்படிப் பார்க்கிறீங்க? நான் என்ன வேண்டாத வார்த்தைகளைச் சொல்லிவிட்டேன்? நீங்கள் எந்தவிதமான வாழ்க்கையைத் தந்தாலும் அதை சொர்க்கமாய் பாவிப்பேன். பணத்தைப் பற்றிக் கவலை

வேண்டாம். எனக்கு நிறைய சொத்துக்கள் தங்க நகைகள் உருவிலும் பாங்க் அகௌளண்ட் உருவிலும் இருக்கின்றன. அதையெல்லாம் கொண்டு வந்துவிடுகிறேன். நாம் இங்கிருந்து தொலைவிற்கு ஓடிப்போய்விடுவோம் சந்தோஷமாய் வாழலாம்''

''லலிதா, எப்பொழுதுமே கொஞ்சங்கூட நெருங்காமல் இருக்கிற என்னைப் பற்றி நீ இவ்வளவு மனக் கோட்டைகளை எப்படிக் கட்டுகிறாய்?''

''மனக்கோட்டையா?''

''இல்லையா பின்னே? நான் இருப்பது எப்படிப் பட்ட இருட்டு உலகம் என்று தெரிந்திருந்தால் நீ இவ்வளவிற்குத் துணிந்திருக்கமாட்டாய்.''

''எவ்வளவு இருட்டுலகமாய் இருந்தால்தான் எனக்கென்ன பயம்? நீங்களே ஒளியாய் இருக்கும்போது எனக்கென்ன பயம்?''

சேகர் பதில் சொல்ல முடியாதவனாய் பார்த்தான்.

அதற்குள் கதவைத் தட்டிய சப்தம் கேட்டது.

அவன் கதவைப் பாதி மட்டுமே திறந்து வெளியே தலையை நீட்டி எட்டிப் பார்த்தான்.

''சார் உங்களுக்கு போன் வந்திருக்கு'' என்றான் ஓட்டல் பையன்.

''வரேன், போ.''

''இதென்ன? போன்தான் இங்கேயே இருக்கே?''

அறையில் இருந்த போனை வியப்போடு காட்டினாள் ரேகா.

''இது சாதாரண போன். எங்கள் விஷயங்களைப் பேசிக்கொள்வதற்கு சமையலறைக்கருகில் வேறு தனி

போன் இருக்கிறது. இதோ வரேன் ஒரு நிமிஷம் இரு!'' சேகர் கதவைச் சாத்திவிட்டுப் போய் விட்டான்.

என்னவானாலும் சரி, இந்தச் சம்பவத்தை ஆதாரமாய் எடுத்துக் கொண்டு ஜானைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்துவிட வேண்டும் என்றெண்ணினாள் லலிதா. அவன் திரும்பி வந்ததுமே எப்படிப் பேச வேண்டும் என்று ஒத்திகை பார்த்துக் கொள்ள தொடங்கினாள்.

சேகர் போனிற்கருகில் வந்து ரிசீவரைக் கையிலெடுத்துக் கொண்டான்.

''ஹலோ.''

''ஹலோ! சேகர்'' மறுமுனையிலிருந்து ரேகா பயந்தபடியே தயக்கத்துடன் கூப்பிட்டாள்.

''ரேகா! நீயா?''

''ஆமாம்.''

''என்ன?''

''உன்னை அவசரமாய் சந்திக்க வேண்டும். வேலை இருக்கிறது.''

''அதென்ன வேலை? சீக்கிரமாய் சொல்லு. இங்கே யாருமே இல்லை. பரவாயில்லை.''

''ஊஹூம். போனில் இல்லை. நான் உன்னைப் பார்க்கணும். நேரில் பேசணும். எங்கே சந்திக்கலாம் என்று சொல்லு.''

''விஷயம் என்னவென்றுச் சொல்லு ரேகா. ஏதாவது நடக்கக்கூடாதது நடந்து விடவில்லையே?''

''ஊஹூம். எங்கே சந்திக்கணும், சொல்லு?''

''மாலை ஆறு மணிக்கு ஓட்டல் லைட்னிங்கிற்கு வா.''

''வரேன் சேகர். ஆனால்...'' அவள் முகம் இறுகிற்று.

''என்ன? சொல்லு.''

''நான் தனியாய் வரவில்லை.''

''பின்னே?''

''நான் என்னோடு இன்னொருவரை அழைச்சுட்டு வருவேன். அவரோடு நீ பேசணும்.''

''யார் அது?''

''நான்...நான் கல்யாணம் பண்ணிக்கப்போகிற நபர்.''

''ரேகா! நிஜமாகவா?''

''ஆமாம் சேகர்.''

''என்னைப் பற்றி அவருக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''யார் அது?''

''அன்றைக்கு தீபாவளிக்குப் பட்டாசு வாங்குவதற்காக என்னோடு வந்திருந்தாரே கடைக்கு அவர்.''

''ஓ, அவரா? எனக்கு ஞாபகமிருக்கு.''

''நீ அவரோடு பேசணும்.''

''கண்டிப்பாய் பேசுகிறேன். என்னைப்பற்றி எதுவும் சொல்லிவிடாதே. பிஸினெஸ் பண்ணுவதாய் சொல்லு. கல்யாணம் பண்ணிப்பதாய் சொன்னாரா?''

''ஆங்! அவர் என்னிடம் உன்னைக் காட்டச் சொல்லி கேட்கவில்லை. நானேதான் காட்டுகிறேன். நீ பார்த்துத் தேர்ந்தெடுத்தால் அப்புறமாய் என் அபிப்பிராயத்தைச் சொல்லலாம் என்றிருக்கேன்.''

''குட் ரேகா! இவ்வளவு நாட்கழித்து உனக்கு புத்தி வந்திருக்கு! எனக்கு ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு. மாலை ஆறுமணிக்கு ஓட்டல் லைட்னிங்கிற்கு முன்னால் நான் வெளியேயே காத்துண்டிருக்கேன். ஓ கே?''

சேகர் போனை வைத்துவிட்டான். அவனுக்கு இச்செய்தி மிகச் சந்தோஷமாய் இருந்தது. அறைக்கு உல்லாசத்துடன் திரும்பி வந்தான்.

''யார்?'' லலிதா பரபரப்புடன் கேட்டாள்.

''ஒரு ஃபிரெண்ட்.''

''ஆனா, பெண்ணா?''

''பெண்தான்.''

லலிதா பொறாமையுடன் பார்த்தாள். சேகர் பக்கென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''ரொம்ப நேரமாயிடுத்து. சாப்பிடலாம், வா.''

சேகர் ஒரு விதத்தில் லலிதாவை பலவந்தமாய் டைனிங் ஹாலுக்கு இழுத்துக் கொண்டு வந்தான். சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் லலிதா கேட்டாள், ''நான் கேட்டதற்கு ஏன் பதில் சொல்லவில்லை?''

''கல்யாண விஷயந்தானே? இதுவரை எனக்கு அந்த உத்தேசமே இல்லை. என்னை யோசித்துப் பார்த்துக்கொள்ள விடு'' சீரியஸாய் சொன்னான்.

சாப்பாடு முடிந்த பிறகு மறுநாள் கண்டிப்பாய் சந்திப்பதாய் வாக்குறுதி தந்த பிறகு லலிதா வீட்டிற்குத் திரும்பினாள். சேகர் அறைக்குத் திரும்பி வந்தான். அறையில் மேரி உட்கார்ந்திருந்தாள். அவளைப் பார்த்ததுமே அவன் முகத்தில் சோர்வும், எரிச்சலும் மாயமாயின.

"எவ்வளவு நேரமாச்சு?" என்றான் கலக்கத்தோடு.

"அரை மணிக்கு மேலாகிவிட்டது. இங்கே இல்லாமல் போனால் டைனிங் ரூமில் இருப்பீங்கன்னு நினைச்சேன். ஆனால் அங்கே நீங்கள் யாருடனோ சாப்பிட்டுக் கொண்டிருந்தீங்க. அங்கே வரப் பிடிக்காமல் திரும்பவும் அறைக்கே வந்துவிட்டேன்."

"ஓ மேரி, ஐயாம் ஸாரி."

"இதில் மன்னிப்புக் கேட்கும்படியாய் என்ன இருக்கிறது? பிற பெண்களோடு பேசிவிட்டதால் நான் உங்களை இழந்துவிடுவேனோங்கிற பயம் எனக்கில்லை." மேரி சிரித்துக்கொண்டே சொன்னபோதிலும் அந்தச் சிரிப்பிற்குப் பின்னால் ஏதோ திகிலும் பயமும் எட்டிப் பார்த்துக்கொண்டேதான் இருந்தன.

"தாங்க் யூ" சேகர் சட்டென்று கீழே உட்கார்ந்து கொண்டு மேரியின் மடியில் தலையை சாய்த்துக் கொண்டான். வேதனையுடன் சொன்னான்.

"மேரி! அப்படிச் சொல்லாதே. எனக்கு ரொம்ப வருத்தமாய் இருக்கு. நான் யாரோடாவது பேசினால் பொறாமைப்படு. சண்டைபோடு. ஒவ்வொரு நிமிஷமும் என்னை ஆயிரம் கண்களோடு கவனித்துக் கொண்டேயிரு. ஆணின் மனது எவ்வளவு துர்லபமானது என்று உனக்குத் தெரியாது."

மேரி அவன் கேசங்களில் விரல்களை அளைந்து கொண்டே, "நான்! பல நாட்கள் வரை ஆண்கள் என்றாலே சுயநலக்காரர்கள் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். எங்கள் அக்காவின் வாழ்க்கை எப்படி நாசமாகிவிட்டது என்று சொன்னேன் இல்லையா? நீங்கள் என் வாழ்க்கையில் நுழைந்த பிறகு என் உத்தேசங்களும் எண்ணங்களும் மாறிவிட்டன. இந்தப் பாவ வாழ்க்கையில் நீங்கள் நுழையாமல் போயி

ருந்தால் நான் என்றோ தற்கொலை பண்ணிக்கொண்டிருப்பேன். ஜான், நான் உங்களுக்கு எவ்வளவு நன்றிக் கடன் பட்டிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது.''

சேகரின் தலை அவள் மடியில் பொறுமையின்றி நெளிந்தது. ''மேரி! நமக்குக் குழந்தைப் பிறக்க இன்னும் எவ்வளவு நாளாகும்?''

''நான்கு மாதங்கள்.''

''நான்கு மாதங்களா? எவ்வளவு நீண்ட காலம்!''

''ஏன், அவ்வளவு அவசரமாய் இருக்கா உங்கள் மறு உருவத்தைப் பார்த்துக்கொள்வதற்கு?''

சேகர் 'ஆம்' என்று தலையாட்டினான்.

''ஜான்...''

''உம்.''

''உங்களை ஒன்று கேட்கப் போகிறேன்.''

''கேள்.''

''நமக்குப் பிறக்கப் போகிற குழந்தையை நாம்ப கண்ணால் பார்த்துக்கொள்ள வேண்டாம். நாம்ப எங்கேயாவது அநாதை ஆசிரமத்திற்குத் தந்து விடுவோம்.''

''நான்சென்ஸ்! நாம்ப உயிரோடிருக்கும்போது அந்த தலையெழுத்து ஏன் வந்தது?''

''ஜான்! உங்களோடு வாதாடி என்னால் வெல்ல முடியாது. என்னோடு தர்க்கத்தில் இறங்காமல் நான் சொன்னபடி கேளுங்கள். நாம்ப உயிரோடிருக்கும் போது என்றீர்கள். உண்மையைச் சொல்லுங்கள், நம்ப வாழ்க்கைக்கூட ஒரு வாழ்க்கையா? நம்ப குழந்தை இந்த இருட்டுலகத்தில் அணுவணுவிலும் வேதனையை அனுபவித்துக்கொண்டு உயிரை உள்ளங்கையில் ஏந்திக்

கொண்டு நம்மைப் போல வாழ்வது எனக்குப் பிடிக்க வில்லை. அதனால்தான் ஏதாவது அனாதை ஆசிரமத் திற்குத் தந்துவிடுவோம். கௌரவமாய், எந்தக் களங் கமும் இல்லாமல், சமூகத்தில் பயமில்லாமல் வாழ்வதற்கு அவகாசம் கொடுப்போம்.''

சேகர் பதில் பேசவில்லை. மேரியின் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டான். ''மேரி! உன் பயம் எனக்குப் புரிகிறது. நம் குழந்தை நல்லபடியாய் சமூகத் தில் வளரவேண்டும் என்ற உன் விருப்பத்தைக்கூட நான் மறுக்கவில்லை. ஆனால் இதற்காக வேறு யாருக்கோ தரத் தேவையில்லை. சொல்ல மறந்து விட்டேனே, கொஞ்ச நேரத்திற்கு முன்னால் ரேகா போன் பண்ணினாள்.''

''ரேகாவா? என்ன பேசினாள்?''

''மாலையில் என்னைச் சந்திக்க வருவதாய் சொன்னாள். கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாள். மேரி! நம்ப குழந்தையை யாருங்கோ தரத் தேவையில்லை. நமக்கு ரேகா இருக்கிறாள். ரேகாவிடம் வளர்ந்து வரட்டும். நாம் அவ்வப்பொழுது போய் பார்த்துக்கொள்ளலாம் கூட.''

''ஆனால் ரேகாவுக்கு, நம்ம விஷயம்...''

''இன்றைக்குச் சொல்கிறேன். இன்று மாலையில் என்னோடு நீயும் வா. ரேகாவுக்கு உன்னைப் பரிச்சியம் பண்ணி வைக்கிறேன்.''

''ஜான்.''

''பரவாயில்லை. ரேகா என்னைப் புரிந்து கொள்வாள். உன்னைப் பரிச்சியம் செய்த அடுத்த நிமிஷமே உன்னை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் தந்தையாகப்போவதற்கு என்னைக் கண்டபடி திட்டித் தீர்த்துவிடுவாள்.''

சேகர் நிமிர்ந்து சிறு பையனைப் போலச் சிரித்தான்.

10

ஹோட்டல் லைட்னிங்கிற்குள் விமலனோடு சேர்ந்து அடியெடுத்துவைத்த ரேகாவின் இதயம் வேகமாய் அடித்துக்கொள்ளத் தொடங்கிற்று. அதற்குக் காரணம் விமலனோடு சேர்ந்து அவ்வாறு ஒன்றுமே நடக்காதது போல பழைய வியங்களையெல்லாம் மறந்துப் போய் நெருக்கமாய் நடந்து கொள்ளும்படியாய் நேர்ந்தது முதல் காரணம்.

மற்றொன்று, சேகர் வருவானா, அன்றைக்குப்போல் பண்ணமாட்டானே, இந்த முயற்சிகூட தோற்றுவிடுமா என்ற குழப்பம் இன்னொரு காரணம்.

விமலன் தொலைவில் காலியாய் இருந்த மேஜை ஒன்றைக் காட்டி, ''அங்கே போய் உட்காரலாமா?'' என்றான்.

ரேகா தலையாட்டினாள். விமலனை அனுசரித்து அந்த மேஜையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில், ''ரேகா'' என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். சேகர் நின்றுகொண்டிருந்தான். பக்கத்தில் இன்னொரு பெண்ணும் இருந்தாள்.

சேகரைப் பார்த்ததும் ரேகாவுக்கு நிம்மதி ஏற்பட்டது. மலர்ந்த முகத்துடன் விமலனை பரிச்சியம் செய்தாள். ''கிளாட்டு மீட் யூ'' என்று கையை நீட்டினான் விமலன்.

இருவரும் கை குலுக்கிகொண்டபொழுது ஒருத் தரையொருத்தர் கூர்ந்து கவனித்துகொண்டதை ரேகா கவனிக்கத் தவறவில்லை.

சேகர் தன் பக்கத்திலிருந்த பெண்ணைப் பரிச்சியம் செய்துவைத்தான். ''என் பிரெண்ட் மேரி'' எல்லோரும் மேலே ரூப் கார்டனுக்கு வந்து உட்கார்ந்துகொண் டார்கள். அங்கிருந்து பார்த்த பொழுது நகரம் முழுவதும் கண்ணுக்கு விருந்தாய் தெரிந்தது.

சேகர் அதற்கு முன்பே ஆர்டர் கொடுத்திருந்தான் போலும், சர்வர் கொண்டுவந்து பறிமாறத் தொடங் கினான்.

இவர்களுக்கிடையே சம்பாஷணையை எப்படி தொடர்வது என்று புரியாமல் காத்திருந்தாள் ரேகா.

விமலன் சாமர்த்தியமாய் அரசியலைப் பற்றியும் உலக ரீதியைப் பற்றியும் பேச்சைத் திருப்பினான்.

சேகர் விமலன் இருவரும் பேசிக் கொண்டிருந்த போக்கைப் பார்த்தால் ஏதோ பொழுது போக்காய் மாலை வேளையில் இங்கே வந்து கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தாற் போல இருந்தது.

எதிரே அந்தப் பெண் ஒருத்தி! சேகருக்கு புத்தி இல்லை. அந்தப் பெண்ணை ஏன் அழைத்து வந்தான்? இப்படி மற்றவர்கள் முன்னிலையில் சொந்த விஷயத்தை எப்படி பேசிக்கொள்ள முடியும்.

பேச்சுவாக்கில் விமலன் சொன்னான் — ''உங்களை யும் ரேகாவையும் பார்த்தால் அக்கா, தம்பி என்றே சொல்ல முடியாது. உங்களைவிட ரேகாதான் சின்ன வளாய் தோன்றுகிறாள்.''

சேகர் சிரித்தான் ''நான் எங்கப்பாவின் சாயல். எங்கம்மா அடிக்கடிச் சொல்லுவாங்க.''

''ஐ ஸி!''

பையன் காபியைக் கொண்டுவந்து வைத்தான். காபியைக் குடித்து கொண்டிருக்கையில் விமலன்

சொன்னான். "உங்களை இதற்கு முன்பே எங்கேயோ பார்த்தாற்போல இருக்கு. ஞாபகம் வரமாட்டேங்கிறது."

விமலன் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டதுமே சேகரின் பார்வை வினாடி நேரம் கோப்பையிலிருந்த காபியின் மீது நிலைத்து நின்றது.

பிறகு நிமிர்ந்து விமலனை நேருக்கு நேராய் பார்த்து முறுவலுடன் சொன்னான்— "இந்த மாதிரி வார்த்தைகளை நான் நிறையவே கேட்டிருக்கிறேன். புதிதாய் பரிச்சியமாகிறவங்க சில பேர் இப்படித்தான் பேசுவாங்க. என்னை போலவே யாராவது இருக்கலாமோ என்னவோ? தேடிப்பார்க்க வேண்டும் போலிருக்கு."

"இருக்கலாம்" விமலன் எழுந்து தொலைவில் குட்டிச் சுவற்றிற்கருகில் போய் நின்றான்.

சேகரும் எழுந்திருந்து, ரேகாவை பார்த்து, "ரேகா! மேரி உன்னை பல நாளாய் சொல்லிட்டிருந்தாள். நீங்களிருவரும் பேசிட்டிருங்கள், இதோ வரேன்" என்று சொல்லிவிட்டு விமலன் நின்றிருந்த இடத்திற்கு போனான்.

அவர்களிருவரும் குட்டிச் சுவற்றின் மீது உள்ளங்கைகளை ஊன்றிக்கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ரேகாவுக்கு ஒரு வினாடி தானும்கூட அவர்களிடம் போய் நின்று, அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று கேட்க வேண்டும் போலிருந்தது. மேரியை விட்டு விட்டு போவது நன்றாயிராது. அப்பெண்ணையும் அழைத்துக்கொண்டு அங்கே போய் நிற்கவும் பிடிக்கவில்லை.

அதற்குள் மேரி சொன்னாள்.

"உங்களைப் பற்றி ஜான் அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பார்."

''ஜானா?'' திடுக்கிட்டாள் ரேகா.

''அதான் சேகர்! எங்களுக்கு ஜான் என்றுதான் பழக்கம். சேகர் என்று வரவே வராது.''

ஜான்! ஜான்!

லலிதாவின் வாயிலிருந்து இந்தப் பெயரை எவ்வளவோ தடவை கேட்டிருக்கிறாள் அவள்! இந்த நாட்டில் எவ்வளவோ ஜான்கள் இருப்பார்கள்!

''சேகருக்கும் உங்களுக்கும் எவ்வளவு நாளாய் பரிச்சியம்?''

''ஒரு வருஷமாய்.''

'எப்படிப் பரிச்சியம் ஏற்பட்டது' என்று கேட்க வேண்டும் போலிருந்தாலும் கேட்கவில்லை அவள். ரேகாவுக்கு மேரியோடு பேசவோ, விவரங்களைக் கேட்கவோ ஆர்வம் பிறக்கவில்லை. அவள் கவனமெல்லாம் சேகர்-விமலன் மீதே இருந்தது.

வெகுநேரம் கழித்து அவ்விருவரும் திரும்பி மேஜைக்கு வந்தார்கள்.

ரேகா அவ்விருவரையும் கலக்கத்துடன் பார்த்தாள். இருவர் முகங்களும் மலர்ச்சியாகவே இருந்தன. ரேகா விமலனைப் பார்த்தாள். அக்கண்கள் சிநேகபூர்வமாய் இருந்தன. அதில் ஏதோ வாக்குறுதியும் 'கவலையில்லாமல் இரு' என்ற அறிவிப்பும் தென்பட்டன ரேகாவுக்கு.

''இனி போகலாமா?'' என்றான் விமலன்.

ரேகா விருப்பமின்றியே தலையாட்டினாள்.

போகும் முன்னால், ''சேகர்! நாளைக்கு மத்தியானம் செயிண்ட் ஜார்ஜ் சர்ச்சிற்கருகில் வரமுடியுமா? நான் அங்கே வருவேன். ஒரு ஃபிரெண்டை சந்திக்கணும்.''

ரேகா தலையாட்டினாள்.

மேரியும் சேகரும் கண்மறைவான பிறகு ரேகா விமலனை நோக்கித் திரும்பி பதற்றத்துடன் கேட்டாள்.

''என்ன சொன்னான் சேகர்? நீங்களிருவரும் என்ன பேசிக் கொண்டீங்க?''

விமலன் சிரித்தான்.

''அவ்வளவு அவசரப்பட்டால் எப்படி இந்த ஓட்டலுக்கும் உங்கள் வீட்டிற்குமிடையே குறைந்தது நாலைந்து மைலாவது இருக்கும். வழியில் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம். வா, போகலாம்.''

அவன் தோரணையே அப்படித்தான். வேடிக்கைப் பண்ணி அழ வைத்தால்தான் பிடிக்கும் அவனுக்கு. ரேகா பதில் பேசாமல் புறப்பட்டாள். விமலன் விஸ்வநாதனின் காரை எடுத்து வந்திருந்தான். அவனே டிரைவ் பண்ணினான்.

வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கையில் அவன் சொன்னான், ''நானும் சேகரும் திரும்பவும் இன்றிரவு சந்திக்கப் போகிறோம்.''

''இன்றிரவு டின்னருக்கு ஓட்டலுக்கு வரச் சொன்னேன். வருவதாய் வாக்களித்தான்.''

ரேகா பதில் பேசவில்லை.

காலையில் போய்க்கொண்டிருந்த ஜனங்களையும் கார்களையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

விமலனோடு இவ்வாறு தனியாய் வந்ததும், எதுவும் நடக்காதது போல சாதாரணமாய் பேசிக்கொண்டதும்-

இது கனவா நினைவா என்று தோன்றும்படியாய் செய்தது.

''ரேகா'' விமலன் கூப்பிட்டான்.

ரேகா திரும்பிப் பார்த்தாள்.

அவன் சாலையிலிருந்து பார்வையை அகற்றாமலேயே, ''அன்றைக்குப் பட்டாசுக்கடைக்கருகில் பார்த்தது சேகர்தானே?''

''ஆமாம்.''

''அதற்கு முன்னாடியே பார்க்கில் தென்பட்ட ஆள்கூட.''

''ஆமாம். சேகர்தான். மாறு வேஷத்தில் வந்தான்.''

விமலன் பெருமூச்சு விட்டான்.

''ஒரு சின்ன செய்தியை என் காதில் போட்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்! நான் தவறாய் புரிந்துகொண்டுவிட்டேன் என்று தெரிந்தும்கூட என்னை இன்னும் தூண்டிவிட்டாய். ராட்சசனாக்கினாய்.''

ரேகா பதில் பேசவில்லை.

விமலன் திரும்பவும் சொன்னான். ''சில சமயம் யோசித்துப் பார்த்தால், நான் தப்புப் பண்ணியதாய் தோன்றவில்லை. இதை நீயே உன் கையால் வரவழைத்துக் கொண்டதாய்தான் தோன்றுகிறது. ரேகாவுக்கு ஏனோ அவன் இந்தப் பேச்சை நீடிப்பது பிடிக்கவில்லை.

விமலன் தன்னைத் தானே தேற்றிக் கொள்வது போல சொன்னான் ''நீ ஒரு நிமிஷம் என் சார்பில் நின்று யோசித்துப் பார். நான் வீணாய் உன்னை ஏதாவது சொன்னேனா? கமலனின் கல்யாணத்தைத் தடுத்து

நிறுத்திய போது உன் உத்தேசம் அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தால் தான் என்று நினைத்தேன். எனக்கென்ன தெரியும், என் கவனமெல்லாம் எப்பொழுது பார்த்தாலும் அவன் மீதே இருந்து வந்தது.''

''நான் உங்களை ஏன் இப்படி நேர்ந்தது என்று கேட்கவில்லையே? இப்பொழுது இந்த சால்ஜாப்பெல் லாம் எதுக்கு?'' கூடியவரையிலும் மென்மையாகவே சொன்னாள்.

''சால்ஜாப்பு நீ கேட்காமல் போனாலும் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறதே.''

''வேறெந்தச் சமயத்திலாவது சொல்லுங்கள். இப் பொழுது வேண்டாம்.'' தாழ்ந்த குரலில் கெஞ்சுவது போல சொன்னாள்.

விமலன் கொஞ்ச நேரம் பேசவில்லை. பிறகு சொன் னான்.

''ஒன்று கேட்கிறேன். உண்மையைச் சொல்லு வாயா?''

''அது நீங்கள் கேட்கிறதைப் பொறுத்து இருக்கிறது. நான் உண்மையைச் சொல்லுவதால் யாருக்கும் எந்த தீங்கும். ஏற்படாது என்றால் கண்டிப்பாய் சொல்கி றேன்'' விமலன் சிரித்து விட்டு ரேகாவின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். ரேகா மெல்ல விடு வித்துக் கொள்ளப் போனாள். ஆனால் அவன் கை மேலும் இறுகியதால் சாத்தியப்படவில்லை. ''உண்மை யைச் சொல்லு. எவ்வளவு இரவுகள் என்னைத்திட்டித் தீர்த்திருப்பாய்?''

''என்னை நான் திட்டிக்கொள்வதைத் தவிர வேறொருத்தரைத் திட்ட எனக்குத் தெரியாது.''

''அது இன்னும் பயங்கரம்! எதிராளி செய்த தப்புக் களுக்கு நம்மை நாம் தண்டித்துக் கொள்வதைப் போன்றது. என்னை வீணாய் கெட்டவனாக்கினாய். இதற்காக உனக்கு என்ன தண்டனை தெரியுமா?'' ஒருக்கால் இங்கே காரை நிறுத்திவிட்டு, 'தனியாய் வீட்டிற்கு வா' என்று சொல்லி விடுவானோ? ஆனாலும் பரவாயில்லை. வீடு கிட்டே நெருங்கிவிட்டது. ரேகா தைரியமாய் உட்கார்ந்திருந்தாள் விமலனின் குரல் தெளி வாய் உறுதியாய் ஒலித்தது.

''சொல்லச் சொல்கிறாயா? அப்படீன்னால் கேள். நீ ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாமல் போனா லும், உனக்கு இஷ்டமிருந்தாலும், இல்லாவிட்டாலும் சரி, நீ என் மனைவி. நான் எல்லோர் முன்னிலையிலும் உன்னைத் திரும்பவும் அக்னி சாட்சியாய் மணம் செய்து கொள்கிறேன். நடந்ததையெல்லாம் சேகரிடம் சொல்லப் போகிறேன் நான்.''

ரேகா திரும்பி அவனைப் பார்த்து, பதறிப்போய் ''வேண்டாம், வேண்டாம். சேகரிடம் இதையெல்லாம் சொல்ல வேண்டாம் நீங்க'' என்றாள்.

''ஏன்?''

''இப்பொழுது என்னால் சொல்ல முடியாது. அப்புற மாய் சொல்கிறேன்.''

விமலன் வீதியோரமாய் காரை நிறுத்தினான். ரேகா வீட்டு சந்து வந்தது.

''இறங்கு. தாமதம் பண்ணாதே. தாமதம் பண்ணி னாயானால் என் கைகள் நான் சொன்னபடி கேட்காது. உன்னை பலவந்தமாய் என்னோடு வீட்டிற்கு அழைத் துச் சென்று அது என்னவென்று இப்பொழுதே சொல்ல வைத்து விடும்.''

ரேகா இறங்கும் முன்னால் திரும்பி அவனைப் பார்த்தாள்.

''நாளைக்குச் சீக்கிரமாய் வந்தால் சேகர் என்ன சொன்னான் என்று சொல்லுவேன். பத்து மணி தாண்டிய பிறகு வந்தால் என்னால் முடியாது. வீட்டில் இருக்க மாட்டேன். வேலை இருக்கிறது.''

ரேகா இறங்கினாள். விமலன் காரை ஓட்டிக் கொண்டுபோய் விட்டான். அவள் ஒரு முறை மூச்சை இழுத்து விட்டுக் கொண்டாள். இது கனவா நினைவா? அவ்வளவு பரம விரோதியாய் நடந்துக்கொண்ட விமலன் இப்படிப் பேசுவது உண்மையிலேயே வினோதமாய்தான் இருந்தது. இரவு ஒன்பது மணி வேளையாய் இருந்ததால் வீதியில் ஜன சஞ்சாரம் அதிகமாய் இல்லை. ரேகா மளமளவென்று நடந்து வீட்டிற்கு வரத்தொடங்கினாள். பின்னாலிருந்து மளமளவென்று நடந்தபடி யாரோ தொடர்ந்து வந்து சேர்ந்துகொண்டார்கள்.

ரேகா முதலில் பயந்தாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தாள்.

''ரேகா! இவ்வளவு ராத்திரி வேளையில் எங்கேயிருந்து வந்துகொண்டிருக்கிறாய்?'' அனுமந்தன் விசாரித்தான்.

அவன் குரலில் தென்பட்ட அதிகாரத்திற்கு ரேகா ஒரு நிமிஷம் ஆச்சரியமடைந்து விட்டாள்.

''எவ்வளவு ராத்திரி? ஒன்பது மணிதானே ஆச்சு?'' என்றாள் அலட்சியமாய்.

''அதனால் மட்டும்? பெண்களுக்கு அது ரொம்ப ராத்திரி ஆனாற்போலதானே? நீ எங்கேயிருந்து வருகிறாய் என்று எனக்குத் தெரியும்.'' என்றான்.

அனுமந்துவின் தோரணை ரேகாவுக்குப் புரிந்தது.

''அந்தக் காரில் இறக்கி விட்டுவிட்டுப் போனவன் யார்?'' தெரிந்துகொள்ள உரிமை இருப்பது போலவே கேட்டான்.

''எனக்குத் தெரிந்தவர்.''

''அப்படீன்னால் வீடு வரைக்கும் வந்து இறக்கி விட்டு விட்டுப் போகலாமே? இந்த திருட்டுத்தனம் எதுக்கு? வீதியிலேயே இறக்கிவிட்டு விட்டுப் போய் விட்டானே.''

ரேகா பதில் பேசவில்லை. அவனோடு இனி பேசுவது வீண் வாதனை என்றெண்ணிக் கொண்டாள். ரேகாவோடு சேர்ந்து நடந்து கொண்டிருந்த அனுமந்தன் சொன்னான். ''ரேகா! இந்த உலகத்தில் சில சாமர்த்தியசாலிகள் இருக்காங்க. அவங்க மனிதர்களை தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டு, பிறகு தெரியாத வங்களைப் போலவே நடந்துப்பாங்க. என் உத்தேசத்தில் அப்படிப்பட்டவங்க புழுவிற்குச் சமம்!''

''நிஜந்தான் அனுமந்து! சரியாய் சொன்னாய். இந்த உலகத்தில் இன்னும் சில சாமர்த்திய சாலிகள் இருக்காங்க. அவங்க எந்தப் பெண்ணாயிருந்தாலும் சமயத்தில் கொஞ்சம் உதவி கேட்டால், கூடவே சேர்ந்து கொண்டு வெறிபிடித்தாற் போல சுற்றிக் கொண்டிருப்பாங்க. அவங்க கூட புழுவிற்குச் சமம் தான்.''

''ரேகா.''

''வரேன். அனுமந்து. என்னை சந்து கோடியிலிருந்து வீடு வரைக்கும் ஜாக்கிரதையாய் கொண்டு வந்துச் சேர்த்தாய். தாங்க்ஸ்'' வீடு நெருங்கிவிட்டதால் ரேகா உள்ளே போய் விட்டாள்.

அனுமந்தனின் முகம் சிவந்தது. பற்களை நறநறத்துக்கொண்டே தன் வீட்டை நோக்கிப் போனான். சோற்றுக்கு கதியில்லாமல் போனாலும் ரேகாவுக்குத் திமிர் அதிகம். ரேகாவின் நடத்தையைப்பற்றி நன்றாய் தெரிந்திருந்தும் கூட அவன் உதார குணத்துடன் பாட்டியை ஒருவாறு சம்மதிக்கச் செய்து, திருமணம் செய்துக் கொள்ளலாம் என்று பார்த்தால், மூர்க்கத்தனமாய் எப்படி பேசுகிறாள்! இந்தப் பெண்களின் திமிரெல்லாம் அந்த மூன்று முடிச்சுக்கள் விழும் வரைக்குந்தான்! ரேகாவின் கழுத்தில் விழவேண்டிய அந்த மூன்று முடிச்சுக்களையும் தானே போடுவதற்குத் தீர்மானித்துக் கொண்டான் அனுமந்து.



மறுநாள் காலை ஒன்பது மணிக்கு ரேகா தயாராகிப் புறப்படத் தொடங்கியபொழுது சுந்தரி கூப்பிட்டாள்.''
''ரேகா! நீ இன்றைக்குக் கொஞ்சம் வீட்டில் இருக்கணும் சுகுணா வீட்டில் இன்றைக்கு சுமங்கலிப் பண்டிகையாம் நான் போயிட்டு வரேன்'' என்றாள்.

ரேகாவுக்கு திக்கென்றது. காலையில் எழுந்ததிலிருந்தே நேற்றிரவு விமலனும் சேகரும் என்ன பேசினார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் விமலனிடம் போகவேண்டும் என்றும் எண்ணிக்கொண்டிருந்த ரேகாவுக்கு மாமியின் வார்த்தைகள் கால்களுக்கு விலங்கை மாட்டிவிட்டாற்போல ஆகிவிட்டது. சுந்தரியின் வார்த்தைகளை எதிர்க்க முடியாதவளாய் 'சரி' என்றாள்.

சுந்தரி தேங்காய், பழங்களை எடுத்துக்கொண்டு சுகுணாவின் வீட்டிற்குப் போய்விட்டாள். ரேகா வெகு நாட்களுக்குப் பிறகு தாயின் அறை ஜன்னலுக்கருகில் உட்கார்ந்து வெளியே வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினாள். கட்டிலில் எலும்புக்கூடாய் படுத்துக்கொண்டிருந்த தாயின் மீது அவள் பார்வை பட்டது. ரேகாவோடு அவள் பேசுவதை விட்டு வெகு நாட்களாகிவிட்டது. எப்பொழுதாவது வாயைத் திறந்தால், ''சேகர், சேகர்'' என்று முணுமுணுத்துக்கொண்டிருப்பாள். அவளை இப்படி நரக வேதனைப்படுத்துவதைவிட எப்படியாவது சேகரை ஒரு முறை வரவழைத்துத் தாயை சந்திக்கும்படி செய்தால் நன்றாயிருக்கும்...

பிற்பகல் இரண்டு மணிக்குத் திரும்பி வந்தாள் சுந்தரி. அதற்குள் தயாராயிருந்த ரேகா அவன் வந்ததுமே புறப்படத் தொடங்கினாள். செருப்பை மாட்டிக்கொண்டிருந்த ரேகாவைப் பார்த்து சுந்தரி, ''ரேகா இப்படி வா! ஒரு விஷயம் கேளு'' என்றாள். ரேகா கிட்டே வந்தாள். ரேகாவை அவள் கண்ணாரக் கண்டு மகிழ்ந்துபோகத் தொடங்கினாள்.

''என்ன மாமி?''

''நீ அதிர்ஷ்டக்காரிதான் ரேகா.''

''என்னவாச்சு மாமி?''

சுந்தரி சந்தோஷத்துடன் சொன்னாள்.

''சுகுணா வீட்டுக்கு நம்ப பக்கத்து வீட்டு பாட்டி வந்தாள். அவள் பேச்சுவாக்கில் மெதுவாய் வெளியிட்டாள். அவங்க அனுமந்துவுக்கு உன்னைப் பண்ணிக்கணும்னு இருக்காம்.''

''அனுமந்துவுக்கா? என்னையா?''

''ஆமாம்மா! நான்கூட அதைக் கேட்டதுமே, இப்படித்தான் ஆச்சரியமடைந்துவிட்டேன்.''

ரேகா புறப்பட முற்பட்டாள். அவள் இதயத்தில் குப்பென்று தீ பரவிற்று.

''நம்மால் வரதட்சணை கிரதட்சணை தர முடியாதுன்னுச் சொல்லிவிடு மாமி.''

''ஐயோ ராமா! இதை நீ சொல்லிதானா எனக்குத் தெரியணும்? அந்த ஆசையே அவங்களுக்கு இல்லையாம். நீ ஒப்புக்கொண்டால் போதுமாம். வரதட்சணைதான் எப்படியும் இல்லை. கல்யாணச் செலவுக்குக் குறைந்த பட்சம் பதினைந்து இருபதாயிரம் நீ வேலைப் பண்ணுகிற அவரிடம் கேட்டால்? போகட்டும்; இந்த விஷயத்தை நீயே அவரிடம் சொன்னால் நன்றாகவா இருக்கும், ஒரு தடவை என்னை அவரிடம் அழைச்சுட்டுப் போ. வயதானவர் என் கிறாய், ''பெரியவரே'' என்று சொல்லிவிட்டுக் கொஞ்சம் கஷ்ட சுகத்தை வெளிப்படுத்தினால் போகிறது.''

''மாமி'' ஏதேதோ கோபமாய் சொல்ல வேண்டும் என்று திரும்பிய ரேகாவுக்கு மாமியின் முகத்தைப் பார்த்ததுமே ஆவேசம் தணிந்துவிட்டது.

''எனக்கு வேலை இருக்கு. போயிட்டு வரேன் மாமி'' என்று சாந்தமாய் சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டாள்.

ரேகா இரண்டு பஸ்களைப் பிடித்து சேகர் சொன்ன சர்ச்சிக்கருகில் வந்தபொழுது சேகர் அதற்குள் அங்கே வந்து காத்திருந்தான்.

''ஏன் தாமதம் பண்ணிவிட்டாய்?'' என்றான் ரேகாவிடம். ரேகா நடந்ததைச் சுருக்கமாய் சொன்னாள்.

சேகர் ரேகாவை சர்ச்சிற்குப் பின்பக்கமாய் இருந்த சந்திற்குக் கூட்டிவந்தான். அங்கே ஜனசஞ்சாரம் இல்லை.

''இங்கே உட்கார்ந்துகொள்ளலாம்'' என்று மதூதிப் படிகளை நோக்கி நடந்தான். ரேகா சேகரை அனுசரித்தாள்.

இருவரும் உட்கார்ந்துகொண்டதும் ரேகா தாயைப் பற்றிச் சொன்னாள்.

சேகர் கவனமாய் கேட்டான்.

''நான் இன்றைக்கு பூனாவுக்குப்போகிறேன். திரும்பி வந்ததும் கண்டிப்பாய் சந்திக்கிறேன்'' என்றான்.

''திரும்பவும் ஊரா? இந்த ஊர்களுக்கெல்லாம் போய் என்ன செய்வாய் நீ அங்கே?''

சேகர் சிரித்தான். ''ஒன்றும் பண்ணமாட்டேன். பொழுது போக்காய் சுற்றிவிட்டு வருவேன்.''

''எல்லாம் பொய்.''

''நீ மூட்டாள். இல்லாவிட்டால் என் நிலையில் இருக்கிற ஒருவன் சும்மாவே எந்த காரியத்தையாவது பண்ணுவானா?''

ரேகா பதில் பேசவில்லை. சேகரின் வார்த்தைகளிலும் நடவடிக்கைகளிலும் ஒருவித பெரிய மனித தோரணை வந்துவிட்டிருந்தது.

''ராத்திரி நானும் விமலனும் சந்தித்துக்கொண்டோம்.''

''ஆமாம். விமலன் சொன்னார். அவர் என்ன பேசினார் நீ என்ன சொன்னாய்?'' ரேகா பரபரப்புடன் கேட்டாள்.

'ரேகா, நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி. இல்லாவிட்டால் நாம்ப இருக்கிற சூழ்நிலையில் விமலனைப் போன்ற கணவன் உனக்குக் கிடைப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? விமலனைப்பற்றி நான் விசாரித்தேன்.

ரொம்ப கெட்டிக்காரன் என்று சொல்றாங்க எல்லோரும். நீ கண்ட கண்ட யோசனைகளைப் பண்ணிக்கொண்டிருக்காமல் விமலனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள சம்மதித்துவிடு.''

''சேகர்...ஆனால்...''

''ஒருக்கால் விமலனுக்கு என் விஷயம் தெரிந்து விட்டால் பிற்பாடு ஏதாவது மனஸ்தாபம் வரலாம். அதனால் அவனிடம் என்னைப் பற்றி எல்லாவற்றையும் சொல்லிவிடப் போகிறேன். நான் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் விமலன் என்னை ஆதரிப்பான் என்ற நம்பிக்கை இருக்கிறது எனக்கு. ரேகா, நேற்று நீ மேரியோடு சரியாய் பேசவில்லை.''

''யார் அந்தப் பெண்?''

''என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலிதான். வாழ்க்கையில் வழி தவறி போய், அதிர்ஷ்டவசமாய் காற்று வாக்கில் என்னிடம் வந்து சேர்ந்தாள் ரேகா'' சேகர் தயக்கத்துடன் நிறுத்தினான்.

''சொல்லு. என்ன?''

''மேரி தாயாகப் போகிறாள்.''

''அதனால்?''

''அந்த குழந்தைக்கு தந்தை நான்தான்.''

ரேகா அருவறுப்புடன் பார்த்தாள். ''என்ன, நீயா? அந்தப் பெண்ணோடா? கல்யாணம் ஆகாமலேயா?''

சேகர் வினோதமாய் சிரித்தான். ''கல்யாணம், உரிமைகள், அதிகாரம், சம்பிரதாயங்கள் இதெல்லாம் உங்களுக்கு. நாங்கள் உங்கள் சமூகத்திற்கு வெளியே வாழ்ந்துகொண்டிருக்கிற மனிதர்கள் என்பதை மறந்து விட்டாய் நீ.''

ரேகாவுக்கு ஒரு நிமிஷம் என்ன சொல்வதென்று தெரியவில்லை.

"ரேகா! நீ கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று நான் ஏன் விரும்புகிறேன் தெரியுமா? எப்பொழுதாவது நான் வந்து ஓரிரண்டு நாள் உன்னிடம் தங்கியிருந்து உன் குடும்பத்தைப் பார்த்து சந்தோஷமாய் கழிக்கணும் என்பதுதான் என் ஆசை. இன்னொன்று கூட சொல்கிறேன். நீ எனக்கு ஒரு வாக்குறுதி தரணும்."

"என்ன, சொல்லு?"

"எங்கே எந்தப் பாம்பு பதுங்கியிருக்குமோ, எங்கே என்னை கடித்துவிடுமோ என்று தெரியாத பயங்கரமான காட்டிற்கு நடுவே நடந்துகொண்டிருக்கிறேன் நான். நான் இவ்வாறு எவ்வளவு வருஷங்களை கழிக்கணும் என்றுகூட தெரியாது எனக்கு. இந்த உலகத்தில் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை எனக்கு. ஒருக்கால் எனக்கு ஏதாவது ஆகிவிட்டால் மேரிக்கு நீதான் புகலிடம் அளிக்கணும்."

"ப்ளீஸ், இப்படி பேசாதே சேகர்."

"ஆல்ரைட்! நான் சொல்லவேண்டியதை சொல்லி விட்டேன்."

ரேகா இதயத்தில் கூடுக்கட்டிக்கொண்டிருந்த துக்கத்தை விரட்டியடிக்க முயன்றாள். சேகர் சொன்னது உண்மையாகிவிட்டால்! இதுதான் அவனை கடைசி தடவையாய் பார்ப்பதாய் இருந்தால்! ரேகாவின் இதயம் படபடத்தது.

"ரேகா! இந்த மனிதர்கள் புண்ணியம் என்று சொல்லிக்கொண்டு இவ்வளவு பூஜைகளை பண்றாங்க. தானம் என்று சொல்லிக்கொண்டு இவ்வளவு தர்மங்

களைப் பண்றாங்க. ஆனால் ஒருத்தராவது ''எல்லா மனிதர்களையும் சமமாய் கருது''— என்ற தர்ம வாக்கியத்தைப் பின்பற்றுவதில்லை. லட்சத்தில் ஒருத்தராவது ஏசுவைப்போலவோ, காந்தியைப் போலவோ நடந்துகொண்டால் இந்த உலகத்தில் துவேஷம் என்பதே இருக்காதே. இந்த காலத்தில் நல்ல குண முடையவர்கள் ஒருத்தராவது இருப்பாங்களா?''

''இருக்காங்க சேகர். ஏன் இல்லை.''

சேகர் வியப்போடு பார்த்தான். ''கதைகளில் விவரிக்கும் மனிதர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. நம்மை சுற்றிலும் இருப்பவர்களைப் பற்றிச் சொல் கிறேன்.''

''ஆமாம். நான் கண்கூடாய் பார்த்தேன். தெய்வம் போன்றவர்...''

''யார்? பெயரைச் சொல்லு.''

''விஸ்வநாதன்.''

சேகர் சாட்டையடி வாங்கியவனைப் போல பார்த் தான். ''விஸ்வநாதனா?'' அவர் பெயரைக் கேட்டதுமே சேகரின் முகம் சுருங்கிற்று.

''நீ இன்னும் அவர் வீட்டிற்குப் போவதை விட வில்லையா?''

''இல்லை.''

''அப்படீன்னால் இந்த நிமிஷமே விட்டுவிடு.''

''ஏன்?''

''ஏன்னா! இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் அவர் வீடு முழுவதும் கொள்ளையடிக்கப்படவிருக் கிறது. நீ அங்கே இருந்தால் அதில் சிக்கிக்கொள்ள வேண்டியிருக்கும்.''

''சேகர்...''

''நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. இது தான் நிஜம்.''

''பொய். என் உடம்பில் உயிர் உள்ள வரை இப்படி நடக்கவிடமாட்டேன். நான் இப்பொழுதே ரிப்போர்ட் தருகிறேன்.''

''யாருக்கு? என்னவென்று?''

''போலீசுக்கு.''

''தந்துக் கொள். அது எங்கள் ஆட்களுக்குத் தெரிந்துவிடும். இந்த விஷயம் யார் மூலமாய் எப்படி வெளிப்பட்டது என்று துப்புத் துலக்கி தெரிந்து கொண்டுவிடுவாங்க. ஒரு நாள் என் தலையை வெட்டி பெட்டியில் வைத்து உன்னிடம் அனுப்பிவிடுவாங்க. கண்டிப்பாய் தந்து விடு.''

''சேகர்.''

''ஆமாம். அவர் தெய்வம் போன்றவர் இல்லையா? என்னையும்விட முக்கியமானவர் இல்லையா உனக்கு? ஆமாம், அவர் யார்? உண்மையைச் சொல்லு! அவர் மேல் உனக்கேன் இந்தப் பற்று?''

''ஏனா?'' ரேகாவின் கண்கள் கசிந்தன. ''சேகர்! உனக்கென்ன தெரியும்? நீ கனவிலும் ஊகித்துப் பார்க்க முடியாத சம்பவங்கள் சிலவற்றை நான் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அந்தச் சமயத்தில் உண்மையில் அவர் நிழல் மட்டும் இல்லாமலிருந்திருந்தால் இதற்குள் நீ என் சவத்தைதான் பார்த்திருப்பாய்.''

சேகர் நேரத்தைப் பார்த்துக்கொண்டான்.

இருவரும் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

''ரேகா, விஸ்வநாதனின் வீட்டில் வேலைக்காரி இருக்கிறாளா?''

''இருக்கிறாள்.''

''என்ன வயதிருக்கும்?''

''இருபத்தைந்து இருக்கலாம். ஏன்?''

''சும்மாத்தான். அவள் என்னென்ன வேலை செய்வாள்?''

''எல்லா வேலையும் செய்வாள். வீட்டைப் பெருக்கி, துணிகளைத் தோய்த்து, பாத்திரங்களைத் தேய்த்து...''

''அவளுக்கும் விஸ்வநாதனுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாய் கேள்விப்பட்டேன்.''

''சீ, சீ, அதெல்லாம் இல்லை. எனக்கு நன்றாய் தெரியும். யார் சொன்னாங்க இந்த கட்டுக்கதைகளை யெல்லாம்?''

''கேள்விப்பட்டேன்.''

சேகர் நகை துலைந்த விஷயத்தைப் பற்றிக் கேட்க லாம் என்று நினைத்துக் கொண்டிருந்தபொழுதே பஸ் வந்து விட்டது.

ரேகா ஏறி உட்கார்ந்து கொண்டாள். சேகர் கையை ஆட்டினான். பஸ் கண்மறைவாகிப் போனதும் சேகர் பெருமூச்சு விட்டான்.

கடவுள் கிருபையால் அடுத்த தடவை வரும்போது ரேகாவை விமலன் வீட்டில் அவன் மனைவியாய், குடும்பத் தலைவியாய் சந்திக்க வேண்டும் என்றெண் ணிக் கொண்டான்.

12

ரேகா ஏறிய பஸ் விமலனின் வீட்டிற்குக் கொஞ்சம் தூரத்தில் வந்து நின்றதுமே ரேகா இறங்கி விட்டாள். எப்படியும் விமலன் இந்த வேளையில் வீட்டில் இருக்க மாட்டான். விஸ்வநாதனைப் பார்த்து விட்டு அவரிடம் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்து விட்டுப் போக வேண்டும் என்றிருந்தது. சேகர் அவர் வீட்டைக் கொள்ளையிடப் போகும் விஷயத்தை அவரிடம் இப் பொழுதே சொல்லிவிட வேண்டும். சொல்லிவிட்டால் அவரும் விமலனும் சேர்ந்து எப்படியாவது இந்த ஆபத்தைத் தடுக்கும் உபாயத்தைப் பற்றி யோசிக்காம லிருக்கமாட்டார்கள். இவ்வளவு உதாரண குணமுடைய வெண்ணையைப் போன்ற உள்ளங்கொண்ட அவர் வீட்டில் சேகர் கொள்ளையிடுவதா? அவள் உடம்பில் உயிருள்ளவரை இதை நடக்கவிடமாட்டாள். தனக்குள் சபதம் செய்து கொண்டே யோசனையுடன் நடந்து கொண்டிருந்த ரேகா அந்த வீட்டிற்குள் நுழைந்ததுமே முதல் முதலாய் எதிர்ப்பட்டவன் விமலன்தான்.

அவன் ரேகாவை ஏறயிறங்கப் பார்த்து விட்டு, ''ஆஹா! தம்பியின் நலனுக்காகத் தவித்துப் போய்க் கொண்டிருக்கும் அக்கா அல்லவா, அதான் காலை யிலேயே வருவதாய் சொல்லிவிட்டு சாவதானமாய் சாயந்திரமாய் வருகிறீங்க'' என்றான்.

ரேகா பதில் பேசவில்லை.

''இவ்வளவு நேரமாய் வராததால் நீ இனி வரவே மாட்டாய் என்றெண்ணிக் கொண்டிருந்தேன்.''

அவன் வீட்டில் இருக்கமாட்டான் என்றெண்ணி யிருந்தாள் ரேகா. அதனால் தைரியமாய் வந்தாள். அவள் வாசலிலேயே அவன் எதிர்ப்பட்டதுமே ரேகா வுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

தான் வந்தது விஸ்வநாதனுக்காகத்தான் என்பது போல அவன் வார்த்தைகள் காதில் விழாதவளைப் போல மாடிக்குப் போகத் தொடங்கினாள்.

"இதப்பார்..."

விமலன் கூப்பிட்டான்.

ரேகா திரும்பிப் பார்த்தாள்.

"எப்படியும் மாடிக்குப் போகிறாய். ஹார்லிக்ஸை எடுத்துக் கொண்டு போ. அவர் இப்பத்தான் எழுந்திருந்தார்."

ரேகா நிசப்தமாய் சமையலறைக்குப் போனாள். கியாஸைப் பற்ற வைத்துத் தண்ணீரை வைத்தாள்.

விமலன் வாசலுக்கப்பால் நின்றான்.

"ரேகா! நீ விரும்பினாற்போல சேகரை வழிக்குக் கொண்டு வருவதற்கு நான் தயார்தான். ஆனால் அதற்கு பிரதிபலன் என்ன எனக்கு? பலனில்லாமல் பாடுபடும் வழக்கம் இல்லை என்னிடம்" என்றான் சீரியஸாய்.

ரேகா அவன் மனதிலிருப்பதைப் படித்தறிய முயன்றாற்போல பார்க்கத் தொடங்கினாள்.

"சொல்லு. ஏன் பேசமாட்டேங்கிறாய்? சேகர் விஷயத்தில் நீ விரும்பினாற்போல பண்ணுவதால் எனக்கென்ன லாபம் என்று கேட்கிறேன்?"

"என்னால் உங்களுக்கென்ன தரமுடியும்?"

"தருவதில்லை. பண்ணுவது! நீ ஒரு காரியம் பண்ணித்தரணும். உன்னால் முடியுமா?"

"அதென்ன?" பயந்து பேரய் கேட்டாள்.

"கமலனை புண்டரீகனின் மகளை மணந்து கொள்வதற்கு ஒப்புக்க செய்யணும்,"

''நானா?''

''ஆமாம். உன் பேச்சைக் கேட்பான் ஏன்ற நம்பிக்கை இருக்கிறது. நீ எதைச் சொன்னாலும் மறுக்க மாட்டான்.''

ரேகா மலர்ந்த முகத்துடன் விமலனைப் பார்த்தாள்.

அப்படிக் கோபம், துவேஷம் எதுவுமில்லாமல் அவள் முதல் முதலாகத் தன்னைப் பார்த்ததைக் கண்ட விமலனின் இதயத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அவனுக்கு உணர்ச்சி வசமாயிற்று.

''ரேகா...''

விமலனின் கைகள் ரேகாவின் தோளின் மீது படிந்தன.

''ரேகா! நான் பல நாட்களாய் சொல்லவேண்டும் என்றிருந்தேன்.'' அவனுக்கு நா தழுதழுத்தது.

ரேகா அவன் வாயிலிருந்து வெளிவரப் போகும் வார்த்தைகளுக்காக இதயம் படபடக்க காத்திருந்தாள்.

அதற்குள் பின்னாலிருந்து ''ஓ'' என்ற சப்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தான் விமலன். அவன் கைகள் மின்னலாய் ரேகாவின் தோளிலிருந்து விடுபட்டன.

கதவிற்கருகில் லலிதா நின்று கொண்டிருந்தாள்.

''விமல்! ஐயாம் ஸாரி! உங்களைத் தொந்தரவுப் பண்ணி விட்டேன் போலிருக்கு, அப்பாவைப் பார்க்க வந்தேன். பேச்சுக் குரல் கேட்டதால் இப்படி வந்து விட்டேன். என்னை மன்னித்து விடு'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள் லலிதா.

''லலிதா! மூடு வாயை! ஏன் போகிறாய்! இங்கே வா.''

''அப்பாவைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். ஆனாலும் நான் ஒரு பைத்தியக்காரி. அவருக்கு ஆத்மார்த்தமானவர்களான நீங்களெல்லோரும் கிட்டே இருக்கும்போது நான் எதுக்கு?'' என்று விமலனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''உம்! விஷயம் ரொம்ப தூரத்திற்குதான் வந்துவிட்டது போலிருக்கிறது'' என்றாள்.

''லலிதா! ப்ளீஸ். உனக்குத் தெரியாததைப் பற்றி பேச வேண்டாம்.''

''என் இரண்டு கண்களாலும் பார்த்த பிறகுகூட என்னால் புரிந்துக் கொள்ளவா முடியாது? ஆமாமாம். நான் வெறும் முட்டாள். அதனால்தான் இவ்வளவு சுலபமாய் எல்லோராலும் ஏமாந்து போய்க்கொண்டிருக்கிறேன்.''

ரேகா விஸ்வநாதனுக்கு ஹார்லிக்ஸைக் கலந்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

அவர் இன்று கொஞ்சம் தெம்பாகவே இருந்தார்.

''ஏம்மா, நீ காலையிலேயே வருவதாய் சொன்னாய் என்று விமலன் சொன்னானே? ஏன் வரவில்லை'' என்றார்.

ரேகா நடந்ததைக் சுருக்கமாய் சொன்னாள்.

''ராத்திரி விமலனும் சேகரும் சந்தித்துக் கொண்டார்களாம் ரேகா. நான் நினைக்கிறது என்னவென்றால் சேகர்...'' அவர் நிறுத்திக் கொண்டார்.

விமலனும் லலிதாவும் உள்ளே வந்தார்கள்.

''வந்து உங்களைப் பார்க்காமலேயே போய் விடப் போவதாய் சொன்னாள். நான்தான் அழைத்துக் கொண்டு வந்தேன் பலவந்தமாய்'' என்றான் அவன்.

லலிதா அதைப் பொருட்படுத்தாமல், ''விமல்! நிஜத்தைச் சொல்லு! இவரை இங்கே அழைத்துக் கொண்டு வந்து பலவந்தமாய் வைத்திருப்பதின் உத்தேசம் என்ன?''

விமலன் வாயடைத்துப் போனவனாய் பார்த்தான்.

''எல்லோரும் என்னை வாய்க்கு வந்தவாறு தூற்ற வேண்டும், நாலு பேர் என் பெயரை வெளியே இழுக்கணும் என்பதுதானே உன் பிளான்?'' ஆவேசமாய் கேட்டாள் லலிதா.

''லலிதா! இப்படி வா! நாம்ப அங்கே போய் பேசிக் கொள்ளலாம்'' விமலன் லலிதாவை வெளியே அழைத்துக்கொண்டு போனான்.

''விமல்! போதும் உன் நாடகம். இவ்வளவு நாளாய் நீ என் நலனைக் கருதுபவன் என்றெண்ணிக்கொண்டிருந்தேன். இந்த ஓநாய்களின் கும்பலில் நீயும் சேர்ந்து விட்டாய் என்று தெரிந்தது. நான் என்ன கூடாத காரியத்தைப் பண்ணி விட்டேன் என்று என்னை எல்லோருமாய் ஒதுக்கி வைத்து விட்டீங்க? உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. அதோ அந்த ராட்சசி, அவள் கடைசியில் உன்னைக் கூட வலையில் போட்டுக் கொண்டு விட்டாள்'' லலிதா அங்கிருந்த நாற்காலியில் சரிந்து தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள்.

''லலிதா, நீ ஆவேசத்தில் என்ன பேசுகிறாய் என்று தெரிந்து கொள்ளவில்லை.''

லலிதா சிவந்த கண்களுடன் நிமிர்ந்து பார்த்தாள் விமலனை. எல்லோரும் என்னை எப்படி எடுத்தெறிந்து பேசுகிறார்கள் தெரியுமா? கிளப்பில் கூட

அதே தான். நான் அவரைத் துரத்திவிட்டேனாம்! நான் என்ன தப்புப் பண்ணி விட்டேன்? அவரை அங்கே இருக்க வேண்டாம் என்றேனா? இங்கே நீங்கள்ளாம் சந்தோஷமாய் சிரித்து மகிழ்ந்து கொண்டிருக்கும் போது நான் அங்கே இந்த நரகத்தை அனுபவிக்கணுமா? எனக்கு ஏன் இந்த வருத்தமெல் லாம்? கடவுளே எனக்குச் சாவு வரக்கூடாதா?'' விஸ்வ நாதனின் தலைமாட்டில் நின்று கொண்டிருந்த ரேகா சிலையாகி விட்டாள். அவ்வாறு ஆதரவில்லாமல் அழுது கொண்டிருந்த லலிதாவைப் பார்த்தபொழுது அவள் மனது உருகிவிட்டது.

சற்று முன் வரை அமைதியாய் இருந்த விஸ்வநா தனின் முகம் திரும்பவும் அமைதியின்மையால் தவிக்கத் தொடங்கிவிட்டது.

விமலன் லலிதாவைப் பார்த்து மென்மையாய் சொன் னான். ''லலிதா! அப்பா வீட்டிற்குப் போகிறேன் என்று ரகளைப் பண்ணிக் கொண்டேதான் இருக்கிறார். நான் தான் பலவந்தமாய் தடுத்துவிட்டேன். இந்த விஷயம் உன்னை இவ்வளவு வருத்தப்படுத்தும் என்று தெரியாது. இந்த தப்பு என்னுடையதுதான்! இன்று மாலையே அவர் வீட்டிற்கு வந்து விடுவார் போதுமா?''

13

அன்று மாலையில் விஸ்வநாதன் தன் வீட்டிற்குப் புறப்பட்டார். படியிறங்கி வரும்பொழுதும், வந்து காரில் உட்காரும் பொழுதும் ரேகாவின் கையைத்தான் ஊன்று கோலாய் பிடித்துக்கொண்டார். உண்மையில் லலிதா வுக்குத்தான் அந்த வீட்டில் காலடி எடுத்துவைப்பது கொஞ்சமும் பிடிக்கவில்லை என்று தெரியும். ஆனாலும் வேறு வழியில்லாமல் அவள் வந்து தீரவேண்டியிருந்தது.

வேலைகள் முடிவடைந்து ரேகா வீட்டிற்குப் புறப் பட்டபொழுது விமலன் கார்க் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான். ''ஏறிக்கொள்'' என்றான்.

''அதிக நேரமாகிவிடவில்லை. நானே போய்க் கொள்கிறேன்'' என்றாள் அவள்.

''நான் உனக்காக ஸ்பெஷலாய் வரவில்லை. எனக்கு வேலை இருக்கு அந்த பக்கமாய்.''

எதிரே புல்வெளியில் லலிதாவும் மிஸ். ஜோஷியும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவே ட்ரான்ஸிஸ்டர் இருந்தது. அதைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த இருவர் பார்வையும் இந்த பக்கமாகவே இருந்ததை ரேகா கவனிக்கத் தவற வில்லை.

''உம்'' சீக்கிரமாய் ஏறு என்பது போல பார்த்தான் விமலன்.

விமலனின் எரிச்சலைப் பார்த்துவிட்டு ரேகா பின் சீட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். கார் புறப் பட்டுப் போய் விட்டது.

போய்க்கொண்டிருந்த காரையே பார்த்து பெரு மூச்சுவிட்ட மிஸ். ஜோஷி, ''லலிதா! இனி லாபமில்லை. நாளைக்கு நான் ஊருக்குப் போய்விடுகிறேன்.''

''ஏன்?''

''லாபமில்லைன்னு கண்கூடாய் தெரியவில்லையா? எட்டாதப் பழத்துக்காகக் கொட்டாவி விடும் பழக்கம் எனக்கில்லை. நாளைக்குப் போய்விடுகிறேன்'' லலி தாவின் மனது பயங்கரமான இருட்டாகி விட்டது.

ஓரிரண்டு நாட்களுக்குள் விமலன் எவ்வளவு மாறி விட்டான்! ரேகாவிடம் ஏதோ கவர்ச்சி இருகிறது.

இல்லாவிட்டாலும் அத்தனைப் பேரும் இவ்வளவு சுலபமாய் எப்படி வலையில் விழுந்து விட்டார்கள்? விமலனை எப்படியாவது வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்று மிஸ். ஜோஷிக்கு ஆசைக்காட்டி மேலும் கொஞ்ச நாட்கள் நிறுத்தி வைத்திருந்தாள் லலிதா.

மிஸ். ஜோஷிக்கு விமலன் வழிக்கு வரமாட்டான் என்று தெரிந்து விட்டது. இத்தனைக்கும் காரணம் ரேகா! அவள் மட்டும் வராமலிருந்திருந்தால் விமலன் கண்டிப்பாய் ஒப்புக் கொண்டிருப்பான்.

ரேகாவை இந்த வீட்டிற்கு வரமுடியாமல் தடுப்பது நடக்காத காரியம் என்று தெரிந்து விட்டது. தான் எவ்வளவு ரகளைப் பண்ணினாலும் தந்தை ரேகாவைத் துரத்த மாட்டார்.

இப்பொழுது விமலனும் ரேகாவின் பக்கமாகவே ஆகிவிட்டதால் ரேகாவுக்கு இன்னும் பக்கபலம் அதிகரித்து விட்டது. இதற்கெல்லாம் ஒரே வழிதான் இருக்கிறது, ரேகாவை இந்த வீட்டிற்குத் தானாகவே வரமுடியாமல் பண்ணிவிட வேண்டும்.

இந்த வீட்டின் மீதும், தந்தையின்பாலும் விமலன் பாலும் வேற்றுமையை ஏற்படுத்திவிட வேண்டும். ரேகாவிற்கு இந்த வீட்டோடு இருக்கும் பந்தம் முறிந்துப் போய் விடும்படியாய் செய்ய வேண்டும். அதை ரேகாவே முறித்துக் கொள்ள வேண்டும். லலிதாவின் மூளை சுறுசுறுப்பாய் யோசிக்கத் தொடங்கிற்று.

●

ரேகாவை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போன பொழுது வழியில் விமலன் சொன்னான்— "சொல்ல மறந்துவிட்டேனே, இன்றைக்கு கமலனிடமிருந்து கடிதம் வந்தது, படித்துப்பார்."

''எனக்கு பிறருக்கு வந்த கடிதத்தைப் படிக்கும் பழக்கமில்லை.''

''இது ஒருத்தர் கடிதம் என்றில்லை. இதில் உன்னைப் பற்றிதான் அதிகமாய் இருக்கிறது. அதனால் நீ படிப்பதில் தப்பில்லை.''

ஆனாலும் ரேகா அதைப் பெற்றுக்கொள்ளவில்லை அவன் கடிதத்தை சீட்டில் தன் பக்கத்தில் வைத்தான், அவள் இறங்கும்பொழுது கொடுக்கலாம் என்று.

ரேகா எதுவும் பேசாததால் கடைசியில் அவனே சொன்னான்— ''நாளைக்காலையில் நான் பூனாவுக்குப் போகிறேன்.''

ரேகா கேட்டுவிட்டு பேசாமலிருந்தாள்.

''ஏன் என்று ஏன் கேட்கவில்லை?''

''ஏன்?''

''ஆஹா! கிளிப்பிள்ளையைப் போல கேட்பது நன்றாய்தான் இருக்கிறது. சேகர் உன்னிடம் எதுவும் சொல்லவில்லையா?''

''சொன்னான்.''

விமலன் உடனே எதுவும் பேசவில்லை.

டிரைவ் பண்ணிக்கொண்டிருந்தான். ரேகா பின்னாலிருந்து அழகாய் இருந்த அவன் தோள்களையும், தலை, கழுத்து முதலியவைகளை பார்த்துக் கொண்டிருந்தாள். அவனை இவ்வளவு நன்றாய் கூர்ந்து பார்க்கக்கூடிய அவகாசம் இதுவரை கிட்டியதில்லை.

''நான் போவது பம்பாய்க்கு. எங்கள் சித்தியின் தங்கை மகன் ஒரு கேசில சிக்கிக்கொண்டிருக்கிறான். சேகர் இன்றிரவு பூனாவுக்குப் போவதாய் சொன்னான்.

அதனால் பூனாவுக்குப் போய் அங்கே ஓரிரண்டு நாட்கள் இருந்துவிட்டு பிறகு பம்பாய்க்கு போகிறேன். நான் திரும்பி வர நாலைந்து நாட்கள் ஆகும். சேகரோடு அந்த இரண்டு நாட்களும் சேர்ந்து வசிக்கப் போகிறேன். அவன் உத்தேசம் என்னவென்றும், அவன் வாழும் முறை எப்படி என்றும் இன்னும் ஆழமாய் பரிசோதித்தாலேயொழிய அந்த கூண்டிலிருந்து அவனை எந்த ஆபத்தும் இல்லாமல் வெளியே இழுக்க முடியாது.''

ரேகா மனதிற்குள்ளேயே தெய்வத்திற்கு நன்றி சொல்லிக்கொண்டாள். உண்மையில் விஸ்வநாதன் விமலனைத் தனக்கு கணவனாய் பரிச்சியம் செய்து வைத்ததில் எவ்வளவு மறைமுகமான நன்மை இருக்கிறது என்பது புரிந்தது. இல்லாவிட்டால் சேகர் விமலனுக்கு நெருக்கமானவனாய் ஆக இடம் கொடுப்பானா?

''ரேகா'' பரிவோடு அழைத்தான் விமலன்.

அந்த அழைப்பின் மகத்துவம் என்னவோ தெரியாது. அதிலிருந்த நெருக்கம் ரேகாவின் மனதில் படிந்திருந்த துவேஷத்தின் சுவட்டை அடியோடு துடைத்தெரிய முயன்றாற்போல இருந்தது.

''நான் ஊருக்குப் போய்விட்டுத் திரும்பும் இந்த ஐந்தாறு நாட்களில் உனக்குச் சில வேலைகளை ஒப்படைத்துவிட்டுப் போகிறேன். உன் வேலையாய் நான் உன்னிடம் ஒரு சின்னப் பொறுப்பை ஒப்படைத்து விட்டுப் போவது அநியாயமில்லை என்றெண்ணுகிறேன்?''

''என்ன வேலை?''

''நான் இல்லாத சமயத்தில் விஸ்வநாதனை ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்

ஒவ்வொரு விஷயத்துக்கும் அதிகமாய் ஆவேசப்படுவார். வேறு யாரும் இல்லாவிடடால் லலிதா அவரை அதிகமாய் சீண்டிக்கொண்டேயிருப்பாள். ஆவேசப்படும்படியாய் செய்வாள்.''

ரேகாவுக்கு அது நிஜந்தான் என்று தோன்றிற்று. விமலன் திரும்பவும் சொன்னான். ''ரேகா! லலிதா வெரும் அப்பாவிப் பெண்! தான் என்ன பேசுகிறோம் என்று தனக்கே தெரியாமல் படபடவென்று பொரிந்துத் தள்ளிவிடுவாள். லலிதா ஏதாவது சொன்னாலும் நீ பொருட்படுத்தாதே. அவரிடம் போவதை விட்டு விடாதே. என்ன போகிறாயா?''

''போகிறேன்.''

''வாக்குறுதிதானே?''

''உம்.''

கார் ரேகா வீடு இருந்த சந்திற்குள் வந்து நின்றது.

''இந்தா, இந்தக் கடிதத்தை எடுத்துக்கொள்.'' விமலன் கடிதத்தை எடுத்துத்தரப் போனவன் நின்று விட்டான். அவன் பார்வை சந்துக்கோடியில் தொலைவில் ரேகாவின் வீட்டின் மீது நிலைத்துவிட்டது. இங்கே ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

''யார் அவங்கள்ளாம்? என்ன?'' என்றான்.

''என்னவோ?'' அதற்குள் அதைப் பார்த்துவிட்ட ரேகா கதவைத் திறந்துகொண்டு இறங்கப் போனாள்.

''இரு, இறங்காதே'' விமலன் காரை ஸ்டார்ட் பண்ணினான். கார் நேராய் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது.

''என்னவாகியிருக்கும்?''

''என்னவோ?'' ரேகா கதவைத் திறந்துகொண் கீழே இறங்கி மளமளவென்று உள்ளே போனாள்.

சுற்றிலும் இருந்த ஜனங்கள் தலைக்குத்தலை பேசிக் கொண்டார்கள்.

''அதோ! வந்துவிட்டால் மகாராணி.''

''பாவம்! உயிரோடிருந்தவரை இந்தப் பசங்களால் அவள் நரகத்தைத்தான் அனுபவித்துக்கொண்டிருந் தாள்.''

''நல்ல வேளை! போய்ச் சேர்ந்தாள்.''

ரேகாவைத் தொடர்ந்து விமலனும் உள்ளே வந்தான். எதிரே வராந்தாவில் காயத்ரியைப் படுக்க வைத்திருந் தார்கள். அவளுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த சுந்தரி ராகம் போட்டு அழுதுகொண்டிருந்தாள் ரேகா வைப் பார்த்ததுமே சட்டென்று 'ஓ'வென்று அழுது விட்டாள்.

''வந்தாயா ரேகா! எல்லாம் முடிந்து போயிடுத்து. உங்கம்மா நம்மை விட்டுப் போய்ச் சேர்ந்துவிட்டாள்.''

''அம்மா'' தாயின் சவத்தைப் பார்த்துக் கதறி விட்டாள் ரேகா. அவளுக்கு துக்கம் கட்டுமீறிக்கொண்டு வெளிவந்தது.

''என்னவோ? உயிரோடிருந்த வரைக்கும் ஒரு நாள் கூட அந்த அறையைவிட்டு வெளியே வந்து பார்த்த தில்லை. போய்ச் சேர்ந்ததே நல்லது! சிறை வாசம் நீங்கிற்று.

''என்ன தன்மானம்! இவ்வளவு தன்மானம் இருக்கிற ஒருத்திக்கு இப்படிப்பட்ட பசங்கள் பிறந்திருக்காங்க.''

''எல்லாம் தலையெழுத்துதான்.''

''ஆமாம், தகனக் காரியம் யார் பண்ணப் போறாங்களாம்?''

''அதென்னவோ? சங்கரன் சார் கூட ஊரில் இல்லை. எல்லோரும் பொம்பிள்ளைங்க.''

விமலன் கிட்டே வந்தான். காயத்ரியின் முகத்தை உற்றுப் பார்க்கத் தொடங்கினான். அவன் மூளையில் விஸ்வநாதனின் குரல் வேதனையோடு ஒலித்தது.

''விமல்! என் இந்த அபாரதத்தை என் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டுபோய் காயத்ரிக்கு முன்னால் நிறுத்தினால் காயத்ரி மன்னித்து விடுவாள் என்ற ஆசை இருக்கிறது. காயத்ரிக்கு முன்னால் நிற்க வேண்டுமென்றால் என் இரு குழந்தைகள்தான் எனக்கு பலம்! விமல், அந்த நாள் வரவேண்டும். அது வரைக்கும் என் உயிர் போகாது. குழந்தைகள் பக்கத்தில் இல்லாமல் காயத்ரியின் முகத்தை என்னால் பார்க்க முடியாது. அந்த தைரியம் எனக்கில்லை.'' விமலனின் கண்கள் கசிந்து விட்டன.

அதே சமயத்தில்— ''தகனக் காரியங்களை யார் பண்ணப்போறாங்க?'' என்ற பேச்சு குரல் காதில் விழுந்தது.

விமலன் ரேகாவிடம் வந்தான். தோளில் கையை வைத்துச் சொன்னான்— ''ரேகா, நான் இதோ வரேன். நான் வரும் வரை சவத்தை எடுக்க வேண்டாம். வரேன்''— மளமளவென்று வெளியே வந்த அவன் போய் காரில் உட்கார்ந்துகொண்டதும் காரை ரிவர்ஸில் திருப்பிக்கொண்டதும், தொடர்ந்து கார் அம்பாய் ஊடுருவிக்கொண்டு போனதும் எல்லாம் நிமிஷத்தில் நடந்தேறிவிட்டது, எல்லோரும் அவனையே வினோதமாய் பார்த்தார்கள்.

''யார் அவன்?'' ஒருத்தன் கேட்டான்.

''என்னவோ?''

''தோளில் கை வைத்துவேறு பேசுகிறானே?''

விமலன் பக்கத்து வீதியிலிருந்த ஒரு டெலிபோன் பூத்திற்குப் போய் விஸ்வநாதனுக்கு போன் பண்ணி நடந்ததையெல்லாம் சொன்னான். அவர் அதிர்ந்து விட்டார். ''என்னால் உடனே வரமுடியாது. இங்கே தகனக் காரியங்களையெல்லாம் பண்ணணும்.''

''செய். எல்லாவற்றையும் நீயே பார்த்துக் கொள் விமல்! நீ என் மகனுக்குச் சமமானவன் என்று நினைத்த வேளை எப்படிப்பட்டதோ? நான் மகனாய் பாவிக்கிற நீ, காயத்ரிக்கும் மகன்தான். அங்கே பண்ணவேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் நீயே பார்த்துக் கொள்.''

அவர் தன் பலத்தையெல்லாம் திரட்டிக்கொண்டு அந்த வார்த்தைகளைச் சொன்னாற்போல இருந்தது ஹீனஸ்வரத்தில் வெளிவந்த அக்குரலைப் பார்த்தால்.

விமலன் பரிவோடு சொன்னான் — ''நீங்கள் வருத்தப் படாதீங்க! எது எப்படி நடக்கணும் என்று எழுதி வைத்திருக்குமோ அப்படித்தான் நடந்து தீரும். நாம்ப பொறுப்பாளி என்றெண்ணிக்கொள்வது பிரம்மை. நீங்கள் எனக்கு ஒரு வாக்கு கொடுத்தாலேயொழிய என்னால் இங்கே எந்த காரியத்தையும் கவனிக்க முடியாது. நான் நேராய் வந்துவிடுவேன்.''

''சொல்லு விமல், என்ன?''

''உங்கள் மேஜை டிராயருக்குள் பகவத்கீதை இருக்கிறது. நீங்கள் கையை நீட்டினால் போதும் அது தட்டுப்படும். நான் வரும்வரை வேறெந்த யோசனையும் பண்ணாமல் கவனத்தையெல்லாம் அதில் செலுத்தி படித்துக் கொண்டிருப்பதாய் வாக்களியுங்கள். நீங்கள் எனக்கு ஆத்மார்த்தமானவர்கள். எனக்கு எல்லா வற்றையும்விட உங்கள் நலன்தான் முக்கியம்.''

விமலன் தகனக்காரியங்களுக்காக ஆட்களோடு திரும்பி வந்தபொழுது ரேகாவின் வீட்டிற்கு முன்னால் கும்பல் குறைந்து போயிருந்தது. விமலன் வந்ததுமே நடக்க வேண்டிய ஏற்பாடுகளைப் பார்க்கத் தொடங்கினார்கள்.

ரேகா தாயின் கையைத் தன் மார்போடணைத்துக் கொண்டு இன்னும் அழுது கொண்டேயிருந்தாள்.

சவத்தை தூக்க ஆட்கள் வந்ததும் ரேகா தாயைக் கட்டிக் கொண்டு விடவில்லை.

''அம்மா, அம்மா, நானும் உன்னோடு வந்து விடுகிறேம்மா'' என்று பெரிதாய் அழத் தொடங்கினாள்.

விமலன் ரேகாவின் தோளைப் பிடித்து பலவந்த மாய் தூக்கி நிறுத்தி சுந்தரியிடம் ஒப்படைத்தான்.

''ரேகா! இதென்ன பைத்தியம்? நான் இல்லையா உனக்கு?'' என்றாள் சுந்தரி.

''மாமி.''

சிறு குழந்தையைப் போல ஓவென்று கதறி விட்டாள் ரேகா.

அதுவரை இது ஏதோ தம்மால்தான் நடக்கும் என்றும், யாரையுமே பொருட்படுத்தாத ரேகாவுக்கு இப்பொழுது உதவி கேட்டுத் தீரவேண்டியிருக்கும் என்றும், இதை அவகாசமாய் எடுத்துக் கொண்டு ரேகாவைப் பழி வாங்கி. வீம்பாய் நடந்து கொள்ள வேண்டும் என்றும் உட்கார்ந்து கொண்டிருந்த சிலர் முகங்கள் கருத்து விட்டன.

இந்த விதமாகவாவது ரேகாவுக்கு நன்றாய் புத்தி புகட்ட வேண்டும் என்று காத்திருந்த அவர்களுக்கெல் லாம் விமலனின் வரவு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

அந்த அதிருப்தியையெல்லாம் ரேகா-விமலுக்கிடையே எப்படிப்பட்ட நீச்சமான உறவு இருக்குமோ என்று பேசிக் கொண்டும் கற்பனை பண்ணிக் கொண்டும் தீர்த்து கொள்ளத் தொடங்கினார்கள்.

சில மணி நேரங்கள் கழிந்தன.

பக்கத்து வீட்டுப் பாட்டி தட்டில் சாதத்தைப் பிசைந்துக் கொண்டு வந்து சுத்தரியைச் சாப்பிடச் செய்தாள்

ரேகாவை பலவந்தமாய் தலைமுழுகி விட்டு வரச் சொன்னார்கள். குளித்து விட்டு வந்த ரேகா பாட்டி தந்த காப்பியைக்கூட வேண்டாம் என்று மறுத்து விட்டு தாயின் அறைக்கு வந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள்.

தாய் உயிரை விட்டபொழுது பக்கத்தில் அவள் இல்லை. வெகுநாட்களாய் இருவருக்குமிடையே பேச்சு வார்த்தைகள்கூட விட்டு போய்விட்டது. அவளைப் பற்றிய தப்பு அபிப்பிராயத்தோடேயே கண்களை மூடிவிட்டாள். இந்த விஷயந்தான் ரேகாவின் இதயத் தைத் துடிதுடிக்கச் செய்தது.

விமலன் திரும்பி வந்தான். வாசல் வராந்தாவில் உட்கார்ந்து தூங்கி வழிந்துகொண்டிருந்த சுந்தரி— ''வந்தாயாப்பா! நீ செய்த உதவியை இந்த ஜென்மத்தில் மறந்து போகமாட்டேன்'' என்றாள் தூக்க கலக்கத் தோடேயே.

''ரேகா எங்கே?''

''உள்ளே இருக்கிறாள்.''

''கொஞ்சம் கூப்பிடுகிறீர்களா?''

''எதுக்கு இப்ப? தூங்கிவிட்டிருப்பாள். உங்களுக் கும் நேரமாயிடுத்து, பாவம் போயிட்டு வாங்க.''

விமலன் ஒரு வினாடி அவளைப் பார்த்தான். பிறகு தானே உள்ளே போனான். அறை வாசலில் நின்று உள்ளே எட்டிப்பார்த்த அவன் இதயம் தளர்ந்து விட்டது. அறையில் ரேகா கீழே உட்கார்ந்துகொண்டு, தாயின் கட்டிலில் இருந்த தலையணையில் முகத்தைப் பொத்திக்கொண்டு ''அம்மா! அம்மா'' என்று அழுது கொண்டேயிருந்தாள். விமலனின் கைகள் மெதுவாய் பின்னுக்குப் போய் அறைக் கதவை சாத்திவிட்டன.

''ரேகா'' கிட்டே வந்தான். மிகப் பரிவோடும் அன்போடும், ஆதரவோடும் இந்த அவ்வழைப்பைக் கேட்டதுமே ரேகாவின் துக்கம் கட்டு மீறிக்கொண்டு புறப்பட்டுவிட்டது.

''ரேகா.''

ரேகாவுக்குப் பக்கத்திலிருந்த முக்காலியில் உட்கார்ந்து கொண்டான் விமலன்.

''அம்மா... அம்மா... நான்... உங்களுக்குத் தெரியாது.'' தேம்பிக் கொண்டே சொன்னாள்.

''ரேகா! பிறந்தவங்க அத்தனைபேரும் செத்து தானே தீரணும்! உங்கம்மா பழுத்தப்பழம், உதிர்ந்துப் போய் விட்டாங்க. இதற்காக இவ்வளவு அழலாமா? தேற்றிக் கொள்.''

''உங்களுக்குத் தெரியாது. எனக்கு... எனக்கு யாருமே இல்லை.''

விமலனின் கைகள் தன்னையறியாமல் ரேகாவின் தோள்களைச் சுற்றிலும் படியப் போயிற்று. ஆனால் அதற்குள் ஏனோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பின்வாங்கிக்கொண்டன.

''யாருமில்லையா உனக்கு? சேகர் இல்லையா? விஸ்வநாதன் இல்லையா? கமலன் இல்லையா? உங்க

மாமா மாமி இல்லையா? இவ்வளவு பேர் இருக்கும்போது யாருமில்லை என்கிறாயே?''

ரேகாவின் அழுகை நிற்கவில்லை.

விமலன் சொன்னான். ''ஒரு விஷயம் சொல்லு. சேகரிடம் பூனாவுக்கு வருவதாய் வாக்குத் தந்திருக்கிறேன். நாளைக் காலையில் நான் போகணுமா, வேண்டாமா?''

''.....''

''சொல்லு.''

''போ... போங்கள்.''

''சும்மா 'போங்கள்' என்று சொல்லி விட்டால் போதாது. நீ எனக்கொரு வாக்குத் தந்தால் போகிறேன். தாய் இறந்த துக்கம் எவ்வளவு பயங்கரமானதுன்னு நான் அறியாதவனில்லை, உனக்கு அழுகை வருகிறது. தனிமையாகி விட்டதாய் தோன்றுகிறது. மறுக்கவில்லை நான். ஆனால் இதையே மனதில் நிரப்பிக் கொண்டு குமுறிக் கொண்டிருந்தால் என்னால் சும்மாயிருக்க முடியாது. இந்த துக்கத்தை உன்னால் முடிந்தவரை மென்று விழுங்கிக் கொள்வதாம் வாக்குத்தா! எனக்கு நீ மனப்பூர்வமாய் வாக்களித்தால்தான் நான் போவேன். இல்லாவிட்டால் போகமாட்டேன்.''

ரேகா நிமிர்ந்து பார்க்காமலேயே கையை நீட்டினாள்.

விமலன் அக்கையைத் தன் கையால் அழுத்தமாய் பிடித்துக் கொண்டான்.

அவ்வளவு துக்கத்திலும் ரேகாவின் மனம் நெகிழ்ந்து போகும்படியாய், மிகப்பரிவோடு ஒலித்தது அவன் குரல்.

''ரேகா, இது மட்டுமில்லை. நாளைக்கு உனக்கு எவ்வளவு துக்கமாய் இருந்தாலும் சரி, நீ விஸ்வநாதனின் வீட்டிற்குப் போக வேண்டும். அவர் எவ்வளவு வருத்தத்தில் ஆழ்ந்திருக்கிறார் தெரியுமா? உன்னைப் பார்க்கத் தவித்துப் போய் இப்பொழுது தானே உன்னிடம் வருவதாய் சொன்னார். ஆனால் நான்தான் வேண்டாம் என்றேன். வரவழைக்கும் பொறுப்பு என்னை சேர்ந்தது என்று சொன்ன பிறகுதான் அவர் நிம்மதியடைந்தார். சொல்லு, போவாயா?''

ரேகா 'போகிறேன்' என்று தலையாட்டினாள்.

விமலன் ஒரு வினாடி ஏதோ யோசித்தான்! பிறகு ரேகாவின் கையை இடக்கையால் அப்படியே பிடித்துக் கொண்டு, வலது கையை பேன்ட் ஜேபிக்குள் விட்டு, கைக்குத் தட்டுப்பட்ட பணத்தை வெளியே எடுத்து அவள் உள்ளங்கையில் வைத்து மூடினான்.

''இதை உன்னிடம் வைத்துக் கொள். ஒருக்கால் பம்பாயில் எனக்கு இரண்டு மூன்று நாட்கள் தாமதமாகலாம். நான் திரும்பி வந்ததுமே சேகர் விஷயமாய் என்ன பண்ணலாம் என்பதைப் பற்றி யோசிப்போம்.''

ரேகா அப்பணத்தை வாங்கிக் கொள்ளப் பிடிக்காமல் திருப்பித் தரப் போனாள்.

விமலன் தடுத்துவிட்டு சொன்னான், ''நாமிருவரும் ராஜிக்கு வந்து விட்டோம். உன் சிநேகிதனாய், சேகரின் நலனைப் விரும்பும் நபராய் எனக்கு இந்த அதிகாரம் இருக்கிறது. உனக்குத் தேவைப்பட்டால் விஸ்வநாதன் கொடுப்பார். எனக்குத் தெரியும். இந்த சமயத்தில் உன்னால் கேட்க முடியாது என்றுதான் இதைத் தருகிறேன். அவ்வளவு தூரம் உனக்கு வாங்கிக் கொள்ளப் பிடிக்காவிட்டால், ஊரிலிருந்து வந்ததும்

திரும்பி வாங்கிக் கொள்கிறேன்.'' விமலன் கையை விட்டான்.

ரேகா பணத்தை இம்முறை விடவில்லை. உள்ளங் கைக்குள் வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந் திருந்தாள்.

''நான் போய் வரட்டுமா?''

ரேகா தலையாட்டினாள்.

விமலன் வெளியே வந்து விட்டான்.

ரேகா தூங்குவதாய் தான் சொன்னதையும் கேட் காமல் தன்னைத் தள்ளிக் கொண்டு உள்ளே போன விமலன், அறையின் கதவை சாத்தியதைப் பார்த்த சுந்தரிக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

உள்ளே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்? யார் இந்த பையன்? ரேகாவின் மீது ஏதோ உரிமையும் அதிகாரமும் இருப்பதுபோலவே நடந்து கொள்கிறானே! இவ்வளவு நேரமாய் அந்த அறைக்குள் என்னதான் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்?

கதவை சாத்திக்கொண்டு பேச வேண்டிய தலைப் போகிற காரியம் என்ன இருக்கிறது? அதுவும் இந்த சமயத்தில்! வரட்டும் வெளியே! இன்னொரு தடவை இந்த வீட்டுப் படியை ஏறவிடாமல் நாலு திட்டு திட்டி அனுப்ப வேண்டும். சுந்தரி காளி தேவியைப் போல விமலன் வெளியே வருவதற்காக காத்திருந்தாள்.

கதவு திறந்துகொண்டது. விமலன் வெளியே வந்தான். சுந்தரி வாயைத் திறப்பதற்குள் அவன் போய் விட்டான். அவன் காரில் உட்கார்ந்ததும் கார் புறப் பட்டதும் நிமிஷத்தில் நடந்து முடிந்தது. சுந்தரியின் கண்களுக்கு மட்டும் சக்தி இருந்திருந்தால் விமலன் போய்க்கொண்டிருந்த கார் சாம்பலாகி விட்டிருக்கும்.

14

காலை ஒன்பது மணிகூட ஆகவில்லை. அதற்குள் விஸ்வநாதனின் கார் வந்து சங்கரனின் வீட்டிற்கு முன்னால் நின்றது. வாசலில் வந்து நின்ற காரைப் பார்த்ததுமே சுந்தரி முகத்தைச் சுளித்தாள். காரிலிருந்து நேற்று வந்தவன் இறங்குவானோ என்று பார்த்தாள்.

நேற்றிரவு நாத்தியின் மரணத்தையும் விட அவளை அதிகமாய் வருத்தப்படுத்தியது இந்த விஷயந்தான். அவன் யாரோ தெரியவில்லை. ரேகாவின் மீது எல்லா அதிகாரமும் இருப்பது போலவே நடந்துகொண்ட அவன் போக்கு அவளை வருத்தப்படுத்திற்று.

ஆனால் காரிலிருந்து இறங்கியவன் நேற்றிரவு வந்தவன் இல்லை, டிரைவர்!

அதே சமயத்தில் ரேகா வெளியே வரவே டிரைவர் அவளைப் பார்த்து— "ஐயா, உங்களை வரச் சொன்னாரும்மா. உங்களை அழைச்சுட்டு வராமல் போனால் சும்மாயிருக்க மாட்டாங்க. திரும்பவும் அனுப்புவார் என்னை. வரிங்களாம்மா?"

"வரேன் இரு. ஒரு நிமிஷம்" ரேகா உள்ளே போனாள்.

டிரைவர் காருக்கருகில் போய்விட்டான்.

சுந்தரி கையிலிருந்த துடப்பத்தைக் கீழே போட்டு விட்டு உள்ளே போனாள். தலைவாரிக்கொண்டிருந்த ரேகாவை தீவிரமாய் பார்த்து— "என்ன ரேகா, இன்றைக்குப் போகப் போகிறாயா?" என்றாள்.

"ஆமாம் மாமி."

"அழகாயிருக்கு" சுந்தரி கன்னத்தில் இடித்துக் கொண்டாள். "நாலு பேர் என்ன நினைச்சுப்பாங்க தெரியுமா?" என்றாள்.

தலை வாரிக்கொண்டிருந்த ரேகா திரும்பி விரக்தியும் வேதனையும் நிரம்பிய குரலில் சொன்னாள் — ''தெரியும்! இந்தப் பொண்ணுக்கு வெட்கமில்லை என்பாங்க. தாய் போனதற்குக் கொஞ்சமும் வருத்தமில்லை என்பாங்க'' ரேகாவின் குரல் துக்கத்தால் தழுதழுத்தது.

''சொல்லிக்கட்டும் மாமி! என்னைப்பற்றி யார்தான் எப்பொழுது நல்லபடியாய் பேசியிருக்காங்க? உண்மையாகவே சொல்கிறேன். எங்கம்மா போனதற்கு எனக்கு துக்கமே இல்லை. உயிரோடிருந்த பொழுது என்ன சுகப்பட்டு விட்டாள் என்று செத்துப் போனதற்காக வருத்தப்படுவேன்?''

''என்ன திமிராய் பேசுகிறாய்? இப்பொழுது உன்னை யார் என்ன சொன்னாங்க? கொஞ்சம் கௌரவமாய், நாலு பேர் சிரிக்கிறபடி இல்லாமல் நடந்து கொள் என்று சொல்வது தப்பா?''

''இல்லை மாமி இல்லை. இதில் யார் தப்பும் இல்லை. இந்த உலகத்தில் பணம் இல்லாமல் பிறப்பது தப்பு. அதிர்ஷ்டங்கெட்டவர்களாய் பிறப்பது இன்னும் குற்றம். அப்படிப் பிறந்த என்னைப்போன்ற துரதிர்ஷ்டசாலிகள் மானம் மரியாதை என்று பிடித்துக் கொண்டு தொங்குவது இன்னும் முட்டாள்தனம், போதுமா?''

''ஐயோ ராமா! மறுபடியும் அப்படியே பேசுகிறாயே! இப்ப உன்னை என்ன சொல்லிவிட்டேன் என்று இவ்வளவு கோபம்? ஏதோ தாய் போன துக்கத்தில் இருக்கிறாய், வரமாட்டேன் என்றால் என்னவாகி விடும்னு நினைச்சேன். அவங்க மட்டும் மனுஷங்க இல்லையா? அவ்வளவு தூரம்கூட புரிஞ்சுக்க முடியாதா? ஒருக்கால் புரிஞ்சுக்கமுடியாதவங்களாயிருந்தால் நீ அங்கே வேலை பண்றதே தண்டந்தான். நாலுநாள் வராவிட்டால் சும்மாயிருக்க முடியாதவங்களை விட்டு

தொலைவில் இருப்பதே நலம்'' சுந்தரி கச்சிதமாய் சொல்லிவிட்டாள்.

''அவங்களை ஒண்ணும் சொல்லாதே மாமி! நானே தான் போகிறேன். போனால்தான் எனக்கு சந்தோஷ மாய் இருக்கும். இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தால் என் இதயமே வெடித்துவிடும் போல யோசனைகள் மண்டையைப் பிளந்து கொண்டிருக்கின்றன.'' ரேகா சாந்தமாய் பதிலளித்தாள்.

இனி லாபமில்லை என்றுணர்ந்த சுந்தரி பிளேட்டை மாற்றிக் கொண்டாள். ''ராத்திரியிலிருந்து நீ ஒருவாய் பச்சைத் தண்ணீர்கூட குடிக்கவில்லை.''

''பரவாயில்லை மாமி'' எனக்குப் பசி தாகம் ரெண்டுமே போயிடுத்து'' ரேகா வெளியே வந்தாள். பக்கத்து வீட்டுப்பாட்டி எதிர்ப்பட்டாள். ரேகா அவளைப் பாராதது போல போக முயன்றாள். ''எங்கே போகிறாய் பொண்ணு?'' என்றாள் அவள்.

ரேகா காதில் விழாததுபோல மளமளவென்று போய் காரில் உட்கார்ந்து கொண்டாள்.

பாட்டியைப் பார்த்ததுமே சுந்தரியின் முகம் கறுத்து விட்டது.

''ரேகா எங்கே போகிறாள்?'' துப்புத் துலக்குவது போல கேட்டாள் அவள்.

ஒரு வினாடி பதில் சொல்ல முடியாதவளாய் பார்த்த போதிலும் அடுத்த நிமிஷமே சாமர்த்தியமாய் பதிலளித் தாள் சுந்தரி. அவளுக்கு ரேகாவின் மேல் என்று மில்லாத அளவிற்குக் கோபம் வந்தது.

''நான்தான் அனுப்பினேன் மாமி! செத்தவங்களை நினைச்சு அழுது கொண்டே உட்கார்ந்திருந்தால்

திரும்பி வந்துவிடுவாங்களா? அவர் எப்பொழுது வருவாரோ என்னவோ? கையில் சல்லிக் காசு இல்லை. ரேகா வேலை பண்ற அவரைக் கேட்டு கொஞ்சமோ நஞ்சமோ வாங்கிக்கொண்டு வரச்சொல்லி நான்தான் அனுப்பினேன். அதென்னவோ, பொம்பிள்ளை காரியமானாலும் சரி, ஆம்பிள்ளை காரியமானாலும் சரி அவள்தானே ஓடி அலையவேண்டியிருக்கு.''

''என்னவோ சுந்தரி, எனக்கென்ன தெரியும்? அரிசி உளுந்து அரைச்சுக் கொண்டிருந்தபோது அனுமந்தன் ஓடிவந்து 'பாட்டி, கார் வந்திருக்கு. ரேகா எங்கேயாவது போகப் போகிறாளோ என்னவோ, போக வேண்டாம்னுச் சொல்லு'ன்னுச் சொன்னதால, கையைக்கூட கழுவிக்காமல் அப்படியே ஓடிவந்தேன். நாலு பேர் ஏதாவது நினைச்சுப்பாங்களோன்னு பயம் அவனுக்கு.''

''ஆமாமாம். அந்த பயம் எனக்கும் இருக்கு'' என்றாள் சுந்தரி.

சுந்தரி பதிலால் பாட்டிக்குத் திருப்தி ஏற்பட்டது.

''ஒன்றுமில்லை. நம்ப அக்கம்பக்கத்தார் சங்கதி உனக்குத்தான் தெரியுமே? ஊர் வம்புதான் இவங்களுக்குப் பொழுது போக்கே! எங்க அனுமந்துவுக்கு உங்கள் ரேகாவை பண்ணிக்கொள்ளப் போவதாய் இன்னும் வெளியே சொல்லக்கூட இல்லை. அதற்குள் எல்லோரும் கற்பனை பண்ணத் தொடங்கிவிட்டார்கள். இதப்பார் சுந்தரி. நீ என் பெண்ணைப் போன்றவள்! உண்மையைச் சொல்லி விடுகிறேன். உன் முகத்தைப் பார்த்துதான் இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதித்தேன். எனக்கு இஷ்டமே இல்லைன்னு வைத்துக் கொள். எனக்கு இருப்பது அவன் ஒருத்தன்தான். அவன் அந்தப் பெண்ணைத் தவிர வேறு யாருமே

வேண்டாம் என்று குரங்குப் பிடியாய் இருக்கான். எல்லாம் பகவான் மேல் பாரம் என்று போட்டுவிட்டு நான் சரி என்று சொல்லிவிட்டேன்.''

சுந்தரி பாட்டியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''மாமி! உங்களைப் போன்றவங்க நூற்றுக்கு ஒருத்தர் கூட இருக்க மாட்டாங்க. வந்தது வந்து விட்டீங்க. ஒரு வாய் காபி குடித்துவிட்டுப் போங்க'' என்று உள்ளே அழைத்தாள்.

வரதட்சணை இல்லாமல் அனுமந்து ரேகாவைப் பண்ணிக் கொள்வதாய் சொன்னதைக் கேட்டு சுந்தரி மெய்மறந்து போயிருந்தாள். ரேகாவுக்கு அனுமந்துவைப் பண்ணி வைத்துவிட்டால் பிறகு சங்கரன் சம்பாதித்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, தான் எஞ்சிய காலத்தை அவர்களோடேயே கழிக்கலாம் அனுமந்து கெட்டிக்காரன். ரேகா அவனைத் தன் புடவைத் தலைப்பில் முடிந்து கொண்டு விடமுடியும். இந்தச் செய்தி வெளியே தெரிந்தால் நிறையபேர் இத்திருமணத்தைக் கெடுக்க முயல்வார்களோ என்று பயந்தாள் அவள். அதனால் தான் எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் இந்த சுபகாரியத்தை முடித்துவிட வேண்டும் என்று தவித்தாள் அவள்.

●

''அழாதேம்மா! அழாதே! விமலன் மூலமாய் இச் செய்தியைக் கேட்டதும் நான் எவ்வளவு தத்தளித்துப் போய்விட்டேன் தெரியுமா? உன்னால் ஊகித்தும் பார்த்திருக்க முடியாது. உன்னை எப்படித் தேற்றுவது என்று கூட தெரியவில்லை எனக்கு.''

கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்த ரேகாவின் தலையைத்

தடவித் தந்தபடியே வேதனையுடன் சொன்னார் விஸ்வநாதன்.

ரேகாவைப் பார்த்ததுமே உள்ளே ஓடிப்போய் சீப்பையும் ரிப்பனையும் கொண்டுவந்து தலைவாரிக் கொள்ள வந்த ரஞ்சிதா என்றுமில்லாதவாறு ரேகா தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்ததைப் பார்த்து விட்டு பயந்து போய் தொலைவில் நின்று கொண் டாள்.

''ரஞ்சிதா! இப்படி வாம்மா'' அவர் கூப்பிட்டார். தந்தை கூப்பிட்டதுமே மெல்ல அடிமேலடி எடுத்து வைத்துக் கொண்டு அவரிடம் வந்தாள் ரஞ்சிதா. ரஞ்சிதாவை இடதுகையால் கிட்டே இழுத்துக் கொண்ட அவர், வலது கையை ரேகாவின் தோள்களைச் சுற்றி லும் போட்டு கிட்டே இழுத்துக் கொண்டு, ''ரேகா, உங்கம்மாவை என்னால் திரும்பவும் கொண்டு வந்து தர முடியாது. ஆனால் அவள் போனதால் நீ இழந்துவிட்ட அன்பையும் பாசத்தையும் மட்டும் உன்னால் ஊகித்தும் பார்த்திராத அளவுக்கு ஆயிரம் மடங்கு அள்ளிக் கொடுக்க முடியும் என்னால். அம்மா போய்விட்டாளே என்ற திகில் உனக்குக் கொஞ்சமும் வேண்டாம். நடந் ததையெல்லாம் மறந்து போய், புதிய வாழ்க்கையைத் தொடங்க முயற்சி பண்ணு. இது என் விருப்பம்! ஆசிகள் கூட!''

அவர் குரலில் இருந்த பரிவால் அவள் துக்கம் கொஞ்சம் தணியத் தொடங்கிற்று.

அதே சமயத்தில்...

லாயர் மாதவன் வீட்டிலிருந்து திரும்பி வந்து விடு விடென்று தந்தையை ஏதோ கேட்க வேண்டும் என்ற ஆவேசத்துடன் அவ்வறைக்குள் நுழைந்த லலிதாவுக்குக் கண்ணெதிர தென்பட்ட இக்காட்சி முகத்தில் வெந்நீரை

வாரியிறைத்தாற் போலிருக்கவே கதவிற்கருகிலேயே நின்றுவிட்டாள்.

எதிரே கட்டிலில் தந்தை ஒரு கையால் ரஞ்சிதாவையும் இன்னொரு கையால் ரேகாவையும் இருவரும் தம் உயிர் என்பதுபோல அணைத்துப் பிடித்துக் கொண்டிருந்தார். ரேகா ஏனோ கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

அக்காட்சியைப் பார்த்த லலிதாவின் இதயத்தில் எரிமலை வெடித்தாற்போலிருந்தது. பொறுமையால் அவள் முகம் சிறுத்துப் போயிற்று. அம்மூவர் மீதும் பாய்ந்து அப்பொழுதே குதறியெடுத்து விட வேண்டும் என்ற ஆவேசம் ஏற்பட்டது.

அடுத்த நிமிஷம் தான் அங்கே நின்று கொண்டிருந்தால் தன் மனம் வசம் தப்பிப் போய்விடும் என்று பயந்த லலிதா விருட்டென்று திரும்பி சூறாவளியாய் தன் அறைக்குள் வந்து கட்டிலில் விழுந்து தலையணையில் முகத்தைப் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

லலிதா ஆத்திரமடைவதற்குக் காரணம் இருந்தது. நேற்று பிற்பகலில் மாதவனின் மனைவி லலிதாவை அவசரமாய் வந்து தன்னைச் சந்திக்கும்படி வேலைக்காரி மூலம் செய்தி சொல்லியனுப்பியிருந்தாள். நேற்று போக முடியாமலிருந்ததால் லலிதா போகவில்லை. இன்று காலையில் மறுபடியும் போன் வந்தது கிளப் விஷயமாய் ஏதாவது பார்ட்டிகள் நடக்கும் சந்தர்ப்பங்களில் அவள் லலிதாவை வரச்சொல்லி அவ்விதமாய் செய்தி சொல்லியனுப்புவது சகஜந்தான்.

லலிதா புறப்படத் தயாராகி வெளியே வந்தாள். அதே சமயத்தில் ரேகாவைப் போய் அழைத்துக் கொண்டு வரும்படி டிரைவரிடம் சொல்லிக்கொண்டிருந்தார் தந்தை.

''நான் வெளியே போகணும். எனக்குக் கார் வேணும்'' என்றாள் லலிதா.

''ரேகாவுக்காக அனுப்புகிறேன். திரும்பி வரட்டும்'' என்றார் அவர்.

''ஏன், ஒரு தடவை அந்த மகாராணி பஸ்ஸில் வரமாட்டாளா? இல்லாவிட்டால் நான் திரும்பி வந்த பிறகு அனுப்பக் கூடாதா?'' என்றாள் லலிதா அடம் பிடிப்பது போல.

''அந்தக் காரியத்தை நீயே ஏன் செய்யக்கூடாது?'' எரிச்சலுடன் சொன்னார் அவர். டிரைவரைப் 'போ' என்பது போல பார்த்தார். டிரைவர் போய்விட்டான். லலிதாவின் முகம் அவமானத்தால் சிவந்துவிட்டது. விருட்டென்று திரும்பிவந்து, சமையல்காரனை அனுப்பி டாக்ஸி கொண்டு வரச்சொல்லி அதில் ஏறிப் போய் விட்டாள். மாதவன் விஸ்வநாதனின் குடும்ப நண்பர். தூரத்து உறவு கூட இருந்ததால் விஸ்வநாதனின் வியா பார சம்பந்தமான விஷயங்களை விமலன் லாயராவதற்கு முன்னால் அவரும் பார்த்துக் கொண்டிருந்ததால் அந்த நட்பு வேரூன்றிப் போயிருந்தது. மாதவனின் வீட்டில் லலிதாவுக்குக்கூட நல்ல சுவாதீனம் இருந்தது.

மாதவனின் வீட்டிற்குப் போனதும் அவர் மனைவி லலிதாவை உள்ளே அழைத்துக் கொண்டுபோய் காபி கொடுத்தாள்.

இருவரும் காபி குடித்துக் கொண்டிருக்கையில் அவள் கேட்டாள். ''உங்கப்பா சமீபத்தில் உயில் எழுதி யிருக்கார், உனக்குத் தெரியுமா?''

லலிதா 'தெரியாது' என்று தலையாட்டினாள்.

''தெரியாதா? விமலன் கூட சொல்லவில்லையா?''

''விமலனா? ஊஹூம், சொல்லவில்லையே?''

அவள் லலிதாவை இரக்கத்தோடு பார்க்கத் தொடங்கினாள். அந்த இரக்கத்தில் லலிதாவுக்கு ஏதோ ஆபத்து தெரிந்தது. அவள் பரிவோடு பார்த்தபடி சொன்னாள்.

''லலிதா! இவ்வளவு நாளாய் நீ அந்த வேலைக்காரப் பெண்ணிற்கும் உங்கப்பாவுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாய் சொன்னபோது நான் நம்பவேயில்லை. இப்பொழுதுதான் புரிந்தது எனக்கு உன் வார்த்தைகள் எவ்வளவு உண்மை என்று!''

''என்னவாச்சு இப்பொழுது?'' வெலவெலத்துப் போன முகத்துடன் கேட்டாள் லலிதா.

''உங்கப்பா உயில் எழுதியிருக்கிறார்.''

''அதனால்?''

''ஐயோ பைத்தியக்காரப் பெண்ணே! இருக்கிறது நீங்கள் ரெண்டே பெண்கள்தானே? அவர் உயில் எழுத வேண்டிய தேவையே இல்லை. ஆனாலும் எழுதியிருக்கிறார்.''

''என்னவென்று?''

''எனக்கு சரியாய் தெரியாது. உங்க மாமாவை எவ்வளவு தடவை கேட்டாலும் சொல்லவேயில்லை. அவர் ரொம்பவும் கறாரானவர். என்ன எழுதியிருக்கிறார் சொல்லுங்கள் என்று கேட்டால். 'அப்படியெல்லாம் சொல்லக்கூடாது' என்கிறார். கேட்டு கேட்டுப் பார்த்துக் கடைசியில் அவர் வார்த்தைகளைக் கொண்டு நான் ஊகித்துக்கொண்டது என்னவென்றால் உங்கப்பா அந்த ரேகாவின் மீதிருக்கும் மோகத்தால் உனக்கு அநியாயம் பண்ணத் துணிந்துவிட்டார் இந்த விஷயம் தெரிந்ததிலிருந்து என் மனம் பட்டபாடு இவ்வளவு அவ்வளவு என்று இல்லை, உன் சார்பில் தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லை என்பதுதானே அவர் தைரியம்?''

அவள் சொன்ன அக்கடைசி வார்த்தைகள் லலிதாவின் கண்களில் கிர்ரென்று நீரை வரவழைத்தன. இப்படி ஏதாவது நடக்கும் என்று அவள் பயந்து கொண்டேதான் இருந்தாள்.

''பைத்தியக்காரி மாதிரி இப்படி கண்ணீர் விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தால் லாபம் இல்லை. இன்னும் ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. இப்பொழுதாவது உன் காதில் எட்டியது அதிர்ஷ்டம் என்றெண்ணிக்கொள். எப்படியாவது அந்த உயிலை வெளியே கொண்டுவந்து எங்களிடம் எடுத்துக் கொண்டுவந்து ரகளை பண்ணு. நான் உன் பக்கமாய் இருக்கேன். உங்க மாமாவிடமும் அதற்குள் சொல்லி வைத்து உங்கப்பாவை நன்றாய் திட்டச் சொல்கிறேன். அவ்வளவு தூரம் அந்தப் பெண்ணின் மீது மோகம் இருந்தால் கொஞ்சமோ நஞ்சமோ பணம் தந்து கொள்ளட்டும். அதானே தவிர, சொத்தில் பங்கு தருவதாவது! அதோடு ரஞ்சிதாவின் கார்டியனாய் நியமித்து அந்த பங்கின் மீது கூட அதிகாரம் தருவதாவது! இவ்வளவு வினோதம் எங்கேயாவது உண்டா? சிலர் அப்படித்தான். ஒண்ட வந்த பிடாரி வீட்டை ஓட்டியதாம் என்பது போல நடந்து கொள்வார்கள். நம்ப ஜாக்கிரதையில் நாம்ப இருக்கணும், ஆனாலும் இந்த சனியன் எப்படி வந்து சேர்ந்ததோ உங்களிடம்!''

லலிதா அவள் கைகளைப் பிடித்துக்கொண்டே, ''ஆன்ட்டி! உங்களைத் தவிர எனக்கு யாருமே இல்லை'' என்றாள்.

''அதற்காகத்தானே இந்த தவிப்பெல்லாம்?'' என்றாள் மாதவனின் மனைவி திருப்தியோடு.

''நான் என்ன பண்ணணும்னு சொல்லுங்கள்?'' கேட்டாள் லலிதா தீனமாய்.

''எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் அந்த உயிலை வெளியே கொண்டு வா. உடனே எனக்கு போன் பண்ணு. நானும் உன் மாமாவும் வருகிறோம். இந்த வேலை விமலன் ஊரிலிருந்து திரும்பி வருவதற்குள் பண்ணி முடித்துவிட வேண்டும். அவன் வந்ததும் அதை ரிஜிஸ்தர் பண்ணப் போகிறானாம். ரிஜிஸ்தர் பண்ணிவிட்டால் அப்புறமாய் நிறைய நியதிகள் இருக்கின்றன இதற்கு.''

லலிதா 'சரி' என்று தலையாட்டினாள். அவள் வாசல் வரை வந்து வழியனுப்பி விட்டு போனாள்.

லலிதா எரிமலையாய் கொதித்துக்கொண்டே வீட்டிற்கு வந்தாள். என்ன வினோதம்! குறைந்த பட்சம் விமலன்கூட அவளிடம் சொல்லவில்லை. ஏன் சொல்லப்போகிறான்? அவன்தான் ரேகாவைத் திருமணம் செய்துகொள்ளும் உத்தேசத்தில் இருக்கிறானே! லலிதாவுக்கு திடீரென்று இந்த உலகத்தில் தன் நலனை விரும்புகிறவர்கள் யாருமே இல்லை என்று தோன்றிற்று. வீட்டிற்குப் போனதுமே தந்தையிடம் 'உங்களுக்கு நான் முக்கியமா, ரேகா முக்கியமா?' என்று கேட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டாள்.

ஆனால் வீட்டிற்குள் நுழைந்து அவர் அறைக்குள் அடியெடுத்து வைப்பதற்குள்ளாகவே அவளுக்குத்தான் வாயால் கேட்காமலேயே அதற்கு பதில் கிடைத்து விட்டாற்போலிருந்தது, அவருக்கு ரேகாதான் சகலமும் என்பதற்கு இதைக்காட்டிலும் உதாரணம் வேறு வேண்டுமா?

அறைக்கு வந்து தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்த லலிதாவை அவ்விடத்திலேயே புத்தகம் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மிஸ். ஜோஷி வினோதமாய் பார்த்தாள். எழுந்து அவளிடம் போய் உட்கார்ந்து

கொண்டு, "என்னவாச்சு?" என்று கலக்கத்தோடு கேட்டாள்.

மனதில் எதையும் மறைத்து வைக்கத் தெரியாத லலிதா நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டாள்.

லலிதாவுக்கு நேர்ந்த இந்த அநியாயத்தில் விமலனுக்குக்கூட பங்கு இருக்கிறது என்றுணர்ந்துகொண்ட மிஸ். ஜோஷியின் முகம் சிவந்துவிட்டது. விமலனுக்கு அந்த வேலைக்காரியின் மீது ஏன் இந்த ஆர்வம்?

கொஞ்ச நேரம் யோசித்த மிஸ். ஜோஷி லலிதாவின் தோளைத் தட்டி, "நான் ஒன்று சொல்லட்டுமா?" என்றாள்.

"சொல்லு. இந்த உலகத்தில் உன்னைக்காட்டிலும் எனக்கு வேறு யார் இருக்காங்க?" என்றாள் லலிதா.

முகம் மலர்ந்த மிஸ். ஜோஷி குனிந்து லலிதாவின் காதில் ரகசியம் ஏதோ சொன்னாள்.

"ஆனால் அதனால் என்ன லாபம்?"

"உனக்கே தெரியும், அப்புறமாய். நீ எதைப் பண்ண வேண்டும் என்றாலும் அந்தப் பெண் இந்த வீட்டிற்கு வராமல் பண்ண வேண்டியது ரொம்ப முக்கியம்."

இதுவரை தான் முயற்சி பண்ணிய வழிகள் எதுவுமே பலிக்கவில்லை. இது மட்டும் பலிக்கப் போகிறதா என்ற சந்தேகம் வந்தாலும், மிஸ். ஜோஷி சொன்னது போல செய்வதற்கு ஒப்புக்கொண்டாள் லலிதா.

இரண்டு நாட்கள் கழிந்தன.

அன்று காலையிலேயே சங்கரன் ஊரிலிருந்து வந்து இறங்கினார். கணவனைப் பார்த்ததுமே சுந்தரிக்கு

மலையத்தனை பாரம் நீங்கினாற்போலிருந்தது. அவளுக்குத் திருமணமாகி இவ்வளவு நாட்களில் ஒரு நாள் கூட சங்கரனைப் பார்த்ததும் இதுபோல் உயிர் வந்தாற்போல என்றுமே இருந்ததில்லை. காயத்ரி போய் அதற்குள் நான்கு நாட்கள் ஆகிவிட்டதாய் தெரிந்துகொண்ட சங்கரன் மிகவும் துக்கப்பட்டார். எப்பொழுதுமே ஒருக்களித்து சாத்தியிருக்கும் அறைக்கதவுகள் வெட்ட வெளியாய்த் திறந்து கிடந்தன. காயத்ரி படுத்திருந்த கட்டிலை பாட்டியின் ஆலோசனைப்படி சுந்தரி அப்பால் வீசியெறிந்துவிட்டாள். அறையை சுத்தமாய் கழுவி, கோலங்கள் போட்டு அழகாய் வைக்கப்பட்டிருந்தது. சுந்தரி ராகம் போட்டுக்கொண்டே நடந்ததையெல்லாம் சொன்னாள். சங்கரன் கண்ணீர் மல்க தன்னிடம் வந்த ரேகாவைக் கிட்டே இழுத்துக்கொண்டு தலையைத் தடவினார்.

"உங்கம்மா போய்ச் சேர்ந்ததே அதிர்ஷ்டந்தாம்மா. இருந்து என்ன சுகத்தைக் கண்டாள்?" என்றார்.

சுமார் ஒரு மணி நேரங்கழித்து சங்கரன் குளித்துவிட்டு வந்தார். ரேகா குளிக்கப்போனாள்.

சுந்தரி முன் அறையில் உட்கார்ந்துகொண்டிருந்த கணவருக்கு காபி கொண்டுவந்து தந்துவிட்டு ரேகாவின் நடவடிக்கையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினாள். சங்கரன் 'உம்' கொட்டிக்கொண்டே கேட்டுக்கொண்டிருந்தார். அதற்குள் வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது.

"பார்த்தீங்களா? இதேதான்! சொன்னாலும் கேட்டுக் கொள்ளமாட்டாள். அவள் பிடிவாதந்தான் அவளுக்கு. நீங்களாவது கொஞ்சம் சொல்லுங்கள். நீங்கள் சொன்னால் கேட்பாள். போகமாட்டாள்" என்றாள் ரகசியமாய்.

சங்கரன் எழுந்து வெளியே வந்தார்.

பாத்ரூமிலிருந்து வெளியே வந்த ரேகா— ''மாமி! கார் வந்ததா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா'' என்றாள் சுந்தரி கேலியாய்.

ஆனால் வாசலில் வந்து நின்றது விஸ்வநாதனின் கார் இல்லை, டாக்ஸி! அதிலிருந்து செல்வந்தர்களைப் போல இருந்த இரண்டு பெண்கள் இறங்கினார்கள்.

''யாரம்மா நீங்க, என்ன வேணும் உங்களுக்கு?''

உள்ளே வந்துகொண்டிருந்த அவ்விருவரையும் மிக மரியாதையோடு கேட்டார் சங்கரன்.

''ரேகாவின் வீடு இதுதானே?''

''ஆமாம்.''

''ரேகா எங்கே?''

''கூப்பிடுகிறேன். உள்ளே வாங்க'' வரவேற்றார்.

அதற்குள் ரேகா முன் அறைக்கு வந்தாள். லலிதா ரேகாவை ஏறயிறங்கப் பார்த்துவிட்டு கடுமையாய், அதிகாரமாய் கேட்டாள்— ''ராத்திரி வெள்ளித் தட்டுகளை எங்கே வைத்தாய்?''

''வெள்ளித் தட்டா?''

லலிதா ரேகாவிடம் போனாள். ''போதும் உன் அப்பாவி வேஷம்! உன் நடிப்பு என்னிடம் செல்லாது. சொல்லு. இந்த முறை என்னால் சும்மாயிருக்க முடியாது. எங்கே வைத்தாய் அவைகளை? என்ன செய்தாய்?''

சுந்தரி வினோதமாய் பார்க்கத்தொடங்கினாள். ரேகா தடுமாற்றமில்லாமல், லலிதாவின் மனதிலுள்ள உத்தேசம் என்ன என்று படித்தறிய முயன்றாற்போல கண்கொட்டாமல் பார்க்கத் தொடங்கினாள்.

சங்கரனால் சும்மாயிருக்க முடியவில்லை.

''யாரம்மா நீங்க? என்ன விஷயம்?''

''யாரா? இந்தப் பெண் வேலை பண்ணுகிற வீட்டின் தலைவி. எங்கப்பா வயதானவர். எல்லோரையும் சுலபமாய் நம்பிவிடுவார். கொஞ்ச நாளைக்கு முன்னால்தான் நெக்லெஸ் தொலைந்தது. நேற்றிரவு வெள்ளித் தட்டுகள் போய்விட்டன. வீட்டைப் பார்த்துக் கொள்கிற வேலையெல்லாம் உங்கள் பெண்ணிடந்தான் தந்திருந்தோம். உங்கள் பெண்ணைத் தவிர வேறு யாருமே வீட்டிற்குள் நுழையவில்லை.''

''வெள்ளித் தட்டுகளா? எங்க பெண் எடுத்தாளா? என்னம்மா பேசுறீங்க? வேண்டுமென்றால் உள்ளே வந்து தேடிக் கொள்ளுங்கள்'' என்றாள் சுந்தரி கோபமாய்.

''அவ்வளவு கூடவா தெரியாது எங்களுக்கு? திருட்டுச் சொத்தை யாராவது வீட்டில் வைத்துக் கொள்வாங்களா?''

லலிதாவின் கத்தலுக்கு சுந்தரி பயந்துவிட்டாள். வெள்ளித்தட்டுகள் கிடக்கட்டும். இந்தச் சேதியை அக்கம் பக்கத்தார் கேட்டுவிட்டால் வேறு வினை உண்டா?

லலிதா ஆள்காட்டி விரலைக் காட்டிச் சொன்னாள்.

''ரேகா! கடைசி தடவையாய் கேட்கிறேன். மரியாதையாய் சொல்லி விடு. என்ன செய்தாய் அவைகளை?''

ரேகாவுக்கு புரிந்து விட்டது. இன்றைக்கு சண்டை போட்டு நாலுபேருக்கு முன்னால் சந்திச் சிரிக்கும்படி செய்வதற்காகவே வந்திருக்கிறாள் என்று! லலிதாவுக்கு பதில் சொல்வது வீண். வார்த்தைகள் தடித்து இன்னும்

ரசாபாசமாகிவிடும். அதனால்தான் அவமானத்தை மென்று விழுங்கிக் கொண்டே சலனமில்லாமல் நின்று கொண்டிருந்தாள்.

லலிதா, சுந்தரி—சங்கரனை நோக்கித் திரும்பினாள்.

"பாவம் என்று இரக்கப்பட்டு வீட்டில் வைத்துக் கொண்டதற்கு என்ன செய்தாள் தெரியுமா? எங்கள் மனதில் நெருப்பை அள்ளிப் போட்டு விட்டாள். எங்கள் குடும்பம் பிளவுபடுவதற்குக் காரணமாகி விட்டாள். எங்கப்பாவுக்கும் எனக்கும் ஆகாமல் செய்து விட்டாள். இவள் எங்கப்பாவோடு நீச்சமாய் நடந்து கொண்டதை நானும் எங்கள் விமலனும் கையும் களவுமாய் பிடித்துக் கொண்டோமா இல்லையான்னு கேளுங்கள். அப்பொழுதே கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருக்க வேண்டும். இந்த உலகத்தில் நல்லது செய்தால் அதற்கு மதிப்பே இல்லை. இப் பொழுதும் இன்னும் ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. மரியாதையாய் எங்கள் வெள்ளித்தட்டுகளைத் தந்து விடுங்கள், அல்லது விற்று விட்டோம், எங்கள் கையை தாண்டிப் போய்விட்டது என்று சொன்னால் அவற்றின் விலையை தந்துவிடுங்கள். இல்லாவிட்டால் போலீசுக்கு ரிபோர்ட் பண்ணி உங்களை கம்பி என்ன வைத்து விடுவேன், ஜாக்கிரதை! நான் திரும்பவும் சாயந்திரம் வரேன். வந்ததுமே நீங்கள் எங்கள் பொருளையோ பணத்தையோ தந்து விடணும். இல்லாவிட்டால் பாருங்கள். நான் சொன்னால் சொன்னபடி செய்து தீருவேன். வா ஜோஷி, போகலாம்."

லலிதா விடுவிடென்று போய் விட்டாள்.

சங்கரன் திக்பிரம்மை அடைந்து போனவராய், வாயடைத்துப் போய் அப்படியே நின்று விட்டார்.

"என்ன ரேகா இதெல்லாம்" சுந்தரி அழுது கொண்டே கேட்டாள்.

''அந்த பெண்ணிற்கு என் மேல் பொறாமை மாமி! அதைத்தவிர வேறொன்றும் இல்லை.''

''பொறாமையா? அந்த பொண்ணு அவ்வளவு பொறாமைப்படும்போது நீ அந்த வீட்டிற்குப் போவதை என்றோ விட்டிருக்க வேண்டியதுதானே,'' என்றார் சங்கரன் கடுமையாய்.

அரை மணிக்கு பிறகு ரேகா தயாராகிப் புறப் பட்டாள்.

''எங்கே புறப்பட்டு விட்டாய்?'' சங்கரன் கடுமை யாய் கேட்டார்.

''நான் போய் அவரிடம் நடந்ததையெல்லாம் சொல்லி விட்டு வரேன் மாமா.''

''தேவையில்லை. நீ எங்கேயும் போக வேண்டாம். போ உள்ளே.''

ரேகா நயந்து சொல்ல வந்தாள்.

''அவர் ஏற்கனவே உடம்பு சரியில்லாதவர் மாமா! நான் போகாவிட்டால்...''

''மூடு வாயை. இப்படி சொன்னதும் இப்படி செய்ததும் இதோடு போதும், ஜாக்கிரதை. வாசலை தாண்டிப் போனாயானால் காலை உடைத்தெறிந்து விடுவேன்.''

சங்கரன் ரேகாவின் கையைப் பிடித்து இழுத்து வந்து அறைக்குள் தள்ளினார். ரேகா விக்கித்துப் போனவளாய் பார்த்தாள்.

சுந்தரிகூட ஆச்சரியமடைந்து விட்டாள்.

சங்கரனுக்கு அவ்வளவு கோபம் வந்து அவர்கள் இதுவரை பார்த்ததில்லை.

கண்கள் அகல விரியப் பார்த்துக் கொண்டிருந்த ரேகாவைக் கண்டதுமே சங்கரனின் கோபம் பறந்து போய் விட்டது.

தொண்டை அடைக்க சொன்னார்.

''ரேகா! காலம் நன்றாயில்லாதபோது பழுதே பாம்பாகிக் கடிக்கும். உனக்குத் தெரியாதா, நான் எது பண்ணினாலும் அது உன் நன்மைக்காகவேதான் இருக்கும். நீ அங்கே போவது எனக்குப் பிடிக்கவில்லை. என் பேச்சு உனக்கு லட்சியமில்லையென்றால் நீ போகலாம்.'' என்று சொல்லி விட்டு ஆணியில் மாட்டியிருந்த உத்தரீயத்தை எடுத்து மேலே போட்டுக் கொண்டு வெளியே போய் விட்டார்.

அப்படி உறுமிவிட்டு, அதற்குள் இளகிப் போய் விட்ட கணவனைப் பார்த்த சுந்தரிக்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வந்து விட்டது. அந்த கோபம் அப்படியே இருந்தால் ரேகா வாயை மூடிக்கொண்டு சொன்னபடி கேட்பாளே!

தன் ஆத்திரத்தையெல்லாம் ரேகாவின் மீது காட்டிய படி சொன்னாள்,

''என்னவோம்மா, இந்த ரகளை இதெல்லாம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இந்த பேட்டையில் இவ்வளவு வீடுகள் இருக்கின்றனவே, எந்த வீட்டிலாவது இவ்வளவு ரகளை ஏற்படுகிறதா? இவ்வளவு ரகளையை நான் எங்கேயுமே கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. உன்னையும் அடக்க முடியவில்லை. அதையும் முழுது மாய் விட்டு விட்டு வரமாட்டேங்கிறாய்'' என்று சொல்லி விட்டு சமையலறைக்குள் போய் விட்டாள்.

ரேகா தாயின் அறையில் ஜன்னலுக்கருகில் நின்ற படி வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். விஸ்வ

நாதனின் வீட்டிற்குப் போவதற்கு சங்கரன் ஆட்சேபணை தெரிவித்தது ஒரு புதிய பிரச்னை!

சுழற்காற்றில் சிக்கிக் கொண்டு தத்தளிக்க தொடங்கினாற்போலிருந்தது அவளுக்கு. இதிலிருந்து அவளை மீட்க வேண்டுமானால் ஒரே ஒருவனால்தான் முடியும். அவனிடம் வாயைத் திறந்து எதுவும் சொல்லக்கூடத் தேவையில்லை. ஒரு முறை பார்த்ததுமே அத்தனையையும் தெரிந்துகொண்டுவிடக்கூடிய சாமர்த்தியம் உண்டு. இன்றோ நாளையோ விமலன் ஊரிலிருந்து திரும்பி விடுவான், அவன் வந்ததுமே விஸ்வநாதன் அவளிடம் அனுப்புவார். விமலன் வந்துவிட்டால் நிலைமையெல்லாம் திருந்திவிடும். யாருக்கு எப்படி எடுத்துச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லுவான். ரேகா விமலனின் வரவிற்காக எதிர்பார்க்கத் தொடங்கினாள்.

இரண்டு மணி நேரங்கழித்து வீட்டிற்குத் திரும்பி வந்த சங்கரன் ரேகா போகாமலிருந்ததைப் பார்த்து திருப்தியடைந்தார்.

15

அன்று பிற்பகலில் பூனாவிலிருந்து மிஸ்டர். ஜோஷி டெலிகிராம் கொடுத்தார். 'தாய்க்கு உடம்பு சரியில்லை என்றும், டைபாயிட் என்று டாக்டர் சந்தேகப்பட்டு வரச் சொல்லியும்' தந்தி கொடுத்தார். மிஸ். ஜோஷி துணிமணிகளை அடுக்கிக்கொள்ளத் தொடங்கினாள். அவளுக்குப் போகவே பிடிக்கவில்லை. அந்த குடும்பத்தில் நடந்து கொண்டிருந்தவைகள் அவளுக்கு ஆர்வத்தை உண்டாக்கிக்கொண்டிருந்தன. இதன் முடிவு என்ன வென்று பார்த்த பிறகுதான் புறப்பட வேண்டும் என்றி

ருந்தாள். ஆனால் அதற்குள் இப்படிப் புறப்பட்டுத் தீரவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது. லலிதா சிநேகிதியை வழியனுப்ப ஸ்டேஷன் வந்தாள்.

மிஸ். ஜோஷி இவ்வாறு போவது தனக்கு இருந்த ஒரே ஒரு துணைகூட முறிந்து போய்விட்டாற்போலி ருந்தது லலிதாவுக்கு. ரயில் நகர்ந்தது. மெல்ல மெல்ல தூரமாகிவிட்டது. லலிதாவுக்குத் தாங்க முடியாத தனிமை யால் துக்கம் பொத்துக்கொண்டு வந்தது. கண்களில் கண்ணீர் நிரம்பியதால் ஸ்டேஷனில் இருந்த விளக்கு களும் மனிதர்களும் மங்கலாய் தென்படத் தொடங்கி னார்கள். வீட்டிற்குப் போகவே பிடிக்கவில்லை அவளுக்கு. வீட்டைப்பற்றி நினைத்துப் பார்த்தாலே அது ஒரு பயங்கரமான குகையாய் தோன்றிற்று இந்த உலகத்தில் அந்த பயங்கரக் குகையைத் தவிர அவளுக்கு வேறெங்கேயும் இடமில்லை. லலிதா மெது வாய் நடக்கத் தொடங்கினாள். பாரமான மனதோடும், திகில் நிறைந்த கண்களோடும், மிகப் பிரயாசை யுடன் அடிமேலடி எடுத்து வைத்தபடி நடந்து கொண்டிருந்த அவளுக்குப் பின்னாலிருந்து "ஹலோ" என்ற குரல் கேட்டது. பரிச்சியமான அக்குரலைக் கேட்டதுமே சரேலென்று திரும்பினாள் அவள். எதிரே ஜான் நின்றுகொண்டிருந்தான். லலிதா ஒரு வினாடி தன் கண்களையே தான் நம்பமாட்டாதவளாய் ஆச்சரியத்துடன் பார்க்கத் தொடங்கினாள். அவன் உதடுகளில் அழகான புன்னகை நெளிந்தது. "சாரி, பயமுறுத்திவிட்டேனா?"

"பயமா? நீங்களா? என்னையா?" லலிதா பக்கென்றுச் சிரித்துவிட்டாள்.

அந்தச் சிரிப்பில் சற்று முன்னால் அவளைச் சூழ்ந்துகொண்டிருந்த திகில், தனிமை எல்லாம் சில்லாக சிதறிப் போய்விட்டன.

''உங்கள் கண்களில் நீர்...'' சந்தேகத்துடன் பார்த்தான்.

''உங்களைப் பார்த்ததும் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர்'' சட்டென்று கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். சேகர் டையை சரிபண்ணிக்கொண்டே, ''அநியாயம்! என்னைப் பார்க்கிறதுக்கு முன்னாடியே'' என்றான்.

''நான் ஒரு ஃபிரெண்டை வழியனுப்ப வந்தேன்.''

''பார்த்தேன்.''

''பார்த்தீங்களா? பின்னே ஏன் உடனே வந்து பேசவில்லை?''

''நானும் ஒரு நண்பனை வழியனுப்ப வந்தேன். என்னோடு இருந்தவங்க உங்களையும், உங்களோடு இருந்தவங்க என்னையும் பார்க்கப் பிடிக்காததால்.''

''பலே ஆள்தான் நீங்க! பார்த்தால் மட்டும் என்ன வாயிடப் போகிறது?'' இருவரும் நடக்கத் தொடங்கினார்கள்.

''ஜான்! உங்களுக்கு ஏதாவது வேலை இருக்கா? எனக்கு இதற்குள் வீட்டிற்குப் போகப் பிடிக்கவில்லை.''

''எனக்கொண்ணும் வேலை இல்லை. அரை பர்லாங் நடந்தால் இந்த பக்கத்தில் எனக்குத் தெரிந்த ஒரு ஓட்டல் இருக்கிறது. அங்கே காபி சாப்பிட்டுக் கொண்டே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கலாம்.''

லலிதாவின் முகம் மலர்ந்தது. ஆனால் அதற்குள்ளேயே தொங்கிய முகத்துடன் ''ஊஹூம், நான் வரமாட்டேன்'' என்றாள்.

''ஏன்? எதுக்கு?'' புரியாமல் பார்த்தான்.

"ஜான்? நான் உங்களைப் போன்ற புத்திசாலியாய் இல்லாமலிருக்கலாம். ஆனால் நீங்கள் நினைப்பது போல வெட்கங்கெட்டவள் மட்டும் இல்லை."

"லலிதா..."

"பின்னே என்ன சொல்லுங்கள்? நான் எவ்வளவு தடவை உங்களிடம் வந்திருப்பேன்? எவ்வளவு தடவை உங்களோடு காபி, டிபன், டின்னர் சாப்பிட்டிருக்கிறேன்? உண்மையைச் சொல்லுங்கள். ஒரு தடவையாவது நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கீங்களா?" என்றாள் பழிப்பதுபோல.

சேகரின் யோசனையை ஏதோ கவர்ந்திழுத்தாற் போல சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு தொலைவில் பார்க்கத் தொடங்கினான்.

அவன் கன்னங்களில் குப்பென்று ரத்தம் வேகமாய் பெருக்கெடுத்தது லலிதாவுக்குத் தெரியாது. அவனுக்குத் தேடப்போன மூலிகை காலுக்குத் தட்டுப்பட்டாற்போல இருந்ததைக்கூட லலிதா அறியவில்லை. சேகர் சட்டென்று தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு, "சரி நான் அடுத்த தடவை நீ கூப்பிடும்போது கண்டிப்பாய் வருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை" என்றான்.

"அதென்ன?"

"நான், நான் உங்கப்பா வீட்டில் இருக்கும்போது மட்டும் வரவேமாட்டேன்."

"அவர் இதய நோயாளி. அவர் அறையைத் தாண்டி வெளியே வரமாட்டார்."

"யாராவது இருந்தால் எனக்கு ஏதோ தொந்தரவாய் இருக்கும்" என்றான் சங்கோஜப்படுபவனைப் போல.

"உங்களுக்கு எந்த தொந்தரவும் இல்லாமல் நான் பார்த்துக்கொள்கிறேன். அவர் வீட்டில் இருந்தாலும்

இல்லாததற்குதான் சமம். நீ வந்தாலும் நீ வந்ததாய் நான் சொன்னாலேயொழிய அவருக்குத் தெரியாது. அவர் அறைக் கதவுகூட எப்பொழுதும் மூடியே இருக்கும். வந்து பாருங்கள், நான் எப்படிப்பட்ட சிறைவாசம் பண்ணிக் கொண்டிருக்கிறேன் என்று உங்களுக்கே தெரியும்.''

சுமார் இரண்டு மணி நேரங்கழித்து ஓட்டலிலிருந்து வெளியே வந்தார்கள் லலிதாவும் சேகரும். விடை பெற்றுக் கொள்ளும்பொழுது. ''நான் சமயம் பார்த்துப் போன் பண்ணுகிறேன். வருவதற்கு மறந்து போக மாட்டீங்களே?''

''மாட்டேன்.''

''அடுத்த தடவை நாமிருவரும் சந்தித்துக்கொண்டால் அது எங்கள் வீட்டில்தான்.''

''சரி'' வாக்குறுதி அளிப்பது போலவே சொன்னான். லலிதா விடுவிடென்று போய்விட்டாள்.

சேகர் நிமிர்ந்து பார்த்தான். மங்கலான நிலா வெளிச்சத்தில் கம்பீரமாய் நின்று கொண்டிருந்த விஸ்வநாதனின் பங்களா சேகரை சேதி விசாரிப்பது போல இருந்தது. வியாழக்கிழமை இரவில் சரியாய் இதே சமயத்தில் இந்த பங்களா கொள்ளையடிக்கப்படப் போகிறது. அதற்குள் முடிந்தவரை அதிகமாய் பாங்கில் உள்ள நகை நட்டுக்களையெல்லாம்கூட லலிதாவை வீட்டில் கொண்டுவந்து வைக்கும்படியாய் செய்ய வேண்டும். அதற்கு ஒன்றே வழி. அந்த பாங்க் திவாலாகிவிடப் போகிறது என்ற செய்தியால் லலிதாவைக் கலங்கடித்துவிட வேண்டும்.

விஸ்வநாதனின் வீட்டைக் குறிப்பிட்ட நாளன்றைக்குக் கொள்ளையடித்து முடிக்க வேண்டும் என்ற அறிவிப்பு மேலிடத்திலிருந்து வந்ததுமே அவனுக்கு

ஏதோ போலாகிவிட்டது. எல்லாம் நல்லபடியாய் நடந்து முடிந்துவிட்டால் சரி! ஆனால் ஏதாவது குறுக்கிட்டு அவன் பிடிபட்டுப் போய்விட்டால்? சிநேகமாய் நிர்மலமாய் சிரித்துக்கொண்டிருக்கும் லலிதாவின் முகம் அவன் கண்முன் நிழலாடிற்று அவனைப் பற்றிய உண்மை வெளிவந்துவிட்டால் இந்தப் பரிச்சியம் எல்லாம் நடிப்பு என்று தெரிந்துவிட்டால் பயந்துபோய் அம்முகம் தன்னை எப்படி வெறித்து நோக்கும் என்பதை ஊகித்துப் பார்த்துக்கொண்டான். அதோடு ரேகாவின் வாழ்க்கை ஒரு கரைக்கு வந்து சேரப்போகும் இந்த சமயத்தில் இப்படிப்பட்டது ஏதாவது வெளிப்பட்டு அவள் எதிர்காலமே பிரச்சினைமயமாகிவிட்டால் என்ன செய்வது என்ற குழப்பம் வேறு பீடிக்கத் தொடங்கிற்று.

அதனால்தான் சென்ற வாரம் பூனாவில் சந்திக்க முன் வந்தபொழுது தன்னைப் பற்றிய உண்மைகளை விமலனிடம் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாய் அன்றைக்கு விமலனைப் பூனாவில் சந்திக்க முடியாமல் போய்விட்டது. சரியாய் அன்றைக்குதான் பூனாவிலிருந்து பெட்டி ஒன்றை எடுத்துக்கொண்டு அவசரமாய் சென்னைக்குப் போகச் சொல்லி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்துவிட்டது.

ஒரு துண்டு காகிதத்தில் ''நான் அவசரமாய் சென்னைக்குப் போக வேண்டியிருக்கிறது. உன்னைச் சந்திக்க முடியாமல் போவதற்கு மன்னித்துவிடு'' என்று விமலனுக்கு எழுதி அனுப்பிவிட்டு தான் புறப்பட்டு வந்துவிட்டான்.

சேகர் மனதில் திரும்பவும் அதே உணர்ச்சி ஏற்பட்டது. இதுவரை நடந்ததெல்லாம் வேறு! அவர்கள் யாரையும் அவனுக்குத் தெரியாது. ஆனால் இந்த விஸ்வநாதனின் வீட்டிலிருக்கும் நபர்களை அவனுக்குத்

தெரியும். லலிதா இவ்வளவு நெருக்கமான— உயிர்த் தோழியாய் பரிச்சியம் பண்ணிக் கொள்ளாமலிருந் திருந்தால் நன்றாயிருந்திருக்கும். அவனுக்கு இவ்வளவு வருத்தம் ஏற்பட்டிருக்காது

பிறகு ரேகா! இந்த வீட்டிற்கும் ரேகாவுக்கும் தொடர்பு இருந்து வந்ததை அவன் மறந்துவிடக் கூடாது. அவனுக்கு அந்தச் சமயத்தில் ரேகாவின் மேல் கோபம் வந்தது. அவள் பிடிவாதந்தான் அவளுக்கு.

சொன்னால் கேட்டுக்கொள்ளவே மாட்டாள். போகட்டும், விமலன் பம்பாயிலிருந்து திரும்பி வந்ததுமே இந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு அவனுக்கு ஒரு கோடிகாட்டினால்! சரியாய் அந்தச் சமயத்தில் தான் செய்வதறியாதவனைப் போல நடித்துப் பிடிபட்டுப் போனால்?

சேகர் உடம்பு சிலிர்த்தது. இது நம்பிக்கை துரோகம் என்று தண்டனைக்கு ஆளாக நேரிடும். இதற்கு முன்பே இதுபோல் செய்த இரண்டு மூன்று பேர் எவ்வளவு சித்திரவதைகளுக்கு ஆளானார்கள் என்பதைக் கண்ணாரக் கண்டிருக்கிறான். ஊஹூம், அவன் அவசரப்பட்டு எதுவும் செய்யக்கூடாது.

விமலனைச் சந்தித்து தான் சிக்கிக்கொண்டிருக்கும் புதை மணலைப் பற்றி எல்லா விஷயங்களையும் சொல்லிவிடவேண்டும். இதிலிருந்து தப்பிப்பது எப்படி என்று அவனை யோசனை கேட்கவேண்டும். அது வரை தான் இந்த வேலையிலேயே இருப்பதுபோல நடித்துக்கொண்டு அவர்களுக்கு எந்தச் சந்தேகமும் வராதவாறு நடந்துகொள்ள வேண்டும். அது ஒன்றுதான் வழி.

''சார்'' பின்னாலிருந்து மெல்லிய குரலில் கூப்பிட்டான் டாக்ஸி டிரைவர்.

சேகர் திடுக்கிட்டுத் திரும்பினான்.

''நீங்கள் இங்கே நின்று ரொம்ப நேரமாகிறது'' ஞாபகப்படுத்தினான்.

''ஓ! ஆமாம், வரேன்'' சேகர் டாக்ஸியில் ஏறி உட்கார்ந்துகொண்டான்.

அவன் சூழ்நிலைகளைக்கூட மறந்து போய் யோசனையில் ஆழ்ந்துவிட்டது இதுதான் முதல் தடவை.

16

"நீ சரியாய் பார்த்தாயா? ரேகா வீட்டில் தான் இருந்தாளா?'' தனக்கெதிரே நின்று கொண்டிருந்த டிரைவரைப் பார்த்து நம்ப மாட்டாதவராய் கேட்டார் விஸ்வநாதன்.

''சரியாய் தான் பார்த்தேன். நான் போனபொழுது அந்தப் பொண்ணு வீட்டு வாசலில் தான் நின்னுட்டிருந்தது. என் கார் நின்றதுமே என்னைப் பாராதது போல உள்ளே போயித்து. அந்தப் பெரியம்மா வந்து இன்னொரு தடவை மறுபடியும் இப்படி வரவேண்டாம்னாங்க. இப்படிச் சும்மாச் சும்மா வருவது அவங்களுக்குத் தொந்தரவா இருக்காம்'' வினயமாய் பதிலளித்தான் டிரைவர் ராமு!

டிரைவர் சொன்ன வார்த்தைகள் அவர் மனதில் ஆயிரம் சந்தேகங்களையும், லட்சம் கேள்விகளையும் தோற்றுவித்தன.

பிற்பகல் தாண்டிவிட்டது. ரேகா வரவில்லை. மூன்று மணியளவில் ரேகா ஏன் வரவில்லை என்று காரணத்தைத் தெரியப்படுத்தும் படியாய் சீட்டில் எழுதி

டிரைவரிடம் கொடுத்தனுப்பினார். ரேகாவிடம் அதைத் தந்து பதில் வாங்கி வந்தாலேயொழிய திரும்பி வர வேண்டாம் என்று எச்சரித்தார். டிரைவர் திரும்பி வந்தான். மறுபடியும் அதே பதில்!

''ரேகா வீட்டில் இல்லை. இந்தக் கடிதம் கிடிதம் இதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ போ'' என்று சுந்தரி எரிந்து விழுந்தாள். ரேகா வீட்டிலேயே தான் இருந்த தாய் சொன்னான். அவருக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது.

என்னவாகிவிட்டது ரேகாவுக்கு? ஏன் வரவில்லை? குறைந்தது ஒரு வார்த்தை செய்தி சொல்லியனுப்பியிருந் தால் தன் மனதிற்கு எல்வளவு அமைதியாய் இருக்கும். ஏதாவது பலமான காரணம் இருந்தாலேயொழிய ரேகா இப்படிப் பண்ணமாட்டாள். அவர் மனம் கலங்கித் தவித்தது. சமயத்தில் விமலன் கூட ஊரில் இல்லை. அவரோ அறையை விட்டு வெளியே போகக் கூடாது என்று டாக்டர் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவை அமுலாக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தால் அங்கே ரேகாவுக்கு ஏதாவது ஆகிவிட்டால்? அவருக்கு திடீ ரென்று சோர்வு வந்து சூழ்ந்து கொண்டது. ரேகா வைப் பார்க்காவிட்டால் பிழைக்க முடியாது போலி ருந்தது. அவருக்கு தான் போக வேண்டும்! போய்த் தீர வேண்டும். வேறு வழியில்லை. அவர் இதயத்தைப் பிளந்து கொண்டு ஆழ்ந்த பெருமூச்சு வெளிவந்தது. நடக்கட்டும்! சங்கரனும் சுந்தரியும் அவரை அடை யாளம் கண்டு கொள்ளட்டும்! இவ்வளவு நாட்களாய் அவர் மனதில் தகதகவென்று பற்றியெரிந்து கொண் டிருக்கும் நெருப்பு போன்ற சத்தியத்தை ரேகா தெரிந்துகொள்ளட்டும்! அபராதியாய் தலை குனிய வேண்டிய நபர் எப்படியும் போய் விட்ட பிறகு இனி எதற்காகத் தயக்கம்? இன்னும் எதற்காக காலதாமதம்?

விஸ்வநாதன் உத்தரீயத்தை எடுத்துப் போட்டுக் கொண்டார். மூலையிலிருந்த செருப்பை மாட்டிக் கொண்டார். அவர் முகம் உணர்ச்சி வெள்ளத்தில் இறுகிப் போயிருந்தது.

அறையைத் தாண்டி ஹாலுக்குள் காலடி எடுத்து வைத்த அவருக்கு அங்கே சோபாவில் சாய்ந்து கொண்டு புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த லலிதா தென்பட்டாள்.

மகளைப் பார்த்ததுமே அவர் வினாடி நேரம் நின்றார். உடனே ஏதோ ஞாபகத்திற்குவந்து ஜேபியைத் தடவிக் கொண்டார். திரும்பி அறைக்குள் போனார். தலையணைக்கடியில் வைத்துக் கொண்டிருந்த சாவிக் கொத்தை எடுத்து ஜேபியில் போட்டுக் கொண்டு வெளியே வந்தார். அறையை விட்டு வெளியே போகக் கூடாது என்ற டாக்டரின் வார்த்தைகளை மீறி தந்தை எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து லலிதா ஆச்சரியமடைந்தாள். புத்தகத்தை மூடி வைத்து விட்டு,

"எங்கேப்பா புறப்பட்டுவிட்டீங்க?" என்றாள். எங்கே என்று கேட்டதுமே அவருக்கு திக்கென்றது. அது அபசகுனமாய் தோன்றவே ஒரு வினாடி சந்தேகத்துடன் நின்றுவிட்டார். திரும்பி அறைக்குப் போய் விடலாமா என்று தோன்றிற்று. ஆனால் அதற்குள் தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டார். வாழ்க்கையின் கடைசி தசையில் அடியெடுத்து வைத்து, தின்று விதை விதைத்திருக்கும் தான் இப்படி மூட நம்பிக்கைகளைப் பார்ப்பது எதற்காக? ரேகாவின் வீட்டிற்குப் போவதாய் சொன்னால் லலிதா ரகளை பண்ணி விடுவாள் என்று தெரியும்.

"ப்ளீடர் வீட்டுக்கு ஒரு விஷயம் பேசணும்" என்றார்.

"ப்ளீடர் வீட்டுக்கா? போனில் பேசலாமே?"

"போனில் பேசக்கூடிய விஷயமில்லை. நேரில் சொல்லணும்."

லலிதாவின் முகத்திலிருந்த மலர்ச்சி இதைக் கேட்டதும் பறந்துவிட்டது. "போகட்டும், செய்தி சொல்லியனுப்பினால் அவரே வருவாரே?"

"நானே போகலாம் என்று புறப்பட்டேன். வீட்டிலேயே உட்கார்ந்து உட்கார்ந்து போரடித்துவிட்டது. இதோ ஒரே மணியில் வந்து விடுவேன்."

"ஆனால் டாக்டர்..."

"பரவாயில்லை. படியேறி இறங்க வில்லையே?" அவர் போய் காரில் உட்கார்ந்து கொண்டார்.

ப்ளீடர் வீட்டிற்கா? இப்பொழுது அவ்வளவு அவசரக் காரியம் என்ன ஏற்பட்டுவிட்டது? லலிதாவுக்குப் புரியவில்லை. தந்தை போன திசையையே பார்த்துக் கொண்டு பொம்மையாய் நின்றுவிட்ட லலிதா மெது வாய் உள்ளே வந்தாள். புத்தகத்தைக் கையிலெடுக்கப் போன பொழுது தந்தையின் அறைக்கதவுகள் திறந் திருந்தது கண்ணில் பட்டது. லலிதாவுக்கு மின்னலாய் யோசனை வந்தது. சந்தோஷத்தால் முகம் மலர்ந்தது. சட்டென்று அவர் அறைக்குள் ஓடிப்போய் அவர் தலையணைக்கடியிலும், டிராயரிலும், புத்தகங்களுக் கிடையேயும் சாவிக் கொத்தைத் தேடிப் பார்த்தாள். எங்குமே கிடைக்கவில்லை. கொஞ்ச நேரம் யோசனை யுடன் அறைக்கு நடுவே நின்றுவிட்ட லலிதா, கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டே, போனுக்கருகில் போய் நம்பரைத் டயல் பண்ணத் தொடங்கினாள்.

"ஹலோ."

மறுமுனையிலிருந்து லாயரின் மனைவியே பேசினாள்.

"ஆன்ட்டி, நான்தான் லலிதா பேசுகிறேன். எங்கப்பா உங்க வீட்டிற்குத்தான் புறப்பட்டிருக்கிறார். மாமாவோடு ஏதோ அர்ஜென்ட்டாய் பேசணுமாம். நான் மறுபடியும் போன் பண்ணுகிற வரைக்கும் அவரை அங்கேயிருந்து நகரவிட வேண்டாம். புரிஞ்சுதா?"

அவளுக்குப் புரிந்தது.

"சரி. அப்படியே" என்றாள் வாக்களிப்பது போல.

லலிதா போனை வைத்தாள்.

மனம் இலேசாகி விட்டாற்போல இருந்தது.

ஒரு வினாடிக்குப் பிறகு இன்னொரு நம்பருக்கு போன் பண்ணினாள்.

"எஸ், ஜான் ஸ்பீகிங்."

மறுமுனையிலிருந்து மரியாதையோடும் மிடுக்கோடும் கேட்டது.

"ஜான். நீங்கதானா?"

"யாரு? லலிதாவா?"

"ஆமாம். என்ன பண்ணிட்டிருக்கீங்க?"

"ஜேம்ஸ்பான்ட் புத்தகம் படிச்சிட்டிருக்கேன்."

"தாங்க் காட்! அப்படீன்னால் ஓய்வாய்தான் இருக்கீங்கன்னுச் சொல்லுங்கள். ஜான், அப்பா வீட்டில் இல்லாதபோது கூப்பிடச் சொன்னீங்க இல்லையா? அப்பா இப்பொழுது வீட்டில் இல்லை."

மறுமுனையிலிருந்து உடனே எந்த பதிலும் இல்லை.

கேட்டு விட்டுப் பேசாமலிருந்து கொண்டாற் போல இருந்தது.

''ஏன் பேசவில்லை?'' கேட்டாள் அவள்.

''உங்கப்பா இதய நோயாளி, வீட்டை விட்டு நகரமாட்டார் என்றாய்'' அவன் குரலில் சந்தேகம் தொனித்தது.

''இப்ப மட்டும் இல்லை என்றேனா? அவர் ஏதோ அர்ஜென்ட்டாய் லாயரோடு பேசணுமாம். அதனால் வேறு வழியில்லாமல் போனார். இப்போதைக்கு வரமாட்டார். ஜான்! நீங்கள் சீக்கிரமாய் புறப்பட்டு வந்தால் என் கையால் தயாரித்து நல்ல காபி கொடுப்பேன்.''

''சரி.''

''ஜான்! ஒரு சின்ன விஷயம்'' குழைவாய் சொன்னாள்.

''என்ன?''

''நீங்கள் எனக்கு ஒரு சின்ன உதவி பண்ணித் தரணும்.''

''என்ன பண்ணனும்? சீக்கிரமாய் சொல்லு.''

''நான் எங்க வீட்டில் திருட்டுத்தனம் பண்ணப் போகிறேன். அதில் நீங்கள் எனக்கு உதவி பண்ணித் தரணும்.''

சேகர் அதிர்ந்து போனான்.

லலிதா தன்னோடு நாடகமாடவில்லையே? ஒருக்கால் தன் விஷயத்தைக் கண்டு பிடித்துவிட்டிருப்பாளா? ஒரு வினாடி அவன் கலக்கமடைந்து போனன்.

''ஏன் பேசவில்லை?'' மறுமுனையிலிருந்து குழைவாய் கேட்டாள் லலிதா.

''என்ன பேசுவது? நீ என்னை தமாஷ் பண்ணும் போது...'' என்றான் உற்சாகமிழந்தவனைப் போல.

''தமாஷா? சீ, சீ! சத்தியமாய் சொல்கிறேன். இது திருட்டுத்தனம்கூட இல்லை. வெறுமே அப்படிச் சொன்னேன். எங்க வீட்டில் பழங்காலத்து இரும்புப் பெட்டி இருக்கிறது. அதற்குள் எங்கப்பா எழுதிய உயில் இருக்கிறது. அந்த உயிலுக்கும் என் எதிர்காலத் திற்கும் மிக பயங்கரமான சம்பந்தம் இருக்கிறது. அது என்னவென்று பார்க்க விரும்புவது தப்பா? என் வாழ்க்கை நடுத்தெருவுக்கு வரப்போகிறது என்றால் நான் ஜாக்கிரதைகளை எடுத்துக் கொள்வது தப்பா ஜான்?''

''தப்பில்லை.''

''அதனால் இரும்புப் பெட்டியைத் திறக்கக் கூடியவன் எவனையாவது அழைத்துக்கொண்டு உடனே கிளம்பி வாருங்கள். அப்படி வேண்டு மென்றாலும் அந்த ஆளுக்குக் கொஞ்சமோ நஞ்சமோ பணம் கொடுக்கலாம். சரிதானே.''

''சரி, பார்க்கலாம்.''

''பார்க்கலாம் இல்லை. இந்த அவகாசம் திரும்பி வராது. உடனே புறப்பட்டு வாங்க.''

''சரி, கால் மணி நேரத்தில் அங்கே இருப்பேன்.''

லலிதா போனை வைத்துவிட்டு நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டாள். அடுத்த நிமிஷம் மளமளவென்று தன் முகத்தை 'அப்படியும் இப்படியும் பார்த்துக் கொண்டாள். கட்டிய புடவையை அவிழ்த்துவிட்டு வேறு நல்ல புடவையைக் கட்டிக்கொண்டாள். காது களில் முத்து வளையங்களை மாட்டிக்கொண்டாள். முகத்திற்கு பௌடர் போட்டுக்கொண்டாள்.

கண்களுக்கு மையிட்டு, புருவங்களைத் திருத்திக் கொண்டு, உதடுகளுக்கு சாயம் தீட்டிக்கொண்டாள். மனமெல்லாம் ஏதோ புரியாத சந்தோஷம், விவரிக்க முடியாத பயம்! அவ்விரண்டும் சேர்ந்து அவளை ஓரிடத்தில் நிற்க விடவில்லை. கைப்பையை எடுத்துக் கொண்டு, செருப்பு டக்டக்கென்று ஒலிக்க, சமையல் அறைக்கு வந்தாள். அங்கிருந்த சமையல்காரனிடம்— ''நான் கிளப்புக்குப் போகிறேன். அப்பா வீட்டில் இல்லை. ராத்திரி சமைக்கத் தேவையில்லை. நான் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு போகணும். நீ வீட்டிற்குப் போ'' என்றாள்.

சமையல்காரனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. பண்ணிக்கொண்டிருந்த வேலையை மளமளவென்று முடித்து விட்டு போய்விட்டான்.

தோட்டக்காரன் உடம்பு சரியாயில்லை என்று அன்றைக்கு வேலைக்கே வரவில்லை. லலிதா கொல்லைக் கதவுகளையும் ஜன்னல்களையும் சாத்தி விட்டாள். மாடிக்குப் போய் அங்கேயும் கதவுகளைச் சாத்திவிட்டு, திரைச்சீலைகளை இழுத்துவிட்டு கீழே வந்தபொழுது வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது.

டாக்ஸியிலிருந்து ஃபுல் சூட்டும், ஹேட்டும் அணிந்திருந்த ஒருவன் இறங்கினான். அவன் முகத்தில் கருப்புத்துணியைப் போல கூலிங்கிளாஸ் இருந்ததால் வந்தவன் யார் என்று சட்டென்று தெரிந்துகொள்ள முடியவில்லை அவளால். ஜான் படியேறி லலிதாவிடம் வந்து ஹேட்டைக் கழற்றினான்.

''அம்மாடா! யாரோன்னு நினைச்சு பயந்துட்டேன். இங்கிலீஷ் தொரையைப் போல இதென்ன ஹேட்? என்னால் அடையாளமே தெரிந்து கொள்ள முடிய வில்லை'' என்றாள்.

அவன் திரும்பி மலையாளத்தில் டிரைவரிடம் ஏதோ சொன்னான். டிரைவர் தலையாட்டி விட்டு காரை ஓட்டிக்கொண்டு போய்விட்டான். லலிதா ஓடிப்போய் கேட்டைச் சாத்திவிட்டு வந்தாள். இருவரும் உள்ளே வந்தார்கள். சேகர் கூலிங் கிளாஸைக் கழற்றி ஜேபியில் வைத்துக்கொண்டான்.

லலிதா கண்கள் மின்ன— "எவ்வளவு நாட்களுக்குப் பிறகு தாங்கள் வருகை தந்திருக்கிறீர்கள்! ப்சு! நேர மில்லை. இல்லாவிட்டால் பெரிய பூமாலைக் கட்டி கழுத்தில் போட்டு வரவேற்பு தந்திருப்பேன்" என்றாள்.

"அவ்வளவு அருகதை இல்லை."

"அருகதை என்பது நாம்ப இருக்கிறதாய் நினைத்துக்கொண்டுவிட்டால் வந்துவிடாது. இல்லை என்று எண்ணிக்கொண்டுவிட்டால் இல்லாமல் போய் விடாது. எதிராளிகள் கொடுக்கிறதைப் பொறுத்து இருக் கிறது! ஆமாம் இதென்ன நீங்கள் மட்டுமே வந்திருக் கீங்க? கூட ஒருத்தரையும் கூட்டி வரவில்லையே?"

"நிஜமாகவே இரும்புப் பெட்டியின் பூட்டை உடைத்துத் திறக்கணுமா?"

"பின்னே பொய் என்றெண்ணிவிட்டீர்களா? விளையாட்டிற்குச் சொன்னதாய் எண்ணிவிட்டீர்களா? சீ, சீ, நீங்கள் நிஜமாய் புரிந்து கொண்டிருப்பீங்கன்னு நினைச்சேன்." தீவிரமாய் பார்த்த லலிதா ஏமாற்றத் துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சேகர் லலிதாவுக்கெதிரே வந்தான். கைகளை நீட்டினான்.

"இந்தக் கைகளால் எப்படிப்பட்ட பெட்டியாயிருந் தாலும் திறந்துவிட முடியும். உனக்கு நிஜமாகவே அப்படிப்பட்ட தேவை இருந்தால், வேறு யாருமே

தேவையில்லை. அந்த உதவியை என்னாலேயே பண்ண முடியும்.''

''ஜான்'' லலிதா வியப்போடு பார்த்தாள்.

சேகர் கைகளைக் கீழே போட்டான்.

''இதை உன்னிடம் சொல்றதுக்கு வெட்கப்படணும். நான் நல்லவனில்லை என்று சமயம் கிடைத்தபொழு தெல்லாம் உன்னிடம் சொல்லிக் கொண்டேயிருக் கிறேன். நிஜந்தானே?''

''உண்மையைத் தயங்காமல் சொல்லிக்கொள்கிற வங்களைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். எந்த விஷயத்திலுமே நீங்கள் என்றுமே என்னை மோசம் பண்ணிவிட்டதாய் நான் சொல்ல மாட்டேன். ஜான். இந்த உலகத்தில் உங்களைப் போன்றவங்களை கெட்டவங்க என்றால் அப்புறமாய் நல்லவங்க என்று சொல்கிறவங்களுக்கு வேறு ஏதாவது பெயர் இருந்து தீரணும். நான் பார்த்த எத்தனையோ பேரில் நல்லவங் களாய் நடித்தவங்களைத் தவிர உண்மையாகவே நல்ல வங்க யாருமே தென்பட்டதில்லை.''

''தாங்க் யூ! எங்கே, எனக்கு நல்ல காபி தரேன் னாயே?'' ஞாபக மூட்டினான்.

''உட்காருங்கள். இதோ நிமிஷத்தில் கொண்டு வரேன்.''

சேகர் உட்காரவில்லை. அங்குமிங்கும் சுற்றிக் கொண்டே வீட்டையெல்லாம் பரிசோதித்தான்.

லலிதா நாடகமாடவில்லை என்று தெரிந்துவிட்டா லும் அவனுக்கு ஏனோ தயக்கமாகவே இருந்தது. லலிதா ட்ரேயில் காபியைக் கொண்டு வந்தாள். இருவரும் காபியைக் குடித்து முடித்ததும் விஸ்வநாதனின்

அறைக்கு வந்தார்கள். சேகர் அறை முழுவதையும் கண்களால் துழாவினான். லலிதா மூலையில் இருந்த இரும்புப் பெட்டியைக் காட்டினாள். சேகர் கிட்டே போய் அதைப் பரிசீலிக்கத் தொடங்கினான். கொஞ்ச நேரங்கழித்து, கோட்டைக் கழற்றிப் போட்டு விட்டு, சட்டைக் கைகளை மடக்கிக் கொண்டவன். லலிதா ஆர்வத்துடன் அவனையே பார்க்கத் தொடங்கினாள்.

அதற்குள் போன் மணியடித்தது.

லலிதா ரிசீவரை எடுக்கப் போனாள். சேகர் மின்னலாய் பாய்ந்து வந்தான். போன் மீது வைக்கப்போன லலிதாவின் கையைப் பிடித்து அப்பால் இழுத்து விட்டான். லலிதா புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"வேண்டாம், போனை எடுக்காதே. எதற்கும் நல்லது. இவ்வறையில் இப்பொழுது நீ இருப்பதாய் யாரும் தெரிந்து கொள்ளாமலிருப்பதே நல்லது."

லலிதா ஒப்புக்கொண்டாற் போல பார்த்தாள். போன் கொஞ்ச நேரம் மணியடித்து விட்டு நின்று விட்டது.

சேகர் லலிதாவின் கையை விட்டு விட்டுத் திரும்பவும் இரும்புப் பெட்டியிடம் வந்தான்.

17

விஸ்வநாதன் ஏறிய கார் ரேகாவின் வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

பாதி தூரம் வந்ததுமே பின்சீட்டில் சாய்ந்தாற்போல உட்கார்ந்து கொண்டிருந்த அவர், "ராமு! காரைப் பின்னுக்குத் திருப்பு. வீட்டுக்குப் போய் விடலாம்" என்றார்.

கார் பின்னுக்குத் திரும்பிற்று. வீட்டை நோக்கி வந்துகொண்டிருக்கையில் திரும்பவும் அவர், "ராமு! வீட்டுக்கு வேண்டாம். இந்த பக்கமாய் பார்க்குக்குப் போ" என்றார்.

கார் திரும்பி பார்க்கை நோக்கிப் போகத் தொடங்கிற்று. கார் பார்க்கிற்கு அருகில் வந்து நின்றதும் விஸ்வநாதன் இறங்கி நாலடிகள் நடந்து அங்கிருந்த புல் தரையில் உட்கார்ந்து கொண்டார்.

அவரால் எந்த முடிவிற்கும் வரமுடியவில்லை. ஒரு தடவை போக வேண்டும் என்று தோன்றியது. இன்னொரு தடவை வேண்டாம் என்றும் தோன்றிற்று. அங்கே போனதுமே வார்த்தைகள் தடித்துப்போகலாம். அதனால் தன் உடல் நலம் கெட நேரும். அப்பொழுது மிகக் கஷ்டமாகிவிடும். எந்த விஷயமுமே ஆர அமரத்தான் வெளியே வரவேண்டும். இந்த விஷயத்தை ரேகாவுக்குத் தெரியப்படுத்தும் சமயத்தில் தன் பக்கத்தில் விமலன் இருக்க வேண்டும். அவன் இருந்தால் தைரியமாயிருக்கும். ஓரிரண்டு நாட்களில் விமலன் எப்படியும் வந்து விடுவான். அவன் வந்த பிறகு சொன்னால் நன்றாயிருக்கும். அதனால் ஏதாவது பிரச்னைகள் தோன்றினாலும் அவன் பார்த்துக்கொள்வான்.

டிரைவரையே அனுப்பி என்ன நடந்ததென்று தெரிந்து கொண்டு வரச் சொல்லலாம். என்னவென்று தெரிந்து கொள்ளாமல் திரும்பி வரக்கூடாது என்று சொல்லியனுப்பினால் போகிறது!

அந்த திறந்தவெளியில், குளிந்த காற்றில், மரநிழலில் அவருக்கு சுகமாய் இருந்தது. அங்கே நான்குச் சுவர்களுக்கிடையே நகராமல் உட்கார்ந்திருந்தால் இருக்கிற மூளைகூட போய்விடும். உண்மையில் அவ்வளவு

தேவை ஏதாவது வந்தால் ரேகாவே அவரிடம் வருவாள். அவர் தன்னையே தான் சமாதானப்படுத்திக் கொண்டு எழுந்து வந்து காரில் உட்கார்ந்து கொண்டார்.

''ராமு! என்னை வீட்டில் இறக்கி விட்டுவிட்டு நீ திரும்பவும் அந்தப் பெண்ணின் வீட்டிற்குப் போய் என்னதான் நடந்தது. அவள் ஏன் வரவில்லை என்று கேட்டுவிட்டு வா. பதில் சொன்னாலேயொழிய இங்கிருந்து நகரமாட்டேன் என்று அவங்க வீட்டிற்கு முன்னால் நில். அவங்களே சொல்லி விடுவாங்க'' என்றார்.

டிரைவர் 'சரி' என்று தலையாட்டினான்.

●

ரேகா அடுத்த வீதியிலிருந்த டி.எஸ்.பி. யின் வீட்டிற்குப் போய் போன் பண்ணிவிட்டு வருவதாய் சுந்தரியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினாள்.

டி.எஸ்.பி. யின் மனைவி கதவைத் திறந்ததுமே எதிரே நின்ற ரேகாவைப் பார்த்து முகத்தைச் சுளித்தாள்.

''கொஞ்சம் போன் பண்ணலாமா?'' மிகப் பணிவோடு கேட்டாள்.

''உம்...'' விறைப்பாய் சொல்லிவிட்டு அப்பால் போய் விட்டாள் டி.எஸ்.பி. யின் மனைவி.

அந்த பேட்டையில் ரேகாவை கண்டாலே யாருக்கும் பிடிக்காது. ரேகாவைப் பற்றிய அநேகம் கதைகளை பலர் வாயிலாய் கேட்டிருக்கிறாள். ரேகா இருபத்திநான்கு மணி நேரமும் காரில் சுற்றிக் கொண்டிருப்பாள். யார் யாரோ வந்து போய் கொண்டிருப்பார்

கள் என்று வேலைக்காரி அவளிடம் நடந்தது நடந்த வாறு செய்திகளைச் சொல்லிக் கொண்டிருப்பாள்.

சோற்றுக்குக் கதியில்லாத ரேகா இப்பொழுதெல்லாம் கட்டிக்கொள்ளும் புடவைகளையும் செலவழிக்கும் பணத்தையும் பார்த்தால், எல்லோருக்குமே சந்தேகந் தான். ரேகாவைப் போன்ற பெண்கள் கெட்டுப் போகாமல் சுகப்படமாட்டார்கள் என்பது அவள் நம்பிக்கை. கெட்டுப் போனவர்களைக் கண்டாலே அவளுக்குப் பிடிக்காது. அருவறுப்பு.

ரேகா போனுக்கருகில் உட்கார்ந்து டயல் பண்ணத் தொடங்கினாள்.

கொஞ்ச நேரத்திற்கு முன்னால் டிரைவர் வந்ததைப் பார்த்து விட்டு அவள் உள்ளே ஓடிப் போய் ஒரு துண்டுக் காகிதத்தில்—''நான் சுகமாய்தான் இருக் கிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள். இரண்டு நாட் களுக்கு என்னால் வரமுடியாது. வீட்டில் நிறைய வேலை இருக்கிறது'' என்று எழுதி அக்காகிதத்தை வெளியே கொண்டு வந்தபொழுது டிரைவர் இல்லை. காரையும் காணோம். சுந்தரி தானே அனுப்பி விட்டதாய் பெருமை யாய் சொன்னாள்.

இரண்டு நாட்களாய் அவள் போகாததால் அவர் எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருப்பார் என்றறி வாள் அவள். ஆனால் நேற்று லலிதா செய்த அடத்தி னால் மாமாவுக்கும் மாமிக்கும் ஏற்பட்டிருந்த கோபம் தணிய வேண்டுமென்றால் அவள் இரண்டு நாட்கள் போகாமலிருப்பதே நல்லது என்று தோன்றிற்று.

டிரைவர் திரும்பிப் போய் ரேகா இல்லை என்று சொன்னதுமே அவர் எவ்வளவு கவலைப்படுவாரோ? அதோடு டிரைவர் அவளைப் பார்த்தும் விட்டான். கலங்கிப் போய் தானே வந்தாலும் வந்துவிடுவார்.

அந்தக் கவலையால்தான் ரேகா போன் பண்ண வந்தாள்.

ரேகா நம்பரை டயல் பண்ணினாள். போன் மணி யடித்தது. ஆனால் யாரும் எடுக்கவில்லை. அவர் படுக்கைக்கருகிலேயே போன் இருந்தது. கையை நீட்டினால் போதும், எட்டிவிடும். ஏன் எடுக்கவில்லை? தூங்கிக் கொண்டிருப்பாரா? ரேகா கொஞ்ச நேரம் அப்படியே பிடித்துக் கொண்டிருந்தாள். யாருமே எடுக்கவில்லை. ரேகா போனை வைத்துவிட்டாள்.

ஒருக்கால் பாத்ரூமில் இருப்பாரோ?

பத்து நிமிஷம் கழித்துத் திரும்பவும் பண்ணினாள். இம்முறையும் அதே போலவே நடந்தது.

போனை வைத்து விட்டு ரேகா வெளியே வந்தாள். மனமெல்லாம் கவலையும் பயமும் பீடிக்கத் தொடங் கின. திரும்பவும் அவருக்கு இதய நோய் வந்திருக் குமோ? அவரை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றிருப் பார்களோ. வீட்டில் யாரும் இல்லையோ என்னவோ? என்ன நடந்திருக்கும்? ஒரு முறை அவரைப் பார்த்து, நடந்ததைச் சொல்லி விட்டு வந்தால் நல்லது. 'சீ, சீ, நேற்றே இதைச் செய்திருக்க வேண்டும். ஆனால் அவளுக்கென்ன தெரியும்? 'இன்றைக்கு மாமாவின் கோபம் தணிந்து விடும். எப்பொழுதும் போலவே போய்க் கொள்ளலாம்' என்றெண்ணிக் கொண்டிருந் தாள்.

ரேகா யோசித்தபடியே விடுவிடென்று மெயின் ரோட்டிற்கு வந்தாள். அங்கே ஒரு ரிக்ஷாவைக்கூட காணோம். கால் மணி நேரம் நின்ற பிறகு பஸ் வந்தது. போனுக்குத் தருவதாக எடுத்து வந்திருந்த இரண்டு ரூபாய்கள் கையில் இருந்ததால் கவலையில்லாமல் பஸ்ஸில் ஏறிவிட்டாள். அதுவும் நல்லதாய் போயிற்று திரும்பவும் வீட்டிற்குப் போய்விட்டுப் பிறகு புறப்பட

வேண்டுமென்றால் சுந்தரி பெரிய ரகளையைப் பண்ணி விடுவாள்.

●

சேகர் இரும்புப் பெட்டியைத் திறப்பதற்காகப் பண்ணிக்கொண்டிருந்த முயற்சிகளையெல்லாம் லலிதா கண்கள் அகல விரிய வினோதமாய் பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள். அவன் முதலில் விதம் விதமான சாவிகளைப் போட்டுத் திறக்கப் பார்த்தான். ஆனால் எதனாலும் திறக்க முடியவில்லை. கடைசியில் கட்டிலில் போட்டிருந்த கோட்டு பாக்கெட்டிலிருந்து ஒரு பொருளை எடுத்தான். அது சின்ன டார்ச் லைட்டைப் போல இருந்தது. சுவிட்சை அழுத்தியதுமே கூரிய இரண்டு பற்களைப் போன்ற பாகம் வெளியே வந்தன. பேன்ட் ஜேபியில் இருந்த சாக்பீசை எடுத்து சாவி நுழையும் பாகத்தைச் சுற்றிலும் வட்டமாய் மார்க் பண்ணினான். டார்ச் விளக்கைப் போல இருந்த அந்தக் கருவியின் கீழ்பாகத்தில் இருந்த இன்னொரு சுவிட்சை அழுத்தினான். அதன் சின்ன உடம்பில் பொருத்தப்பட்டிருந்த ஏதோ பாகம் இயங்கத் தொடங் கினாற் போல சப்தம் வரத் தொடங்கிற்று. சேகர் அதை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு வட்டமாய் மார்க் பண்ணியிருந்த கோட்டைச் சுற்றிலும் திருப்பத் தொடங் கினான். சர்ரென்று சப்தமிட்டுக்கொண்டே அது இரும்புப் பெட்டியை வெட்டத் தொடங்கிற்று. அழுத்த மாய் அதைப் பிடித்துக்கொண்டிருந்த அவன் கைகள் அதிர்ந்து கொண்டிருந்தன.

அதற்குள் திரும்பவும் போன் வந்தது. சேகர் லலிதாவைப் பார்த்தான். அப்பார்வைக்கு அர்த்தம் தெரிந்தவளைப் போல அவள் நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை.

போன் மணியடித்து விட்டு கொஞ்ச நேரத்தில் நின்று விட்டது.

பத்து நிமிஷத்தில் சேகரின் முயற்சி பலித்தது. கதவு கழன்று வந்தது. நெற்றியில் வியர்த்துக் கொட்டியபடி இருந்தது. லலிதாவைப் பார்த்து வெற்றி பெருமிதத் தோடு சிரித்தான்.

"நிஜமாய் திறந்துகொண்டு விட்டதா?" அவள் ஆச்சரியத்தோடு கிட்டே வந்தாள்.

சேகர் கதவை நன்றாய்த் திறந்து காட்டினான். லலிதாவின் முகம் மலர்ந்தது.

இரும்புப் பெட்டியில் எதிரே தென்பட்ட முதல் அறையை இழுக்கப் போன அவன் நிறுத்திக்கொண்டு, "நான் தொடலாமா?" என்று கேட்டான்.

"ஓ! இந்த வீட்டில் உங்களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது!" என்றாள்.

சேகர் முதல் அறையை இழுத்தான். அதில் நிறைய காகிதங்கள் இருந்தன. லலிதா கிட்டே வந்தாள். மளமளவென்று இரு கைகளிலுமாய் அவைகளை அள்ளிக்கொண்டு வந்து கட்டிலில் உட்கார்ந்து உயிலைத் தேடத்தொடங்கினாள்.

சேகர் இன்னொரு அறையை இழுத்தான். உடனே அவன் கண்கள் கூசின. அதில் முழுவதும் மினுமினுக் கும் நகைகள் இருந்தன. அடுத்த அறையைக்கூட இழுத்துப் பார்த்தான். அதில் வெங்கடேசுவர சுவாமியின் படம் ஒன்றும் அதன் மீது ஒரு சின்னப் பெட்டியும் தவிர வேறெதுவும் இல்லை.

சேகர் அந்தப் பெட்டியை ஆர்வத்தோடு பார்த் தான். என்ன இருக்கும் அதில்? மரகதமா? வைரமா? கெம்பா? கண்டிப்பாய் விலைமதிக்கப்பட முடியாத பொருள் ஏதாவதுதான் இருந்து தீரும். மிக அருமை யாய் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தப்

பெட்டியை எடுத்துத் திறந்து பார்த்தான். உடனே அவனுக்குத் தாங்க முடியாத ஏமாற்றம் ஏற்பட்டது. அதில் அவன் எதிர்பார்த்த பொருள் எதுவும் இல்லை. பழைய நியூஸ் பேப்பர் கட்டிங் ஒன்றும், அதற்கடியில் இன்னொரு பொட்டலமும் இருந்தன. மடித்துச் சின்ன தாய் வைக்கப்பட்டிருந்த அந்த நியூஸ் பேப்பர் கட்டிங்கைப் பிரித்துப் பார்த்தான். அதில் தென்பட்ட தைப் பார்த்ததுமே முகத்தில் வெந்நீரைத் தெளித்தாற் போலிருக்கவே பின்வாங்கினான். வெகு நாட்களுக்கு முன்னால் சென்ட்ரல் ஸ்டேஷனில் அவன் விஸ்வ நாதனிடம் நகையைத் திருடப்போய் பிடிபட்டுப் போனபொழுது எடுத்த படம் அது! அதைப் பார்த்ததுமே அவன் முகம் கடுமையாய் மாறிற்று. அன்றைக்குத் தான் வாங்கிய உதை கூட ஞாபகத்திற்கு வந்தது. ரத்தம் சலசலவென்று கொதித்தாற்போல இருந்தது. அந்தக் காகிதத்தைக் கிழித்து உருண்டையாக்கி பேன்ட் ஜேபிக்குள் தள்ளிக்கொண்டான்.

அவன் பார்வை மறுபடியும் பெட்டியில் இருந்த பொட்டலத்தின் மீது பட்டது. ஆர்வத்துடன் அதைப் பிரித்துப் பார்த்தான். மிக ஜாக்கிரதையாய் கட்டி வைக்கப்பட்டிருந்த அந்த பொட்டலத்திற்குள் இரண்டு தேய்ந்து போன பழைய பித்தளை வளையல் ஜோடிகள் இருந்தன. சேகருக்கு அவை நன்றாய் தெரிந்த வளையல்கள்! மிகப் பரிச்சியமானவைகளாய் தென்பட்ட அந்த வளையல்களை உள்ளங்கையில் வைத்துக்கொண்டு கூர்ந்து பார்த்தான். சந்தேகமில்லை. அவைகளை அவன் நன்றாய் அறிவான். ஆனால் எங்கே? யாரிடம் பார்த்திருக்கிறான்? அவனுக்கு உடனே ஞாபகம் வந்துவிட்டது. இவை தன் தாயின் வளையல் கள்! ஆனால் இங்கே எப்படி வந்தன? அவனுக்குப் புரியவில்லை.

''சே, இதில் இல்லை'' காகிதங்களையெல்லாம் மளமளவென்று தேடிப் பார்த்துவிட்டு அப்படியே கசாமுசாவென்று சுருட்டிக்கொண்டே வந்து போட்டாள் லலிதா.

''நன்றாய் பார்த்தாயா?'' கேட்டான் சேகர் வளையல் ஜோடிகளை ஜேபியில் போட்டுக்கொண்டே.

''பார்த்தாச்சு! அப்பப்பா! இதெல்லாம் எனக்குத் தலை சுற்றுகிறது. பாதிக்கு மேல் அத்தனையும் பிராமிஸரி நோட்டுக்கள்தாம்! அப்பா இவ்வளவு பேருக்கு இவ்வளவு பணம் கடனாய் தந்திருப்பது எனக்குத் தெரியவே தெரியாது.''

''எங்கே, இப்படிக் கொடு. நான் தேடிப் பார்க்கிறேன்.''

சேகர் கட்டிலுக்கருகில் நின்றபடி ஒவ்வொரு காகிதமாய் மளமளவென்று பரிசோதிக்கத் தொடங்கினான். லலிதா எழுந்து இருப்புப் பெட்டிக்கருகில் போனாள். அந்த நகைகளைப் பார்த்ததுமே கண்களில் சந்தோஷம் பளபளத்தது. ஒவ்வொன்றாய் எடுத்துப் போட்டுப் பார்த்துக்கொண்டே இரும்புப் பெட்டியின் கதவில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டாள்.

''இவ்வளவும் என்னோடதுதான். ஆனால் செத்தாலும் கொடுக்கமாட்டார் அப்பா. எவ்வளவு நாளாயிடுத்து இவைகளைப் போட்டுக்கொண்டு'' என்றாள்.

''பார்த்தாயா? இல்லை என்றாயே, இதோ'' சேகர் உயிலை வெளியே எடுத்தான்.

''நிஜமாய் உயில்தானா?''

''நிஜமாய் தான்'' சேகர் கையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டான்.

லலிதா அதை வாங்கிக்கொள்ள கிட்டே வந்தாள்.

அதற்குள் கேட் சப்தம் கேட்டது.

இருவரும் திடுக்கிட்டார்கள்.

ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள். திறந்த கேட்டைத் திரும்பவும் மூடிய சப்தம் கேட்டது. சந்தேகமில்லை, யாரோ வருகிறார்கள்! உள்ளே வந்து கேட்டைச் சாத்துகிறார்கள்.

லலிதாவின் முகம் வெலவெலத்துப் போய்விட்டது. சேகர் இதை கவனிக்கவில்லை. ஒரே பாய்ச்சலாய் சுவிட்சிற்கு அருகில் போய் அதை அணைத்து விட்டான். விளக்கு அணைந்துவிட்டது. எங்கும் காரிருள்!

''ஜான்'' பயந்துபோய் அழைத்தாள் லலிதா.

''இதோ இருக்கிறேன்'' கிட்டே கேட்டது.

இருட்டில் நின்று கொண்டிருந்த இருவரும் சப்தத்திற்காக காதைத் தீட்டிக்கொண்டிருந்தார்கள். காலிங் பெல் ஒலித்தது.

''யாராயிருக்கும்?'' ரகசியமாய் கேட்டாள் லலிதா.

''உஷ், பேசாதே'' எச்சரித்தான்.

''லலிதா'' விஸ்வநாதனின் குரல் கேட்டது.

''ஐயோ செத்தேன்! அப்பா.''

''குரல் கொடுக்காதே நீ.'' அவன் ஆலோசனை தந்தான்.

லலிதாவின் இதயத்தில் ரயில் இஞ்ஜின் ஓடிற்று.

''இப்ப என்ன பண்றது? அவங்க வீட்டுக்கே போக வில்லையோ என்னவோ? அதைச் சொல்லத்தான் அவள் ரெண்டு தடவை போன் பண்ணினாளோ

என்னவோ? கதவைத் திறக்க வேண்டாம் என்கிறீர்கள். இப்ப என்ன பண்றது? அவருக்குக் கோபமே வராது. வந்தால் மனிதராய் இருக்க மாட்டார். எனக்குத் தெரியும். இன்றைக்கு என்னைக் கொன்று போட்டு விடுவார்.'' லலிதாவுக்கு உடனே பயத்தால் அழுகை வந்துவிட்டது.

''லலிதா! என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய் உள்ளே? கதவைத் திற.''

அவர் கூப்பாட்டோடு சேர்ந்து காலிங் பெல் ஓசையும் வீடெல்லாம் எதிரொலித்தது.

''ஜான், எனக்கு பயமாயிருக்கு'' அவனை ஒட்டிய வாறு நின்று கொண்டே குரல் தடுமாறச் சொன்னாள் லலிதா.

சேகர் அறையில் விளக்கைப் போட்டான். பேச வேண்டாம் என்று ஜாடை காட்டி விட்டு மளமள வென்று கட்டிலில் கிடந்த காகிதங்களையெல்லாம் அள்ளிக் கொண்டுபோய் பெட்டியின் அறைக்குள் தள்ளி, பெட்டியை மூடப் போனான். ஆனால் பூட்டை வெட்டியிருந்ததால் அது மூட வரவில்லை. மூடி கழன்று வந்துவிட்டது. அவன் மறுபடியும் முயன்றான் ஆனால் பலிக்கவில்லை. லலிதா அதற்குள் கட்டிலில் கிடந்த அவன் கோட்டை எடுத்துக் கட்டிலுக்கடியில் தள்ளி விட்டாள். வெளியேயிருந்து தந்தையின் குரல் பெரிதாய் கேட்டது.

''என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய் உள்ளே? கதவைத் திற லலிதா! உன்னைத்தான்.''

அவர் வந்து கொண்டிருக்கையில் ரேகாவுக்காக காரை அனுப்ப வேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கூட மாற்றிக் கொண்டு விட்டார். இருட்டி விட்டது. ஏற்கனவே ரேகா வருவதற்குத் தடை விதித்துக் கொண்

டிருக்கும் அவர்கள் இப்பொழுது அனுப்புவார்களா என்று தோன்றிற்று.

நாளைக் காலையில் டிரைவர் வந்ததுமே அனுப்பலாம் என்றெண்ணிக்கொண்டார்.

கார் வீட்டிற்கு முன்னால் நின்றதுமே— ''இங்கேயே நிறுத்து. போதும். ரஞ்சிதாவை சர்க்கஸுக்கு கூட்டிக் கொண்டு போய் விட்டு சர்க்கஸ் முடிந்ததும் கொண்டு வந்து விட்டு விடு'' என்று தான் வீதியிலேயே இறங்கிக் கொண்டு காரை அனுப்பிவிட்டார்.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்த அவருக்கு வென்ட்டிலேட்டர் மூலமாய் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது தென் பட்டது. அவர் புருவங்கள் முடிச்சேறிக் கொண்டன. லலிதா அவர் அறையில் என்ன பண்ணிக் கொண்டிருக் கிறாள்? அவர் வராந்தாவை நெருங்கிக்கொண்டிருக்கை யில் அறையில் விளக்கு அணைந்துவிட்டது. உடனே அவருக்குச் சந்தேகம் வந்தது. தான் வந்து கொண்டி ருந்த சப்தத்தைக் கேட்டு விட்டுச் சட்டென்று விளக்கை அணைத்து விட்டதாய் தெரிந்து கொண்டார். மளமளவென்று நடந்து வந்து கதவைத் தட்டினார். யாருமே குரல் கொடுக்கவில்லை. அவர் சந்தேகம் அதிகரித்தது. காலிங்பெல்லை அழுத்தினார். பெயரிட்டு கூப்பிட்டார். பதிலில்லை. கதவுகளையெல்லாம் சாத்தி யிருந்த விதத்தைப் பார்த்தால் லலிதா ஏதோ செய்யத் தொடங்கியிருப்பாள் என்று தோன்றிற்று.

அவருக்கு பரபரப்பினால் ஆவேசமும், ஆவேசத் தால் ஆயாசமும் வந்துவிட்டன.

''என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய் உள்ளே? கதவைத் திற. இல்லாவிட்டால் கதவை உடைத்துக் கொண்டு வந்து விடுவேன்'' என்று கத்தினார் அவர்.

உள்ளே லலிதா கோழையாய் சேகரைப் பார்த்தாள்.

சேகர் இரும்புப் பெட்டியை விட்டு அப்பால் வந்து விட்டான்.

''போ, போ. போய்க் கதவைத் திற'' என்றான்.

லலிதா கண்கள் மருள, ''யாரு? நானா?'' மார்பில் கைவைத்துக் கொண்டாள்.

''ஆமாம், நீயேதான். போ, பரவாயில்லை, நான் தான் இருக்கேனே?'' தைரியம் சொன்னான்.

''நீங்கள் இருப்பதால்தான்! உங்களை இங்கே பார்த்து விட்டாரானால்...''

''நான் அவர் கண்ணில் படமாட்டேன்.''

வெளியே அவர் கூப்பிட்டுக் கொண்டும், கத்திக் கொண்டும் கதவைத் தட்டிக் கொண்டிருந்தார்.

''மரியாதையாய் திறக்கிறாயா? கதவை உடைத்தெறியட்டுமா?''

சேகர் லலிதாவின் தோள்களைச் சுற்றிலும் கையை போட்டு அணைத்துப் பிடித்துக் கொண்டே ஹாலுக்கு அழைத்துக்கொண்டு வந்தான்.

மெல்லிய குரலில் சொன்னான்—''உனக்கெந்த பயமும் இல்லை. நான் இருக்கேன். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். கதவைத் திற. இல்லாவிட்டால் இப்ப அவர் பண்ணுகிற ரகளைக்கு அக்கம் பக்கத்தார் எல்லோரும் வந்து கூடிவிட்டால் ஆபத்து'' சேகர் ஹாலில் விளக்கைப் போட்டான்.

லலிதா நடுங்கும் கால்களோடு கதவை நோக்கிப் போய்க்கொண்டே திரும்பிப் பார்த்தாள்.

சேகர் இரும்புப் பெட்டி இருந்த அறைக்குள் போய் ஒளிந்து கொண்டு விளக்கை அணைத்து விட்டான். ஒருவாறு தைரியத்தையெல்லாம் கூட்டிக்கொண்டு லலிதா கதவைத் திறந்தாள். வாசலில் அவர் மூச்சிரைக்க ஆயாசத்துடன் நின்று கொண்டிருந்தார். தந்தையும் மகளும் ஒரு வினாடி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

''என்ன பண்ணிக் கொண்டிருந்தாய் உள்ளே?'' பற்களை நறநறத்துக் கொண்டே கேட்டார்.

''தூ... தூங்கிட்டிருந்தேன்.''

அவர் மகளைக் கூர்ந்து பார்த்தார். லலிதாவிடம் தூங்கிய அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

''சீ! வெட்கமில்லை? நீயும் உன் பொய்யும்!'' உள்ளே வந்தார் அவர்.

வீடு முழுவதையும் கண்களால் துழாவிப் பார்த்த அவருக்கு ஹாலுக்கு நடுவே இருந்த டீபாயின் மீது சேகரின் ஹேட் தென்பட்டது. அதைப் பார்த்ததுமே லலிதாவின் உயிரே பறந்து போய் விட்டாற்போல இருந்தது. அவருக்கு ரத்த அழுத்தம் அதிகரித்து விட்டது.

''யார் இருக்காங்க உள்ளே? உண்மையைச் சொல்லு?''

மகளின் கையைப் பிடித்துக்கொண்டு கேட்டார்.

லலிதா கையை உதறிக் கொண்டாள்.

''யாரும் இல்லை. வேண்டுமானால் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றாள் அலட்சியமாய்.

விஸ்வநாதன் படுக்கையறைக்கு வந்தார். அவருக்கு தன் நிலைமை தெரிந்து போய்விட்டது. உடனே

மாத்திரையை போட்டுக் கொள்ளவேண்டும். மார்வலி வரும் போலிருந்தது.

அறைக்குள் வந்து விளக்கைப் போட்ட அவர் ஒரு வினாடி விக்கித்துப் போய் அப்படியே நின்றுவிட்டார். எதிரே இரும்புப் பெட்டியின் கதவு திறந்து கிடந்தது. சலனமொடுங்கிப் போய் அப்படியே நின்றுவிட்டார். அவ்விடத்திலேயே கதவு சந்தில் மறைந்து நின்று கொண்டிருந்த சேகர் அதற்குள் டையைக் கழுத்திலிருந்து கழற்றிக் கையில் வைத்துக் கொண்டிருந்தான். இந்த சமயத்திற்காகவே காத்துக்கொண்டிருந்தாற்போல வேடன் குறிபார்த்து வீசிய அம்பைப்போல அந்த டையை அவர் கண்களுக்குக் குறுக்காய் வருமாறு வீசியெறிந்து ஒரே பாய்ச்சலாய் அவரிடம் வந்தான்.

"என்ன? யார்?" விஸ்வநாதன் வீலென்று கத்தினார். கண்களைச் சுற்றிலும் வந்து விழுந்த துணியை இழுத்து போடுவதற்காக இரு கைகளையும் தூக்கப் போனார்.

அதற்குள் அவருக்குப் பின்னால் வந்து நின்ற சேகர் ஒரு கையால் டையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் அவர் இரு கைகளையும் அழுத்திப் பிடித்துக் கொண்டான். லலிதா அதற்குள் ஓட்டமாய் ஓடி வந்தாள். சேகர் கையால் கிட்டே வரச் சொல்லி அழைத்தான். லலிதா வந்தாள். கண்களுக்குக் கட்டியிருந்த டையை அழுத்தமாய் பிடித்துக் கொள்ளச் சொன்னான். லலிதா பிடித்துக் கொண்டாள். சேகர் வலதுகையை பேன்ட் ஜேபிக்குள் நுழைத்து அங்கிருந்து பெரிய சில்க் கைக்குட்டை ஒன்றை வெளியே எடுத்து அவர் கைகளைப் பின்னுக்கு இழுத்து அழுத்தமாய் கட்டிவிட்டான்.

"விடு! யாரது?" அவர் வலைக்குள் விழுந்த காட்டு மிருகத்தைப் போல தவிதவித்தார்.

"நீ இப்படியே பிடித்துக்கொண்டிரு. நான் இதோ ஒரு நிமிஷத்தில் வாசல் கதவைச் சாத்திவிட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு சேகர் வெளியே ஓடினான்.

லலிதா எவ்வளவு அழுத்தமாய் பிடித்துக் கொண்டிருந்தபோதிலும் அவர் கழுத்து அப்படியும் இப்படியும் அசைந்ததாலும், பின்னால் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த லலிதாவின் மார்பின்மீது தலை வேகமாய் வந்து அடித்ததாலும் லலிதாவின் கையிலிருந்த டைபின் பிடி நழுவி, லூசாகிக் கீழே விழுந்தது.

எதிர்பாராத இந்த ரகளைக்கு ஏற்கனவே பயந்து போயிருந்த லலிதா நழுவி விழுந்த டையை ஒருவாறு சட்டென்று கையில் இழுத்துப் பிடித்துக் கொண்டு பலத்தையெல்லாம் பயன்படுத்தி அழுத்தமாய் முடிச்சுப் போட்டு விட்டாள்.

சேகர் எப்பொழுது வருவானோ என்று திரும்பி பார்த்துக் கொண்டிருந்த லலிதாவுக்குத் தான் சுருக்கு முடி போடாமல் கெட்டி முடிச்சுப் போட்டுவிட்டதும் அதுவும் கண்ணைச் சுற்றி இல்லாமல் கழுத்தைச் சுற்றிப் போட்டுவிட்டதும் தெரியாது. அவள் பயந்து போய் இன்னும் இன்னும் முடிச்சை இழுத்துக்கொண்டே யிருந்தாள்.

சேகர் வாசல் கதவை சாத்திவிட்டு உள்ளே வந்தான். டைனிங் டேபிள் மீது தண்ணீர் கூஜா இருந்தது. தொண்டை வரண்டு போன அவன், அதை எடுத்து கடகடவென்று குடித்துவிட்டு கீழே வைத்தான். அவனுக்கு உயிர் திரும்பி வந்தாற் போலிருந்தது. அவன் திரும்பி அறைக்குள் வந்தான். லலிதா இன்னும் டையை அழுத்தமாய் பிடித்துக்

கொண்டேயிருந்தாள். ஆனால் அவர் நிற்கவில்லை. கீழே சரிந்துகொண்டிருந்தார். தலை சாய்ந்து போயிற்று.

சேகர் ஒரே பாய்ச்சலாய் கிட்டே வந்தான். லலிதாவின் கையைப் பிடித்து அப்பால் இழுத்தான். ''இதென்ன? கழுத்திற்கு ஏன் போட்டாய்?'' என்றான். லலிதா அப்பொழுதுதான் கவனித்தாள், தான் முடிச்சுப் போட்ட டை அவர் கழுத்தில் விழுந்திருந்ததை.

சேகர் முழங்காலிட்டு அமர்ந்துகொண்டு மளமளவென்று டையை அவிழ்த்து எறிந்தான். அவர் தோள்களைச் சுற்றிலும் கையைப் போட்டுப் பிடித்துக் கொண்டு வலது கையால் முகவாயைத் தூக்கி முகத்தைப் பார்த்தான். அவனுக்குபகீரென்றது. அவர் முகம் நீலமாயிருந்தது. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் அப்பொழுதுதான் தூக்கிலிடப் பட்ட கைதியின் முகத்தைப் போல இருந்தது.

சேகர் சட்டென்று நாடியைப் பார்த்தான். பலனில்லை. அவன் சிலையாகிவிட்டான்.

''லலிதா'' என்று கத்தினான் வெறியாய்.

''நீ... நீ என்ன பண்ணினாய் தெரியுமா?''

''தெரியும். என் உயிரை நான் காப்பாற்றிக் கொண்டேன்'' அலட்சியமாய் சொன்னாள். அவள் கண்களில் துவேஷமும் வெறுப்பும் நன்றாய் தெரிந்தன அவனுக்கு.

சேகருக்கு வியர்த்துக்கொட்டிற்று. விஸ்வநாதனின் உடலை கட்டிலில் படுக்க வைத்துவிட்டு, எழுந்து நின்றான். அவன் முகத்தில் ரத்தம் வற்றிவிட்டது.

''அவரை நீ கொன்று விட்டாய்.''

''ஜான்.''

''அவர்... அவர் உன் தந்தை.''

''அப்படி ஒரு நாளும் என்னைப் பார்க்கவில்லை அவர்.''

சேகர் விஸ்வநாதனைப் பார்த்தான். அவன் மனதைப் பிசைந்தெடுத்தாற்போலிருந்தது. இதுவரை அவன் திருட்டுத்தனங்களை எவ்வளவோ பண்ணியிருக்கிறான். ஆனால் கொலைக் கேசு என்பதைக் கண்டவன் இல்லை. லலிதா இவரைக் கொன்று விட்டாள். இது கொலை! இதில் அவனுக்கும் பங்கு உண்டு! அவன் உடம்பு சிலிர்த்தது.

லலிதாவும் தந்தையைப் பார்த்தாள். நடந்தது என்னவென்று இப்பொழுதுதான் அவள் மூளையில் கொஞ்சங் கொஞ்சமாய் ஏறிக்கொண்டிருந்தது.

அவள் பயந்தபடி சேகரை நெருங்கினாள். அவன் கையைப் பிடித்துக்கொண்டு— ''நிஜமாய் அவர் செத்துட்டாரா?'' நம்பமாட்டாமல் கேட்டாள்.

சேகர் 'ஆம்' என்று தலையாட்டினான்.

''நான் என்ன பண்ணுவேன். டை நழுவி கீழே விழுந்ததால், இழுத்து கெட்டியாய் பிடித்துக் கொண்டேன். அதானே?''

''அதுதான் அவர் உயிரை எடுத்து விட்டது.''

''ஜான்...'' வெறித்துப் போய் பார்த்தாள். லலிதா சட்டென்று சேகர் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''ஜான்! எனக்கு—எனக்கு பயமாய் இருக்கு. இப்ப என்ன பண்றது?''

காய்ந்த சருகைப் போல நடுங்கிக் கொண்டே கேட்டாள்.

சேகர் பதில் பேசவில்லை. அவனுக்கு எல்லாம் ஸ்தம்பித்துப் போய் விட்டாற்போல இருந்தது.

''ஜான்! எனக்கு பயமாயிருக்கு. பைத்தியம் பிடித்து விடும் போல இருக்கு. இங்கிருந்து என்னை வேறு எங்கேயாவது அழைத்துக் கொண்டு போய் விடுங்கள்'' என்றாள் அழுகுரலுடன்.

''எங்கே போவாய்? எங்கே போனாலும் போலீசார் நம்மைத் தொடர்ந்து வருவாங்க.''

''ஜான்! உங்களுக்குப் புண்ணியமாய் போகட்டும். உங்கள் காலைப் பிடிக்கிறேன். என்னை எங்கேயாவது சீக்கிரமாய் அழைத்துக் கொண்டு போய் விடுங்கள். போலீசாரிடம் ஒப்படைத்து விடாதீங்க. தூக்கு தண்டனை விதித்துவிடுவாங்க. ஜான்! ஜான் என்னை எங்கேயாவது கூட்டிட்டுப் போங்க.'' அவன் முழங்கால் களைக் கட்டிக் கொண்டு ஹிஸ்டீரியா வந்தவளைப் போல அழத் தொடங்கினாள்.

சேகர் வாயடைத்துப் போனவனாய் அப்படியே நின்று கொண்டு லலிதாவைப் பார்க்கத் தொடங் கினான்.

சுமார் அரை மணிக்குப் பிறகு—

அழுது கொண்டேயிருந்த லலிதாவை பலவந்த மாய் தூக்கி நிறுத்தி, டைனிங் டேபிளுக்கருகில் இருந்த நாற்காலியில் உட்கார வைத்தான். லலிதா இன்னும் அழுது கொண்டேயிருந்தாள்.

''வீட்டில் காலியான பெட்டி ஏதாவது இருக்கா லலிதா?''

''இருக்கு! அந்த அறையில் பீரோவுக்கு மேல்'' அழுதுகொண்டே சொன்னாள்.

சேகர் பெட்டியை எடுத்து வந்து அதில் இரும்புப் பெட்டியிலிருந்த நகைகளை அடுக்கிக்கொண்டான். கட்டிலுக்கடியில் தள்ளியிருந்த காகிதங்களையெல்லாம் எடுத்து அறை முழுவதும் பறக்கவிட்டான். இரும்புப் பெட்டியின் அறையை இழுத்துக் கீழே போட்டான்.

கீழே கிடந்த தன் கைக்குட்டையும், டையையும் எடுத்து ஜேபியில் வைத்துக்கொண்டான். அவ்வறையில் நிறைய இடத்தில் தன் விரலடையாளங்கள் படிந்திருக்கும் என்று தெரிந்தது. எங்கெல்லாம் தான் கை வைத்தானோ அங்கெல்லாம் கைக்குட்டையால் துடைத்தான்.

ஒருக்கால் தென்பட்டாலும் பரவாயில்லை என்ற தைரியம் ஏற்பட்டது. தன்னைப் பிடிக்க யாராலும் முடியாது தேவைப்பட்டால் தன்னை ஏழ்கடல்களுக்கு நடுவே ஒற்றை ஸ்தம்ப மேடையில் ஒளித்து வைத்தாற் போல யார் கண்ணிலும் படாதவாறு மாயம் பண்ணக் கூடிய திறமை அவன் மேலிடத்தாருக்கு இருந்தது.

பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியே வந்த அவன் ஒரு வினாடி விஸ்வநாதனைப் பார்த்தான். அவன் இதயத்தைப் பிசைந்தெடுத்தாற்போலிருந்தது. இனம் புரியாத வேதனை ஏற்பட்டது. தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு அறைக் கதவைச் சாத்திவிட்டு வெளியே வந்தான்.

சிவந்த கண்களுடன் பார்த்துக்கொண்டிருந்த லலிதா அவனிடம் ஓடி வந்து கையைப் பிடித்துக் கொண்டு அப்பாவியாய் கேட்டாள்.

"ஜான்! நிஜத்தைச் சொல்லுங்கள். என்னை போலீசார் பிடித்துக்கொண்டு விடுவாங்க இல்லையா? பெற்ற தந்தையைக் கொன்ற பாதகி என்று எல்லோரும் என் மீது காரி உமிழ்வார்கள் இல்லையா? ஜான்,

கடவுள் சாட்சியாய் சொல்கிறேன், அவர் மீது எனக்குக் கோபமும் எரிச்சலும் இருந்தது நிஜந்தான். ஆனால் கொல்ல வேண்டும் என்ற துவேஷம் ஒரு நாளும் ஏற்பட்டதில்லை எனக்கு. இது எதிர்ப்பாராமல் நிகழ்ந்து விட்டது. பயத்தால் மூளை கலங்கிப்போய் என்ன பண்ணுகிறோம் என்றே தெரிந்துகொள்ளாமல் போய்விட்டேன். ஜான், நீங்களாவது என்னை நம்புகிறீர்களா?''

''லலிதா! வீணாய் நீ மூளையைக் குழப்பிக் கொள்ளாதே. நடந்ததென்னவோ நடந்துவிட்டது. அதை மாற்ற நம்மால் முடியாது. இது எதேச்சையாய் நடந்தது என்று நாம் சொன்னாலும் யாரும் நம்ப மாட்டாங்க. போலீசார் உன் பக்கமே வராமல் பார்த்துக் கொள்கிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. போதுமா? மொதல்ல, நாம்ப இங்கிருந்து எவ்வளவு சீக்கிரமாய் வெளியே போகிறோமோ அவ்வளவு நல்லது.''

சேகர் கையிலிருந்த பெட்டியைக் காட்டி சொன்னான்— ''இந்த பெட்டியில் என்ன இருக்கு தெரியுமா? நகைகள்! ஒன்றுகூட பாக்கியில்லாமல் அத்தனை நகைகளையும் எடுத்துக் கொண்டுவிட்டேன். நீ என்னோடு வந்து விடு. என் அறையில் உட்கார்ந்து நிதானமாய் யோசிப்போம். வீட்டில் யாரோ திருடன் வந்து அவரைக் கொன்றுவிட்டாங்க என்றுதான் நினைப்பாங்க எல்லோரும். வா, உங்கள் வீட்டு காம்பவுண்டுச் சுவரையொட்டி கொல்லைப் பக்கமாய் சின்ன சந்து இருக்கிறது இல்லையா?'' என்று லலிதாவின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தான்.

அதுவே வேறு சமயமாய் இருந்திருந்தால் என்றுமே எங்கள் வீட்டிற்கு வந்திராத உங்களுக்கு கொல்லைப் பக்கத்தில் சின்ன சந்து இருப்பது எப்படித் தெரியும் என்று கேட்டிருப்பாள். ஆனால் தற்சமயம் இருந்த

ஆபத்தில் அந்த விஷயமே ஞாபகத்திற்கு வரவில்லை. இருவரும் கொல்லைக் கதவைத் திறந்துகொண்டு புழக் கடைக்கு வந்தார்கள். அவ்வெல்லையெல்லாம் சப்போட்டா, மா, பலா முதலிய மரங்கள் நிரம்பி யிருந்தன.

காம்பவுண்டுச் சுவற்றுக்கருகில் வந்ததுமே சேகர் சட்டென்று ஏதோ ஞாபகத்திற்கு வந்தவனாய் நின்று விட்டான். ''லலிதா! இரு! நீ இங்கேயே நின்று கொண்டிரு. நான் இதோ வரேன், வாசல் கதவின் தாழ்ப்பாளைத் திறந்துவிட்டு, முன் ஹாலில் விளக்கைப் போட்டுவிட்டு வரேன். நாம்ப போன பிறகு இந்த வீட்டிற்குள் யார் நுழைகிறாங்களோ அவங்களுக்கு மரணம் வந்து சூழும்'' என்று பெட்டியை லலிதாவின் கையில் தந்துவிட்டு ஓட்டமாய் போனான்.

லலிதா சிலையாய் நின்றாள். இந்த நிலைமையில் அவனோடு ஓடிப்போய் விடுவதே சிறந்ததாய் தோன்றிற்று. தந்தையின் நினைவு வந்ததுமே அவள் உடம்பு சிலிர்த்தது. சேகர் திரும்பி வந்தான். லலிதா பெட்டியை அவனிடம் தந்துவிட்டு—

''ஜான்! ஒரு நிமிஷம் இருங்கள். நானும் இதோ வரேன். என் அறை பீரோவில் நகைகள் இருக்கின்றன. அவைகளைக்கூட கொண்டு வரேன்.''

''சீக்கிரமாய் வா.''

''ஒரே நிமிஷத்தில் வந்துவிடுவேன்'' லலிதா போகத் திரும்பினாள். ஜான் தடுத்துவிட்டு சொன்னான்—

''அப்படீன்னால் பார், நான் முதலில் போய் தெருக் கோடியில் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கும் டாக்ஸியை இந்த சந்துக் கோடிக்குக் கொண்டு வந்து நிறுத்துகிறேன். நீ சீக்கிரமாய் வந்து விடு.''

சேகர் ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மெதுவாய் அந்த பக்கமாய் இறங்கி நடக்கத் தொடங்கினான். அந்த வரிசையில் இருந்த எல்லோர் வீட்டுக் கொல்லையிலும் சுவர் இருந்தது. எல்லா வீடுகளிலும் உயரமான மரங்கள் இருந்தன. அது பாதுகாப்பாய் இருந்தது.

18

சேகர் மெயின் ரோடிற்கு வந்தான். சிங் வெயிட் பண்ணிக்கொண்டிருந்த டாக்ஸி தொலைவில் நின்று கொண்டிருந்தது. "டாக்ஸி" முன் பின் அறிமுகமில்லாத பயணியைப்போல கத்தினான் சேகர்.

சிங் திரும்பி பார்த்தான். சேகர் கையை ஆட்டவே, சிங் டாக்ஸியை சேகருக்கருகில் கொண்டு வந்து நிறுத்தினான். சேகர் சட்டென்று ஏறி உட்கார்ந்து கொண்டான். சிங் காரை ஸ்டார்ட் பண்ணப் போனான். "சிங்! நாம்ப ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணணும்."

"எஸ் சார்."

சிங் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினான். டாக்ஸிக்கு முன்னால் வந்து பேனெட்டைத் தூக்கி உள்ளே ஏதோ பழுது பார்ப்பது போல நின்றுகொண்டான். வீதியில் யாராவது பார்த்தால் போய்க்கொண்டிருந்த டாக்ஸி நின்றுவிட்டாற்போலவும், ரிப்பேர் பண்ணிக்கொண்டிருப்பது போலவுந்தான் தென்படும். மூன்று நிமிஷங்கள் ஆகிவிட்டன. தான் இருந்த சந்து பக்கமாய் பொறுமையின்றி பரபரப்புடன் லலிதாவின் வரவுக்காகக் காத்திருக்கத் தொடங்கினான்.

லலிதா மளமளவென்று உள்ளே வந்தாள். பீரோவிலிருந்த நகைகளை எடுத்துப் பையில் வைத்துக்

கொண்டாள். கடைசி தடவையாய் பார்ப்பது போல அவ்வறையைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவளுக்கு அழுகை அடக்க முடியாமல் வந்துவிட்டது. முடிந்து விட்டது. இந்த வீட்டிற்கும் அவளுக்கும் இருந்து வந்த பந்தம் முடிந்து போய்விட்டது. துக்கம் பொங்கிக் கொண்டு வரவே, லலிதா விளக்கை அணைத்துவிட்டு அப்பால் வந்தாள்.

அதற்குள் கீழேயிருந்து ''ரஞ்சிதா'' என்ற குரல் கேட்டது.

வந்தது வேறு யாரோவாய் இல்லாமல் ரேகாவாகவே இருந்தது. லலிதாவுக்கு கொஞ்சம் உயிர் வந்தாற்போல இருந்தது. ரேகாவாய் இருந்தால் அவ்வளவாய் பயப்பட வேண்டியதில்லை. ஆனாலும் இந்த வேளை கெட்ட வேளையில் ரேகா வந்தது எவ்வளவு வினோதம்!

ரேகா ரஞ்சிதாவை இரண்டு மூன்று தடவை கூப்பிட்டுப் பார்த்துவிட்டு, கதவை வெருமே சாத்தி விட்டு, விஸ்வநாதனின் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

லலிதா இரு கைகளாலும் திரைச்சீலையை அழுத்த மாய் பிடித்துக்கொண்டாள். நாக்கு உலர்ந்து போன வளாய், மூச்சை இழுத்து அடக்கிக்கொண்டு, காது களைத் தீட்டிக்கொண்டு காத்திருக்கத் தொடங்கினாள்.

இரண்டு நிமிஷங்கள் கழிந்தன. ரேகாவின் வீலென்ற கத்தல் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு வீடு முழுவதும் எதிரொலித்தது.

அந்த கத்தலைக் கேட்டதுமே லலிதாவுக்குப் போய்க்கொண்டிருந்த உயிர் திரும்பி வந்தாற்போல ஆயிற்று.

திரைச்சீலையை விட்டுவிட்டு, மளமளவென்று இரண்டு இரண்டு படிகளாய் இறங்கி வேடனைப்

பார்த்த மான் குட்டியைப் போல தாவிக்கொண்டே கொல்லைப் பக்கம் வந்துவிட்டாள். இன்னும் நாலடி எடுத்து வைத்தால் மூச்சுவிட முடியாமல் நினைவு தப்பி விழுந்துவிடுவோம் போலிருக்கவே, பயந்துபோன லலிதா ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக மார்பின் மீது கையை வைத்துத் தடவிக்கொண்டு வேறு வழி யில்லாமல் ஒரு நிமிஷம் நின்றாள்.

மூச்சு விட்டுக்கொள்வதற்காக ஒரு நிமிஷம் நின்ற லலிதாவுக்கு ஆயிரம் யோசனைகள் ஒரேயடியாய் வந்து சூழ்ந்துகொண்டன.

லலிதாவின் மூளை சுறுசுறுப்பாய் வேலை பண்ணத் தொடங்கிற்று. கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்த நரம்புகள் திரும்பவும் சுவாதீனத்திற்கு வந்து சேர்ந்தாற் போலிருந்தது.

அவள் எதற்காக ஓடிப்போக வேண்டும்? ஓடிப் போய் சாதிக்கப்போவது என்ன? இந்த நகைகள் தனக்கு எவ்வளவு நாள் சோறு போட்டுவிடும்? அதற்கப்புறம் தன் வாழ்வு என்னாவது? எல்லா சுகங் களையும் துறந்துவிட்டு, எங்கோ கண்காணாத இடத்தில் இருட்டு வாழ்க்கை வாழவேண்டும் அவள். அந்த துரதிர்ஷ்டத்தை எதற்காக தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்? இத்தனைக்கும் காரணம் ரேகா! இந்த ரேகா மூலமாய்தான் நிலைமை இப்படி மோசமாகி விட்டது. தான் ஓடிப்போனால் சொத்தெல்லாம் ரஞ்சிதாவுக்கே போய்ச் சேரும். அதற்கு கார்டியனாய் இந்தப் பாவி ரேகா எல்லா போகங்களையும் அனுபவிப் பாள். எந்த தப்பும் பண்ணாத தனக்கு ஏன் இந்த தண்டனை?

கூடாது. அப்படி நடக்கும்படியாய் விட்டுவிடக் கூடாது. கடவுள் தன்னை மன்னித்துவிட்டார்.

அதனால்தான் ரேகாவை இந்தச் சமயத்தில் இந்த வீட்டிற்குள் நுழையும்படியாய் அனுப்பி வைத்திருக்கிறார். ரேகாவின் பாவம் பழுத்துவிட்டது. ரேகாவின் மேலிருந்த துவேஷம், பகை, பழி எல்லாமாய் சேர்ந்து லலிதாவுக்கு தைரியத்தை அளித்தன.

இதில் தான் பயுப்படவேண்டியது எதுவும் இல்லை. கொஞ்சம் விழிப்பாய் இருந்தால் போதும். தனக்கு ஒன்றுமே தெரியாதது போலவும், இப்பொழுதுதான் வருவதுபோலவும் வாசலிலிருந்து வருவாள். தந்தையின் மரணத்தை அப்பொழுதுதான் பார்ப்பது போல பார்ப்பாள்.

தான் செய்த குற்றத்தை ரேகாவின் தலையில் கட்டி விடலாம் என்ற அவகாசம் கண்ணெதிரே தென்படத் தொடங்கியதும் லலிதாவின் உடம்பில் புதிய ரத்தம் வேகமாய் பாய்ந்தாற் போலிருந்தது. அந்த ரத்தத்தில் ஓடிக்கொண்டிருந்த பீதியின்மையும், விடாப்பிடிவாதமும், துணிச்சலும் சேர்ந்து லலிதாவைக் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வரை பயமுறுத்திக்கொண்டிருந்த கோழைத்தனத்தை இருந்தவிடம் தெரியாமல் விரட்டியடித்துவிட்டன.

லலிதா மெதுவாய் உள்ளே வந்து கொல்லைக் கதவைச் சாத்திவிட்டாள். சந்துக் கோடியில் ஜான் தனக்காகக் காத்துக்கொண்டிருப்பான் என்ற ஞாபகம் வந்தது. இருக்கட்டும், கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு அவனே போய்விடுவான். வாசலிலிருந்து உள்ளே நுழைந்தாற் போல லலிதா தந்தையின் அறை வாசலுக் கருகில் வந்து நின்றாள்.

அறைக்குள் குழப்பத்துடன், பைத்தியம் பிடித்தவளைப் போல அவர் கால்களையும் கைகளையும் உலுக்கி, அவரிடம் இன்னும் எந்த மூலையிலாவது

உயிர் ஒட்டிக் கொண்டிருக்குமோ என்று பார்த்துக் கொண்டிருந்த ரேகா காலடிச் சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

வாசலில் லலிதாவைக் கண்டதுமே, ''லலிதா! அப்பா!'' என்று சிறு பெண்ணைப் போல அழுது கொண்டே வந்து லலிதாவைக் கட்டிக் கொண்டு விட்டாள்.

ஒரு வினாடி லலிதா தன்னையறியாமல் ரேகாவை மார்போடழுத்திக் கொண்டாள். துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. ஆனால் அதற்குள்ளாகவே தன்னைச் சமாளித்துக் கொண்டுவிட்டாள்.

ரேகாவை ஒரே தள்ளலாய் அப்பால் பிடித்துத் தள்ளிவிட்டாள். தந்தையின் கட்டிலுக்கருகில் போய் அவரைப் பார்த்தாள். எந்த சலனமும் இல்லாமல் கட்டையாய் இருந்த அவர் உடலைப் பார்த்ததுமே லலிதாவின் முதுகுத்தண்டு சிலிர்த்தது.

கீழே கிடந்த காகிதங்களையும் திறந்து கிடந்த இரும்புப் பெட்டியையும் அப்பொழுது தான் பார்ப்பது போல வினோதமாய் பார்த்தாள். பயப்படுவது போல நடித்தாள். கலங்கிப் போனாற்போல நடித்தாள். உடனே இரு கைகளையும் மார்பில் வைத்துக்கொண்டு, ''ஐயோ! நகைகள்! கொள்ளை! கொலை'' என்றாள் உரக்க.

ரேகா லலிதாவிடம் ஓடிவந்தாள். ''ஆமாம் லலிதா! யாரோ இந்த வீட்டுக்குத் திருட வந்திருக்காங்க. அவங்களேதான் அப்பாவை ஏதோ செய்திருக்காங்க.'' லலிதா ரேகாவை நோக்கித் திரும்பினாள். அம்பு போன்ற கூரிய பார்வையுடன் கைகளை நீட்டிக் கழுத்தை அழுத்தமாய் பிடித்துக் கொண்டே, ''நீ, நீ... நீதான் இதையெல்லாம் பண்ணியிருக்கிறாய் ராட்சசி!

நாங்கள் யாரும் வீட்டில் இல்லாதது உனக்கு நல்ல அவகாசமாகிவிட்டது. திருடி, அவரைக் கொன்றுவிட்டு, மெதுவாய் நழுவலாம் என்று பார்த்தாய். சமயத்தில் நான் வந்துவிட்டேன்.''

ரேகா பலமாய் திமிறியபடி லலிதாவின் கைகளை அரும்பாடுபட்டு விலக்கிக் கொண்டாள்.

''லலிதா! உனக்கு புத்தி இல்லை. எனக்கு ஒண்ணுமே தெரியாது நான் இப்பொழுதுதான் வந்தேன். நான் வரும்போது இப்படி இருந்தது.'' என்றாள் பயந்து போய் கெஞ்சினாற்போல. லலிதா காதில் போட்டுக் கொள்ளவில்லை. ரேகாவின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டே தந்தையின் அறையை விட்டு வெளியே வந்தாள். தந்தையின் அறைக்குப் பக்கத்திலிருந்த கெஸ்ட் ரூமிற்குள் ரேகாவைத் தள்ளி விட்டுக் கதவைச் சாத்தித் தாழிட்டுவிட்டாள்.

''லலிதா! கதவைத் திற''—ரேகா கதவை தட்டிக் கொண்டேயிருந்தாள்.

''திறக்கிறேன், போலீசார் வந்த பிறகு'' வெறுப்பாய் பதிலளித்தாள்.

''லலிதா! என்னை வெளியே விடு! சத்தியமாய் எனக்கு ஒன்றுமே தெரியாது லலிதா!''

லலிதா ரேகாவின் கத்தலைப் பொருட்படுத்தவில்லை. ரேகாவை அவ்வறையில் கைதியாய் சிறைப்படுத்திய பிறகு மனதிலிருந்து மலையத்தனை பாரம் நீங்கிவிட்டாற்போல இருந்தது.

ஒரு முறை மூச்சை இழுத்து விட்டுக்கொண்டாள். முகத்தில் படிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். அதற்கு மேல் தாமதிக்கவில்லை, மாடிக்கு ஓடிப் போய் பையில் எடுத்து வைத்துக் கொண்டிருந்த நகை

களை எடுத்து பீரோவிற்குள் பழைய இடத்திலேயே வைத்துவிட்டு, மளமளவென்று கீழே இறங்கி வந்தாள். தந்தையின் அறைக்குப் போய் போனை எடுத்து விரல்கள் நடுங்க, நம்பரை டயல் பண்ணத் தொடங்கினாள்.

''ஹலோ'' மறுமுனையிலிருந்து குரல் கேட்டது.

''ஆன்ட்டீ.''

''யாரு? லலிதாவா?''

''ஆமாம் ஆன்ட்டீ''— குரலில் அழுகையை வர வழைத்துக் கொண்டாள்.

''என்னம்மா? அப்பா வரேன்னார் என்றாயே, வரவேயில்லையே?''

''ஆமாம் ஆன்ட்டீ. உங்களிடம் புறப்பட்டு விட்டு அப்புறம் போகாமல் தவிர்த்துக் கொண்டு விட்டார். வீட்டிலேயேதான் இருந்தார். நான் பார்க்குப் போயிருந்தேன் ஆன்ட்டி. நான் திரும்பி வந்துப் பார்த்தபோது...''

லலிதா சட்டென்று ஓவென்று கதறினாள்.

''லலிதா! என்ன? என்னவாச்சு?'' கலங்கிப் போய் கேட்டாள் அவள்.

''ஆன்ட்டீ அப்பா...'' லலிதா அழுதுகொண்டே வார்த்தைகளை விழுங்கிவிட்டாள்.

''அப்பாவுக்கு என்னம்மா? என்னவாச்சு? உன்னை ஏதாவது திட்டினாரா?''

''இல்லை.''

''மறுபடியும் மார்வலி வந்துவிட்டதா?''

''இல்லை ஆன்ட்டி. அவர்...அவர் போய்விட்டார்.''

''ஆ! என்னது! ஐயோ ராமா! இரு ஒரு நிமிஷம், உங்க மாமாவைக் கூப்பிடுகிறேன்'' என்ற அவள்,

''ஏங்க? குடி மூழுகிவிட்டது. சட்டென்று வாங்க'' என்று கத்தியது கேட்டது.

அவர் வந்தார். ரிசீவரை எடுத்து, ''என்னம்மா லலிதா? நிஜமா?'' என்றார் கலக்கத்தோடு.

''ஆமாம் அங்கிள்! நான் பார்க்கிலிருந்து வந்த போது வீட்டில் ரேகா மட்டுமே இருந்தாள். ரஞ்சிதா, டிரைவர் யாருமே இல்லை. இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது. நகை, பணம் எதுவும் இல்லை. அப்பா கட்டிலில் உயிரில்லாமல் கிடந்தார்.''

''என்னது?''

லலிதா தேம்பிக்கொண்டே சொன்னாள், ''அங்கிள்! இதெல்லாம் எனக்கு என்னவோ தீயக் கனவாய் தோன்றுகிறது. நீங்களும் ஆன்ட்டியும் சீக்கிரமாய் வாங்க. எனக்கு ரொம்ப பயமாய் இருக்கு. பயத்தால் உயிரே போய்விடும் போல இருக்கு.''

''இதோ, பத்து நிமிஷத்தில் வரேன்'' அவர் போனை வைப்பதற்கு முன்னால் கேட்டார். ''லலிதா! இன்னும் யாருக்காவது போன் பண்ணினாயா?''

''இல்லை, முதலில் உங்களுக்குதான் பண்ணினேன்.''

''சரி, நல்ல காரியம் செய்தாய். இதோ வரோம். நாங்கள் வரும்வரை அங்கே எந்த பொருளையும் தொடாதே.''

''சரி அங்கிள்'' பணிவாய் பதிலளித்தாள்.

கால்மணி நேரங்கழித்து மாதவனும் அவன் மனைவியும் வந்து சேர்ந்தார்கள்.

லலிதா அவர் மனைவியை ஓடிப்போய் கட்டிக் கொண்டுவிட்டாள். நினைவு தப்பி விழுத்தெரிந்தாற் போல நடித்தாள். அவர்கள் அவளைப் பிடித்துக் கொண்டு உள்ளே அழைத்து வந்து சோபாவில் படுக்க வைத்தார்கள்.

இரண்டு நிமிஷங் கழித்து லலிதா அப்பொழுதுதான் விழிப்பு வந்தாற்போல கண்களைத் திறந்தாள். பயந்துப் போனவளைப் போல இமைகளைப் படபடத்தபடி பார்த்தாள்.

''லலிதா! என் கண்ணே! எவ்வளவு கஷ்டம் வந்து விட்டதம்மா உனக்கு. இதுவரை யாருக்குமே இப்படிப் பட்ட கஷ்டம் வந்து பார்த்ததில்லையம்மா'' என்றாள் லாயரின் மனைவி. உண்மையான வருத்தத்துடன் லலிதாவின் தலையை மார்போடழுத்திக் கொண்டாள்.

அவள் மடியில் தலை வைத்துக்கொண்டே லலிதா மிகச் சோர்வுடன் கிணற்றிற்குள்ளிருந்து பேசுவதுபோல சொன்னாள்—

''அங்கிள்! எனக்கும் அப்பாவுக்கும் கார் விஷயமாய் தகராறு வந்ததால் நான் காரில் போவதில்லை. பொழுது போகாததால் ரிக்ஷாவில் பார்க்குக்கு கிளம்பிய நான் வழியில் என் சிநேகிதன் ஒருத்தனைப் பார்த்தேன். அவன் காரில் அவன் அறைக்குப்போய் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு பொழுது சாய்ந்து விட்டதால் அவன் என்னைக் காரில் கொண்டுவந்து விட்டு விட்டு போய்விட்டான். உள்ளே வரவில்லை. ஏனென்றால் அப்பாவுக்கும் அவனுக்கும் ஒத்துக்காது. நான் அவனோடு சுற்றினால் என்னைக் கொன்று போட்டுவிடுவதாய் சொல்லியிருந்தார் அப்பா. நான் உள்ளே வந்தபொழுது ரேகா தந்தையின் அறையிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தாள். ஆள் ஏதோ

போல இருந்தாள். பயந்து போனவளாய் அங்கிருந்து ஓடிப் போய்விடத் தயாராய் இருப்பது போல தோன்றிற்று. நான் கூப்பிட்டதைப் பார்த்துவிட்டு பயந்து போய்விட்டாள். கதவுகளையெல்லாம் ஏன் இப்படி சாத்தியிருக்கிறாய் என்று கேட்டதற்கு பதில் சொல்லாமல் திருதிருவென்று விழித்தாள்.

''ரேகாவின் போக்கைப் பார்த்து எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. திரும்பவும் நாங்கள் யாரும் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து எதையாவது திருடிக்கொண்டு போகும் உத்தேசமாய் இருக்குமோ என்றெண்ணிக் கொண்டேனே தவிர, இவ்வளவு கொடுமையாய் நடக்கும் என்று எண்ணியிருக்கவில்லை.

''நான் உடனே ரேகாவின் கையைப் பிடித்து, 'ஏன் இப்படி பயந்து பயந்து பதுங்கிக்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டேன். அவள் பதில் சொல்லவில்லை. என்னிடமிருந்து திமிறி கைகளை விடுவித்துக்கொள்ள முயன்றாள். நான் உடனே தந்தையின் அறைக்கு அவளை இழுத்துக்கொண்டு வந்தேன்.

''தந்தையின் அறைக்குள் நுழைந்ததும் எனக்குத் தலையே சுற்றத் தொடங்கிவிட்டது. இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது. காகிதங்கள் எல்லாம் கீழே விழுந்து கிடந்தன. இங்கே இவ்வளவு நடந்தபோதிலும் அவர் தூங்கிக்கொண்டிருக்கிறாரே என்றெண்ணி ஆச்சரியப் பட்டேன். கிட்டேபோய் பார்த்தபொழுது நான் பயந்து விட்டேன். என் இதயம் வெடித்துவிட்டது. அதற்குள் ரேகா என் கைகளை விடுவித்துக்கொண்டு ஓடினாள்.

''எனக்கு என்னவாயிற்றென்று தெரியாது. ஆனால் நானும் அவளைத் துரத்திக்கொண்டு ஓடினேன். அவள் புடவைத் தலைப்பு கைக்கு எட்டிற்று. அவளைப்

பிடித்துக்கொண்டு விட்டேன். இருவரும் போராடினோம்.

''ரேகா என் மென்னியைத் திருகப் போனாள். எனக்கு பயத்தால் வெறிபிடித்த பலம் வந்துவிட்டது. அவளை அடித்துவிட்டு அந்த அறையில் தள்ளிக் கதவைச் சாத்திவிட்டேன், நகை போனதும், அப்பா போனதும் எனக்குத் தீய கனவாய் தோன்றுகிறது. இவைகள் பொய் என்று சொல்லுங்கள் அங்கிள்! எனக்கு விழிப்பை உண்டாக்குங்கள். உங்களுக்குக் கோடிப்புண்ணியம்'' லலிதா ஓவென்று கதறிவிட்டாள்.

''என்னது? இப்பொழுது அந்தப் பெண் அந்த அறையில்தான் இருக்கிறாளா?'' லாயரின் மனைவி ஆச்சரியமடைந்தவளாய் கேட்டாள்.

''பின்னே, எந்த சப்தத்தையும் காணோமே?'' அவர் எழுந்து அவ்வறையை நோக்கிப்போனார்.

''ஏங்க, நீங்க இருங்க. அப்படிப்போய் கதவைத் திறந்து விடலாமா? அதன் கையில் கத்தி கித்தி இருக்குமோ, துப்பாக்கி இருக்குமோ யார் கண்டது? இவங்க எல்லா ஏற்பாடுகளோடுதான் வந்திருப்பாங்க. நில்லுங்க. நீங்க கதவைத் திறக்காதீங்க'' அவர் மனைவி கலக்கத்துடன் கத்தினாள். அவர் தலையாட்டி விட்டு திரும்பி வந்துவிட்டார்.

''இப்ப என்ன பண்ணலாம்?'' தாமதமாக ஆக எங்கே நிலைமை விபரீதமாகிவிடுமோ என்றஞ்சிய அவர் மனைவி கணவனைக் கேட்டாள்.

''வேறென்ன பண்றதுக்கு இருக்கு? உடனே போலீசுக்கு ரிபோர்ட் தரவேண்டியதுதான். அவர்கள் வந்ததும் நடந்ததையெல்லாம் சொல்ல வேண்டியதுதான்.''

போலீஸ் என்றதுமே லலிதாவின் முகம் வெளுத்து விட்டது. போலீஸ் வந்தால் ஆயிரம் கேள்விகள் கேட்பார்கள். சந்தேகத்தால் உயிரை எடுத்துவிடுவார்கள். இருக்கிற மூளைகூட போய்விடும். ஆனால் வேண்டாம் என்று சொல்வதற்கு அவளுக்குத் துணிச்சல் இல்லை. 'தன் மீது சந்தேகத்திற்கிடமாகிவிடும் என்று பயந்தாள்.

அவர் போன் பண்ணுவதற்காக போனவர் நின்று லலிதாவை நோக்கித் திரும்பினார். "லலிதா! இப்ப நீ சொன்னதெல்லாம் நிஜந்தானா? அப்புறமாய் இதில் ஏதாவது துளி பொய் இருப்பதாய் ருசுவானால் இது நம் எல்லோருடைய கழுத்தையும் சுற்றிக்கொண்டுவிடும்."

"இல்லை அங்கிள். எல்லாம் நிஜந்தான்" என்றாள் லலிதா ஹீனஸ்வரத்தில்.

மாதவன் போன் பண்ணுவதற்காக அறைக்குள் போய்க்கொண்டிருக்கையில் பின்னாலிருந்து "அங்கிள்" என்று சோர்வுடன் கூப்பிட்டாள்.

"என்ன?" அவர் திரும்பினார்.

"இப்படி வாங்க."

அவர் கிட்டே வந்தார். அவரை தீனமாய் பார்த்துக் கொண்டே சொன்னாள் லலிதா,

"அங்கிள்! நீங்கள் என் தந்தையைப் போன்றவர். இந்தச் சமயத்தில் பொய் சொல்றது நல்லதில்லை. நான் ஃபிரெண்ட் என்று சொன்னேனே அவரைப் பற்றி வெளியே சொல்றதுக்கில்லை. நாங்களிருவரும் திரும்பவும் சந்தித்துக் கொண்டதாய் சொன்னால் அவர் மனைவி ரொம்ப ரகளைப் பண்ணிவிடுவாள். என்னோடு திரும்பவும் பேசினால் தங்கையைக்கொண்டு டைவர்ஸ் பண்ண வைத்துவிடுவேன் என்று அவர்

அண்ணன் அப்பொழுதே சொல்லிவிட்டார். அந்த அண்ணனைக் கண்டால் அவருக்கு ரொம்ப பயம். ஒருக்கால் நீங்கள் யாராவது ருசுவுக்காகக் கேட்டால் நான் அவரிடம் வரவேயில்லை என்று டபாய்த்து விடுவாரோ என்னவோ? எனக்காக வீணாய் அவர் தன் குடும்பத்தைக் கெடுத்துக்கொள்ளமாட்டார். தெய்வமே! நான் போயும் போயும் இன்றைக்குப் பார்த்துதானா அவரிடம் போகணும்? எவ்வளவு துரதிர்ஷ்டம்?''

லலிதா மாதவனின் மனைவியின் கையைப்பிடித்துக் கொண்டாள். ''ஆன்ட்டீ! எனக்கொண்ணும் புரியலை. போலீஸ் வந்தால் ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாமல் எதையாவது உளறிவிடுவேனோ என்னவோ? அவங்க என்னை சந்தேகப்படுவாங்க! எங்கப்பாவுக்கும் எனக்கு மிடையே இருந்து வந்த மனஸ்தாபங்களைப் பற்றி ஊரே அறியும். இதெல்லாம் என் மூலமாய்தான் நடந்த துன்னு நினைச்சுக்கமாட்டாங்களா? ஆன்ட்டி, உங்களுக்குக் கோடிக் கும்பிடுகள். நான் செய்யாத தப்பு என் கழுத்தைச் சுற்றிக்கொண்டு விடாமல் நீங்கள் தான் பார்த்துக்கணும். எனக்கு அப்பாவும் அம்மாவும் நீங்கள்தான். என்னை இந்த ரகளையிலிருந்து மீட்கிற பாரம் உங்களைத்தான் சேர்ந்தது.'' லலிதா அழுது கொண்டே அவள் மார்போடு ஒட்டிக்கொண்டாள்.

லலிதா சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டதுமே கணவன் மனைவி இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக்கொண்டார்கள்.

லலிதா சொன்ன அந்த ஃபிரெண்ட் யார்? டாக்டர் கிஷோராய்தான் இருப்பான். அவனுக்கும் லலிதாவுக்கு மிடையே சமீபத்தில் நடந்த விவகாரங்களையும். கிஷோரின் மனைவி, குழந்தைகளைக் கூட்டிவந்து விஸ்வநாதனுக்கு முன்னால் செய்த ரகளையையும் அவர்கள் அறிவார்கள்.

"அப்படீன்னால் இந்த விஷயத்தைப் பற்றி யோசிக்க வேண்டியதுதான்."

மாதவன் வந்து திரும்பவும் உட்கார்ந்துகொண்டு யோசிக்கத் தொடங்கினார். அவருக்கு ஏனோ லலிதா சொன்னதெல்லாம் உண்மை இல்லை என்று தோன்றிற்று. அனுபவத்தால் தலை நரைத்துப் போன அவருக்கு லலிதா சொன்னதெல்லாம் உண்மைதான் என்ற நம்பிக்கை தோன்றவில்லை.

"ஏதாவது ஒண்ணு இந்தப் பொண்ணு ஆபத்தில் சிக்கிக்காமலிருக்க சட்டென்று யோசித்துச் சொல்லுங்கள்" என்றாள் அவர் மனைவி.

தன் மனைவிக்கு லலிதாவின் மீது இருந்த பாசத்தை அவர் அறிவார். தற்போதைக்கு லலிதாவின் சார்பாய் நிற்பதற்கே அவர் தீர்மானித்துக்கொண்டார். கொஞ்ச நேரம் தீர்க்காலோசனையில் மூழ்கிவிட்டு கடைசியில் அவர் இவ்வாறு சொன்னார்—

"இதப் பார்! நீ எங்கேயும் போகவில்லை. எந்த ஃபிரெண்டையும் சந்திக்கவில்லை. வீட்டில் பொழுது போகாததால் நேராய் எங்கள் வீட்டிற்கு வந்தாய். நாங்கள் உன்னைக் கொண்டு வந்து விடுவதற்காக உங்கள் வீட்டிற்கு வந்தோம். வாசல் கதவு திறந்திருந்தது. உள்ளே விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. கூப்பிட்டால் யாரும் வரவில்லை. கொல்லைப் பக்கமாய் நாம்ப மூன்று பேரும் வந்தோம். திருடியைப்போல ஓடிப்போய்க்கொண்டிருந்த ரேகாவை நாம் மூவரும் சேர்ந்து பிடித்துக்கொண்டோம். போதுமா? உங்களை எப்பொழுது கேட்டாலும் இதே வார்த்தைகளைச் சொல்லணும். தெரிஞ்சுதா?" மனைவியைக்கூட உத்தேசித்துச் சொன்னார் அவர். இருவரும் 'சரி' என்று தலையாட்டினார்கள்.

அவர் எழுந்தார்.

''யாருக்கு மொதல்ல போன் பண்ணப்போறீங்க?'' அவர் மனைவி கேட்டாள்.

''வேறு யாருக்கு? நம்ப நாராயணனுக்குதான். அவனாயிருந்தால் நல்லது. இதெல்லாம் ஏதோ குழப்ப மாயிருக்கு'' என்றார் அவர். நாராயணன் முகுந்தனின் மனைவிக்குத் தங்கை மகன். டி. எஸ். பி. யாய் இருக்கிறான். சமீபத்தில்தான் மாற்றலாகி இங்கே வந்தான்.

19

அடுத்த கால் மணி நேரத்தில் போலீசார் வந்து கூடிவிட்டார்கள்.

நாராயணன் எல்லாவற்றையும் பரிசோதித்து விட்டு ரேகா அடைத்து வைக்கப்பட்டிருந்த அறைக்கதவைத் திறக்கப் போனார்.

ரேகாவிடம் எப்படிப்பட்ட ஆயுதங்கள் இருக்க லாமோ என்று மாதவன் மனைவி எச்சரித்துக் கொண்டேயிருந்ததால் நாராயணன் எதற்கும் நல்லது என்று டிடெக்டிவ் சினிமாக்களில் வருவதுபோல இரண்டு போலீசுகளுடன் கதவைத் திறந்ததுமே மின்ன லாய் ஒதுங்கி நின்றார். ஆனால் அவர் எதிர்பார்த்தாற் போல அறைக்கு நடுவேயிருந்து அம்பாய் யாரும் ஓடி வரவில்லை.

நாராயணன் துப்பாக்கியை குறி வைத்துக் கொண்டே ஜாக்கிரதையாய் உள்ளே அடியெடுத்து வைத்தார். ரேகா ஜன்னலுக்கருகில் அந்த பக்கமாய் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். கையில் எதுவும் இல்லை. அவள் நின்றுகொண்டிருந்த விதம் உண்மை

யானதுதானா அல்லது நடிப்பா என்று புரியாத நாராயணன் துப்பாக்கியைக் காட்டிக் கொண்டே,

''ஹேண்ட்ஸ் அப்'' என்றார்.

ரேகா மெதுவாய் திரும்பினாள்.

''ஹேண்ட்ஸ் அப்'' திரும்பவும் கத்தினார்.

ரேகா கைகளைத் தூக்கவில்லை. கதவு திறப்பதற்காகவே அவ்வளவு நேரமாய் காத்திருந்தாற்போல, மெதுவாய் அறையை விட்டுப் போகத் தொடங்கினாள்.

''நில்'' உறுமினார் நாராயணன். ரேகா நிற்கவில்லை.

அவர் வார்த்தைகள் காதில் விழாதது போல நடக்கத் தொடங்கினாள். நாராயணன் போலீசுகளுக்கு கண் ஜாடைக் காட்டினார். அவர்கள் கிட்டேபோய் ரேகாவின் கைகளில் விலங்கைப் பூட்டினார்கள். ரேகா மறுப்புத் தெரிவிக்கவில்லை. எதிர்க்கவும் இல்லை. நாராயணன் ரேகாவிடம் வந்தார்.

''நீங்கள் இந்த வீட்டிற்கு எத்தனை மணிக்கு வந்தீங்கன்னுச் சொல்ல முடியுமா?''

''ஞாபகமில்லை'' என்றாள் ரேகா.

''நீங்கள் வரும்போது அவர் என்ன பண்ணிட்டிருந்தார்?''

''ஞாபகமில்லை.''

''நீங்கள் வந்தபோது வீட்டில் யார் யார் இருந்தாங்க?''

''ஞாபகமில்லை'' தலையைத் திருப்பிக்கொண்டாள்.

நாராயணன் ரேகாவைக் கூர்ந்து கவனித்தார். ஆனால் பார்வை சரியாய் இல்லை. ஆழ்ந்த உறக்கத்தி

லிருந்து எழுந்து நடப்பவளைப்போலவும், பார்ப்பவளைப் போலவும் இருந்தது.

"இந்தப் பெண்ணிற்கு ஷாக் ஏற்பட்டிருக்கு. நினைவு இல்லை" என்றார் நாராயணன்.

"வேஷம்! எல்லாம் நடிப்பு! ரெண்டு கன்னத்தில் அறைந்தால் எல்லா நினைவும் வரும்" என்றாள் லாயரின் மனைவி.

ரேகா அரெஸ்ட் பண்ணப்பட்டாள்.

அவ்விடமெல்லாம் நன்றாய் பரிசோதித்த நாராயணன் விவரங்களைக் குறித்துக்கொண்டே மாதவனிடம்— "இந்த திருட்டுத்தனத்திலும், இந்தக் கொலையிலும் இந்தப் பெண் மட்டுமேயில்லை, இன்னொரு ஆளின் கையும்கூட இருக்கிறது. அவன் ஒரு ஆண். அந்த நபர் யாரோ. இந்தப் பெண்ணிற்கும் அவனுக்கும் எப்படிப்பட்ட சம்பந்தமோ அதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

●

மறு நாள் விடிந்ததுமே பத்திரிகைகளில் எல்லாம் இச்செய்தி கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டு வெளிவந்திருந்தது

முதல் பக்கத்தில் ரேகாவின் புகைப்படம் வெளிவந்திருந்தது. கீழே சுருக்கமாய் ரேகா அந்த வீட்டில் வேலைக்காரியாய் சேர்ந்து, அந்த வீட்டில் சகலத்தையும் கொள்ளையடிப்பதற்குச் செய்த முயற்சி விவரிக்கப்பட்டிருந்தது.

சங்கரனின் வீட்டிற்கு போலீசார் வந்தார்கள். வீட்டையெல்லாம் சோதனை போட்டார்கள். சேகரைப் பற்றியும், ரேகாவைப்பற்றியும் விசாரணை பண்ணினார்கள். சேகரைப் பற்றித் தமக்கு ஒன்றுமே தெரியாது

என்றும், வெகு நாட்களாய் அவன் தம்மோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் எங்கேயோ இருந்துகொண்டிருக்கிறான் என்றும் சங்கரன் சொன்னதை அவர்கள் நம்பவில்லை.

ரேகா அரெஸ்ட் ஆகிவிட்டாள் என்ற செய்தியைக் கேட்டதுமே சுந்தரி மார்பில் அடித்துக்கொண்டு ஓலமிடத் தொடங்கினாள்.

அக்கம்பக்கத்தாருக்கு விஷயம் பரவிவிட்டது. ''பேஷ்! தம்பியையும் மிஞ்சிவிட்டாளே! தம்பி திருட்டுத்தனம் பண்ணினால் இவள் கொலையே பண்ணத் தொடங்கிவிட்டாள்'' என்றார் ஒருவர்.

''மொதல்ல இப்படிப்பட்டவங்களை நம்ப வீதியிலேயே வைத்துக்கொள்ளக்கூடாது''என்று இன்னொருவர் வியாக்கியானம் பண்ணத் தொடங்கினார்.

''இப்படி ஊர் சுற்றிக்கொண்டிருக்கும் பெண்கள் எங்கேயாவது ஓரிடத்தில் பட்டென்று வாலறுந்த காற்றாடியாய் தரையில் சரிந்து விழாமல் போக மாட்டாங்க. வேணும் நன்றாய். என்ன திமிர். கண்ணு மண்ணு தெரிஞ்சால்தானே?'' மீனாட்சி அம்மாள் போன்றவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டார்கள்.

சங்கரனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. அவர் ரேகா இந்தக் கொலையைப் பண்ணியிருப்பாள் என்ற செய்தியை நம்பவில்லை. யாரோ நன்றாய் வலை பின்னி ரேகாவை இதில் சிக்கவைத்துவிட்டார்கள். இதிலிருந்து எந்த ஆபத்தும் இல்லாமல் ரேகாவை மீட்க வேண்டும். ஆனால் எப்படி? தனக்கு யார் இருக்கிறார்கள் அரவணைப்பதற்கு? சங்கரன் தனக்கு தெரிந்த லாயர் ஒருவரிடம் ஆலோசனை கேட்பதற்காகப் போனார். ஆனால் அவர் ஊரில் இல்லை. அவர் சோர்ந்துபோய் வீட்டிற்குத் திரும்பி வந்தார்.

மறு நாள் காலையில் விமலன் ஊரிலிருந்து திரும்பி வந்தான். அவன் விமான நிலையத்தில் அடியெடுத்து வைத்ததுமே கோபாலன் எதிர்ப்பட்டான். நடந்த விஷயத்தையெல்லாம் விமலனுக்குச் சொன்னான்.

விமலனின் கண்களுக்கு முன்னால் இருள் பரவினாற் போலிருந்தது. அது கொலை என்றும் ரேகாவை அரெஸ்ட் பண்ணிவிட்டார்கள் என்றும் சொன்னதைக் கேட்டு அவனுக்கு இதயமே நின்றுவிட்டாற் போலி ருந்தது.

விமான நிலையத்தின் புக் ஸ்டால்களில் இருந்த எல்லா பத்திரிகைகளிலும் முதல் பக்கத்தில் ரேகாவின் புகைப்படம் வெளிவந்திருந்தது. விமலன் பத்திரிக்கை களை வாங்கிப் படித்தான். ரேகாவின் புகைப்படத்தை யும் அதற்குக் கீழே வெளிவந்திருந்த செய்தியையும் படித்தபோது அவன் இதயம் கசியத் தொடங்கிற்று.

டி.எஸ்.பி. நாராயணன்கூட ஏறக்குறைய கோபாலன் சொன்ன விஷயங்களைத்தான் சொன்னார். ''டிரைவர் சொன்ன சாட்சிகளைக்கொண்டு ரேகா அந்த வீட்டிற்கு வரமாட்டேன் என்று மறுத்துவிட்டாள். மறுத்தவள் திரும்பவும் ஏன் வந்தாள்? எது என்னவானாலும் இந்தக் கேஸில் ரேகா மட்டுமேயில்லை, பின்னால் இன்னொரு ஆள்கூட இருக்கிறான். சாதாரண ஆண்பிள்ளை இல்லை. இரும்புப் பெட்டிகளை உடைப்பதில் கை தேர்ந்த ஆள் அவன். அங்கங்கே கிடைத்த விரலடையாளங்களைப் பரிசோதனைக்காக அனுப்பி யிருக்காங்க. அந்த ரிபோர்ட்டிற்காகக் காத்துக் கொண்டிருக்காங்க. அந்த விரலடையாள ரிபோர்ட்டு களைக்கொண்டு ரேகாவுக்கு இந்தக் கொலையில் பங்கு உண்டா இல்லையா என்ற விஷயம் கொஞ்சமாவது தெரிந்துவிடும்.''

விமலன் பெருமூச்சுவிட்டான். அவனுக்கு எல்லாம் குழப்பமாய் இருந்தது. ரேகா கொலை பண்ணியிருக்க மாட்டாள் என்ற நம்பிக்கை ஆழமாய் படிந்திருந்தது அவன் மனதில். ஆனால் சாட்சிகள் எல்லாம் ரேகாவுக்கு எதிர்ப்பதமாய் இருக்கின்றன.

போக எழுந்திருந்தவன்— ''ஆமாம், சவம் எங்கே? போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பினீங்களா?'' என்று கேட்டான்.

''சவமா? எந்த சவம்?'' தனக்கு முன்னால் மேஜை மீது இருந்த அவசரக் காகிதங்களைப் பரிசீலித்துக் கொண்டிருந்த நாராயணன் முகத்தைச் சுளித்துக் கொண்டே கேட்டார்.

''வேறெந்த சவம்? அவரோடதுதான்.''

''யாரு, விஸ்வநாதனின் விஷயத்தைப் பற்றியா நீ கேட்கிறாய்? அவர் போகவில்லை. ஆயுள் கெட்டி. செத்துவிட்டதாகவே நினைத்துக்கொண்டு விட்டோம். ஆனால் மூச்சுத் திரும்பி வந்தது. டாக்டர்கள் அதை நன்றாய் பிடித்துக்கொண்டுவிட்டார்கள். எங்கள் எல்லோருக்கும் மெமோ கொடுத்துவிட்டார்கள்.''

விமலன் திறந்த வாய் மூடாமல் பார்த்தான். அவன் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் குப்பென்று பொங்கிக் கொண்டு வந்தது.

''ஈஸிட்? அப்ப இந்த பேப்பர்கள்?'' ஆச்சரியத்தால் அதற்கு மேல் வார்த்தைகள் பெயரவில்லை அவனுக்கு.

''என்ன பண்ணுவோம்? இதில் அந்த பத்திரிக்கைக் காரர்களின் மேல் எந்த தப்பும் இல்லை. நாங்கள் கொடுத்த ஸ்டேட்மென்ட் அது, நாளைக்குத் தீரும்பவும் விவரம் வரும். நான் ஆஸ்பத்திரிக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். நீயும் வருகிறாயா என்னோடு?''

"இதோ" விமலன் புறப்பட்டுவிட்டான்.

வீஸ்வநாதன் பிழைத்துவிட்டார்! சாகவில்லை! அவனுக்கு இந்தச் செய்தியைப் போன்ற சந்தோஷமான செய்தியை இதுவரை என்றுமே கேட்டதில்லை போலிருந்தது. அவன் கண்களில் நீர் துளிர்த்தது. இந்த உலகத்தில் தாய் தந்தையர், சிநேகிதர்களைவிட மேலானவர் அவர். சில மணி நேரங்களுக்கு முன்னால் தான் எவ்வளவு வேதனை. இப்பொழுது எவ்வளவு சந்தோஷம்! மனிதர்களை விளையாட்டு பொம்மை யாக்கி ஆட்டுவிக்கும் அந்த அற்புதமான விதிக்கு இரு கைகளையும் கூப்பி வணங்கினான் அவன்.

●

விமலன் ரேகாவை ஜாமீனில் விடுவித்து தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். லாயர் யஷ்வந்தனிடம் ரேகாவின் சார்பில் நியாயாதிபதியாய் இருக்கும்படி கேட்டுக் கொண்டான்.

"விமல்! அந்தப் பெண்ணை ஜாமீனில் விடுவித்தது போகட்டும். ஆனால் உன் வீட்டில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு நல்லதில்லைன்னு தோன்றுகிறது. நாலுபேர் நாலுவிதமாய் நினைத்துக் கொள்ள இடம் உண்டாகும்" என்று எச்சரித்தார் அவர்.

"என்ன பண்ணுவது? வேறு வழியில்லை. இந்த நிலைமையில் அந்தப் பெண் கண்ணெதிரே இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம்" என்றான் விமலன்.

யஷ்வந்தன் போனதும் வாசல் கதவைச் சாத்தி விட்டு மாடியிலிருந்த அவன் அறைக்கு வந்தான்.

ரேகா அவன் அறையில் நாற்காலியில் சலனமில்லா மல் உட்கார்ந்திருந்தாள். அறைக் கதவுகள் திறந்தே இருந்தன. ஆனாலும் விமலன் தான் வந்ததைத் தெரி

யப்படுத்துவதற்காக வாசலிலேயே நின்று கையால் கதவின் மீது தட்டினான். ரேகா மெதுவாய் திரும்பிப் பார்த்தாள்.

''உள்ளே வரலாமா?'' முறுவலுடன் கேட்டான்.

ரேகா பதில் பேசவில்லை. நாற்காலியை விட்டு எழுந்து நின்றாள். விமலன் உள்ளே வந்தான். ரேகா தண்டனை விதிக்கப் போகும் நீதிபதிக்கு முன்னால் நிற்கும் குற்றவாளியைப் போல தலை குனிந்தபடி நின்றாள்.

விமலன் ரேகாவிற்குப் பக்கத்தில் வந்து நின்றான். ரேகா அவன் பாதங்களின் மீது பார்வையைச் செலுத்திய படி தலை குனிந்தபடி நின்றாள்.

''ரேகா'' பரிவோடு கூப்பிட்டான் அவன்.

ரேகா நிமிர்ந்து பார்க்கவில்லை. அவன் சொல்லப் போவதைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வம் கூட இல்லை. நிசப்தமாய் சிலையாய் நின்றாள்.

''ரேகா, என்னதான் நடந்தது? நீ வந்தபோது வீட்டில் யார் யார் இருந்தாங்க? அவர் எப்படி இருந்தார்?''

ரேகா மெதுவாய் தலையை ஆட்டிக் கொண்டே, ''எனக்கு... எனக்கு ஒன்றுமே தெரியாது'' என்றாள்.

''ஞாபகப்படுத்திக் கொள். டிரைவரை உனக்காக அனுப்பியபோது நீ வரமாட்டேன் என்று சொல்லி விட்டாய். டிரைவர் போய்விட்டான். அப்புறமாய் என்ன வாச்சு? நீ அந்த வீட்டிற்குப் போக வேண்டும் என்று திரும்பவும் ஏன் நினைத்தாய்? இந்த விவரமெல்லாம் எனக்குத் தெரிய வேண்டியது ரொம்ப முக்கியம் ரேகா.''

''நான்... நான் நிஜமாய் சொல்கிறேன். எனக்கு ஒன்றுமே தெரியாது. எனக்குத் தெரியும் நீங்கள் யாருமே நம்பமாட்டீங்கன்னு.''

''நான் நம்புகிறேன் ரேகா.'' என்றான் விமலன் திடமாய்.

''நீ சொல்கிற ஒவ்வொரு எழுத்தையும் நான் நம்புவேன். எனக்குத் தெரியும், நீ குற்றமற்றவள் என்று. அதனால்தான் உன்னை என்னிடம் அழைத்துக் கொண்டேன். நீ நடந்ததையெல்லாம் சொன்னால் என் வேலை இன்னும் சுலபமாகி விடும். உனக்காக நீதியோடு போராடத் தயாராய் இருக்கிறேன். ஒருக்கால் உன்னால் சொல்ல முடியாவிட்டாலும் பரவாயில்லை. யார் மீது இந்தக் கொலை முயற்சி நடந்ததோ அவரே இந்த ரகசியத்தையெல்லாம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து விடுவார். ரேகா, விஸ்வநாதன் பிழைத்து விட்டார், தெரியுமா உனக்கு?'' மிகச் சாதாரணமாய் கேட்பது போல கேட்டான் அவன்.

ரேகா வியப்போடு பார்த்தாள்.

''அவரிடம், உயிர் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அவரை குறைந்தபட்சம் மரண வாக்குமூலம் கொடுக்கும் வரைக்குமாவது பிழைக்க வைப்பதற்கு டாக்டர்கள் முயற்சி பண்ணிக் கொண்டிருக்காங்க. நீ வந்தால் அவரைப் பார்ப்பதற்கு உன்னை அறைத்துக் கொண்டு போகிறேன்.''

ரேகா இன்னும் நம்பமாட்டாதவளாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதை கவனித்த அவன், ''நிஜந்தான் ரேகா, நான் பொய் சொல்லவில்லை'' என்றான்.

ரேகா ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்தாள். ஆனால் உதடுகள் அதிர்ந்தன. வார்த்தைகள் வெளிவர

வில்லை. முகத்தில் மெதுவாய் வியப்போடு கூடிய சந்தோஷம் பரவி வந்தது. உள்ளங்கையால் முகத்தைப் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

விமலன் ஒரு வினாடி தடுமாற்றமடைந்தான். பிறகு கிட்டே வந்து ரேகாவின் தோள்களில் கையை வைத்தான்.

ரேகா நிமிர்ந்து அவனை சிறு பெண்ணைப் போல பார்த்துக் கொண்டே, ''நீங்கள் சொல்வது நிஜந்தானா? அவர் நிஜமாகவே பிழைத்து விட்டாரா?'' என்று கேட்டாள்.

''நிஜந்தான் ரேகா. இப்பொழுது சாப்பிட்ட பிறகு அவரிடம் உன்னை அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்றான்.

வெளுத்துப் போயிருந்த ரேகாவின் முகத்தில் சந்தோஷம் ஏற்பட்டது.

''நான்... நான் இவ்வளவு நல்ல செய்தியை இது வரை கேட்டதேயில்லை'' அதைச் சொல்லும்பொழுது அவள் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் உதிர்ந்தது.

விமலன் ரேகாவின் தலையை மார்போடணைத்துக் கொண்டான். அவன் வலது கை ரேகாவின் கேசங்களை தடவத் தொடங்கிற்று.

''இதையும்விட இன்னும் நல்ல செய்தியைக் கேட்க வேண்டும் நீ...'' என்றான் அவன் பரிவோடு.

அவன் ஸ்பரிசத்தால் ரேகாவுக்குப் போன உயிர் மெல்ல மெல்ல திரும்பி வந்தாற்போலிருந்தது. கொஞ்ச நேரம் இருவருக்குமிடையே வார்த்தைகளுக்கே பஞ்சம் ஏற்பட்டு விட்டாற்போல, பேச்சுக்கள் தேவையே

யில்லை என்பது போல அப்படியே நின்று விட்டார்கள். ரேகாவிடம் பொங்கிவந்த துக்கம் மெல்ல மெல்ல தணிந்து போய்விட்டது.

அதற்குள் படிக்கட்டிற்குக் கீழேயிருந்து கங்கம்மா கத்தினாள்.

"தம்பி! உன்னைத் தேடிட்டு யாரோ வந்திருக்காங்க."

கங்கம்மாவிற்கு பதிலளித்த விமலன் ரேகாவை மெதுவாய் விட்டு விட்டு, "நீ சீக்கிரமாய் குளித்துச் சாப்பிட்டு விட்டால் நாம்ப ஆஸ்பத்திரிக்கு போகலாம்" என்றான்.

ரேகா நிற்கவும் சக்தியில்லாதவளாய் இரண்டடிகள் எடுத்து வைத்துக் கட்டிலில் சரிந்தாள் அவள் மனம் முழுவதும் வினோதமான அமைதி பரவத் தொடங்கிற்று.

விமலன் கீழே வந்தான்.

அங்கே சங்கரன் உட்கார்ந்திருந்தார். விமலனைப் பார்த்ததுமே எழுந்து வினயமாய் வணங்கினார்.

"உட்காருங்கள். யார் நீங்கள்? என்ன வேண்டும் உங்களுக்கு?"

"என் பெயர் சங்கரன். நான் ரேகாவின் மாமா. ரேகாவை நீங்கள் ஜாமீனில் விடுவித்து அழைத்துக் கொண்டு வந்ததாய் தெரிந்தது."

"நீங்களா? உட்காருங்கள். உட்காருங்கள்" என்றான் விமலன்.

சங்கரன் உட்கார்ந்தார்.

கேட்க மாட்டாமல் கேட்டார், "அவர்... அவர் உயிரோடுதான் இருக்கிறாரா? நிஜந்தானா? அல்லது கட்டுக்கதையா?"

"நிஜந்தான். உயிர் இழையோடிக் கொண்டிருக்கிறது. அது நிற்குமா நிற்காதான்னுச் சொல்றது மட்டும் கஷ்டம். டாக்டர்கள் நிறுத்தி வைக்கத் தம்மால் முடிந்ததையெல்லாம் செய்யறாங்க."

"என்னவோப்பா! இந்தப் பொண்ணு இப்படி இவங்ககிட்டே வேலைக்கு வந்து சேர்ந்தது எங்க பொம்பிள்ளைங்க யாருக்குமே பிடிக்கவில்லை. கமலனுக்குத் தெரிஞ்சவங்களாச்சேன்னு சம்மதித்தேன். இது இவ்வளவு பிராப்தமாகிவிடும் என்றோ, எங்களுக்கு இவ்வளவு சிக்கலைக் கொண்டு வந்துவிடும் என்றும் கனவிலும் நினைத்திருக்கவில்லை. நீங்கள் கமலனின் அண்ணன் என்று தெரிந்தது. உங்களை நான் என்றுமே பார்த்ததில்லை."

"கமலனைப் புறப்பட்டு வரச்சொல்லி டெலிகிராம் தந்திருக்கிறேன்" என்றான் விமலன்.

"கமலன் ரொம்ப நல்ல பிள்ளை. அவன் பிடிவாதத்தால்தான் ரேகா இந்த வேலையில் சேர்ந்தாள்."

"ரேகா வேலை பண்ணிக் கொண்டிருக்கும் இந்த எஜமானரை நீங்கள் பார்த்ததேயில்லையா?"

பேச்சை மாற்ற எண்ணிக் கேட்டான்.

"இல்லை. நான் ஊரிலேயே அதிகமாய் தங்கியிருக்க மாட்டேன். ரேகா ஓரிரண்டு முறை தன்னோடு வந்து அவரைச் சந்திக்கும்படிச் சொல்லி பலவந்தப்படுத்தினாள்கூட. நான் போகலாம் போகலாம் என்றெண்ணிக் கொண்டே அசிரத்தை பண்ணி விட்டேன்."

''குளிக்க அளைந்து வைத்த வெந்நீர் ஆறிப்போயிட்டிருக்கு தம்பி''—கங்கம்மா வந்து ஞாபகப்படுத்தினாள்

''இதோ வரேன் கங்கம்மா'' விமலன் எழுந்தான்.

''நீங்கள் ரேகாவுடன் பேசிக்கொண்டிருங்க. நான் குளித்துவிட்டு இதோ வந்துவிடுகிறேன்''—என்று விமலன் சங்கரனை ரேகா இருந்த அறைக்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிட்டு அப்பால் வந்துவிட்டான்.

20

விமலன் தன்னோடு சங்கரனை விஸ்வநாதன் இருந்த ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு வந்தான்.

சங்கரன் வருவதற்கு முன்னால் ரேகாவை அழைத்துப் போக வேண்டும் என்ற உத்தேசத்துடன் இருந்த விமலன் சங்கரன் வந்தபிறகு அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டான். ''நீ குளித்துச் சாப்பிட்டு விட்டுத் தயாராய் இரு. எனக்கு நாராயணனிடம் வேலை இருக்கு. அதைப் பார்த்துக்கொண்டு திரும்பி வந்து உன்னை அழைத்துப் போகிறேன்'' என்றான். ரேகா தடை சொல்லவில்லை.

சங்கரனுக்கும் பரபரப்பாகவே இருந்தது. விஸ்வநாதனின் வாயிலிருந்து வரப்போகும் இரண்டு வார்த்தைகளில்தான் ரேகாவின் எதிர்காலமே அடங்கியிருந்தது. நேற்றிரவெல்லாம் ரேகாவின் எதிர்காலத்தைப் பற்றியே கலங்கிப்போய் தூக்கமில்லாமல் தவித்துக்கொண்டிருந்த சங்கரனுக்கு விமலன் ஆபத்பாந்தவனாய் தோன்றினான்.

சங்கரனை அழைத்துக்கொண்டு ஸ்பெஷல் வார்டுக்கு வந்தான் விமலன்.

நோயாளி இருந்த அறைக்குள் வந்தார்கள். கட்டிலில் சலனமில்லாமல் படுத்துக் கிடந்தார் அவர்.

''வாங்க, இப்படி வாங்க, பாருங்க''—தொலைவிலேயே நின்றுகொண்டிருந்த சங்கரனைக் கூப்பிட்டான் விமலன்.

சங்கரன் கிட்டே வந்தார்.

விமலன் ஜாக்கிரதையாய் சங்கரனின் முகத்தோற்றங்களை பரிசீலிக்கத் தொடங்கினான்.

முதலில் சாதாரணமாகவே நோயாளியை இரக்கத்துடன் பார்த்தார் சங்கரன். அதற்குள் சட்டென்று திடுக்கிட்டுப் போனார். புருவங்கள் முடிச்சேறிக் கொண்டன. கூர்ந்து பார்த்தார். சங்கரனின் கண்களில் பயம் நெளிந்தது.

''இவரை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?'' விமலன் நிதானமாய் கேட்டான்.

சங்கரனின் கண்கள் விரிந்தன. ''இவர்—இவர்'' தடுமாறினார்.

விமலன் ஜேபியிலிருந்து கையை வெளியே எடுத்து, ''இவர் சின்ன வயசு போட்டோவைக் காட்டட்டுமா?'' என்று போட்டோ ஒன்றை எடுத்து சங்கரனிடம் காட்டினான்.

போட்டோவைப் பார்த்ததுமே சங்கரனின் முகம் வெலவெலத்துப் போய்விட்டது. ''இவர் யாருன்னு சொல்ல முடியுதா உங்களால்?'' விமலன் கேட்டான்.

''இவன் எங்கள்—எங்கள் விஸ்வம்.''

''அவர் உங்களுக்கு விஸ்வம், எங்களுக்கு விஸ்வநாதன். உங்களுக்கு உங்கள் தங்கை காயத்ரியின் கணவர்! எங்களுக்கு லலிதா—ரஞ்சிதாவின் தந்தை.

இப்பப் புரிஞ்சுதா உங்களுக்கு ரேகா யாரிடம் வேலைப் பண்ணப் போயிட்டிருந்தாள் என்று?''

சங்கரன் சலனமில்லாமல் நின்றுவிட்டார். அவர் முகம் வெளுத்துப் போய்விட்டது.

அதற்குள் டி. எஸ். பி. நாராயணன் டாக்டருடன் சேர்ந்து உள்ளே வந்தார்.

''ஹலோ விமல்! நீ இங்கேதான் இருக்கிறாயா? உனக்கு போன் பண்ணலாம்ன்னு நினைத்தேன். விரலடையாள ரிப்போர்ட்டுகள் வந்துவிட்டன. அவன் யார் தெரியுமா?''

''யார்?'' விமலன் பரபரப்புடன் கேட்டான்.

நாராயணன் விமலனுக்குப் பக்கத்திலிருந்த சங்கரனைப் பார்த்தார். விமலனின் கையைப் பிடித்து கொஞ்சம் தூரத்தில் அழைத்துச் சென்று தாழ்ந்த குரலில் ''வேறு யாருமில்லை. அந்த ரேகாவின் தம்பி சேகர்தான். இதைக் கொண்டு ரேகா அப்பாவி இல்லை என்றும், அந்தப் பெண்ணிற்கு இதில் பங்கு இருக்கிறது என்றும் தெரிகிறது.''

''சேகரா?'' விமலன் நம்பமாட்டாமல் கேட்டான்.

''ஆமாம். அவனை மகாராஷ்ட்டிர அரசாங்கம்கூட தேடிக்கொண்டிருக்கிறது. பம்பாயில் நடந்த ரெண்டு மூன்று கொள்ளைகளில் அவன் கை இருக்கிறதாம். நீ அவசரப்பட்டு புத்தியில்லாமல் அந்தப் பெண்ணை ஜாமீனில் விடுவித்துவிட்டாய். இது உன் தலையில் வந்து விழுந்துவிடாமல் பார்த்துக்கொள்.''

விமலன் நொடிந்து போனான்.

அந்த விரலடையாளங்கள் சேகருடையவையா? அப்படியென்றால் இந்தக் கொலை பண்ண வந்தது யார் என்று ரேகாவுக்குத் தெரியும் என்றுதானே

அர்த்தம்? விமலனின் கண்களுக்கு முன்னால் ஆயிரம் காட்சிகள் நகர்ந்தன. ரேகா சாமர்த்தியசாலி சாதுரியம் கொண்டவள். இதெல்லாம் நடிப்புதானா? [redacted]காவைத் தனியாய் விட்டுவிட்டு வந்துவிட்டானே! இப்பொழுது அவள் தன் வீட்டில் இருப்பாளா? ஓடிப்போயிருப்பாளா? அவன் உத்திரவாதம் தந்து ஜாமீனில் விடுவித்தான். ரேகா அவனைப் பழி வாங்குவதற்கு இதை ஒரு அவகாசமாய் பயன்படுத்திக்கொண்டுவிடுவாளா? என்னவோ?

''நாராயணா! இதோ வரேன். நான் மறுபடியும் போன் பண்றேன்''—விமலன் திரும்பினான். ஒரே பாய்ச்சலாய் வெளியே வந்தான். வெளியே நிறுத்தியிருந்த ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்ததும், அதை ஸ்டார்ட் பண்ணியதும் ஒரே சமயத்தில் நடந்து முடிந்தன.

காற்றினும் வேகமாய் வீட்டிற்கு வந்த விமலன் ஓட்டமாய் வெறுமே சாத்தியிருந்த கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தான்.

மாடி அறையில் கட்டிலில் உட்கார்ந்து தலை வாரிக் கொண்டிருந்தாள் ரேகா. நிர்மலமாய் இருந்த அம்முகத்தில் யோசனைக் கீற்றுக்கள். ரேகாவைப் பார்த்ததுமே அவன் கதவிற்கருகிலேயே ஒரு விநாடி நின்றான். மளமளவென்று வந்ததால் அவனுக்கு மூச்சிரைத்துக் கொண்டிருந்தது. நெற்றியில் வியர்த்துக் கொட்டிற்று. காலடிச் சப்தத்தைக் கேட்ட ரேகா திரும்பிப் பார்த்தாள்.

''ரேகா'' விமலன் கிட்டே வந்தான்.

ரேகாவுக்கெதிரே வந்து நின்ற அவன் சட்டென்று கேட்டுவிட்டான்.

''ரேகா! உண்மையைச் சொல்லு! விஸ்வநாதனின் மீது நடந்த கொலை முயற்சியில் உனக்கெந்தச்

சம்பந்தமும் இல்லையா? உனக்குத் தெரியவே தெரியாதா?''

ரே[redacted] விநோதமாய், முன்பின் அறிமுகமில்லாத வனைப் பார்ப்பது போல பார்த்தாள் அவனை. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அன்போடும் பரிவோடும் கை கொடுப்பதுபோல பேசியவன் இவன்தானா? விமலனால் தாமதத்தைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இரு கைகளாலும் ரேகாவின் தோளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான். ரேகாவின் கையிலிருந்த சீப்பு நழுவி விழுந்தது.

விமலன் ஆவேசமாய் ரேகாவின் தோள்களை உலுக்கிக்கொண்டே—''உண்மையைச் சொல்லு! நான் எந்தச் சூழ்நிலையிலும் உனக்குத் துணையாய் இருப்பேன். உனக்காக ஒரு நீதிமன்றத்தோடு மட்டுந் தானா, சகல உலகத்தையும் எதிர்த்து நின்று போராடுவேன். நீ எப்படிப்பட்டவளாய் இருந்தாலும் மனமார ஏற்றுக்கொள்கிறேன். வேண்டுமென்றால் உன்னை அக்னி சாட்சியாய் எல்லோருக்கும் முன்னிலை யில் திரும்பவும் கல்யாணம் பண்ணிக்கொள்கிறேன். என்னிடமிருந்து உண்மையை மறைத்து வைத்து என்னை நாலு பேருக்கு முன்னால் தலைகுனிய வைக்காதே. உண்மையைச் சொல்லு, என்னதான் நடந்தது?''

''எனக்கொண்ணும் தெரியாது'' திடீரென்று அவன் காட்டிய ஆவேசத்திற்கு பயந்து போனவளாய் பதில ளித்தாள் ரேகா.

''பொய் பேசாதே. இனி நடிப்பதை விடு. உனக் கொண்ணும் தெரியாது என்றால் என்னால் நம்ப முடி யாது. இந்தக் கொலை முயற்சியின் போது சேகர் அங்கே இருந்திருக்கிறான். உனக்குத் தெரியாமல் அவன் அங்கே வருவது என்பது நடக்காத காரியம்.''

''சேகரா?'' புதிய விஷயத்தைக் கேட்க நேர்ந்தாற் போல வியப்படைந்தாள் அவள்

''ஆமாம். இதில் அவனுக்கும் பங்கு இருக்கிறது. ரேகா! நீ என்னிடமிருந்து உண்மையை மறைத்து வைத்தாயானால் உன் தம்பிக்கு பதில் நீயே தூக்குக் கம்பத்தில் ஏறவேண்டியிருக்கும். நான் நீ எந்தப் பாவமும் அறியாதவள் என்றும் இதை வேறு யாரோ பண்ணிவிட்டு, உன் மீது தள்ளியிருப்பார்கள் என்றும் நம்பிக் கொண்டிருந்தேன். என் நம்பிக்கையெல்லாம் தவிடு பொடியாகிவிட்டது. சேகரின் விரலடையாளங் கள் அங்கே இருப்பதாய் சொன்னதைக் கேட்டதும் என் யோசனைகளே தாறுமாறாகி விட்டன. ரேகா, உண்மையைச் சொல்லிவிடு. உனக்கு எந்த பயமும் இல்லை. நான் உனக்கு இருக்கேன். சேகர் அங்கே எப்படி வந்தான்? ஏன் வந்தான்?''

ரேகாவுக்கு விமலன் உலுக்கி எடுத்தாற்போல கேட்டது எதுவும் காதில் விழவில்லை. அவள் செவி களில் சேகரின் குரல் எதிரொலித்துக் கொண்டிருந்தது. ''பத்து நாட்களுக்குள் விஸ்வனாதனின் வீடு முழுவதும் கொள்ளையடிக்கப்படப் போகிறது. நீ அங்கே வேலையை விட்டுவிடு'' சேகரின் விரலடையாளங்கள் உள்ளதா? அப்படியென்றால் இது அவன் செய்த காரியந்தானா? ரேகா விமலனை பயந்து போய் பார்த் தாள்.

''நிஜத்தைச் சொல்லு ரேகா, என்ன நடந்தது?''

ஆவேசத்தால் தத்தளித்துக் கொண்டிருந்த விமலனை பயந்தபடி பார்த்த ரேகா ஹீனஸ்வரத்துடன், ''நான்...நான்தான் இந்தக் காரியத்தைப் பண்ணினேன். என் பக்கபலத்தால்தான் அவன் இந்தக் காரியத்தைச் செய்தான். ஆனால் அவன் உத்தேசம் மட்டும் அதில்லை. என்னை போலீசாரிடம் ஒப்படையுங்கள்.

தயவு செய்து அவனை மட்டும் ஒன்றும் செய்ய வேண்டாம்" ரேகாவுக்கு திடீரென்று அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

விமலன் ரேகாவை விட்டுவிட்டான். பூ என் றெண்ணி முகரப்போனால் அது சர்ப்பமாகிக் கடிக்கத் தயாராகி விட்டது. நல்ல வேளை, தான் ரேகாவின் மேல் கொண்டிருந்த அன்பையும் ஆதரவையும் இன்னும் வெளிப்படுத்தவில்லை. அவன் ஆவேசமும் ஆத்திரமும் வடிந்து போய்விட்டன. அவ்விடத்தில் கல்லையும் விட கடினமான உதாசீனம் இடம் பிடித்துக்கொண்டது.

ஒரு நிமிஷம் பைத்தியம் பிடித்தவனைப் போல சலனமில்லாமல் அப்படியே நின்றுவிட்டான்.

ரேகா கட்டிலில் சரிந்தாள். அழுகையை அடக்கிக் கொள்வதற்கு விஸ்வ பிரயத்தனம் பண்ணத் தொடங்கினாள். தான் இனி எந்த முகத்தை வைத்துக் கொண்டு விஸ்வநாதனுக்கு முன்னால் போய் நிற்பாள்? அவரை எப்படி நிமிர்ந்து பார்ப்பாள்?

விமலன் விருட்டென்று திரும்பி கீழே வந்து விட்டான்.

●

விமலன் லலிதாவைப் பார்ப்பதற்கு மாதவனின் வீட்டிற்கு வந்தான். விமலன் வந்தபொழுது மாதவனும் அவன் மனைவியும் வீட்டில் இல்லை. விமலன் மாதவன் வீட்டிற்கு வந்து பழக்கப்பட்டவன்தான்.

லலிதா அறையில் கட்டிலில் தூக்கமும் நினைவற்ற நிலையிலுமாய் இருந்தாள். தந்தையின் உயிர் போக வில்லை, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி மாதவன் வந்து பரபரப்புடன் சந்தோஷமாய் சொன்னபொழுது லலிதாவுக்கு இம்முறை உண்

மையாகவே நினைவு தப்பிவிட்டது. அவளுக்கு பயமும் இனம்புரியாத கலக்கமும் ஏற்பட்டன. மாதவன் தம்பதிகள் அவர் பிழைத்ததற்குக் கடவுளுக்கு நன்றி சொன்னார்கள். லலிதாவிற்குச் சக்தியெல்லாம் போய் விட்டாற்போல இருந்தது. தந்தை பிழைக்கக் கூடாது என்று மனமார விரும்பினாள். தூங்குவதற்காக தூக்க மாத்திரைகளை விழுங்கிய லலிதாவுக்குத் தூக்கம் வர வில்லை. மயக்கமாய் வேறு ஏதோ உலகத்தில் இருப்பது போல இருந்தது. படுத்துக் கொண்டிருந்தவள் அடிக்கடி தூக்கித் தூக்கிப் போட, எழுந்து உட்காரத் தொடங் கினாள்.

அறைக்குள் வேலைக்காரன் எட்டிப் பார்த்துவிட்டு, ''அம்மா, விமலன் ஐயா வந்திருக்காரு'' என்றான்.

விமலனின் பெயரைக் கேட்டதுமே லலிதாவின் முகம் தொய்ந்து போயிற்று. ''நான் இப்பொழுது யாரையும் பார்க்கமாட்டேன்னு சொல்லு'' என்றாள்.

விமலனிடம் வந்து சொன்னான் வேலைக்காரன்.

''அவளால் எழுந்து வர முடியாவிட்டால் நானே அங்கே வருகிறேன் என்று சொல்லு.''

வேலைக்காரன் போய்ச் சொல்லிவிட்டுத் திரும்பி வந்தான். ''ஊஹூம், இப்ப யாரையும் பார்க்க மாட் டாங்களாம்'' என்றான்.

விமலன் யோசித்தான். ''நான் சந்திக்காமல் போக மாட்டேன். ஒரு முக்கியமான விஷயம் பேச வந்திருப்ப தாய் சொல்லு.''

வேலைக்காரன் சங்கடத்துடன் பார்த்துவிட்டு உள்ளே போனான்.

லலிதா விடுவிடென்று அம்பாய் வெளியே வந்தாள்.

''லலிதா'' ஏதோ சொல்லப்போன விமலன் நின்று விட்டான். அவன் பார்த்துக்கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்த லலிதாதானா என்று தோன்றிற்று. அவள் முகம் கன்றிப் போய் கண்களுக்கடியே கருப்பாய் உப்பியிருந்தது. முகத்தில் கூடுகட்டிக் கொண்டிருந்தது பயமா துக்கமா என்று தெரியவில்லை. கண்கள் பயந்து போனாற்போல சஞ்சலத்துடன் இருந்தன.

''உனக்கு உடம்பு சரியாயில்லையா லலிதா?'' என்று கேட்டான்.

''என் உடம்பு எப்படி இருந்தால் உனக்கென்ன வந்தது? என்ன கேட்கணுமோ கேள்'' முகத்தில் அடித்தாற்போல வந்தது பதில்.

விமலனின் கண்கள் லலிதாவின் நிலைமையை சட்டென்று கவனித்துவிட்டன. எதற்காகவோ மானசீகமாய் சித்திரவதையை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள் அவள்.

''நடந்ததையெல்லாம் உன் வாயிலிருந்து கேட்கணும் என்றுதான் வந்தேன். என்னதான் நடந்தது லலிதா?'' விமலன் மென்மையாய் கேட்டான்.

''எனக்குத் தெரியாது. நான் யாரோடும் இந்த விஷயமாய் பேச விரும்பவில்லை. உனக்கு அவ்வளவு தூரம் வேண்டுமென்றால் அங்கிளைக் கேட்டுக்கொள், சொல்லுவார்.''

அதற்குள் ரஞ்சிதா விமலனின் குரலைக் கேட்டு விட்டு ஓடி வந்தாள். விமலன் வழக்கப்பிரகாரம் ரஞ்சிதாவைப் பார்த்ததுமே கைகளை நீட்டினான் தூக்கிக் கொள்ள.

''ரஞ்சிதா'' உறுமினாள் லலிதா. ''உள்ளே போ! ஏன் வந்தாய் இங்கே?'' ரஞ்சிதாவைப் பிடித்து அவனிட

மிருந்து தூக்கினான். ரஞ்சிதா அக்காவின் கைகளிலிருந்து நீமிறினாள் விமலனிடம் போவதற்காக.

"புத்தியில்லை? பைத்தியக்கார வேஷம் போட்டாயானால் உதைப்பேன், ஜாக்கிரதை, போ உள்ளே"

லலிதா ரஞ்சிதாவின் முதுகில் இரண்டு கொடுத்தாள். விமலன் ஒரே பாய்ச்சலாய் வந்து ரஞ்சிதாவை அவள் கைகளிலிருந்து விடுவிக்கப் போனான்.

"உனக்கு புத்தியிருக்கா, இல்லையா? சின்னப் பெண்ணை அப்படி ஏன் அடிக்கிறாய்? நீ மனுஷி தானா?" கோபமாய் கேட்டான்.

"இல்லை, மிருகம். விமலன் தூரமாகவே இரு. உனக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் அத்து மீறி தலையிடாதே."

வேலைக்காரன் உள்ளே வந்து ரஞ்சிதாவைத் தூக்கிக்கொண்டு அப்பால் போய்விட்டான்.

"லலிதா! ஏன் இப்படிப் பேசுகிறாய்?" அவனுக்கு லலிதாவின் போக்கு சற்றும் புரிபடவில்லை.

"வேறெப்படிப் பேசுவேன்? நீ யார் என்று பேசச் சொல்கிறாய்? நீ எனக்கு என்னவாகணும் என்று என் கஷ்ட சுகங்களைச் சொல்லிக்கொள்ளச் சொல்கிறாய்?"

லலிதாவுக்கு துக்கம் வந்தது. ஆனால் ஒருவாறு அழுகையை அடக்கிக்கொண்டே சொன்னாள்—

"ஆமாம், பிளேனை விட்டு இறங்கியதுமே உனக்கு நான் ஞாபகம் வந்தேனா? நேராய் என்னிடமா வந்தாய் நீ? என் ஞாபகமே இல்லை உனக்கு. யார் முக்கியமான வங்க என்று நினைத்தாயோ அவங்களிடந்தான் போனாய். நீ ரேகாவை விடுதலை பண்ணினாயா இல்லையா?"

"பண்ணினேன்."

"அவள் உன் வீட்டில்தானே இருக்கிறாள்?"

"ஆமாம்."

விமலன் எந்த தயக்கமும் இல்லாமல் பதிலளித்ததைப் பார்த்த லலிதாவுக்கு மனமெல்லாம் துவேஷத்தால் கசந்து போயிற்று. துக்கம் இருந்த இடத்தில் கோபம் வந்து சூழ்ந்துகொண்டது.

"ரேகாவோடு உனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லையென்றால் பிளேனிலிருந்து இறங்கியதும் இறங்காமலும் அவளுக்காக ஓடவேண்டிய அவசியம் என்ன?"

விமலன் பதில் சொல்ல முடியாதவனாய் பார்த்தான்.

"பதில் சொல்லு ஏன் பேசமாட்டேங்கிறாய்?"

"என்னத்தைச் சொல்லுவேன்? நீ இவ்வளவு ஆவேசமாய், அநியாயமாய் நிந்திக்கும்பொழுது!"

"அநியாயமாய் பேசுகிறேனா? நானா? சரி. போகட்டும். நேரிடையாகவே கேட்டுவிடுகிறேன். உண்மையைச் சொல்! ரேகா உனக்கு ஒன்றும் ஆக வேண்டாமா?"

"லலிதா..." விமலன் செய்வதறியாது பார்த்தான்.

"அந்தப் பெண்ணிற்கும் உனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று மார்பில் கைவைத்துக் கொண்டு, உங்கம்மா மேல் ஆணையிட்டு சொல்லு"

விமலன் பதில் பேசவில்லை.

"எனக்குத் தெரியும், நீ சொல்லமாட்டாய். அதனால் தான் நான் தொலைவில் இருக்க தீர்மானித்துக்கொண்டு விட்டேன். இனி நீ சொல்ல வேண்டியதும், நான் கேட்க வேண்டியதும் முடிந்துவிட்டது, நீ போ."

"லலிதா... நான்... நான் நிஜத்தை சொல்றேன். நான் உன்னிடம் எப்படி நடந்துகொள்கிறேனோ

அப்படியேதான் ரேகாவிடமும் நடந்துகொள்கிறேன். இந்த விஷயத்தை உனக்கு...'' அவன் வார்த்தைகள் முடியக்கூடவில்லை.

''என்னது? நானும் அந்த வேலைக்காரியும் உனக்கு சமானமா? இதானா நீ சொல்ல வந்தது? இதையே இன்னொருத்தர் சொல்லியிருந்தாங்கன்னால் இழுத்து கன்னத்தில் ஒன்று கொடுத்திருப்பேன். விமல்! உன் கண்கள் தலைக்கு ஏறிக்கொண்டுவிட்டன! பார் யாரை எப்படி கவனிக்கணுங்கிற புத்திகூட மழுங்கிப் போயிட்டாற்போல இருக்கு. அந்தஸ்தையும் அருகதை யையும் மறந்துபோய் பேசாதே. உன் நடிப்பையும், இனிக்க இனிக்கப் பேசும் பேச்சையும் கேட்டு மெய் மறந்து போவதற்கு நான் அப்பா இல்லை. நீ பக்க பலமாய் இருக்கிற தைரியத்தால்தானே அந்த ராட்சசி அவ்வளவிற்கு துணிந்திருக்கிறாள்? அப்பாவின் உயிரை பலிவாங்கக்கூட துணிந்துவிட்டாள். ரேகா உனக்கு ஒன்றும் ஆக வேண்டாம் என்று நீ டபாய்க்கிறாய். ரேகா உனக்கு என்ன ஆக வேண்டும் என்று எனக்கு தெரியும். என்னிடம் ருசு இருக்கிறது. காட்டச் சொல்கிறாயா?''

''ருசுவா? என்னத்தை காட்டுவாய்?''

''இரு, ஒரு நிமிஷம்'' தீவிரமாய் பார்த்த லலிதா உள்ளே ஓடினாள். ஒரு நிமிஷத்தில் கையில் ஒரு பெரிய கவருடன் திரும்பி வந்தாள். அதிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து காட்டிவிட்டு— ''இதென்ன? இதற்கு என்ன பதில் சொல்கிறாய்?'' என்றாள்.

அதைப் பார்த்ததுமே விமலின் சரேலென்று பாய்ந் தான் அதை பிடுங்கிக்கொள்வதற்கு. லலிதா மின்னலாய் பின்னுக்கு நகர்ந்துகொண்டு தொலைவில் போய் நின்றாள்.

"விமல்! ஜாக்கிரதை! தொலைவிலேயே இருந்து கொண்டு பேசு. இல்லாவிட்டால் வேலைக்காரர்களைக் கொண்டு உன்னை அவமானப்படுத்த வேண்டியிருக்கும்."

விமலனின் முகத்தில் குப்பென்று ரத்தம் பாய்ந்தது அந்த போட்டோவைப் பார்த்ததுமே. அது அவன் ரேகாவின் கழுத்தில் தாலியை கட்டிக்கொண்டிருந்த பொழுது எடுத்த புகைப்படம்.

"இது... இது உனக்கு எப்படி கிடைத்தது?"

"அது என் ரகசியம்! இந்த போட்டோவைக் கொண்டு பார்த்தால் நீயும் ரேகாவும் கல்யாணம் பண்ணிக்கொண்டுவிட்டீர்கள் என்றும், நீங்களிருவரும் கணவன்—மனைவியர் என்றும் நன்றாகவே தெரிகிறது. நீங்கள் ஏன் சேர்ந்து குடும்ப நடத்தவில்லை, உங்களிருவருக்குமிடையே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம்கூட இல்லை.எனக்கு வேண்டியதெல்லாம் இதில் உனக்கும்கூட பங்கு இருக்கிறது என்று தேவையானால் ருசு பண்ணுவதுதான். உன் மீது எனக்கு தனிப்பட்ட விரோதம் இல்லை. ஒன்று மட்டும் சொல்கிறேன், கேள். நீ இந்த ரகளையில் தலையிடவேண்டும் என்று முயன்றாலும், ரேகாவின் சார்பில் வாதாட வேண்டும் என்று முயன்றாலும் நான் இந்த போட்டோக்களைக் கொண்டு இதெல்லாம் உன் தலை மேல் வந்து விழும் படியாய் செய்துவிடுவேன். நடந்ததென்னவோ நடந்துவிட்டது என்று நீ வாயை மூடிக்கொண்டு சும்மாயிருந்துவிட்டால் நான் இந்தப் பேச்சை எடுக்கமாட்டேன். இந்த ரகளையெல்லாம் ஓய்ந்துபோன பிறகு உன் இந்த ரகசியத்தை உன் கையில் பத்திரமாய் ஒப்படைத்து விடுகிறேன். இது நிபந்தனை என்

றெண்ணிக்கொண்டாலும் சரி, மிரட்டல் என்றெண்ணிக் கொண்டாலும் சரி.''

விமலன் ஆவேசத்தை கட்டுப்படுத்திகொண்டான். தான் அலமாரியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த இந்த போட்டோக்கள் லலிதாவின் கைக்கு எப்படி வந்தது என்று புரியவில்லை அவனுக்கு.

இரண்டு நிமிஷங்களில் தன்னைத் தானே கட்டுப் படுத்திக்கொண்டான். அவன் முகத்தில் மெதுவாய் அமைதி பிறந்தது. அந்த அமைதிக்கு அடியில் கொதித்துக்கொண்டிருந்த அல்லோலகலத்தை அவன் ஒருவனே அறிவான். விமலன் லலிதாவை மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை. அவள் கையிலிருந்த போட்டோவுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது போல, அதற்கு தான் ஒன்றும் பயந்து போய்விடவில்லை என்பது போல சாவதானமாய் அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்துகொண்டு பத்திரிக்கை ஒன்றை எடுத்து புரட்டத் தொடங்கினான்.

லலிதாவுக்கு விமலனின் தோரணை புரிபடவில்லை. பாயவந்த சிங்கம் சாந்தமடைந்து போய் மிக நிதான மாய் நடந்துகொள்ளத் தொடங்கினாற்போல ஆச்சரிய மடைந்தாள். தன் கைக்கு சிக்கிய மீன் தண்ணீருக்குள் நழுவி விழுந்துவிட்டாற் போலிருந்தது அவளுக்கு. தான் தோற்றுவிட்டாற் போன்ற ஏமாற்றம் ஏற்பட்டது. விமலன் தன்னை கெஞ்சுவான், அல்லது மிரட்டுவான் என்று எதிர்பார்த்த அவளுக்கு அவன் சாவதானமாய் சோபாவில் உட்கார்ந்து புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்தபோது பற்றிக்கொண்டு வந்தது.

அதற்குள் மாதவன் உள்ளே வந்தார். அவரைப் பார்த்ததுமே லலிதா போட்டோவை உறைக்குள்

போட்டு விட்டாள். மாதவன் விமலனைப் பார்த்ததுமே, "விமல்! நீ இங்கே வந்திருக்கியா? நான் உன்னைத் தேடிக்கொண்டு உன் வீட்டிற்குப் போனேன்." என்று அவனுக்கெதிரே இருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டார்.

லலிதா குறுக்கிட்டுச் சொன்னாள், "விமலனுக்கு ஏதோ விவரங்கள் வேண்டுமாம், அதையெல்லாம் சொல்ல என்னால் முடியாது. நீங்கள் சொல்லுங்கள்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

போகும் முன்னால் கையிலிருந்த கவரை விமலனை நோக்கி காட்டி எச்சரிப்பது போல ஆட்டி விட்டுப் போகத் தவறவில்லை.

மாதவன் தலையைப் பிடித்துக்கொண்டே சொன்னார்—"விமல்! இவங்க பொறுப்பில்லாத் தனத்தையும் அவசரத்தையும் பார்த்தாயா? எவ்வளவு அனர்த்தம் பண்ணிட்டாங்க பார்! அவர் முழுவதுமாய் செத்து விட்டாரா இல்லையா என்று தெரிந்து கொள்ளாமலேயே ஸ்டேட்மென்ட் தந்துவிட்டாங்க. நான் இந்த விஷயத்தை அசெம்பிளியில் கேட்டு அவங்க மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படியாய் பண்ணப் போகிறேன். அதுவும் பொறுப்பான போலீஸ் டிபார்ட்மென்டே இப்படிப் பண்ணினால் எப்படி?"

விமலன் முறுவலுடன், "அவங்ககூட மனுஷங்கதானே?" என்றான்.

விஸ்வநாதன் செத்துவிட்டார் என்ற உத்தேசத்துடன்தான் மாதவன் லலிதாவுக்கு பக்கபலமாய் நின்றார். அவர் சாகவில்லை என்று கேட்டமே நண்பராய் அவர் மனது உடனே சந்தோஷப்பட்டாலும், அப்புறமாய் அவர் வாயிலிருந்து நடந்ததற்கு எதிர்பதமாய் ஏதாவது கேட்கும்படியாய் இருக்குமோ, தன் நிலைமை

கூண்டில் சிக்கிய எலியைப் போல ஆகிவிடுமோ என்ற பயம் பீடிக்கத் தொடங்கிற்று அவரை. லலிதா சொன்னதெல்லாம் உண்மையாகவே இருந்தால் பரவாயில்லை. ஒருக்கால் அதெல்லாம் பொய்யாயிருந்தால்? தான் அவசரப்பட்டு லலிதாவுக்கு பக்கபலாய் நின்றதற்கு உள்ளூர வருந்தி கொண்டிருந்தாலும், தேவைப்பட்டால் கடைசி வரைக்கும் தன் வார்த்தை உண்மைதான் என்று வாதாடுவதற்கு தீர்மானித்துக்கொண்டார். அவர் பார்க்காத கேசா? இந்தக் காலத்தில் நீதி எங்கே இருக்கிறது? லாயர்கள் வாதாடுவதுதான் நீதி! பொய்யானாலும் உண்மையான சாட்சிகளுடன் ருசுவாக்க முடிந்ததுதான் சத்தியம்!

சாட்சிகள் வேண்டுமென்றால் ஏகப்பட்டவை இருக்கிறது. விஸ்வநாதனுக்கு உயிர் திரும்பி வந்து விட்டதாய் தெரிந்த அடுத்த நிமிஷத்திலிருந்தே தன் வீட்டு வேலைக்காரர்களையும், விஸ்வநாதன் வீட்டு சமையல்காரனையும். டிரைவரையும், தோட்டக்காரனையும் அவர் பணத்தால் விலைகொடுத்து வாங்கி விட்டார். எது எப்படியிருந்தாலும் முன் ஜாக்கிரதையோடு இருப்பது நல்லது என்று தோன்றிற்று அவருக்கு.

21

இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றாவது நாள்... அன்று காலையிலிருந்து கும்பவர்ஷமாய் மழை பெய்து கொண்டிருந்தது. விமலன் அலைந்து திரிந்து விட்டு பிற்பகல் மூன்று மணிக்கு வீட்டிற்கு வந்தான். அவனுக்குப் பசியும் தூக்கமும் மடிந்து போய் விட்டாற் போல இருந்தது.

விஸ்வநாதனின் உயிர் காற்றில் படபடக்கும் தீபத்தைப் போல இருந்தது. அவர் பிழைத்துக் கொள்வாரா மாட்டாரா என்று இன்னமும் தீர்மானத்திற்கு வர முடியவில்லை டாக்டர்களால். ஆனாலும் அவர்கள் பலவிதங்களிலும் போராடிக்கொண்டிருந்தார்கள்.

விமலன் விஸ்வநாதன் வீட்டு டிரைவரையும், சமையல்காரனையும், தோட்டக்காரனையும் தனித்தனியாய் சந்தித்தான். அவர்கள் தந்த பதில்கள் ஒரே விதமாய் மதில் மேல் பூனையைப் போல இருந்தன. அக்கம்பக்கத்தாரைக் கேட்டபொழுது ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமாய் சொன்னார்கள். இந்த நவ நாகரீக உலகத்தில் பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் கூட யாருக்கும் இருக்காது. அவரவர்களின் தொல்லை அவரவர்களுக்கு என்பது போல இருப்பார்கள். வலது பக்கத்து வீட்டு வேலைக்காரன் மட்டும் மாலையில் விஸ்வநாதனின் வீட்டுக் கார் வெளியே போன பிறகு ஒரு டாக்ஸி அந்த வீட்டிற்கு வந்ததையும் முன்பின் அறிமுகமில்லாத ஒருத்தன் அதில் இருந்ததையும் பார்த்ததாய் சொன்னான். இடதுபக்கத்து வீட்டு வேலைக்காரி ரேகா நடந்து வந்ததைத் தான் பார்த்ததாய் சொன்னாள்.

எதிர்த்த வீட்டிலிருந்த இளைஞன் தான் டாக்ஸியில் ரேகாவைக்கூட பார்த்ததாய் சொன்னான். தலைக்கு ஒரு விதமாய் சொன்ன அவர்களில் யாருடைய வார்த்தையை நம்புவது என்று தெரியவில்லை.

லலிதா வெளியே போனதையோ வந்ததையோ யாரும் பார்த்ததாய் தெரியவில்லை.

மாதவனின் வேலைக்காரன் மட்டும் மாலையில் லலிதா அங்கே வந்ததாய் அழுத்தந் திருத்தமாய் சொன்னான். விமலனுக்குக் குழப்பமாயிருந்தது. இந்த கேசில்

உண்மையை வரவழைக்க வேண்டுமென்றால் இரண்டே இரண்டு வழிகள்தான் இருந்தன. ஒன்று விஸ்வநாதனின் உயிர் நிலைத்து அவருக்கு நன்றாய் நினைவு வந்து என்ன நடந்தது என்பதைத் தெளிவாய் சொல்ல வேண்டும். இரண்டாவது சேகர் தென்பட்டு தான் அந்த வீட்டிற்கு ஏன் போனான், என்ன செய்தான் என்ற உண்மையை வெளிப்படுத்துவது. தற்சமயம் இவ்விரண்டுமே சாத்தியக்கூறாய் தோன்றவில்லை.

விமலன் சங்கரனின் வீட்டிற்குப் போனான். அவர் வீட்டில் இல்லை. சுந்தரி ரேகாவின் நலனைப்பற்றிக் கவலைப்பட்டு ராகம் போடத் தொடங்கினாள். அவன் அவளைத் தேற்றிவிட்டு, சங்கரன் வந்ததும் உடனே இருவருமாய் சேர்ந்து தன் வீட்டிற்கு வரச்சொல்லியும், சங்கரனோடு தான் அவசரமாய் பேச வேண்டிய வேலை இருக்கிறது என்றும் திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டு வந்தான். ரேகாவைப் பார்க்க வேண்டும் என்று தவி தவித்துக் கொண்டிருந்த சுந்தரி, சங்கரன் வீட்டிற்கு வந்ததுமே கண்டிப்பாய் சேர்ந்து வருவதாய் வாக்களித் தாள்.

விமலன் எவ்வளவு முயன்ற போதிலும் சேகர் இருக் குமிடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ரேகா அரெஸ்ட் ஆன செய்தி அவனுக்குத் தெரிந்திருந்தால் கண்டிப்பாய் எங்கேயிருந்தாலும் வருவான். ஆனால் இரண்டு நாட்கள் ஆகியும் கூட அவன் வராததால் அவனுக்கு இந்தச் செய்தி தெரிந்ததோ இல்லையோ, ஒருக்கால் தெரிந்தும் வர முடியாத நிலையில் இருக் கிறானோ என்னவோ என்று தோன்றத் தொடங்கிற்று.

விமலன் ஆசுபத்திரியிலிருந்து விஸ்வநாதனின் நிலைமையைத் தெரியப்படுத்தக்கூடிய போன்காலை எதிர்பார்த்துக் கொண்டு ஆபீசு அறையில் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்திருந்தான். வெளியே மழையின்

சீற்றம் இன்னும் வலுத்தது. அதற்குள் வீதிக் கதவை டக்டக் என்று தட்டிய சப்தம் கேட்டது. கதவைத் திறந்தான்.

எதிரே வாசலில் ராஜஸ்தானியர்களின் பெரிய தலைப்பாகையைச் சுற்றிக்கொண்டு, விலையுயர்ந்த சால்வையைப் போர்த்திக்கொண்டு நின்றிருந்த ஒரு ஆள் விமலன் கதவைத் திறந்ததும் திறக்காமலுமாய் சட்டென்று உள்ளே நுழைந்து விட்டான்.

''யார் நீங்கள்? என்ன வேண்டும்?'' விமலன் தீவிரமாய் கேட்டான். விமலனுக்கு பதில் சொல்லாமலேயே வந்த அந்த ஆள் கதவைச் சாத்திவிட்டான்.

விமலனின் கண்கள் சுறுசுறுப்பாயின. வந்தவனைச் சட்டென்று உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்த்தான். அவனுள் ஏதோ ஊகம் பளிச்சிட்டது. அவன் ஊகித்ததே நிஜமாயிற்று.

''விமல்! என்னை உங்களால் அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லையா?'' என்று சேகர் தலைப்பாகையை எடுத்தான்.

''சேகர்'' விமலன் தாங்க முடியாத ஆச்சரியத்தோடு பார்த்தான். அவனுக்குத் தேடப்போன மூலிகை காலுக்குத் தட்டுப்பட்டாற்போல இருந்தது.

''இங்கே இப்பொழுது யாராவது வருவாங்களா?''

''ஊஹூம்! வந்தால் உங்க மாமாதான் வரணும். அவரைத் தவிர வேறு யாரும் வரமாட்டாங்க.''

இருவரும் ஆபீசு அறைக்கு வந்தார்கள்.

''ரேகா இங்கேதானே இருக்கிறாள்?'' கேட்டான் சேகர்.

''ஆமாம்.''

''விமல்! உங்கள் நன்றியை மறக்கவே மாட்டேன்.''

உணர்ச்சிவசத்துடன் சொன்னான்.

''நன்றியா? நான் என்ன பண்ணிவிட்டேன்னு?''

''ரேகாவை ஜாமீனில் விடுதலை பண்ணி யாருக்கும் பயப்படாமல், உங்கள் கௌரவத்தையெல்லாம் கூட பொருட்படுத்தாமல் உங்களிடம் கொண்டுவந்து வைத்துக் கொண்டதற்கு.''

''அதுவா? இதில் என் சுயநலம் கூட இருக்குன்னு நீ ஏன் நினைத்துக் கொள்ளக்கூடாது?''

சேகர் பதில் பேசவில்லை... விமலன் சேகரைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான், பார்க்காதது போல.

''விமல்! ஐயாம் சாரீ! அன்றைக்கு பூனாவில் உங்களைச் சந்திக்க முடியவில்லை'' சேகர் போர்த்திக் கொண்டிருந்த சால்வையை எடுத்து நாற்காலியின் மீது போட்டான்.

விமலன் அப்பொழுதான் கவனித்தான் சேகர் கையில் சூட் கேஸ் இருந்ததை. அதைப் பார்த்த விமலன் திடுக்கிட்டுப் போனான். அந்த சூட்கேஸ் லலிதாவுடையது. எப்பொழுதாவது பிளேனில் போனால் நல்ல சூட் கேஸ் இல்லை என்று முணுமுணுத்துக் கொண்டிருந்த லலிதாவுக்கு அவன் ஒரு முறை டில்லிக்குப் போயிருந்த பொழுது வாங்கிக் கொண்டு வந்து பரிசாய் தந்தான்.

''என்ன பார்க்கிறாய்? இது என்னிடம் எப்படி வந்ததுன்னா?''

விமலன் 'ஆம்' என்று தலையாட்டினான்.

''இது யாருடையது என்று நான் சொல்லத் தேவையில்லை. இதில் விஸ்வநாதனின் சொத்து இருக்கிறது.

அன்றைக்கு அந்த வீட்டில் திருடி எடுத்துக் கொண்டு போன நான் செக்குச் செதுராமல் திரும்பவும் உங்களிடம் ஒப்படைத்து விடுவதற்காகக் கொண்டு வந்தேன்.''

சேகர் பெட்டியை விமலனின் மேஜை மீது வைத்து மூடியைத் திறந்தான். அது நிறைய மினுமினுத்துக் கொண்டிருந்த நகைகள் விமலனின் மனத்தை ஏதோ செய்தது. அவன் ஊகித்ததே நிஜமாயிற்று. அவன் பயந்து கொண்டிருந்ததே உண்மையாகி கண்ணுக்கு முன்னால் வந்து நின்று பழித்துக் கொண்டிருந்தது. ரேகா அப்பாவி ஒன்றும் இல்லை. ரேகாவும் சேகரும் சேர்ந்துதான் இக்காரியத்தைப் பண்ணியிருக்கிறார்கள். ரேகா அவனிடம் சொன்னது, பேசியது எல்லாம் நடிப்புதான் போலும்!

சேகர் பெட்டியை மூடிவிட்டு நிமிர்ந்து வேதனை நிரம்பிய குரலோடு, ''உங்களோடு நான் கொஞ்சம் பேசணும்'' என்றான்.

''என்ன? இந்த திருட்டுத்தனத்தை நான் பண்ணவில்லை. எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்றா?''

''இல்லை. திருட்டுத்தனத்தைப் பண்ணியது நான்தான். இதெல்லாம் என்னால்தான் நடந்தது. என்னால்தான் அவர் இந்த ஆபத்திற்கு ஆளானார். இதில் ரேகாவுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. அவளுக்கு ஒன்றும் தெரியாது.''

ரேகாவைப் பற்றிய பேச்சு வந்ததுமே விமலனின் முகம் இன்னும் கடினமாகிவிட்டது. ஓஹோ! இதுவா சங்கதி! ரேகா குற்றமற்றவள் என்று சொல்லிவிட்டு, குற்றத்தையெல்லாம் தன் மீது போட்டுக் கொள்வதற்காக வந்திருக்கிறான் போலும் பாசமுள்ள சகோதரன்! விமலன் தயக்கமில்லாமல் கண்டிப்பான குரலில் சொன்

னான், ''சேகர்! விஷயம் இவ்வளவு தூரத்திற்கு வந்து விட்ட பிறகு நீ இன்னும் மூடிவைக்க விரும்புவது உன் அறிவின்மையைத்தான் காட்டுகிறது. ரேகாவுக்கு இதில் எந்தச் சம்பந்தமும் இல்லை என்கிறாய். சரி, ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ரேகா சொல்லாமல், ரேகாவின் ஒத்துழைப்பு இல்லாமல் அந்த வீட்டிற்கு நீ எப்படி வந்தாய்? அந்த வீட்டு விவரமெல்லாம் உனக்கு எப்படி தெரிந்தது? அதையாவது சொல்லு!''

சேகர் பதில் பேசவில்லை. சேகரின் மௌனம் விமலனுக்குப் பைத்தியம் பிடிக்கும்படியாய் வெறியை ஊட்டிற்று.

''ரேகா இல்லாவிட்டால் அந்த நபர் யார் என்று சொல்வதற்கு இவ்வளவு தயக்கம் ஏன்?''

''விமலன்! நீங்கள் என்ன சொன்னாலும் நான் செய்கிறேன். தயவு செய்து இந்த ஒரு விஷயத்தை மட்டும் என்னைக் கேட்கவேண்டாம். என்னால் சொல்ல முடியாது.''

அறையில் கொஞ்ச நேரம் பயங்கர நிசப்தம் ஏற் பட்டது. கொஞ்ச நேரங்கழித்து விமலன் உறுதியான குரலில் தயக்கமில்லாமல் சொல்லிவிட்டான்.

''சரி, உன்னால் அந்த விஷயத்தைச் சொல்ல முடி யாதபொழுது நான் உன்னை பலவந்தப்படுத்த மாட் டேன். ஆனால் இனி என்னால் ஒன்றும் பண்ண முடியாது. ரேகாவைத் திரும்பி போலீசாரிடம் ஒப் படைத்து விடுகிறேன். இதில் ரேகாவுக்குப் பங்கு இருக் கிறதா இல்லையா என்று அவங்க முடிவெடுப்பாங்க.''

''விமலன்!'' சாட்டையால் அடித்து விட்டாற்போல பார்த்தான் சேகர். விமலன் அந்த பார்வைக்கு உருகிப் போய்விடவில்லை. குரலில் இன்னும் கடுமையை வர வழைத்துக் கொண்டு சொன்னான்.

"சரி, நீ சொல்ல விரும்பவில்லையென்றால், அந்த நபர் ரேகாவாய்தான் இருப்பாள். ரேகாவுக்கு அந்த வீட்டில் எங்கே எந்தெந்த சாமான்கள் இருக்கின்றன என்று நன்றாய் தெரியும். ரேகா ஏறக்குறைய அவர் மகளைப் போலவே வளைய வந்து கொண்டிருக்கிறாள் அந்த வீட்டில். சீ, சீ. இது நம்பிக்கை துரோகம்! இதைவிடக் கொடுமை வேறில்லை."

சேகர் சட்டென்று விமலனின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"விமலன்! நீங்கள் ரொம்பவும் தப்பாய் புரிந்து கொண்டுவிட்டீங்க. கடவுள் சாட்சியாய் சொல்கிறேன், ரேகாவுக்கு இதில் ஒன்றும் சம்பந்தமில்லை. அவளுக்கு ஒன்றுமே தெரியாது" என்றான் சேகர் தீவிரமாய்.

"ரேகா இல்லாவிட்டால் பின்னே யார்? வேறு யாருக்கு இதில் சம்பந்தம்?" அடிக்க வந்தாற்போல கோபத்துடன் கேட்டான் விமலன்.

"விமலன்! அந்த நபரை வெளிக்கொண்டுவராமல் பார்த்துக் கொள்ளும் உபாயமே கிடையாதா?" என்றான்.

"இருக்கிறது" விமலன் சட்டென்று சொன்னான்.

சேகர் ஆசையோடு நிமிர்ந்து "அதென்ன?" என்றான்.

"ரேகாவின் மீது இதையெல்லாம் தள்ளிவிடுவது, ரேகாவைக் குற்றவாளியாய் போலீசாரிடம் ஒப்படைப்பது, அந்த நபர் உனக்கு முக்கியமானபொழுது இதொன்றுதான் வழி."

"இல்லை, இல்லை ரேகாவுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது." செய்வதறியாமல் பார்த்த சேகர், மேஜை மீது முகத்தை கவிழ்த்துக்கொண்டான்.

அவன் தலை நிம்மதியின்றி அப்படியும் இப்படியும் நகர்ந்தது. அவன் வெளியே சொல்ல முடியாத வேதனையால் தவித்துக்கொண்டிருக்கிறான் என்று புரிந்தது விமலனுக்கு.

அவன் சேகர் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு பின்னால் போய் நின்று அவன் தலையை பரிவோடு தடவி கொடுத்துகொண்டே அன்பொழுகச் சொன்னான்,

''சேகர்! உன் மீது எனக்கு அன்பு இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாய் தெரியாத்தனமாய் நீ சிக்கிக்கொண்டு விட்டிருக்கும் இந்த விஷ வளையத்திலிருந்து உன்னை காப்பாற்றி வெளியே கொண்டு வருவதற்காக கைக் கொடுக்க வேண்டும் ஏன்று தோன்றுகிறது. இதில் நீயும் கொஞ்சம் ஒத்துழைத்தாயானால் என் வேலை சுலபமாகி விடும். உண்மையைத் தயங்காமல் வெளிப்படுத்து. அது போதும் எனக்கு. அந்த நபருக்கு எந்த ஆபத்தும் வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்.

''ரேகா அப்பாவி என்ற நம்பிக்கையோடுதான் அவளை ஜாமீனில் விடுவித்து என் வீட்டில் கொண்டு வந்து வைத்துக்கொண்டிருக்கிறேன். நாலு பேர் சிரித்த போதிலும் ஏளனம் பண்ணிய போதிலும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன், சேகர்! உனக்கும் ரேகாவுக்கும் நான் பண்ண விரும்பும் இந்த உதவி விஷப்பாம்பாகி என் கால்களையே சுற்றிக்கொண்டு விடக்கூடிய ஆபத்தை எனக்கு வர விட்டுவிடாதே! இது என் வேண்டுகோள்.''

அன்பும் ஆதரவும் கொண்டு செவிகளில் பன்னீராய் வந்து பெய்த அந்த வார்த்தைகளைக் கேட்டு உருகிப் போய்விட்டான் சேகர்.

''விமலன்! நான்... நான் எப்படி சொல்வேன்?''

''பெயரை சொல்லு போதும்.''

"அந்தப் பெயர் என் வாயிலிருந்து வருவது என்னையே நான் கொன்று கொள்வதற்கு சமம். உயிரோடிருக்கும்போதே செத்துவிட்டவன் ஆவேன்."

"ஆம், ரொம்பவும் நல்லது. பாவமான இந்தப் பழைய வாழ்க்கையில் செத்து போய்விட்டு திரும்பவும் பிறந்தாற்போல புது வாழ்க்கையைத் தொடரலாம்."

சேகர் தடுமாற்றத்துடன் நின்றுவிட்டான்.

"சொல்லு சேகர்! யார் அந்த நபர்?" குழைவோடு கேட்டான்.

"அந்த நபர்... அந்த நபர்... விஸ்வநாதனின்..." சேகர் சட்டென்று நிறுத்திகொண்டான்.

"உம்! விஸ்வநாதனின் சமையல்காரனா?"

சேகர் இல்லை என்று தலையாட்டினான்.

"பின்னே, டிரைவரா?"

"இல்லை. அவர் மகள் லலிதா!"

"லலிதாவா? லலிதாவா? நீ என்ன சொல்கிறாய்? லலிதாவா?"

"ஆமாம் விமலன்! லலிதாதான்."

விமலனுக்கு தலை சுற்றிற்று.

"அந்த நபர் லலிதாவா?"

அவனால் நம்ப முடியவில்லை. லலிதா வேறு என்ன வேண்டுமானாலும் பண்ணுவாள். ஆனால் தன் வீட்டிலேயே தான் திருட்டுத்தனம் பண்ணுவாளா? நடக்காத காரியம். ஒருக்கால் சேகர் இதையெல்லாம் ரேகாவின் மீதிருந்து லலிதாவின் மேல் தள்ளிவிடலாம் என்று திட்டம் போட்டுக்கொண்டு வந்திருப்பானா? விமலன் சேகரின் சட்டையை பிடித்துக்கொண்டு பல

மாய் நாற்காலியை விட்டு தூக்கி நிறுத்தினான். ''சேகர்! கடைசி தடவையாய் கேட்கிறேன். நீ நடிப்பதை விட்டு விட்டு உண்மையைச் சொல்கிறயா இல்லையா? உன்னோடு கை கலந்தது லலிதாவா? ரேகாவா? நீ பொய் சொன்னால் அது உனக்கும் ரேகாவுக்கும் ஆபத்தாய்தான் முடியும். லலிதா யார் தெரியுமா? லலிதாவின் மேல் தப்பை தள்ளிவிட்டு நீ கை கழுவி கொண்டுவிடலாம் என்றெண்ணியிருந்தால் அது தப்பு,''

''விமலன்! நான் நிஜத்தைதான் சொல்றேன். இதில் பொய் இல்லை.''

''லலிதாவுக்கும் உனக்கும் பரிச்சியம் ஏது? முன்பின் தெரியாத உன்னை லலிதா வீட்டிற்கு வரச் சொன்னாள் என்றால் என்னால் எப்படி நம்ப முடியும்?''

''விமலன்! லலிதாவுக்கு என்னை ஜேம்ஸாய் பல நாட்களாய் தெரியும். எங்களுடையது பரிச்சியம் என்று சொல்வதைவிட, சிநேகம் என்று சொன்னால்தான் பொருந்தும்.

''இந்தக் காகிதங்களைப் பாருங்கள். விஸ்வநாதன் எழுதிய உயில் இது. இதில் தனக்கு அநியாயம் ஏற்படும் படியாய் எழுதியிருப்பதாய் லாயர் மாதவன் என்பவரின் மனைவி சொன்னாராம்.

''வீட்டில் யாருமில்லாத சாயந்திர வேளையில் என்னை வரச்சொல்லி போன் பண்ணினாள். நான் போனேன். நான் இரும்பு பெட்டியைத் திறந்து இந்த உயிலை எடுத்துக்கொண்டிருக்கையில் எதிர்பாராமல் அவர் வந்துவிட்டார். லலிதா மிகவும் பயந்துவிட்டாள். நானும் கூட...'' என்று அன்று மாலையில் தம்மிருவருக்கு இடையே நடந்த சம்பவங்களை கண்ணுக்கெதிரே பார்ப்பது போல விவரிக்கத் தொடங்கினான்.

விமலன் சிலையாய் வெகுநேரம் வரை அப்படியே நின்றுவிட்டான். அவனுக்குப் வாயடைத்து போய் விட்டது. இதென்ன விசித்திரம்! சேகர் எந்த மூலை? லலிதா எந்த மூலை? இவ்விருவருக்கும் பரிச்சியம் ஏற்பட்டது வினோதமாய் இருக்கிறதே! எவ்வளவு விபரீதம்!

சேகர் நாற்காலியில் சரிந்தவன் சொன்னான்— "மாலையில் வெகு நேரமாகியும் லலிதா வராததால் நான் ஓட்டலுக்கு போய்விட்டேன். அன்றிரவெல்லாம் தூங்கவில்லை. இரவு ஒரு மணிக்கு போன் பண்ணி னேன். போன் ரிங் ஆனபொழுதும் யாருமே எடுக்க வில்லை. இந்த நகைகள் என்னிடம் தங்கிவிட்டன. லலிதா என்னோடு ஓடி வந்துவிடுவாள் என்ற உத்தேசத் துடன்தான் இந்த நகைகளை எடுத்து வந்தேன். இதை என்ன பண்ண வேண்டும், எங்கே வைக்க வேண்டும் என்று புரியவில்லை. மறு நாள் அதிகாலையிலேயே கல்கத்தாவுக்கு புறப்பட்டுப் போய் ஒருத்தனை சந்தித்து ஒரு வாரம் அவனுக்கு வலது கையாய் இருந்து உதவி பண்ணும்படி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது.

"நான் கல்கத்தாவுக்கு போய்விட்டால் இப்போ தைக்குத் திரும்பி வர முடியாது. அதுவரை இந்த நகை களை எங்கே ஒளித்து வைப்பது, என்ன செய்வது என்று தெரியவில்லை. அதற்கு தகுந்தாற்போல மறு நாள் காலை பேப்பர்களில் ரேகாவின் போட்டோவைப் பார்த்ததும் என் உயிரே போய்விட்டது. மறு நாள் என் மேலிடத்தாருக்கு என் மீது எந்தச் சந்தேகமும் வராத வாறு பிளேனில் டிக்கெட்டை புக் பண்ணிவிட்டு நான் வருகிறேன் என்று செய்தியையும் அனுப்பிவிட்டேன்.

"ஓட்டல் அறையை காலி பண்ணிவிட்டு விமான நிலையத்திற்கு புறப்பட்ட நான், அங்கே போகாமல் நடுவில் வழியை மாற்றிக்கொண்டு சென்னைக்கு இருபது

கிலோ மீட்டர்கள் தொலைவிலிருந்த ஒரு கிராமத்திற்கு போனேன். அங்கே ஒரு விவசாயக் குடும்பம் இருந்தது. நானும் மேரியும் எப்பொழுதாவது போய் அங்கே இரண்டு மூன்று நாட்கள் கழித்துவிட்டு வருவது வழக்கம். என் வரவு அவர்களுக்கு சந்தேகம் தரவில்லை. நான் வேலையாய் இந்த பக்கமாய் வந்தேன் என்றும், மேரியை அழைத்துக்கொண்டு வர முடியவில்லை என்றும் சொன்னேன்.

''அன்று பகலெல்லாம் அங்கேயே கழித்த நான் இருட்டிய பிறகு திரும்பவும் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். உங்களைச் சந்திக்க முயன்றேன், முடியவில்லை. அப்பொழுதிலிருந்து உங்களிடம் வருவதற்காக முயன்றுகொண்டிருந்தேன். நான் அந்த பிளேனில் புறப்பட்டு வரவில்லை என்று இதற்குள் என் மேலிடத்தாருக்கு செய்தி போயிருக்கும். நாங்கள் எங்கேயாவது ஆபத்தை உணர்ந்து தங்க நேரிட்டால் ரகசியமாய் இந்தச் செய்தியை எட்டச் செய்வதற்கு சீக்ரட் கோட் ஒன்று இருக்கிறது எங்களுக்கு. நான் அதைக்கூட அனுப்பவில்லை.

''அதோடு நேற்றைய பேப்பரில் விஸ்வநாதனின் வீட்டில் நடந்த அந்த திருட்டிலும் கொலையிலும் எனக்கும்கூட பங்கு இருப்பதாய் செய்திகள் வெளி வந்திருக்கின்றன. இதற்குகூட நான் அவர்களுக்கு சால்ஜாப்பு சொல்ல வேண்டும். இதற்குள் என்னை வேட்டையாடத் தொடங்கியிருப்பார்கள். இந்த பக்கத்திலோ போலீசார் என்னை தேடிக்கொண்டிருக்காங்க.

''இந்த விஷ வளையத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் எனக்கு நீங்கள்தான் கதியாய் தோன்றுகிறது. விமலன்! நான் நடந்ததையெல்லாம் நடந்தவாறு சொல்லி விட்டேன். இதில் ஒரு வார்த்தைகூட பொய் இல்லை. இதில் லலிதாவின் பெயர் வெளியே வரக்கூடாது.

அநியாயமாய் ரேகாவின் மீது ஏற்பட்டிருக்கும் பழிகூட நீங்க வேண்டும்'' சேகர் சொல்லி முடித்தான்.

அறையில் வெகுநேரம் நிசப்தம் ஏற்பட்டது. இந்த திருட்டுத்தனத்திலும் கொலையிலும் லலிதாவுக்குக்கூட பாகம் உண்டு என்பதை விமலனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. விஷயம் போலீசு வரைக்கும் போகாமலிருந்தால் அது வேறு விதமாய் இருந்திருக்கும். இப்பொழுது இதெல்லாம் வெளியே வந்து விட்ட பிறகு, காதும் காதும் வைத்தாற்போல திருத்திக் கொள்வதுகூட கஷ்டந்தான்.

வெகுநேரங் கழித்து சேகர் நிமிர்ந்தான். சோர்வுடன் சொன்னான்—''ரெண்டு நாளாய் ஒன்றுமே சாப்பிட வில்லை. வெட்கத்தை விட்டுக் கேட்கிறதுக்கு மன்னித்துக் கொள். எனக்கு ரொம்ப பசிக்கிறது. தலை சுற்றுகிறது.''

விமலன் திடுக்கிட்டவனாய் பார்த்தான்.

''அடடா! அந்த விஷயத்தை இவ்வளவு நேரமாய் ஏன் சொல்லவேயில்லை? இரு, இதோ வரேன்'' என்று வெளியே போனான்.

மளமளவென்று சமையல் அறைப்பக்கம் வந்த விமலன் அங்கே கிண்ணங்களை ஒழித்துக்கொண்டி ருந்த கங்கம்மாவிடம்—''கங்கம்மா, சாதம் இருக்கா? ஒரு ஆளுக்கு வேண்டிய சாதகம் வேண்டும்'' என்றான்.

''இல்லை தொரை! ரெண்டு கவளம் இருந்தது. இப்ப தான் நான் சாப்பிட்டு விட்டேன். சமைக்கச் சொன்னால் நிமிஷத்தில் சமைத்து விடுகிறேன்'' என்றாள் கங்கம்மா.

''சமை. சீக்கிரமாய் ஆகணும். அர்ஜென்ட்! மொதல்ல ரெண்டு கப் காபி கொடு.'' விமலன் சொல்லிக் கொண்டே சமையலறை முழுவதையும் கண்களால் துழாவினான். வீட்டில் இருந்த பிஸ்கெட்டுகள்,

பிரட்டுகள்கூட தீர்ந்து விட்டன. கமலன் இருந்திருந்தால் உடனுக்குடன் வாங்கி வைத்திருப்பான்.

சமையலறையை விட்டு வெளியே வந்த விமலனுக்கு எதிரே டைனிங் டேபிள் மீது இருந்த பழக்கூடை கண்ணில்பட்டது. கிட்டே போய் இரண்டு ஆப்பிள்கள், நாலைந்து வாழைப்பழங்களை எடுத்துக் கொண்டு ஆபீசு அறையை நோக்கி வரப்போன விமலனுக்கு மாடியிலிருந்து மெதுவாய் கீழே இறங்கி வந்து கொண்டிருந்த ரேகா தென்பட்டாள். ரேகாவைப் பார்த்ததுமே விமலன் நின்றான்.

"ரேகா! கீழே வராதே! என்னைப் பார்க்க க்ளயிண்ட் வந்திருக்காங்க. அவங்களோடு பேசணும். மாடிக்குப் போ நீ" என்றான்.

படியிறங்கிக் கொண்டிருந்த ரேகா நின்றாள்.

அவன் கை நிறைய அள்ளிக் கொண்டிருந்த பழங்களையும் அவனையும் மாறி மாறிச் சந்தேகத்துடன் பார்த்தாள்.

"நான் கூப்பிடுகிற வரைக்கும் நீ கீழே வரவேண்டாம். மாடிக்குப் போ."

உத்தரவிட்டு விட்டு மளமளவென்று அவன் ஆபீசு அறையை நோக்கிப் போய்விட்டான்.

ரேகாவுக்கு விமலனின் தோரணை வினோதமாய் இருந்தது. வந்தவர்கள் யாராயிருக்கும் என்ற ஆர்வம் கூட தோன்றிற்று. அவள் நொடிந்து போய் ஒவ்வொரு படியாய் ஏறி மாடிக்குப் போகத் தொடங்கினாள். கீழ் அறையிலிருந்து யாருடைய பேச்சுக் குரலோ கேட்டுக் கொண்டிருந்தது.

விமலன் கேட்டதற்கு அந்த ஆள் ஏதோ பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

அந்தக் குரலைக் கேட்டதுமே ரேகா டக்கென்று நின்று விட்டாள்.

மேலே ஏறப்போன பாதம் அப்படியே நின்று விட்டது.

ரேகா செவிகளைத் தீட்டிக் கொண்டு பரிச்சியமான அக்குரலுக்காகக் காத்திருந்து பார்க்கத் தொடங்கினாள். சந்தேகமில்லை, சேகர்தான்!

ரேகா திரும்பி மளமளவென்று கீழே இறங்கி வந்து விட்டாள்.

அவள் தன்னையறியாமல் நின்றாள். சேகர் எந்த முகத்தை வைத்துக் கொண்டு இங்கே வந்தான்? என்ன தைரியம்? ரேகாவுக்கு ரோஷமும் தன்மானமும் பொங்கி வந்தன.

உள்ளே விமலன் சொல்லிக் கொண்டிருந்தான்— "இதைச் சாப்பிட்டு விட்டு காபியைக் குடி முதலில். சுடச்சுட சாப்பாடாகிறது, அப்புறமாய் சாப்பிடலாம்."

"தாங்க் யூ."

ரேகா அறைக்கதவில் தொங்கிக் கொண்டிருந்த திரைச்சீலையை ஒதுக்கினாள்.

அறையில் சேகர் அந்த பக்கமாய் திரும்பி நின்று கொண்டிருந்தான். அவனுக்கெதிரே கதவிற்கு நேராய் விமலன் நின்று கொண்டிருந்தான்.

சேகர் பசியுண்ட மிருகத்தைப் போல ஆப்பிளைக் கடித்துத் தின்று கொண்டிருந்தான்.

விமலன் ஆரஞ்சுப் பழத்தை நாலாய் வெட்டி சேகருக்கு முன்னால் வைத்துக் கொண்டிருந்தான்.

ரேகா அறைக்குள் நுழைந்தாள்.

''சேகர்! நடந்ததென்னவோ நடந்து விட்டது. இனிமேல் நடக்கப் போவதற்கு நாம்ப...'' நிமிர்ந்து ஏதோ சொல்லப் போன விமலன், அப்போழுதுதான் அறைக்குள் நுழைந்த ரேகாவைப் பார்த்து அப்படியே நின்று விட்டான்.

பேச்சிற்கிடையே விமலன் திடீரென்று நிறுத்திக் கொண்டு விட்டதைப் பார்த்து சேகர் திரும்பிப் பார்த்தான். ரேகாவைப் பார்த்ததுமே மெதுவாய் திரும்பினான்.

ரேகா தான் சொன்னதைக் கேட்காமல் கீழே வந்ததற்கு விமலனுக்கு கோபம் வந்தது.

''ரேகா...'' என்றான் கடுமையாய்.

ரேகாவுக்கு விமலனின் அழைப்பு காதில் விழுந்ததாய் தெரியவில்லை. சேகரைப் பார்த்து ''ஏன் வந்தாய் இங்கே? இன்னும் என்ன வேணும்? உனக்கு வேண்டியது பணம் தானே? பணப் பைத்தியமாகி விட்ட உனக்கு நல்லது கெட்டது தெரியவில்லை. நீ செய்ய நினைத்ததைச் செய்துவிட்டாய். இந்த வீட்டிற்குள் நுழைய உனக்கு வெட்கமில்லை?''

சேகர் ரேகாவின் தோரணையை பார்த்து விக்கித்துப் போனவனாய் பார்க்கத் தொடங்கினான்

''நீ இங்கே ஏன் வந்தாய் என்று தெரியும் எனக்கு. நீ யாருக்கும் சால்ஜாப்பு சொல்லத் தேவையில்லை. இந்த நிமிஷமே வீட்டை விட்டுப் போய்விடு.''

''ரேகா...'' என்றான் சேகர். அவன் முகம் வெளுத்து விட்டது.

''ரேகா! அந்தப் பெயரில் கூப்பிட உனக்கு வாய் எப்படி வந்தது? நான் எவ்வளவு சொல்லியும் கேட்

காமல் இந்தக் காரியம் பண்ண எப்பொழுது துணிந்தாயோ அப்பொழுதே ரேகா செத்துவிட்டாள்.''

விமலன் ரேகாவிடம் வந்தான்.

''ரேகா! இதென்ன? உனக்கு புத்தி பிசகிவிட்டதா?''

ரேகா விமலன் பேசியதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் சேகரைப் பார்த்து, ''அம்மா செத்துவிட்டாங்க. அந்த விஷயம் உனக்குத் தெரியுமா? ஒரு தடவை உன்னைக் கண்ணாரப் பார்க்கணும் என்று எவ்வளவு தவித்துப் போயிருப்பாங்க! வந்தாயா நீ? எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்? என் பேச்சைக் கேட்டாயா? ஆயிரம் சாக்குகளைச் சொன்னாய். அம்மா உன்னைப் பற்றியே புலம்பிக் கொண்டு செத்தாங்க. அவங்க ஆத்மாவுக்கு சாந்தி இல்லாமல் செய்துவிட்டாய். நீ சுகமாய் இருந்துகொள். உன்னை தட்டிக் கேட்கப் போவதில்லை யாரும்.''

''ரேகா...''

விமலன் அதற்கு மேல் தாங்க முடியாதவனாய் சட்டென்று ரேகாவின் வாயைப் பொத்திவிட்டு அப்பால் இழுத்துக் கொண்டு வந்தான்.

''ரேகா! எனக்கு என்றுமில்லாத கோபத்தை வர வழைக்கிறாய். நீ மாடிக்குப் போ முதலில்...''

''ஊஹூம், போகமாட்டேன்.''

விமலன் வியப்போடு பார்த்தான்.

''என் பேச்சைக் கேட்க மாட்டாயா?''

''மாட்டேன். நீங்கள் என்று இல்லை, யார் சொன்னாலும் கேட்கமாட்டேன். என் வருத்தம் உங்களுக்கென்ன தெரியும்? நேற்றையிலிருந்து இந்த வாழ்க்கையே எனக்கு வெறுப்பாய் இருக்கு. இதை

திருத்திக் கொள்ளவும் முடியவில்லை, தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை.''

விமலனின் கோபம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. ரேகாவின் மனதில் கொதித்துக் கொண்டிருந்த அலைகளை அவன் அறியாமலில்லை. அவன் மனது நெகிழ்ந்து விட்டது.

''நீ மாடிக்குப் போகிறாயா, மாட்டாயா?'' அவனையறியாமலேயே அவன் குரல் மென்மையாய் கேட்டது.

''ஊஹூம், நான் போகமாட்டேன். நீங்கள் அவனை அனுப்பி விடுங்கள். அவன் பேச்சை நம்ப வேண்டாம்.''

விமலன் ஒரு வினாடி ரேகாவையே கூர்ந்து பார்த்தான். அவன் இடது கை திடீரென்று ரேகாவின் தோள்களைச் சுற்றிலும் விழுந்தது. அதே சமயத்தில் வலது கை முழங்கால்களைச் சுற்றிக் கொண்டது. விமலனின் இரு கைகளும் ரேகாவை சிறு பெண்ணைத் தூக்குவது போல மேலே தூக்கிவிட்டன. ரேகாவுக்குத் தலை சுற்றினாற்போல இருந்தது. தன்னை சுதாரித்துக் கொண்டு போராடுவதற்குள் விமலன் படிகளில் ஏறத் தொடங்கிவிட்டான். ரேகா போராடியபோது அவளை மார்போடு அழுத்திப் பிடித்துச் சிறைப்படுத்திவிட்டான்.

ஏதோ வேலையாய் வெளியே வந்த கங்கம்மா இக்காட்சியைப் பார்த்து வியப்படைந்து போனாள். கண்கள் அகல விரிய, மூக்கில் விரலை வைத்துக் கொண்டாள். வாழ்க்கையில் என்றுமே இவ்வளவு ஆர்வத்தை ஊட்டக்கூடிய காட்சியைக் கண்டதில்லை அவள்.

விமலன் ரேகாவை மாடிக்குத் தன் அறைக்குத் தூக்கி வந்து கட்டிலில் இறக்கினான். திரும்பிப் போக முயன்ற அவன் நின்று சொன்னான், ''உனக்கு நிஜ

மாகவே புத்தி பேதலித்துவிட்டது. சேகர் எந்த நிலை மையில் இங்கே வந்திருக்கிறான் என்று தெரிந்தால் நீ இப்படிப் பேசமாட்டாய். அவங்க கும்பலை எதிர்த்து வந்திருக்கிறான். என்னை நம்பி வந்திருக்கும் அவனுக் குப் புகலிடம் தர வேண்டியது என் தர்மம் இல்லையா? அந்தப் பொறுப்பு என்னைச் சேர்ந்தது இல்லை என் கிறாயா?''

ரேகா வியப்போடு அவனைப் பார்க்கத் தொடங்கி னாள்.

''நீ கொஞ்சம் ரகளை பண்ணாமல், பொறுமை யாய் இருந்து, என் மேல் நம்பிக்கை வைத்தால் எல்லாம் நன்றாய் நடக்கும். இப்பச் சொல்லு, என் பேச்சைக் கேட்பாயோனோ?''

ரேகா 'கேட்பேன்' என்று தலையாட்டினாள்.

''நான் சேகரை இங்கே அனுப்புகிறேன். நீ சாதா ரணமாய் பேசு. அவன் மனதைப் புண்படுத்தக் கூடிய விஷயம் எதையும் பேசாதே. என்ன, செய்கிறாயா?''

ரேகா 'சரி' என்று தலையாட்டினாள்.

சேகர் தன் கும்பலை எதிர்த்துக்கொண்டு விமலனி டம் தஞ்சம் புகுந்திருக்கிறான் என்ற விஷயம் அவள் செவிகளில் அமிர்தத்தை வார்த்தாற் போல இருந்தது.

விமலன் படியிறங்கி நேராய் சமையலறைக்கு வந்தான். கங்கம்மா காபியைக் கலந்து வைத்திருந்தாள். அவன் கோப்பைகளை எடுத்துக்கொண்டு ஆபீஸ் ரூமிற்கு வந்தான்.

சேகர் காபியைக் குடித்துக் கொண்டிருந்தபொழுது கதவைத் தட்டிய சப்தம் கேட்டது.

சேகர் திடுக்கிட்டான்.

விமலன் யாராயிருக்கும் என்று யோசனையுடன் பார்த்தான்.

"நான்...நான் இங்கே இருப்பது நல்லதுதானா?"

"வந்தது யார் என்று தெரியாது. நீ மாடிக்குப் போய் ரேகாவோடு பேசிக்கொண்டிரு நான் வந்தவங்களை அனுப்பிவிட்டு இப்பொழுதே வரேன்."

"ரேகாவிடமா?"

"போ. ரேகாவிடம் நடந்ததையெல்லாம் சொல்லு. நீ எந்தச் சூழ்நிலையில் இங்கே வந்திருக்கிறாய் என்று ரேகாவிடம் சொன்னேன். அவள் கோபம் தணிந்து விட்டது."

சேகரும் விமலனும் சேர்ந்து உள்ளே வந்தார்கள். விமலன் படிக்கட்டிற்குத் கீழே நின்று, சேகர் ஒவ்வொரு படியாய் ஏறிக்கொண்டிருக்க, அவனையே பார்த்தான். சேகர் கண்மறைவாகும் வரை காத்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு வந்து வாசல் கதவைத் திறந்தான்.

வாசலில் சங்கரனும் சுந்தரியும் நின்று கொண்டிருந்தார்கள்.

"நீங்களா? உள்ளே வாங்க" என்றான் விமமன்.

"நீங்கள் செய்த உதவியை இந்த ஜென்மத்தில் மறந்து போகமாட்டோம். உங்களுக்கு என்ன செய்தாலும் நன்றிக்கடன் ஆகாது" சுந்தரி கைகளைக் கூப்பி அழுகுரலோடு சொன்னாள்.

"உள்ளே வாங்க மொதல்ல" என்றான் விமலன்.

இருவரும் உள்ளே வந்தார்கள்.

"ரேகா மாடியில் இருக்கிறாள். சேகர் இப்பொழுது தான் வந்தான்" என்று வழிகாட்டினான்.

சேகரின் பெயரைக் கேட்டதுமே கணவன் மனைவியர் இருவரும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள். ''அந்தப் பாவியை இங்கே ஏன் தம்பி வரவழைச்சுக்கிட்டீங்க? அவனால் நாங்கள் பட்ட மனக் கஷ்டம் இவ்வளவு அவ்வளவு இல்லை'' என்றாள் சுந்தரி.

சங்கரன் ''உஷ்'' என்று அவள் முழங்கையைத் தட்டினார் எச்சரிப்பது போல. சுந்தரி ஆயாசத்துடன் படியேறினாள். சங்கரனும் விமலனும் அவளைத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார்கள்.

சங்கரன் குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டார்.

''ரேகாவுக்கு அவர் யார் என்று தெரியுமா? சொல்லி விட்டீங்களா?''

''ஊஹூம்'' இல்லை என்று தலையாட்டினான் விமலன். விமலன் அறைவாசலை நெருங்கிக் கொண்டிருக்கையில் கீழேயிருந்து திரும்பவும் காலிங்பெல் சப்தம் கேட்டது.

''நீங்கள் போங்க உள்ளே, நான் இதோ வரேன்'' விமலன் கீழே போனான்.

விமலன் வாசல் கதவைத்திறந்ததும் எதிரே போஸ்ட்மேன் தென்பட்டான்.

''டெலிகிராம் சார்'' என்றான்.

அதைப் பார்ப்பதற்கு முன்பே கமலன் தந்தது என்று தெரிந்துவிட்டது. ''உடனே புறப்படுகிறேன்— கமலன்.'' என்றிருந்தது.

விமலன் பெருமூச்சு விட்டான். கமலன் வந்தால் பாதி பாரமும் பொறுப்பும் குறையும்.

22

விமலன் டெலிகிராமைப் பெற்றுக் கொண்டதும் தன் அறைக்கு வந்தான். யோசனையில் ஆழ்ந்திருந்த அவன் கவனம் மேஜை மேலிருந்த டெலிபோன் மீது படிந்தது. அவன் நெற்றி சுருங்கிற்று. சேகரை அரசாங்கம் அணுவணுவாய் ஒவ்வொரு இடங்களிலும் தேடிக்கொண்டிருக்கிறது. சேகர் தன் வீட்டிற்கு வந்த விஷயத்தை உடனே தான் நாராயணனுக்குச் சொல்ல வேண்டியது தன் கடமை. ஆனால் சேகரை அவன் அவர்களிடம் ஒப்படைப்பதைவிட அவனாகவே பிடி பட்டால் தான் நல்லது. சட்டம் எப்பொழுதும் தானா கவே பிடிபட்டு குற்றத்தை ஒப்புக்கொண்டவர்கள் பால் கொஞ்சம் தயவாகவும் இரக்கத்தோடும் நடந்து கொள்ளும். ஆனால் சேகர் ஒப்புக்கொள்ளமாட்டான். அவன் பிடிப்பட்டால் போலீசார் மன்னித்து விட்டாலும் அவனுடைய மேலிடத்தார் மன்னிக்க மாட்டார்கள். விமலன் கண்களை மூடிக்கொண்டு தீர்க்காலோசனை யில் மூழ்கிப் போனான், இந்தச் சூழ்நிலையில் என்ன செய்யலாம் என்று.

அதற்குள் அறைக்குள் யாரோ ஓடி வந்த சப்தம் கேட்டது. யோசனைகளிலிருந்து மீண்டு கண்களைத் திறந்தான். எதிரே வாசலில் ரேகா நின்று கொண்டிருந் தாள்.

ஒரு வினாடி ரேகாவையே கூர்ந்து பார்த்தபடி நின்றான் அவன். அவள் முகத்தில் சந்தோஷம், அவ நம்பிக்கை, பரபரப்பு, நிம்மதி எல்லாம் சூழ்ந்துகொண்டு திணறடித்துக் கொண்டிருந்தன.

அவனுக்குப் புரிந்துவிட்டது.

விஸ்வநாதன் யார் என்றும் ரேகாவுக்கு அவர் என்னவாக வேண்டும் என்றும் தெரிவிக்கும் அந்த உண்மையை தானே அவளிடம் சொல்ல வேண்டும் என்றிருந்தான். ஆனால் அதற்குச் சந்தர்ப்பமே கிட்டாமல் ஒவ்வொரு தடவையும் ஏதாவது தடங்கல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. ரேகா அவனிடம் வந்து கைகளை நீட்டினாள்.

"விமல்! எனக்கு...எனக்கென்னவோ பயமாயிருக்கு. எனக்கு நிஜமாய் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கு. இது நிஜமா? விஸ்வநாதன் என் தந்தையா?" விமலன் ரேகாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"நிஜந்தான் ரேகா. நீ யார் என்று தெரிந்ததிலிருந்து அவர் யார் என்று உன்னிடம் சொல்ல முடியாமல், அந்த உண்மையைப் புதைத்துக் கொள்ளவும் முடியாமல், அவர் எவ்வளவு துடிதுடித்தார் தெரியுமா? அவர் மூலமாய் உங்கள் எதிர்காலம் பாழாகிவிட்டதென்றும், உங்கம்மாவின் வாழ்க்கை நரகமாகிவிட்டதென்றும், நீ அடிக்கடிச் சொன்னதைக் கேட்டு உன்னைத் தடுத்து பேசவும் முடியாமல், உனக்கு முன்னால் தான் யார் என்றும் சொல்லிக் கொள்ள முடியாமல் எவ்வளவு சித்திரவதை அடைந்தார் தெரியுமா?"

ரேகாவின் கைகள் அவன் தோள்களை அழுத்திப் பற்றிக்கொண்டன. அவன் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டு அவன் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை ஜீரணித்துக்கொள்ள முயன்றவாறு இருந்தாள்.

"ரேகா! கஷ்டங்கள் அதிக நாள் இருக்காது என் பார்கள். அது எவ்வளவு உண்மை பார்! நீ பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் விடிவுக் காலம் வந்துவிட்டது. அவர் உன் தந்தை. இந்த உலகத்தில் எல்லாவற்றையும் விட அவருக்கு நீங்கள்தான் முக்கியம் என்ற

விஷயத்தை நம்பு. சேகர் இங்கே வந்ததும் நல்லதற்கு தான். அவன் விஷயமாய் என்ன செய்தால் நல்லது என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ரேகா, சொல்ல மறந்து விட்டேனே; டெலிகிராம் வந்தது. கமலன் நாளைக்கு வரான்" விமலன் சொல்லிக் கொண் டிருக்கும்பொழுதே போன் மணி கணகணவென்று அடித்தது.

விமலன் ரேகாவை அப்படியே பிடித்துக் கொண்டு இடது கையை நீட்டி ரிசீவரை எடுத்துக் கொண்டான். ரேகா மெதுவாய், விருப்பமில்லாமலேயே, வேறு வழி யில்லாமல் விமலனை விட்டு விலகி ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்றாள்.

விமலன் போனில் மறுமுனையில் பேசியவர்களின் வார்த்தைகளை மிக சிரத்தையாய் கேட்டான்.

"ஐ ஸீ! சரி, அப்படியே" என்று போனை வைத்து விட்டான்.

ரேகாவைப் பார்த்துத் திரும்பி—"அவருக்கு ரத்தம் ஏற்றுவதற்கு முயற்சி பண்ணிக் கொண்டிருக்காங் களாம்" என்றான்.

ரேகா சட்டென்று விமலனின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"விமல்! நாம்ப உடனே அங்கே போகலாம். டாக் டர்களிடம் அவரை எப்படியாவது பிழைக்க வைக்கும் படிச் சொல்லுங்க. குறைந்த பட்சம் ஒரு அரை மணி நேரமாவது அவருக்கு நினைவு இருக்கும்படியாய் செய்ய சொல்லுங்க. அவருடைய ரத்தத்தைப் பகிர்ந்துகொண்டு பிறந்ததற்கு, அவர் என்னை பெற்ற தந்தையாய் இருப்ப தற்கு நான் எவ்வளவு பெருமையடைகிறேன் என்று அவரிடம் சொல்லணும். அவர் யார் என்று தெரிந்து

கொள்ளாமல் கடுமையாய் பேசி அவர் மனதை வருத்தப் படுத்திவிட்டதற்கு அவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளணும். நான் பாவி! எவ்வளவு பேசிவிட்டேன் அவரிடம்!'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே அவளுக்கு துக்கம் வந்துவிட்டது.

விமலன் ரேகாவின் தலை மீது கையை வைத்தான். பரிவோடு அவளைத் தேற்றத் தொடங்கினான்.

அதற்குள் அறைக்கு வெளியே சந்தடி கேட்டது. திரைசீலையை விலக்கிக்கொண்டு சங்கரன், சுந்தரி அவர்களுக்கு பின்னால் சேகர் வந்தார்கள்.

சங்கரன் விமலனை பார்த்து கை கூப்பிக் கொண்டே— ''தம்பி! இனி நடக்கப் போறது என்ன வென்று நீங்கள் சொன்னால்...'' என்றார்.

சங்கரனுக்கு பின்னால் நின்றுகொண்டிருந்த சேகரை பார்த்ததுமே விமலன் திடுக்கிட்டான். அவன் முகம் வருத்தத்தால் தொய்ந்து போயிருந்தது.

அதற்குள் ரேகா மளமளவென்று முன்னால் போய் சேகரின் கையைப் பிடித்துக்கொண்டே— ''சேகர்! ஆஸ்பத்திரியிலிருந்து இப்பத்தான் போன் வந்தது. அவருக்கு ரத்தம் தரணுமாம். நாம்ப தாமதிக்க வேண்டாம். உடனே போவோம். ரத்தம் வேறு யாரோ தருவானேன்? நானே தரேன். என் உடம்பிலுள்ள ஒவ்வொரு சொட்டு ரத்தத்தையும் தந்து பிழைக்க வைத்துக்கொள்கிறேன்'' என்றாள்.

விமலன் சேகரை பார்த்தான். ''சேகர்! ஆஸ்பத்தி ரிக்கு வருவதற்கு உனக்கு ஏதாவது ஆட்சேபனையா?''

ரேகா இடைமறித்து, ''இல்லை... இருக்காது. நாங்களிருவரும் சேர்ந்தே போகிறோம். சேகரை பார்க்க அவர் எவ்வளவு தவிக்கிறார் என்று எனக்கு தெரியும்.

அவருக்கு நினைவு வந்து பார்க்க முடிந்தால் எங்களிரு வரையும் சேர்த்தே பார்க்கணும். சேகரை அவருக்கு காட்டுவதாய் நான் செய்திருந்த வாக்குறுதியை இந்த கடைசி சமயத்திலாவது நான் காப்பாற்றி கொள் கிறேன்.''

சேகர் ரேகாவின் வார்த்தைகளை மறுக்கவும் இல்லை. ஒப்புக்கொள்ளவும் இல்லை.

சங்கரன்கூட ''ஆகட்டும் தம்பி! எல்லோருமாய் சேர்ந்தே போகலாம்'' என்றார்.

''ஒரு நிமிஷம் இருங்க, நான் போய் காரை கொண்டு வரேன்'' என்றான்.

●

ஆஸ்பத்திரியில் நினைவில்லாமல் படுத்துக்கொண் டிருந்த விஸ்வநாதனின் கட்டிலைச் சுற்றிலும் விமலன், ரேகா, சேகர், சங்கரன், சுந்தரி எல்லோரும் நின்று கொண்டிருந்தார்கள்

டாக்டர் உள்ளே வந்தார்.

''விமல்! உங்களில் யார் ரத்தம் தரீங்க?'' கேட்டார் டாக்டர்.

விமலன் ரேகாவைப் பார்த்தான்.

ரேகா 'நான்தான்' என்பது போல முன்னுக்கு வந்தாள்.

அது வரை விஸ்வநாதனையே கண்கொட்டாமல் பார்த்துகொண்டிருந்த சேகர் ரேகாவை நோக்கி திரும்பினான்.

அவன் கை வந்து ரேகாவின் தோளில் பட்டது. ரேகாவை பின்னுக்கு இழுத்துவிட்டு தான் முன்னுக்கு வந்தான்.

''டாக்டர்! முதலில் என் ரத்தத்தைப் பாருங்கள். குரூப் பொருந்தினால் சரி. இல்லாவிட்டால் இவளைப் பாருங்கள்.''

''சேகர்...''

''ரேகா! நீ மறுக்காதே. மறுத்தாலும் நான் கேட்க மாட்டேன். அவரை இந்த ஆபத்திற்கு வரவழைத்து விட்டது நான்தான். என் ரத்தத்தால் அவர் திரும்பி உயிர் பெற்றால் அதைக்காட்டிலும் வேறு வேண்டாம் எனக்கு. அவர்... அவர் பிழைத்துவிட்டால் எனக்கு நிம்மதி ஏற்படும். கடவுள் என்னை மன்னித்துவிட்ட தாய் பாவிப்பேன்.''

ரேகாவின் கண்களில் தன்னையறியாமல் கண்ணீர் துளிர்த்தது.

டாக்டர்கள் சேகரின் ரத்தத்தைப் பரிசோதித்து விட்டு பொருந்துவதாய் தெரிவித்தார்கள். சேகரிட மிருந்து ரத்தம் எடுத்துக்கொள்ளும் ஏற்பாடு மளமள வென்று நடந்தேறிற்று.

ரேகா விமலனிடம் வந்து நின்றாள். ''விமல்! அவர் பிழைத்தால் போதும்! வேறெதுவும் வேண்டாம் எனக்கு.''

விமலன் பதில் பேசவில்லை. அவள் கையைத் தன் கையில் எடுத்துகொண்டு மெதுவாய் அழுத்தினான். அந்த ஸ்பரிசத்தில் ஏதோ நெருக்கமும், அன்பும், சிநேகமும் விமலனிடமிருந்து அவளுக்குள் பாய்ந்தாற் போலிருந்தது ரேகாவுக்கு.

வெகுநேரங்கழித்து சேகர் கட்டிலிலிருந்து இறங்கி அப்பால் வந்தான்.

''நீங்கள் கொஞ்ச நேரம் நன்றாய் ரெஸ்ட் எடுத்து கொள்ளணும்'' என்றார் டாக்டர்.

சேகரிடமிருந்து எடுத்துகொண்ட ரத்தத்தை விஸ்வநாதனுக்கு ஏற்றும் முயற்சி மளமளவென்று நடந்துகொண்டிருந்தது.

சேகரின் தோளில் தட்டி, "வீட்டிற்கு போகலாம் வா" என்றான் விமலன்.

சேகர் முகம் கொஞ்சம் களைப்புடன் இருந்தது. ரேகாவை பார்த்து சொன்னான், "ரேகா! எனக்கு ரொம்ப திருப்தியாய் இருக்குது. சுவர்க்கத்தில் இருக்கும் அம்மாகூட சந்தோஷப்படக்கூடிய காரியத்தைச் செய்தேன். ரொம்ப சந்தோஷமாயிருக்கு" என்றான்.

எல்லோரும் வெளியே வந்தார்கள்.

நாலடி எடுத்து வைத்தானோ இல்லையோ சேகர் சட்டென்று நின்றுவிட்டான். எதிரே நாராயணன் நின்று கொண்டிருந்தார்.

அவருக்கு பின்னால் இன்னும் இரண்டு சி.ஐ.டிக்கள் மஃப்டியில் இருந்தார்கள்.

சேகருக்கெதிரே வந்து நின்ற நாராயணன்— "மிஸ்டர் சேகர், யூ ஆர் அண்டர் அரெஸ்ட்" என்றார்.

சேகர் திடுக்கிட்டான்.

"நாராயணா!" விமலன் நாராயணனிடம் ஏதோ சொல்ல போனான்.

நாராயணன் காதில் போட்டுகொள்ளவில்லை. "ஹி ஈஸ் அண்டர் அரெஸ்ட்" என்றார் திடமான குரலில் உறுதியாய்.

அதற்குள் சேகர் நாராயணனை வேகமாய் தள்ளினான்.

நாராயணன் மல்லாந்து விழப் போனவர், விர்ரென்று சுழன்று தன்னை தானே சுதாரித்துகொண்டு நின்றார்.

அந்த கொஞ்ச நேரத்தில் தன்னை நோக்கி வந்த சி.ஐ.டி. ஆபீசரை உள்ளங்கையை மடக்கி வயிற்றில் குத்திய சேகர், அங்கிருந்து வேகமாய் ஓட்டம் பிடிக்க தொடங்கினான்.

"சேகர், நில்! நில்!" விமலன் சேகரை பின் தொடர்ந்து ஓடிக்கொண்டே கத்திய கத்தல் இடி முழக்க மாய் கேட்டது அமைதியாய் இருந்த அவ்வெல்லையில்.

சேகர் நிற்கவில்லை. விமலன் கூப்பிட்டதை பொருட்படுத்தவும் இல்லை. நீண்ட அந்த வராந்தாவில் பலத்தையெல்லாம் கூட்டிக்கொண்டு ஓடத் தொடங் கினான்.

அதற்குள் எழுந்து தன்னை சமாளித்துக்கொண்ட நாராயணன் வேகமாய் இரண்டடிகள் முன்னுக்கு வந்து, ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்து சேகரின் கால் களை நோக்கி குறிவைத்தார்.

அதை பார்த்த ரேகா வீலென்று அலறிக்கொண்டே அவர் மீது பாய்ந்து அதைப் பிடுங்கிகொள்ள போனாள். நாராயணனுக்கு பக்கத்திலிருந்த இருவரும் சட்டென்று கிட்டே வந்து ரேகாவை அப்பால் இழுத்து பிடித்துக் கொண்டார்கள்.

விமலன் மின்னலாய் ஓடி சேகரை தன் இரு கை களாலும் பிடித்துக்கொண்டான்.

"விமலன்! உங்களுக்கு தெரியாது. விடுங்கள். விடுங்கள் என்னை" மூச்சிரைக்க சொன்ன சேகர் ஒருவாறு அவன் பிடியிலிருந்து தப்பி ஓடத்தொடங் கினான்.

ஆனால் அவன் ஓட்டத்தின் வேகம் தணிந்தது. உடம்பு தள்ளாடிற்று. கால்கள் தடுமாறின. கண்கள் இருண்டன.

அவன் கண் முன்னால் எல்லாம் வளையம் வளைய மாய் சுழன்று சூனியமாகி போகவே கையைக் கண் களின் மீது வைத்துகொண்டான். இருட்டில் ஆதாரத் திற்காக தடவும் மனிதனைப் போல கையை நீட்டி சுவற்றின் மீது வைத்தான். அதற்குள் அங்கு வந்து விட்ட விமலன் சேகரை கைகளால் தாங்கிக்கொண்டு அணைத்து பிடித்துக்கொண்டான்.

''சேகர்! இப்பத்தான் ரத்தம் கொடுத்திருக்கிறாய் நீ! இதென்ன இப்படி பண்ணுகிறாய்'' அதட்டினான்.

''விமலன்! உங்களுக்கு தெரியாது. நான் பிடிபட்டு போய்விடக் கூடாது. இது எங்கள் ஆட்களுக்கு தெரிந்த அடுத்த நிமிஷமே என் மரணம் நெருங்கி விட்டாற்போலதான். நான் பிடிபடக்கூடாது. ரேகாவுக் காக... உங்களுக்காக... எல்லோருக்காகவும்'' ஆயாசத் துடன் மூச்சிரைக்க சொல்லிக்கொண்டிருந்த அவனுக்கு வார்த்தை பெயரவில்லை. விமலன் கைகளில் அப்படியே சரிந்துவிட்டான்.

சேகரின் வேகம் தணிந்ததையும், விமலனின் கைகளில் சரிந்ததையும் பார்த்த நாராயணன் மெதுவாய் துப்பாக்கியை எடுத்து தன் ஜேபியில் வைத்துக் கொண் டார். விமலனிடம் வந்து ''ஹீ ஈஸ் அண்டர் அரெஸ்ட்'' என்றார்.

23

விமலன் பிளேனை விட்டு இறங்கிக் கொண்டே தொடங்கி விட்டான் —

''விமல்! என்ன இது?''

விமலன் தம்பியின் கையைப் பிடித்துக் கொண் டான்.

"வெளியே வா முதலில். உன் லக்கேஜ் ஏதாவது இருக்கா? வெயிட் பண்ணனுமா நாம்ப?"

"இல்லை. ஒன்றுமேயில்லை. கட்டிய துணியோடு புறப்பட்டுவிட்டேன் பெட்டியில் அடுக்கிக் கொள்ளக் கூட முடியவில்லை. பிளேன் டிக்கெட் கிடைப்பது கஷ்டமாகி விட்டது. எப்படியே ஒருவாறு உன் டெலிகிராமைப் பார்த்து விட்டு அப்படியே புறப்பட்டு வந்து விட்டேன்."

அண்ணன் தம்பிகள் இருவரும் விமான நிலையத்தைத் தாண்டி வெளியே வந்தார்கள்.

வீட்டிற்கு வரும் வழியில் விமலன் சுருக்கமாய் நடந்ததையெல்லாம் விவரித்துச் சொன்னான் கமலனுக்கு.

கார் வீட்டை நெருங்கிக் கொண்டிருக்கையில் கேட்டான் —"ஆமாம், ரேகா இப்பொழுது எங்கே இருக்கிறாள்?"

"நம்ப வீட்டில்தான்."

கமலன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு பெருமையோடு சொன்னான்.

"விமல்! நான் ஆதியிலிருந்தே உன்னிடம் சொல்லிக் கொண்டிருந்தேன் இல்லையா? ரேகா சாதாரணப் பெண் இல்லை. ரேகாவைப் பார்க்கும்பொழுதெல்லாம் எனக்கு இந்தப் பெண் ஏதோ சாபத்திற்கு ஆளாகி இந்தக் கஷ்டங்களைப் பட்டுக் கொண்டிருக்கிறாள் என்று தோன்றும். என்றைக்காவது ஒரு நாள் அந்தச் சாபமெல்லாம் விடுபட்டுப் போய்விடும் என்றுகூட நம்பிக்கையாய் தோன்றும். அதனால், என் ஊகம் பொய்க்கவில்லைன்னு சொல்லு."

கார் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது. கமலன் காரை விட்டிறங்கி ஒரே பாய்ச்சலாய் உள்ளே ஓடினான். விமலன் நிதானமாய் காரை ஷெட்டிற்குள் வைத்துவிட்டு பிறகு வந்தான்.

கமலன் உள்ளே நுழைந்ததுமே ரேகா ஓடி வந்தாள்.

''கமல்'' என்றாள் மிகச் சந்தோஷமாய்.

''ரேகா! நான் இல்லாமல் உனக்கு எவ்வளவு கஷ்டம் வந்து விட்டது பார்! இப்ப நான் வந்து விட்டேன் பார்த்தாயா, இனி உனக்கெந்த பயமும் இல்லை. எல்லாம் நானே பார்த்துக் கொள்கிறேன். நீ இனி கவலையில்லாமல் இரு.''

நூற்றுக் கிழவனைப் போல பேசிய அவன் தோரணையைப் பார்த்து ரேகா சிரித்தாள்.

விமலன் உள்ளே வந்தான். கமலன் அதை கவனிக்கவில்லை.

''ரேகா, இங்கே வந்து உட்கார். இப்பச் சொல்லு'' என்று விவரங்களை ஒவ்வொன்றாய் கேட்டான்.

''நான் இப்படியே வெளியே போய் விட்டு வரேன்டா'' என்றான் விமலன்.

''போயிட்டு வா'' விமலனைத் திரும்பிப் பார்க்காமலேயே சொன்னான் கமலன்.

விமலன் வாசல் வரைக்கும் போய்விட்டு நின்று திரும்பினான்.

''கமல்! முதலில் குளித்துவிட்டு உடை மாற்றிக் கொள்'' என்றான்.

''சரி, நீ போய் விட்டு வா'' என்றான்.

விமலன் வெளியே வந்துவிட்டான்.

சுமார் இரண்டு மணி நேரங்கழித்து விமலன் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.

கமலனும் ரேகாவும் இன்னும் முன் அறையில் அப்படியே சோபாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நீ இன்னும் எழுந்து குளிக்கவில்லையா?'' என்றான் விமலன்.

''இல்லை, இதோ எழுந்து விட்டேன்'' என்று சொன்னானே தவிர, எழுந்திருக்கவில்லை.

ரேகா விமலனைப் பார்த்து விட்டு எழுந்திருக்கப் போனபொழுது—''உட்கார்! உட்கார்! நீ இன்னும் இந்த பழைய பழக்கங்களையெல்லாம் விடவில்லை போலிருக்கு.'' என்றான்.

இருவரும் திரும்பவும் பேச்சில் ஆழ்ந்துவிட்டார்கள். விமலன் சாப்பிடுவதற்குத் தான் காத்துக் கொண்டிருப்பதாகவும், கமலனை எழுந்து வரச் சொல்லியும் கங்கம்மாவிடம் செய்தி சொல்லியனுப்பினான்.

''நாங்க அப்புறமாய் சாப்பிட்டுக் கொள்ளுகிறோம்னு சொல்லு'' என்றான் கமலன்.

கமலன் ரேகாவுக்கு சிநேகிதன் என்றும் இருவரும் ஒருவருக்காக இன்னொருவர் எதையும் செய்யத் தயாராயிருப்பார்கள் என்றும் விமலனுக்குத் தெரியும். ரேகாவின்பால் கமலன் காட்டும் உரிமையில் அத்துமீறியது எதுவும் இல்லை என்றும் தெரியும். ஆனாலும் விமலனுக்கு ஏதோ போல இருந்தது. அவன் மனமெல்லாம் வினோதமான சூனியம் மெல்ல மெல்லச் சூழ்ந்து கொண்டு அவனை ஊமையாக்கத் தொடங்கி விட்டது.

●

போலீஸ் ஹெட்குவார்டர்ஸில் மூன்று போலீஸ் அதிகாரிகள் உட்கார்ந்திருந்தார்கள் அவர்களுக்குப் பக்கத்தில் டி. எஸ். பி. நாராயணன் நின்று கொண்டிருந்தார். எதிரே கொஞ்சம் தூரத்தில் சேகர் கைகளில் விலங்கோடு தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்தான். சேகருக்கு பின்னால் விமலனும் கமலனும் நின்று கொண்டிருந்தார்கள்.

வெகுநேரமாய் அவர்களுக்கிடையே சர்ச்சைகள் நடந்து கொண்டிருந்தன.

போலீஸ் கமிஷனர் சொன்னார்.

''மிஸ்டர் சேகர்! நீங்கள் மனம் திறந்து உள்ளது உள்ளபடி சொல்லாமல் போனால் லாபமில்லை. உங்கள் இந்த மௌனம் உங்களுக்குதான் நஷ்டம்'' என்று எச்சரித்தார்.

சேகர் பேசவில்லை. குனிந்த தலை நிமிரவும் இல்லை.

டிப்டி கமிஷனர் இடைமறித்து சொன்னார்— ''போகட்டும், எங்களுககு விவரங்கள் வேண்டாம். அந்த கும்பல் இருக்குமிடத்தைச் சொல்லுங்கள் போதும். நீங்கள் கொஞ்சம் கோடி காட்டி விட்டால் மீதியையெல்லாம் நாங்கள் பார்த்துப்போம்.''

சேகர் நிமிர்ந்து அவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பவும் தலைகுனிந்து கொண்டான். அவன் முகம் வேதனையின் மறு உருவமாய் இருந்தது.

விமலன் சேகரின் தோளில் கையை வைத்து மென்மையாய் சொன்னான்.

''சேகர்! அப்பாவியான நீ துரதிர்ஷ்டவசமாய் சிக்கிக் கொண்டிருக்கும் இந்த தீய வாழ்க்கையோடு உன்னால் ஒன்ற முடியவில்லை என்று எங்களுக்குத் தெரியும்.

அதனால்தான் இதிலிருந்து உன்னை மீட்பதற்காகத் தவிக்கிறோம். சேகர், தெரியாத்தனமாய் யாராவது ஏதாவது தப்பு பண்ணினால் வாழ்நாளெல்லாம் அதையே கால் கட்டாகச் சுமந்து கொண்டு தளர்ந்து போக வேண்டிய அவசியமில்லை, தைரியமாய், பொறுமையாய் அவகாசத்திற்காகக் காத்திருந்து, அது கிடைத்ததும் அதிலிருந்து மீண்டுவிட வேண்டும்.''

கமிஷனர் குறுக்கிட்டார், ''கரெக்ட்! மிஸ்டர் சேகர்! நீங்கள் திரும்பவும் மனிதராய் எங்கள் எல்லோரையும் போல வாழவேண்டுமென்றால் இது ஒரு நல்ல அவகாசம். இதைக் கைநழுவ விட்டுவிட வேண்டாம்.''

கொஞ்ச நேரம் நிசப்தம் ஏற்பட்டது. எல்லோரும் ஆர்வத்துடன் சேகரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் சேகர் சொல்லத் தொடங்கினான்.

''இந்த கும்பலில் பெரிய பெரிய மனுஷங்க எல்லோரும் இருப்பாங்கன்னு தெரியும். ஆனால் அந்தப் பெரிய வங்க யார் யார், அவங்க இருக்குமிடம் எது என்றெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு மட்டுமில்லை, எங்கள் யாருக்குமே தெரியாது. நாங்கள் என்றுமே அப்படிப்பட்டவர்களை நேருக்கு நேராய் சந்தித்ததில்லை. எங்களுக்கு ட்ரெயினிங் தரும் ஆள் மூலமாய்தான் அவ்வப்பொழுது நாங்கள் நிறைவேற்ற வேண்டிய வேலைகளைப் பற்றிய உத்தரவுகள் கிடைத்துக் கொண்டிருக்கும்.''

''அந்த ஆளே ஏன் அந்த கும்பலின் லீடராய் இருக்கக்கூடாது? அப்படிக்கூட நம்பலாமில்லையா?''

''இல்லை. எங்களுக்கு நன்றாய் தெரியும். ஏனென்றால்— கொஞ்ச நாட்களுக்கு முன்னால்தான் அவரை—

ஒரு வேலையை சரியாய் நிறைவேற்றித் தராமல், அரசாங்கத்திற்குச் சந்தேகம் வரும்படியாய் நடந்து கொண்டதற்கு—அஜாக்கிரதைக்கு அந்த போஸ்டிலிருந்து தள்ளி விட்டாங்க. அவர் என்னவானாரோ எங்களுக்கெல்லாம் தெரியாது. அவர் இருப்பிடத்திற்குப் புதிதாய் இன்னொருத்தர் வந்தார். அவங்ககூட எங்களை போலவே இந்தக் கழுகுப் பிடிக்குள் சிக்கிக் கொண்டவங்கதான் என்று தெரிந்தது.''

''மிஸ்டர் சேகர்! நீங்கள் இவ்வளவு நேரமாய் என்னென்னவோ சொன்னீர்கள். ஆனால் உங்கள் பேச்சிலிருந்து ஒரு 'க்ளூ' கூட கிடைக்கவில்லை எங்களுக்கு.''

''மன்னியுங்கள் எனக்கு அவங்க இருப்பிடத்தின் பெயர்கள் எல்லாம் தெரியாது. கோட் வார்த்தைகள் தான் தெரியுமே தவிர உண்மையான நபர்களைப் பற்றி தெரியாது.''

''போகட்டும். அந்த கோட் வார்த்தைகளையே சொல்லு.''

சேகர் கழுத்தில் சுருக்குக் கயிறு விழுந்து விட்டவனைப் போல பார்த்தான்.

விமலன் அவன் தடுமாற்றத்தை கவனித்து விட்டு, தோளில் கையை வைத்து மென்மையாய் சொன்னான்.

''சொல்லு சேகர்! நீ தரப்போகும் இந்த விவரத்தினால் எத்தனைப் பேருக்கு நன்மை ஏற்படும் தெரியுமா?''

சேகர் அந்த ஊரிலும் இதர நகரங்களிலும் உள்ள சில இடங்களின் பெயர்களையும், சில கோட் பெயர்களையும் சொன்னான். நாராயணன் மளமளவென்று அவைகளைக் குறித்துக் கொண்டார். போலீஸ் அதி

காரிகள் சேகர் இனி போகலாம் என்று சொல்லிவிட் டார்கள். அவர்கள் முகங்களில் திருப்தி தென்பட்டது.

சேகர் கைகளில் விலங்கோடு இரு போலீசாருக் கிடையே நடந்து வெளியே வந்தான். நாராயணனும் விமலனும் கமலனும் அவனைப் பின் தொடர்ந்து வந்தார்கள்.

சேகர் வாசலில் அடியெடுத்து வைத்ததுமே எப்படித் தெரிந்ததோ தெரியாது. பத்திரிக்கை நிருபர்கள் நிறைய பேர் சூழ்ந்து கொண்டார்கள். போட்டோக்களை எடுத்துக் கொண்டார்கள். நாராயணனைப் பல கேள்வி கள் கேட்கத் தொடங்கினார்கள்.

சேகர் அங்கே சித்தமாய் இருந்த போலீஸ் வேனில் ஏறப்போனவன் நின்று விமலனை நோக்கித் திரும் பினான். விமலன் சட்டென்று அவனிடம் வந்தான்.

சேகர் குரல் கம்ம. ''விமலன்! ஒருக்கால் எனக்கு ஏதாவது ஆகிவிட்டால்...'' என்று முடிக்காமல் நிறுத்திக் கொண்டான்.

விமலன் சேகரின் தோளில் கையை வைத்தான். விமலனின் ஸ்பரிசத்திலிருந்து ஏதோ வாக்குறுதியும் பாசமும் தன் ரத்தத்திற்குள் பாய்ந்தாற்போல உணர்ந் தான் சேகர்.

விமலன் சொன்னான். ''உனக்கெந்த பயமும் இல்லை. நிம்மதியாய் இரு. உன் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. போதுமா?''

சேகர் கண்கள் நன்றியால் கசிந்தன. வேனுக்குள் ஏறிக்கொண்டான். வேன் புறப்பட்டது. மெல்ல மெல்ல கண் மறைவாகும்வரை பார்த்துக்கொண்டிருந்த விமலன், கமலன் இருவர் இதயங்களும் பாரமாயின.

சேகர் அரெஸ்ட் ஆகி ஒரு வாரத்திற்கும் மேலாகி விட்டது. சேகர் தந்த விவரங்களை வைத்துக்கொண்டு அந்த இடங்களிலெல்லாம் போலீசார் முற்றுகையிட்டார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. சில பேர் பிடிப்பட்டார்கள். சேகர் விவரங்களைச் சொல்லி விட்ட விஷயம் எப்படித் தெரிந்ததோ தெரியாது. போலிசார் முற்றுகையிட வருவதற்குள் அவர்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள். மிக நம்பிக்கையோடு அந்த வேட்டையைத் தொடங்கிய போலீஸ் அதிகாரிகளுக்கு ஏமாற்றந்தான் எதிர்ப்பட்டது.

இந்த ஒரு வாரத்தில் விஸ்வநாதன்கூட கொஞ்சம் தேறிக் கொண்டார். விமலன் ரேகா மூலமாய் சேகர் தனக்கு ரத்தம் கொடுத்ததையும், இங்கேயே இந்த ஆஸ்பத்திரியிலேயே பிடிபட்டுப் போனதையும் கேட்டார். அவருக்கு நினைவு திரும்பியதிலிருந்து ரேகா அவரை ஒரு வினாடிகூட விட்டுப் பிரியாமல் அவருக்கு அருகிலேயே இருந்து வந்தாள். விஸ்வநாதன் கொஞ்சம் கட்டிலில் எழுந்து உட்காரக்கூடிய தெம்பு வந்ததுமே ஜெயிலுக்குப் போய் மகனைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கத் தொடங்கினார். டாக்டர் நகர விடவில்லை. ரேகாகூட அவருக்கு நயந்து சொல்லத் தொடங்கினாள்.

விமலன் கமலன் இருவருமாய் சேர்ந்து தம் செல்வாக்கையெல்லாம் பயன்படுத்தி சேகருக்குக் குறைந்த தண்டனை விதிக்கும்படியாய் பண்ண முயன்றார்கள். சேகரை ஜெயிலில் பார்ப்பதற்கு யாருக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. இந்த விஷயத்தில் அதிகாரிகள் கடுமையாய் இருந்தார்கள்.

சேகர் என்ற பெயரில் அரெஸ்ட் ஆன ஜானுடைய போட்டோவை பார்த்ததுமே பேப்பர்களில் லலிதாவின் தலையில் இடி விழுந்தாற்போல ஆயிற்று. தன் உயிர்த் தோழன் என்றும், தன் சகலமும் என்றும் நம்பிக்கொண் டிருந்த இந்த இளைஞன் திருடர் குழுவைச் சேர்ந்தவன் என்றும் தன் தந்தையின் ரத்தத்தைப் பகிர்ந்து கொண்டு பிறந்த சகோதரன் என்றும் தெரிந்ததுமே லலிதாவுக்கு மூளையே குழம்புவது போலிருந்தது. வெகுநேரம் அந்த பேப்பரையே மடியில் வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

மூன்று நாட்கள் லலிதா ஊண் உறக்கத்தை மறந்து போனவளாய் கட்டிலில் படுத்துக் கொண்டு அப் படியே கழித்தாள். கமலன் ஒரு முறை லலிதாவைப் பார்க்க வந்தான். லலிதா தான் யாரையும் பார்க்கவிரும்ப வில்லை என்றும், தனக்கும் அவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றும் சொல்லிவிட்டாள்.

விமலன் விஸ்வநாதன் தேறிக்கொண்டிருக்கிறார் என்றும், லலிதாவைப் பார்க்க விரும்புகிறார் என்றும் போன் பண்ணினான். ஆனால் லலிதா போனுக்கரு கிலேயே வரவில்லை. விமலன் எவ்வளவு தடவைகள் முயன்றபோதிலும் பலன் கிடைக்கவில்லை. அவர்கள் எல்லோருடனும் எல்லா சம்பந்தங்களையும் பந்தங் களையும் முறித்துக் கொண்டு விட்டவளைப் போல நடந்துகொண்டாள். தன் வழியில் தன்னை விட்டுத் தொலைக்காமல் இடையிடையே இவ்வளவு தொல்லை கள் கொடுப்பதற்கு அவர்கள் மீது கோபம் வந்தது அவளுக்கு.

லலிதா ஜானிடம் போய் ஒரு முறை அவனைப் பார்க்க விரும்பினாள். ஆனால் போலீஸ் அதிகாரிகள் சம்மதிக்கவில்லை. தயையின்றி மறுத்துவிட்டார்கள். கோபத்துடன் வீட்டிற்கு வந்த லலிதா ஒரு நிமிஷம்

ஆழ்ந்து யோசித்தாள். உடனே டிப்டாப்பாய் உடை யணிந்து கொண்டு தயாராகி ஐ. ஜி.யின் வீட்டிற்குப் போனாள். அவர் மனைவியை லலிதாவுக்கு நன்றாய் தெரியும். கிளப்பில் வெள்ள நிவாரண நிதிக்கு வசூல் பண்ணியபொழுது அவளும் லலிதாவும் சேர்ந்துதான் வேலை பண்ணினார்கள். ஐ. ஜி.யைக்கூட அவளுக்கு நன்றாய் தெரியும். லலிதா அவர்கள் வீட்டிற்குப் போன வேலை நிமிஷத்தில் நடந்தது. அவர் ஜெயில் சூபரின் டென்டிற்கு போன் பண்ணியதுமே, அவர் தானாகவே லலிதாவை எதிர்க்கொண்டு வரவேற்று, சேகர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

கம்பிகளுக்கிடையே, மாசடைந்த கேசங்களுடன், ஜெயல் உடையுடன், தூக்கம் இல்லாததால் சிவந்த கண்களுடன் நின்று கொண்டிருந்த சேகரை பார்த்த துமே லலிதாவுக்கு இதயத்தைப் பிசைந்தெடுத்தது. இந்த ஒரு வாரமாய் அவன் அந்தக் கம்பிகளுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டு பட்ட நரக வேதனையெல்லாம் அம்முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தாற்போல இருந்தது.

''ஜான்'' லலிதாவின் உதடுகள் அசைந்தன. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

லலிதாவைப் பார்த்ததுமே அவன் ஒரு நிமிஷம் வாயடைத்துப் போனவனாய் பார்த்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றார்கள்.

''லலிதா! என்னை—என்னை மன்னித்து விடு.''

''மன்னிக்கிறதா? நீங்கள் என்ன தப்புப் பண்ணி விட்டீங்க?''

''என் விஷயம்... பேப்பர்களில்...''

''பார்த்தேன். நான் அதைக் குற்றமாய் பாவிக்க வில்லை. இந்தப் பாவ உலகத்தில் வாழ்வது என்பது நெருப்பின் மீது நடப்பதைப் போல என்று எனக்குத் தெரியாதா?''

அதைக் கேட்டதும் அவன் முகத்தில் களை வந்தது. வெளுத்துப் போயிருந்த அம்முகத்தில் முறுவல் பிறந்தது.

''லலிதா! நாமிருவரும்...'' அவன் முடிக்கக்கூட வில்லை.

லலிதா சட்டென்று சொன்னாள். ''தெரிந்தது. தெய்வம் இவ்வளவு கொடுமையானவர் என்றும், மனிதர்களின் வாழ்க்கையில் இவ்வளவு தயையின்றி விளையாடி வேடிக்கை பார்ப்பார் என்றும் எனக்குத் தெரியாது.''

அவள் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் உதிர்ந்தது.

''சீ! அழுகிறாயா? எனக்கு இவ்வளவு சந்தோஷத்தை உண்டாக்குகிற விஷயம் உனக்கு வருத்தத்தை உண்டாக்குகிறதா?''

ஈரத்தால் பாரமான லலிதாவின் இமைகள், ஆச்சரியத்தால் அகன்றன.''

''உங்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்குகிறதா? நீங்கள் கல்! இரும்பு! அப்படின்னால் உங்களுக்கு மனதே இல்லைன்னு சொல்லுங்கள்.''

''லலிதா...''

''பின்னே என்ன? இந்த உலகத்தில் இவ்வளவு பேர் இருக்கும்போது நீங்கதானா அண்ணனாகணும்? அண்ணனாயிருக்கும்போது நாமிருவரும் சிறு வயதிலிருந்தே ஏன் கோர்த்து வளரவில்லை? திடீரென்று நீங்கள் அண்ணன் என்று தெரிந்ததுமே ''ஹா! சகோதரா!''

என்று சொல்லசொல்கிறீர்களா என்னை? என்னால் முடியாது. எவ்வளவு தடவை சொல்லிக்கொண்டாலும் இந்த உண்மை என் மனதில் ஏறவில்லை. என் மனதில் இவ்வளவு அன்பை ஏன் உருவாக்கினாரோ தெய்வம்? அதைப் பகிர்ந்தளிக்கக்கூடிய நபர் கிடைத்துவிட்டார் என்று சந்தோஷப்பட்ட சமயத்தில் கோடாலியால் இந்த பந்தத்தைப் பிளந்துவிட்டாற்போல இதென்ன?''

சேகரால் சட்டென்று எதுவும் பேச முடியவில்லை. லலிதாவின் மனதில் கொதித்துக் கொண்டிருக்கும் குமுறலை அவன் புரிந்து கொண்டான். கொஞ்ச நேரங் கழித்து நயந்து சொல்வதைப் போல மெதுவாய் சொன்னான்.

''லலிதா! நீ ரொம்பவும் தப்பாய் புரிந்து கொண்டு விட்டாய். அன்பு என்பது என்ன? அது ஒரு மகத்தான உணர்ச்சி, நிஜமான அன்பு, எதையும் எதிர்பார்க்காமல் நிர்மலமாய் இருக்க வேண்டும். நீ பெண். பெண் என்றால் எனக்கு அன்பின் உருவமாய், தென்படுகிறாள். தாயாய், தங்கையாய், சிநேகிதியாய், மனைவியாய், மகளாய் எத்தனையோ உருவங்கள் உள்ளன அவளிடம். நான் உன்னை முதலிலிருந்தே சிநேகிதியாய் பார்த்தேன். இப்பொழுது தங்கையாய்கூட ஆகிவிட்டாய் என்றால் எனக்கு ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறது. லலிதா! என்னையறியாமல் உன் மனதில் குழப்பத்தைத் தோற்றுவித்திருந்தால் என்னை மனித்து விடு.''

''ஜான்! இதுதான் நம் கடைசி சந்திப்பு. இனி நாம் இந்த ஜென்மத்தில் சந்தித்துக் கொள்ள முடியாது.''

''அவ்வளவு குற்றம் நான் என்ன பண்ணி விட்டேன்?''

''நீங்கள் பண்ணவில்லை. எனக்குதான் இந்த வாழ்க்கையே விரக்தியாய் இருக்கிறது. கொஞ்ச நாட்கள் இந்த சூழ்நிலைகளையெல்லாம் விட்டு தொலைவில் போய் இருக்க வேண்டும் போலிருக்கு. இன்றோ நாளையோ போய் விடுவேன்.''

''லலிதா! நீ எங்கே இருந்தாலும் சுகமாய், சந்தோஷமாய் இருக்கணும். இது என் ஆசி.''

லலிதா சேகரிடம் விடை பெற்றுக்கொண்டு வந்து விட்டாள்.

அவ்வறையைத் தாண்டி வேகமாய் வெளியே வந்து கொண்டிருந்த லலிதா தனக்கெதிராய் வந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்து பேயறைந்தவளைப் போல அப்படியே நின்றுவிட்டாள்.

எதிரே விஸ்வநாதனை கைத்தாங்கலாய் இருபக்கமுமாய் பிடித்துக் கொண்டு நடத்தி அழைத்து வந்து கொண்டிருந்தார்கள் ரேகாவும் கமலனும்.

விமலன் வேலையாய் வெளியே போய்விட்டதால் அவர் ரேகாவையும் கமலனையும் சேகரைப் பார்ப்பதற்காகத் தன்னோடு கூட்டி வந்தார். தலை குனிந்தபடி ஆயாசத்துடன் நடந்துகொண்டிருந்த அவர் லலிதாவை கவனிக்கவில்லை.

''அட! லலிதா!'' என்றாள் ரேகா.

அதை கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்தார் அவர்.

''எங்கே?''

''நம்மைப் பார்த்தும் பார்க்காதவளைப்போல போய் விட்டாள்'' என்றான் கமலன்.

இதைக் கேட்டதும் அவர் முகம் வாடி விட்டது.

''போம்மா, போ. போய் அழைத்துக் கொண்டு வா. நான் ஒன்றும் சொல்ல மாட்டேன் என்றும், நடந்ததை யெல்லாம் மறந்து போய்விட்டேன் என்றும் சொல்லு. ஒரு தடவை உங்கள் எல்லோரையும் கண்ணாரக் கண்டு கொள்கிறேன்'' என்றார் அவர்.

அதைக் கேட்டதும் ரேகா அவர் கையை விட்டு விட்டுத் திரும்பி ஓடினாள்.

''லலிதா...'' ரேகா வந்து லலிதாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''லலிதா! அவர் உன்னைக் கூப்பிடுகிறார்.''

லலிதா ரேகாவின் ஸ்பரிசத்தால் அருவறுப்படைந்த வளைப் போல கையை உதறிக் கொண்டாள்.

''வரமாட்டேன்னு சொன்னதாய் சொல்லு.''

''லலிதா! அவர் உன்னை ஒன்றும் சொல்லமாட்டார். உனக்கு எந்த பயமும் இல்லை.''

நடந்து கொண்டிருந்த லலிதா நின்றாள். திரும்பி ரேகாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

''என்ன? பயமா? எனக்கா? எதுக்கு? நான் பயப் படுகிறேன்னு யார் சொன்னாங்க உனக்கு? நான் வர மாட்டேன்னு சொன்னது அவருக்கு பயந்து இல்லை, உங்கள் எல்லோரையும் விட்டு தொலைவில் இருக்க கணும் என்று! உங்களோடு எல்லா சம்பந்தங்களையும் முறித்துக் கொண்டுவிட வேண்டும் என்று! நீங்கள் எல் லோரும் நல்லவர்கள் அல்லவா? புனிதமானவர்கள் ஆயிற்றே! நான் கெட்டவள்! தீயவள்! உங்களுக்கும் எனக்கும் எப்படிப் பொருந்தும்? மனதில் இல்லாத நல்ல குணத்தையும் அன்பையும் இருப்பதுபோல நடிக்க என்னால் முடியாது. நான் ரொம்பச் சாதாரணமான ஒருத்தி! உங்களைப் போன்ற உயர்ந்தவள் இல்லை.

உண்மையைச் சொல்லணும் என்றால் உயர்ந்தவர்கள், மற்றவர்களைவிட சிறந்தவர்கள் என்பதுபோல நடந்து கொள்கிற உங்களைக் கண்டால் எனக்கு வெறுப்பு. உங்கள் நிழலைக்கூட தாங்கிக் கொள்ள முடியாது என்னால். லலிதா அவருக்கு என்றோ செத்துவிட்டாள். எங்களிருவருக்குமிடையே தந்தை—மகள் பந்தம் என்றோ அறுந்து போய்விட்டது. இப்பொழுது நான் இருந்தாலும் இல்லாமல் போனாலும் பரவாயில்லை. நீ இருக்கிறாய் அல்லவா, போதும் போ!'' லலிதா முகத்தைத் திருப்பிக்கொண்டு மளமளவென்று போய் விட்டாள்.

ரேகா வாயடைத்துப்போய் அப்படியே நின்று விட்டாள்.

லலிதாவின் நடை ஓட்டமாய் மாறிற்று முகத்தில் துக்கமும் அதிருப்தியும் போட்டியிட்டுக் கொண்டியிருந்தன. அவளுக்கு துக்கம் வந்தது. வாழ்க்கையில் அபூர்வமான எதையோ இழந்து விட்டாற்போல சூனியமாய் தோன்றத் தொடங்கிற்று இத்தனைக்கும் காரணம் தந்தை ஏற்கனவே தந்தையின் மீது லட்சியமில்லாத லலிதாவுக்கு இச்சம்பவத்தால் அவர் முதல் மனைவியையும் குழந்தைகளையும் தன் தாய்க்காக தொலைவில் ஒதுக்கி வைத்தார் என்று தெரியவே, குமுறல் ஏற்படத் தொடங்கிற்று.

எல்லாவற்றையும்விட துரதிர்ஷ்டம் அண்ணன் ஜானே தன் வாழ்க்கையில் நுழைந்தது! இந்த ஊகமே லலிதாவுக்கு பயங்கரமாய் தோன்றிற்று.

சிலையாய் நின்று கொண்டிருந்த ரேகாவிடம் கமலனும் விஸ்வநாதனும் மெதுவாய் வந்தார்கள்.

''எங்கே லலிதா?''

''போய் விட்டாள்'' என்றாள் ரேகா.

அவர் பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னார்.

''நான் அவளை மன்னித்தாலும் அவள் என்னை மன்னிக்கமாட்டாள்.''

மூவரும் சேகர் இருந்த அறையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

லலிதாவுக்குத் தந்தை மீது அவ்வளவு துவேஷம் ஏன் என்று உண்மையிலேயே புரியவில்லை ரேகாவுக்கு.

●

லலிதா போன பிறகு சேகர் தளர்ந்துபோய் வந்து தரையில் உட்கார்ந்துக் கொண்டான்.

லலிதாவிடம் அவன் என்றுமே வரம்பு கடந்து கொண்டதில்லை. ஆனாலும் லலிதா பட்டுக் கொண்டிருந்த இந்த வேதனைக்குத் தான் பொறுப்பாளி என்று தோன்றிற்று.

அதிருப்தியோடு, முகம் சிறுத்துப்போனபடி லலிதா போன தோற்றம் இனி வாழ்நாளெல்லாம் அவனைத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

நெற்றிப் பொட்டில் கையை வைத்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்த சேகர் திடீரென்று, ''சேகர்...'' என்ற அழைப்பு காதில் விழவே திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

ஒரு வினாடி அவன் திகைத்துப் போய்விட்டான்.

எதிரே ரேகா, விஸ்வநாதன், கமலன் மூவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

விஸ்வநாதனைப் பார்த்ததும் சேகருக்கு வெட்கத் தோடு கூடிய பச்சாதாபம் ஏற்பட்டது.

அவன் தலை குனிந்தபடி நின்றான்.

அவர் ஆதாரத்திற்காக ஜெயில் கம்பிகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

பாசத்தோடு, எவ்வளவோ நாட்களாய் பார்க்க வேண்டும் என்று தவிதவித்துக் கொண்டிருந்த ஒருவன் கண்ணெதிரே தென்பட்டபொழுது பார்ப்பது போல— அந்தப் பார்வையில் சந்தோஷம் அவர் உடம்பெல்லாம் பரவி நின்றாற்போல இருந்தது. தன் முதல் குழந்தை பூமியில் வந்து விழுந்ததுமே முதல் முதயாக ஆசை தீர பார்த்துக் கொள்ளும் ஒரு தாயைப் போல அவர் சேகரைப் பார்த்தார். அவர் உதடுகள் அதிர்ந்தன. துக்கம், தன்மயம், சந்தோஷம் அவ்வளவும் அக்குரலில் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் சப்தம் வெளியே வரவில்லை.

அவர் கை மெதுவாய் நகர்ந்து சேகரின் கை மீது பட்டு, அதை அழுத்தமாய் பிடித்துக் கொண்டது. சேகரின் உடம்பு சிலிர்த்தது. தன்னையறியாமல் தலையைத் தூக்கினான்.

"குழந்தாய்! உங்கள் வாழ்க்கைகள் இப்படி ஆனதற்கு காரணம் நான்தான். ஆனால் நான் உங்கள் மீது அலட்சியத்தாலோ வெறுப்பாலோ இந்தக் காரியத்தை செய்யவில்லை. நான் எழுதிய ஒரு கடிதம் உங்கம்மாவுக்கு கிடைத்திருந்தால் நாம்ப... நாம்ப இப்படி பிரிந்திருக்க முடியாது. விதியின் கையில் இப்படி பொம்மையாகி விட்டிருக்கவும் மாட்டோம். உங்களை இழந்துவிட்டேன் என்றும், உங்களை விட்டு தூரமாகி விட்டேன் என்றும் தெரிந்ததிலிருந்து நான் நடை பிணமாகவே வாழ்ந்துகொண்டிருந்தேன்.

"இவ்வளவு நாட்களும் எனக்கு எவ்வளவு பாரமாய் கழிந்துகொண்டிருந்தன என்றும், உங்கள் நினைவுகள் என்னை எவ்வளவு வதைத்துக்கொண்டிருந்தனவென்றும்

உங்களுக்கு தெரியாது. சேகர்! நடந்ததையெல்லாம் மறந்துவிடு. உன்னோடு சேர்ந்து நானும் புனர் ஜென்மம் எடுக்கிறேன். உனக்கு கூடுமான வரையிலும் எவ்வளவு தண்டனையை குறைக்க முடியுமோ அவ்வளவு தண்டனையை குறைப்பதற்காக விமலன் என்னென்னவோ முயற்சிகளை பண்ணிக்கொண்டிருக் கிறான். நீ எங்கே, எந்த ஊர் ஜெயிலில் இருப்பாயோ அங்கேயே நானும் ரேகாவும் இருப்போம். கிட்டே இருந்துகொண்டு அடிக்கடி உன்னை பார்த்துகொண்டே கழிக்க முடிந்ததானால் ஒரு வருஷம் ஒரு நாளாய் ஓடி மறைந்துவிடும் எனக்கு. நீ திரும்பி வந்ததும் நாம் எல்லோருமாய் சேர்ந்து புதிய வாழ்க்கையைத் தொடங்கு வோம். நீ சாதாரண மனிதனாய், எங்களுள் ஒருவனாய், வாழ்க்கையை கழித்துகொண்டிருந்தால், அப்பொழுது நிம்மதியாய் உன் நிழலில் கண்ணை மூடுகிறேன். உன் வரவிற்காகவே நான் வாழ்ந்துகொண்டிருப்பேன். உனக்காக எதிர்பார்த்துக்கொண்டே காலத்தை கழித்துக் கொண்டிருப்பேன்.''

அவர் கை சேகரின் கை மீது அழுத்தமாய் முறுக் கேறிக்கொண்டது.

ரேகா அவர் கை மீது தன் கையை வைத்து மென்மையாய் சொன்னாள்— ''நீங்கள் ஆவேசப் படுகிறீர்கள்.''

''ஆவேசமா? இல்லைம்மா இல்லை! இது ஆவேசம் இல்லை. ஆனந்தம்! தாங்க முடியாத சந்தோஷமாய் இருக்கு. என்றுமே எந்த தந்தையுமே அடைந்திராத சந்தோஷமாய் இருக்கு. பெருமையாகவும் இருக்கு.''

விஸ்வநாதன், சேகர், ரேகா இருவர் கைகளையும் எடுத்துக்கொண்டு நெற்றியிலும் கன்னத்திலும் வைத்துக்

கொண்டார். கம்பிகளின் வழியாய் கையை நீட்டி சேகரின் கன்னத்தைத் தடவினார். அன்போடு கேசத்தை நீவினார்.

ரேகா டாக்டரின் சமிஞ்ஞையை கவனித்துவிட்டு— ''இனி போகலாம் வாங்க. நாளைக் காலையில் மறுபடியும் வரலாம்'' என்றாள்.

அவர் கம்பிகளிலிருந்து கையை வெளியே எடுத்தார். அவ்வாறு எடுத்தபொழுது கையிலிருந்த வைர மோதிரம் பளிச்சென்றது. அதை பார்த்ததுமே நின்றுவிட்டார். உடனே அதை விரலிலிருந்து கழற்றி சேகரின் கையை பிடித்து அவன் விரலில் போட்டார்.

அதற்குள் ஜெயில் சூபரிண்டென்ட் கூட அங்கு வந்துவிட்டார். நேரமாகிவிட்டது என்பதை நினைப் பூட்டினார். டாக்டரும் கமலனும் விஸ்வநாதனை பிடித்துக்கொண்டு வெளியே அழைத்து சென்றார்கள்.

''ரேகா! ஒரு சின்ன விஷயம்'' என்றான் சேகர்.

''என்ன, சொல்லு'' பரபரப்புடன் கேட்டாள் ரேகா.

''என்றாவது ஒரு நாள் மேரியிடமிருந்து உனக்கு செய்தி வரும். அப்பொழுது நீ அவளிடம் போகிறேன் என்று எனக்கு வாக்கு கொடு.''

ரேகா சேகர் கையில் சத்தியம் போட்டாள் உடனே.

''சேகர்! மேரிக்கு எந்த பயமும் இல்லை. அவளிட மிருந்து செய்தி வந்தால் நான் இறக்கைக் கட்டிக் கொண்டு போகிறேன். மேரிக்கு பிறக்கப்போகும் அந்தக் குழந்தையோடு எனக்கு மட்டும் பந்தம் இல்லையா?'' என்றாள் ரேகா, சேகரின் கையை அழுத்த மாய் பிடித்துக்கொண்டு.

ஜெயில் அதிகாரி அங்கே வந்து நேரமாகிவிட்டது என்பதை தெரியப்படுத்தினார். ரேகா சேகரிடம் விடை பெற்றுக்கொண்டு வந்துவிட்டாள்.

சேகர் வந்து உட்கார்ந்துகொண்டான். அவன் யோசனைகள் ஒரு வினாடி நின்றுவிட்டன.

கையில் மின்னிக்கொண்டிருந்த மோதிரத்தை அப்படியும் இப்படியுமாய் திருப்பினான். அந்த மோதிரம் சற்று முன்னால் தென்பட்டாற்போல சாதாரண வைர மோதிரமாய் தென்படவில்லை. பளபளவென்று ஒளியை வாறியிறைத்துக்கொண்டிருந்த அம்மோதிரத்தில்— தனக் காக தவிதவித்துகொண்டே எதிர்பார்த்துகொண்டிருக் கும் விஸ்வநாதனின் உணர்ச்சி தென்பட்டது.

சேகர் அம்மோதிரத்தை அன்போடு தடவிக் கொடுத்தான்.

25

சேகரின் கேஸில் தீர்ப்பு சொல்லப்போவது அன்றைக்குத்தான்.

நீதிபதி இக் கேஸைப் பற்றி விவரித்து, அதை பற்றி தன் அபிப்பிராயத்தைக்கூட வெளிப்படுத்தி, கடைசி தீர்மானத்தின் முடிவாய் தன் தீர்ப்பை இவ்வாறு படித்து காட்ட செய்தார்—

''சேகர் என்ற பெயருடைய இந்த குற்றவாளி தற்சமயம் நல்லவன் என்றும், சூழ்நிலையின் பிரபாவத் தால் விஷ வளையத்தில் சிக்கிக்கொண்டு இந்த குற்றங் களைச் செய்வதற்கு காரணமானான் என்று குறிப்பிடப் பட்டது.

''தெரிந்து செய்தாலும் தெரியாமல் செய்தாலும், அவன் மூலம் நிகழ்ந்துவிட்ட இந்த அபராதங்களுக்கு

நியாய சட்டத்தின்படி எட்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. நீதிமன்றம் பரந்த உள்ளத்தோடு தந்திருக்கும் இந்த அவகாசத்தை குற்ற வாளி பயன்படுத்திகொண்டு, திரும்பவும் நல்ல மனித னாய் மாறி இச்சமூகத்திற்கு திரும்பி வர வேண்டும் என்று விரும்புகிறோம். அவர் சமூகத்தின்பாலும், நாட்டின் பாலும் பொறுப்பான குடிமகனாய் தன் தர்மத்தை நிறை வேற்றுவார் என்று நம்புகிறோம்.''

சேகர் சரேலென்று நிமிர்ந்தான்.

ரேகாவின் கண்களில் தன்னையறியாமல் கண்ணீர் ததும்பிற்று.

விஸ்வநாதனின் முகத்தில் மட்டும் சந்தோஷம் தாண்டவமாடிக்கொண்டிருந்தது.

விமலனின் இதயத்திலிருந்து பெரிய பாரம் நீங்கினாற்போல இருந்தது.

ஆயுள் தண்டனை விதிக்கப்படாமல் தப்பியதற்கு நிம்மதியாய் இருந்தது அவ்விருவருக்கும்.

நீதிபதியும், மற்றவர்களும் போய்விட்டார்கள்.

சேகரை போலீசார் வேனை நோக்கி அழைத்து போய்க்கொண்டிருந்தார்கள்.

விஸ்வநாதனும், ரேகா, விமல், கமல் மூவரும் அவனிடம் வந்தார்கள்.

விஸ்வநாதன் சட்டென்று கைகளை நீட்டி சேகரின் தலையை இழுத்து மார்போடு அணைத்துகொண்டார்.

''குழந்தாய்! நாம்ப எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! கடவுள் நம்மீது இவ்வளவு தயை வைப்பார் என்று எண்ணியிருக்கவில்லை.'' ஏதேதோ சொல்லிகொண்டே யிருந்தார் அவர். போலீசார் அரும்பாடுபட்டு அவரை

சேகரிடமிருந்து பிரித்து தொலைவில் நிறுத்தினார்கள். போக முயன்ற சேகர் விமலனிடம் வந்தான்.

''விமல்! உங்கள் நன்றியை...'' குரலடைக்க சொன்னவன் அதற்குமேல் வார்த்தைகள் வராமல் நிறுத்திக்கொண்டான்.

விமலன் அவன் தோளில் கை வைத்து பரிவோடு சொன்னான்— ''இதில் நான் பண்ணியது எதுவுமில்லை சேகர்...''

சேகரின் கண்கள் ரேகாவின் மீது படிந்தது. அவன் முகத்தில் வெகு நாட்களுக்கு பிறகு விரக்தி இல்லாத முறுவல் நெளிந்தது.

அக்கண்களில் ஏதோ ஆசையும் ஆனந்தமும் மின்னின.

''ரேகா! நீ உருவாக்கி தந்த கனவில் நான் ஐந்தாண்டுகளை ஐந்து வினாடிகளாய் கழிக்க முயற்சிக்கிறேன்.''

''கண்டிப்பாய் சேகர்'' அவள் குரல் தழுதழுத்தது.

போலீசார் சேகரை முன்னுக்குப் போகும்படி எச்சரித்தார்கள்.

சேகர் நாலடிகள் எடுத்து வைத்திருப்பானோ என்னவோ, எதிரே வெள்ளமாய் வந்த ஜனங்கள் கும்பலாய் அவனைச் அவனைச் சூழ்ந்துக் கொண்டு விட்டார்கள்.

போலீசார் அவர்களை விரட்டியடிப்பதற்கு முயன்று கொண்டிருந்தார்கள்.

''நாங்கள் அவனைப் பார்க்க விடுங்கள்.''

''கொஞ்ச நேரம் அவனை இங்கே இருக்க விடுங்கள்.''

ஜனங்களிடையே கத்தல்கள் கேட்டன. போலீசார் அவர்கள் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. குறுக்கிட்டவர்களை வேகமாய் அப்பால் தள்ளினார்கள். தள்ளிய நாலைந்து பேர்கள் அலையாய் முன்னுக்குப் பாய்ந்து வந்தார்கள். போலீசாருக்கும் ஜனங்களுக்கு மிடையே இந்த கலாட்டா நடந்து கொண்டிருக்கும் பொழுதே திடீரென்று யாரோ கண்ணீர்ப் புகையை வீசியெறிந்தார்கள்.

திடீரென்று அவ்விடமெல்லாம் கருப்பாய், அடர்ந்த புகை வளையம் வளையமாய் மேலே எம்பிற்று. அந்தப் புகையில் திணறத் தொடங்கிய ஜனங்கள் பயந்து போய் கூச்சலும் கத்தலும் போடத் தொடங்கினார்கள், கொஞ்ச நேரங்கழித்து கருத்த புகை மெல்ல மெல்ல மறைந்து போயிற்று. எல்லோரும் பயந்து அங்கிருந்து ஓட முயன்று கொண்டிருந்தார்கள்.

போலீசார் அவர்களை விரட்டியடித்துக் கொண்டி ருந்தார்கள்.

புகை மறைந்ததுமே தென்பட்ட காட்சியைப் பார்த்து விட்டு எல்லோரும் ஸ்தம்பித்துப் போனார்கள்.

புகை முயற்றிலும் அகன்றுவிட்டது.

கைகளில் விலங்குகளோடு இருந்த சேகர் முழங் காலிட்டுத் தரையில் சரிந்தான். அவன் தலை சாய்ந்திருந் தது.

முதுகில் இரண்டு மூன்று பலமான கத்திக் குத்துக்கள் இருந்தன.

முழங்காலிட்டுக் கீழே சரிந்திருந்த அவன் முதுகி லிருந்து ரத்தம் தாரையாய் வழிந்து கால்வாய் கட்டியிருந் தது.

எல்லோரும் சலனம் ஒடுங்கிப் போய் நின்றுவிட்டார்கள்.

போலீசார் அங்குமிங்கும் ஓடினார்கள்.

நிமிஷத்தில் இச்செய்தி தெரிந்ததுமே அந்த சுற்று வட்டாரத்தில் இருந்தவர்கள் எல்லோரும் அங்கே கூடி விட்டார்கள்.

. கும்பலாலும், ஜனங்களின் தள்ளலாலும் கொஞ்சம் தொலைவிற்குப் போய் விட்டிருந்த விமலனும் கமலனும் இக்கத்தலைக் கேட்டமே சேகருக்கருகில் ஓடி வந்தார்கள்.

சேகரைத் தூக்கி அங்கிருந்த பெஞ்சியில் படுக்க வைத்தார்கள்.

யாரோ, ''டாக்டர்! டாக்டரைக் கூப்பிடுங்கள் சீக்கிரமாய்'' என்று கத்தினார்கள்.

போலீசாரில் ஒருவன் டாக்டருக்கு போன் பண்ணுவதற்காக ஓடினான்.

விமலன் கும்பலை கைகளால் தள்ளிக் கொண்டே, வழிஏற்படுத்திக் கொண்டு சேகரிடம் போனான்.

''சேகர்...''

சேகரின் கண்களில் அதற்குள் பார்வை தப்பிப் போய்க் கொண்டிருந்தது.

விமலனின் வாயிலிருந்து வந்த இந்த அழைப்பைக் கேட்டதுமே ஏதோ ஆதாரம் கிடைத்தாற்போல ஆசையாய் அந்தக் குரல் வந்த பக்கமாய் திரும்பின.

விலங்கிடப்பட்டிருந்த கைகள் ஜோடியாய் மேலே எழும்பி அவன் ஸ்பரிசத்திற்காக சூனியத்தில் தடவிக் கொண்டிருந்தன.

விமலன் சட்டென்று தன் இரு கைகளாலும் அவை களைப் பிடித்துக் கொண்டான்.

உடம்பிலிருந்த சக்தியெல்லாம் போய்க் கொண்டி ருக்க, அதை இழுத்துப் பிடித்துக் கொண்டே சேகர் பற்களை கடித்துக் கொண்டு சொன்னான்—

''விமல்... இது... இது... அவங்க... காரியந்தான்... நான்...சொல்லவில்லையா?...ஆனால்...ஆனால் எனக்கு பிழைக்க வேண்டும் என்றிருக்கிறது. சாதாரண மனுஷ னாய்.. நல்லவனாய் கொஞ்ச நாட்கள் என்னை வாழ வையுங்கள்... எனக்கு உயிர் கொடுங்கள்.''

ஓலமாய் கேட்ட அவன் வார்த்தைகள் மூச்சை இழுத்து விட்டுக் கொண்டாற்போல முடிந்து விட்டன.

அதற்குள் டாக்டர்கள் வந்தார்கள்.

அவர் சேகரைப் பரிசோதித்து விட்டு சேகர் இறந்து விட்டான் என்றும், இனி லாபமில்லை என்றும், சொன்னதுமே விஸ்வநாதன் சட்டென்று அவரிடம் வந்தார்.

அவர் கால்களைப் பிடித்துக் கொண்டு, ''டாக்டர்! அப்படி சொல்லாதீங்க. அப்படி மட்டும் சொல்லி விடாதீங்க. இந்த உலகத்தில் உள்ள ரத்தம் அவ்வ ளவையும் கொண்டு வந்து குவியுங்கள். எவ்வளவு விலையானாலும் சரி, வாங்கி அவன் உடம்பில் ஏற்றுங் கள். அவனை எப்படியாவது சரி, பிழைக்க வைத்து விடுங்கள். எப்படியாவது சரி, அவனுக்கு உயிர் கொடுங்கள்.''

டாக்டர் மெதுவாய் அவர் கைகளை விலக்கிக் கொண்டார்.

விஸ்வநாதனுக்கு இதயமே வெடித்து விடும் போல வேதனை ஏற்பட்டது.

அவர் திரும்பி சேகரிடம் வந்தார். அவன் தலையை தன் மடியில் ஏந்திக் கொண்டார்.

"இது எந்த ஜென்மத்து பந்தம்டா கண்ணா! உன் ரத்தத்தையெல்லாம் தாரை வார்த்து என்னை எதுக்காக பிழைக்க வைத்தாய்? இப்பதானே என்னைப் போன்ற அதிர்ஷ்டக்காரன் இல்லை என்று சொன்னேன்? உனக்காக நான் என்னத்தைப் பண்ணுவேனடா? உன்னை எப்படிப் பிழைக்க வைப்பேன்?" என்று பைத்தியம் பிடித்தவரைப்போல அவன் உடம்பையெல் லாம் முத்தமிடத் தொடங்கினார்.

விமலன் அப்படியே சிலையாய் நின்று கொண்டி ருந்தான்.

ரேகா சேகரின் மீது விழுந்து சிறு பெண்ணைப் போல அழத் தொடங்கினாள்.

விமலன் அவள் தோளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி னான்.

அவனைப் பார்த்ததுமே ரேகா கட்டிக்கொண்டு ஓவென்று கதறத் தொடங்கினாள்.

"விமல்! நான்தான் அவனை ஆதியிலிருந்தே பிடி பட்டுபோய் விடும்படி பலவந்தமாய் தூண்டிக் கொண்டேயிருந்தேன். அவன் பயந்து கொண்டேயிருந் தான். நான்தான் அவனை பலவந்தமாய் கொன்று விட்டேன். என்னால்தான் அவன் செத்துவிட்டான்."

விமலன் அவளைத் தேற்றத் தொடங்கினான்.

26

நான்கு நாட்கள் கழிந்தன.

சேகர் போனதிலிருந்து விஸ்வநாதன் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து அவருக்கு பைத்தியம்

பிடித்துவிடும் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தார் கள் எல்லோரும். ஆனால் என்ன வினோதமோ அப்படி எதுவும் நடக்கவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் சாதாரண மனிதரானார்.

அவரை சூழ்ந்து கொண்டிருந்த மௌனத்தில் ஒரு விதமான அமைதியும் வைராக்கியமும் நன்றாய் தென் பட்டன.

அன்று விமலனைப் பார்த்து சொன்னார் அவர்.

"விமல்! கூடிய சீக்கிரத்தில் என்னை இங்கிருந்து கேரளாவுக்கு அனுப்பி விடு. சீக்கிரத்தில் என் பிரயாணத் திற்கு ஏற்பாடு செய்."

அவர் அதற்கப்புறம் ஒன்றும் பேசவில்லை, கண் களை மூடிக் கொண்டு பின்னுக்கு சாய்ந்து படுத்துக் கொண்டு விட்டார்.

விஸ்வநாதன் கேரளாவில் இருந்த கிராமத்திற்குப் போவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அவர் அங்கிருந்து இனி திரும்பி வரமாட்டார்.

இந்த நான்கு நாட்களும் சொத்து விவரங்களை சரி பார்த்தார் அவர்.

சேகர் பெயரில் ஊரிலிருந்த எல்லா கல்லூரிகளுக் கும் நன்கொடைகள் தந்தார்.

அனாதை ஆசிரமம் ஒன்றைத் தொடங்கச் செய்தார். லலிதாவுக்கும் சொத்தை பங்கிட்டுத் தந்தார். ரஞ்சிதா வின் எல்லா பொறுப்புகளையும் சொத்தின் மீது சகல உரிமைகளையும் ரேகாவிடம் ஒப்படைத்திருந்தார்.

லலிதாவை ஒரு முறை வரச் சொல்லி எவ்வளவு தடவை செய்தி சொல்லியனுப்பியும் அவள் வரவே யில்லை.

விமலன், கமலன், ரேகா மூவரும் அவருக்குப் பக்கத்தில் இருந்தபொழுது அவர், ''விமல்! எல்லா வேலைகளும் முடிந்துவிட்டது. இனி எஞ்சியிருப்பது ஒரே ஒரு வேலைதான். அதுகூட முடிந்துவிட்டால் அல்லது குறைந்தபட்சம் ஒரு முடிவிற்காவது வந்துவிட்டால் நான் நிம்மதியாய் போவேன்.''

''சொல்லுங்கள், அதென்ன?''

''ரேகாவின் கல்யாணத்தைப் பற்றி...''

அதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போன ரேகா சட்டென்று வேலை இருப்பதுபோல அங்கிருந்து எழுந்து போய் விட்டாள்.

ரேகாவின் முகம் நிறம் மாறியதை விமலன் கவனிக்கத் தவறவில்லை.

கொஞ்ச நேரம் தலை குனிந்தபடி யோசித்துக் கொண்டிருந்த விமலன் பிறகு நிமிர்ந்து உறுதியான குரலில் சொன்னான்—

''இதில் முடிவிற்கு வருவதற்கு என்ன இருக்கிறது. கமலன்—ரேகா இருவருக்கும் ஒருத்தர் மீது இன்னொருத்தருக்கு இருக்கிற அன்பைப் பற்றி நமக்குத் தெரிந்ததுதான்...''

''ஆனால் விமல்!'' விஸ்வநாதன் பரபரப்புடன் குறுக்கிட்டார்.

விமலன் அவர் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை.

''அவர்களிருவரும் சிநேகிதர்கள். எனக்குக்கூட ஆட்சேபணை இல்லை. நான் சந்தோஷமாய் இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிக்கிறேன்.''

விமலனின் வாயிலிருந்து வந்த இவ்வார்த்தைகளைக் கேட்டதுமே கமலனின் முகம் மலர்ந்தது. எவ்வளவு நாட்களுக்குப் பிறகு தன் விருப்பம் பலித்தது என்ற திருப்தி அக்கண்களில் மின்னிற்று.

எழுந்து விமலனிடம் வந்து அவன் இருகைகளையும் பிடித்துக் கொண்டு, ''தாங்க்ஸ் விமல்! மெனி மெனி தாங்க்ஸ்!'' என்றான்.

விமலன் கமலனின் முகத்தில் மின்னிய சந்தோஷத்தைப் பார்த்தான்.

பிறகு தம்பியின் கைகளிலிருந்து தன் கைகளை விடுவித்துக் கொண்டு விஸ்வநாதனைப் பார்த்து— ''நீங்கள் இதில் அவ்வளவு தூரம் யோசிக்க வேண்டியது எதுவும் இல்லை. கவலையில்லாமல் இருங்கள்'' என்று சொல்லி விட்டு—நேரத்தைப் பார்த்துக் கொண்டவன், ''நான் வரேன்! ஒருத்தரை சந்திக்கிறதாய் வாக்களித்திருந்தேன்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

அறையில் விஸ்வநாதனும் கமலனும் மட்டுமே எஞ்சி நின்றார்கள். விமலன் அவ்வாறு திடீரென்று போய்விட்டது விஸ்வநாதனுக்கு அசாதாரணமாகவே தோன்றிற்று

அவர் கமலனை கேட்டார். ''கமல்! ரேகாவும் நீயும் பேசிக்கொண்டுவிட்டீர்களா? ரேகாவின் விருப்பத்தை உனக்கு நன்றாய் சொன்னாளா?''

கமலன் தலையாட்டினான்— ''அந்த முடிவு ஆன பிறகுதான் ரேகாவை உங்களிடம் கொண்டுவந்து விட்டேன். இந்த ஒரு வருஷமும் விமலன் ரேகாவுக்கு பரிசோதனை வைத்திருந்தான். ரேகா நூற்றுக்கு நூறு சதவீதம் விமலன் வைத்த பரிசோதனையில் பாசாகி விட்டாள்! அதனால்தான் விமலன் இத் திருமணத்திற்கு அனுமதி தந்தான். ரேகா வேற்று மனுஷியாய் இல்லாமல்

இந்த விதத்தில் உங்களுக்கு உறவாகிவிட்டது எனக்கு இன்னும் சந்தோஷமாய் இருக்கிறது.''

விஸ்வநாதன் சாய்வு நாற்காலியில் பின்னுக்கு சாய்ந்து உட்கார்ந்துகொண்டார். அவருக்கு ஏனோ இந்த செய்தி சந்தோஷத்தை தரவில்லை. கமலனின் மனைவியாய் ரேகாவை என்றுமே ஊகித்து பார்த்த தில்லை அவர்.

அவர் கண்ணெதிரே எப்பொழுதுமே விமலனும் ரேகாவுந்தான் கணவன் மனைவியாய் வளைய வந்து கொண்டிருப்பார்கள். ரேகாவும் விமலனும் ஒருவருக் கொருவர் மிகப் பொருத்தமானவர்கள் என்றெண்ணிக் கொண்டிருந்தார் அவர்.

விமலன் மறு பேச்சிற்கிடமில்லாமல் இவ்வாறு சொல்லிவிட்டு போனது அவருக்கு உசிதமாய் தோன்ற வில்லை.

விமலன் போனதுமே விஸ்வநாதன் யோசனையில் ஆழ்ந்துபோய் எதிரே தான் உட்கார்ந்திருந்ததைகூட மறந்து போனபடி ஆகிவிட்டதை பார்த்த கமலன் அங்கிருந்து அப்பால் வந்தான்.

விமலன் சொன்ன இந்த முடிவு அவருக்கு திருப்தி கரமாய் இல்லை என்பதை கமலன் புரிந்துகொண்டு விட்டான்.

அவர் உத்தேசம் என்ன? ரேகாவுக்கு தான் தகுந்தவன் இல்லை என்பதா? பண்ணிக்கொள்ளப் போகும் ரேகாவுக்கு பிடித்திருக்கும்பொழுது இந்த அபிப்பிராயமெல்லாம் யாருக்கு வேண்டும்? கமலன் நேராய் உள்ளே வந்தான்.

ரேகா உள்ளே ரஞ்சிதாவை உட்கார வைத்து புதிதாய் வாங்கிய பொம்மையை ஆட வைத்து காட்டிக் கொண்டிருந்தாள்.

கமலன் அவ்வறைக்குள் நுழைந்ததுமே சொன்னான்— ''ரேகா, கங்கிராஜுலேஷன்ஸ்! ஹார்டியஸ்ட் கங்கிராஜுலேஷன்ஸ்.''

''எதுக்கு?'' நிமிர்ந்து பார்க்காமலேயே கேட்டாள் ரேகா.

''விமலனை தோற்கடித்து விட்டதற்கு. சும்மா யில்லை, நன்றாய் வீழ்த்திவிட்டதற்கு! இந்த ஜென்மத்தில் நம்ப கல்யாணத்திற்கு ஒப்புக்கொள்ள முடியாது என்று சபதம் செய்த விமலன் உன் அருகதையை அங்கீகரித்துவிட்டான். மனப்பூர்வமாய், சந்தோஷமாய் ஒப்புக்கொண்டுவிட்டான்.''

குனிந்திருந்த ரேகாவின் முகம் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் வெளுத்து போனதை கமலன் கவனிக்க வில்லை.

''ரேகா! எனக்கு தெரியும். நீ என் வார்த்தைகளை காப்பாற்றுவாய் என்றும், என் மானத்தை காப்பாற்றி விடுவாய் என்றும், எனக்கு முன்பே தெரியும். வெற்றி எனக்குதான் என்ற நம்பிக்கை எனக்கு எப்பொழுதுமே உண்டு. தாங்க்ஸ் ரேகா! மெனி மெனி தாங்க்ஸ்!''

ரேகா உடனே பதில் பேசவில்லை.

கமலன் வந்து ரேகாவிற்கு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். தானும் ஒரு பொம்மைக்கு 'கீ' கொடுத்துக் கொண்டே சொன்னான்—

''ரேகா! எல்லா வழிகளும் க்ளியர் ஆகிவிட்டன. இனி பச்சைக் கொடியை காட்டவேண்டியவள் நீதான்.''

ரேகா மௌனமாய் யோசனையில் ஆழ்ந்தவளைப் போல உட்கார்ந்திருந்தாள்.

''ஏன் பேசமாட்டேங்கிறாய் ரேகா? உன் சந்தேகம் என்ன?''

ரேகா நிமிர்ந்து அவனை பார்த்தாள்.

அக்கண்களில் தென்பட்ட உணர்ச்சியை பார்த்தும் 'திக்'கென்றது கமலனுக்கு.

சூதாட்டத்தில் சகலத்தையும் இழந்துகொண்டேயிருக்கிறோம் என்று உணர்ந்து கொண்டவளின் முகத்தை போல இருந்தது அவள் முகத்தோற்றம்.

''கமல்! உண்மையை சொல்லட்டுமா?''

''சொல்லு ரேகா!''

''எனக்கு கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்றில்லை. என்னிடம் வேறு எதை வேண்டுமானாலும் பேசுங்கள். இதை பற்றி மட்டும் வேண்டாம்.''

''ரேகா!''

''இந்த உலகத்தில் உங்களைவிட சிநேகிதர் எனக்கு வேறு யாருமில்லை. நமக்கிடையே அபூர்வமாய் இருந்து கொண்டிருக்கும் இந்த சிநேகம் சிநேகமாகவே இருக்கட்டும். இதை தவிர, என்னிடமிருந்து வேறெதையும் விரும்பாதீங்க. இது என் வேண்டுகோள்.''

கமலன் குழப்பத்துடன் பார்த்தான். தடுமாற்றத்துடன் கேட்டான்,

''ரேகா! நீ... நீ என்னிடமிருந்து எதையோ மறைக்கிறாய். நேரமாய் தெளிவாய் பேசுவதில்லை. உண்மையை சொல்லு ரேகா. உன் மனதிலுள்ள பயம் என்ன? விமலனேகூட ஒப்புக்கொண்டுவிட்ட பிறகு ஏன் உனக்கு சந்தேகம்?''

விமலனின் பெயரை கேட்டதும் ரேகாவின் முகத்தில் ரோஷம் பிறந்தது.

''கமலன்! முதலில் இதை சொல்லுங்கள். விமலனிடம் திடீரென்று ஏன் மாறுபாடு வந்ததாம்? நம்ப

கல்யாணத்திற்கு அவரிடம் இருந்து வந்த ஆட்சேபணை எப்படி நீங்கி போயிற்றாம்?''

''ரேகா! இவ்வளவு நாட்களாய் நேருக்கு நேராய் கண்கூடாய் உன்னை பார்த்து வரவில்லையா? தன் மனதில் உன்னை பற்றி எண்ணியிருந்ததெல்லாம் தவறு என்று தெரிந்துகொண்டிருப்பான்.''

''இல்லை... பொய். விமலனிடம் மாறுதல் வந்திருக்கிறது என்பதற்கு காரணம் நீங்கள் சொல்லும் காரணம் இல்லவே இல்லை என்பது என் நம்பிக்கை நான் சொல்கிறேன், கேளுங்கள். இப்பொழுது நான் பணக்காரியாகிவிட்டேன். விஸ்வநாதனின் சொத்து எனக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அவர் மகளாய் எனக்கு கௌரவமும், மரியாதையும் வந்து சேர்ந்திருக்கின்றன. உங்களோடு சரிசமானமாய் நிற்கக்கூடிய ஹோதா வந்துவிட்டது. அதனால் விமலன் ஒப்புக்கொண்டார். விமலன் தோற்றுப் போய்விட்டதாய் நீங்கள் எண்ணிக் கொண்டால் அது மிகத் தவறு. நீங்கள் என்னை பண்ணிக்கொண்டால் அவர் வெற்றி பெற்றாற் போலவே!''

''ரேகா.''

''அவர் ஆதியிலிருந்தே பணக்காரப் பெண்ணைத் தான் உங்களுக்கு பண்ணிவைக்கப் பார்த்தார். இப்பொழுதும் அப்படியேதான் நடக்கிறது. கமல்! நீங்கள் மிக ஏழை பெண்ணை பண்ணிக்கொள்ளுங்கள். இதுதான் விமலனுக்கு தகுந்த தண்டனை! அவர் கர்வத்தை அடக்கவேண்டுமென்றால் அது ஒன்றுதான் வழி.''

கமலன் விக்கித்து போனவனாய் பார்த்தான். அவன் வந்த பிறகு விமலன்— ரேகாவின் நடவடிக்கைகளை பொறுத்து அவர்களுக்கிடையே இருந்து வந்த விரோதம்

போய்விட்டது என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தான். அதுவும் நடக்கவில்லை. பழைய வன்மம் எப்பொழுதும் போலவே செக்குச் செதுராமல் இருந்து கொண்டிருக் கிறது. அவன் பழிப்பதுபோல சொன்னான்—

"என்ன சொல்கிறாய் ரேகா? விமலனின் கர்வத்தை அடக்குவதற்காக நான் வேறு பெண்ணை பண்ணிக் கொள்ளணுமா? இது சரியானதுதானா? அதைவிட கல்யாணமே பண்ணிக்கொள்ளாதே என்று சொல்லி யிருந்தால் ரொம்ப சந்தோஷமாய் இருந்திருக்கும்."

ரேகாவின் ரோஷம் தணிந்துவிட்டது. செய்வ தறியாமல் பார்த்தாள். சோர்ந்துபோய் பார்த்தாள்.

"கமல்! நான் சொல்றது உங்களுக்கு புரியாது. உங்களுக்கு புரியும்படியாய் சொல்ல எனக்கு வராது."

"நீ இந்த கண்ணாமூச்சி ஆட்டத்தை விட்டுவிட்டு நேரிடையாய் பேசு ரேகா! நீ இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாம் என்றால் என்னால் புரிஞ்சு கொள்ள முடியும். இன்னும் ஒரு வருஷம் இல்லை, பத்து வருஷம் காத்திருக்க சொன்னாலும் காத்திருப் பேன்."

"வேண்டாம் கமல், வேண்டாம். எனக்கு கல்யாணமே செய்துகொள்ள பிடிக்கவில்லை."

கமலன் வாயடைத்து போனவனாய் பார்த்தான்.

"ஏன்?"

"காரணம் கேட்க வேண்டாம். தயவு செய்து என்னோடு தர்க்கத்தில் இறங்க வேண்டாம். என்னால் பதில் சொல்ல முடியாது."

கமலன் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தான். அவன் முகம் சிவந்துவிட்டது. மெதுவாய் சொன்னான்—

''எனக்கு புரிந்துவிட்டது ரேகா! உன் கஷ்டத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.''

ரேகா சந்தோஷத்துடன் அவனைப் பார்த்தாள்.

கமலன் கோபத்தை அடக்கிக் கொண்டே சொன்னான்—

''இந்தக் கல்யாணத்தை பற்றி உன்னைத் தொந்தரவு பண்ணியது என் தப்புதான். நீ பழைய ரேகாவே இல்லை. அதை மறந்து போய் விட்டேன்.''

''கமல்...''

''நீ பழைய ரேகா இல்லை. அப்பொழுது அந்த ரேகாவுக்கு யாருமே இல்லை. பணம் இல்லை. என்னுடையவர்கள் என்ற ஆத்மார்த்தமானவர்கள் இல்லை. அப்பொழுது நான் வேண்டியிருந்தேன். இப்பொழுது எல்லாம் வந்து சேர்ந்து விட்டன. இப்பொழுது என்னைவிட உன்னதமானவர்கள் வேண்டும் உனக்கு. அதை வெளிப்படையாய் சொல்லிக் கொண்டிருந்தால் நான் சந்தோஷப்பட்டிருப்பேன், என்னால் எதை வேண்டுமானலும் சகித்துக் கொள்ள முடியும். ஆனால் சிநேகத்தில் நாடகமாடுவதையும், மோசம் பண்ணுவதையும் சகித்துக் கொள்ளவே முடியாது.''

''கமல்! நீங்கள்...''

''வரேன் ரேகா! தான் காதலித்த பெண் முகத்தில் 'சீ' என்று காறித் துப்பும்பொழுது எதிரே உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருக்க என்னால் முடியாது. நான் போகிறேன்.'' கமலன் எழுந்து விடுவிடென்று போய் விட்டான்.

கமலன் வீட்டிற்கு வந்தான். அவனுக்கு மூளையே குழம்பினாற்போல இருந்தது. எவ்வளவு யோசித்துப் யோசித்துப் பார்த்தபொழுதிலும் ரேகாவை அவனால்

புரிந்து கொள்ள முடியவில்லை. ரேகா எதையே மறைக்கிறாள். அவனிடம் சொல்லவில்லை.

அவள் தோரணையைப் பார்த்தால் வாய் விட்டு சொல்ல முடியாமல் வருந்திக் கொண்டிருப்பதாய் தோன்றுகிறது. மனதில் எதையோ மறைத்து கொண்டு கண்ணாமூச்சு ஆட்டம் ஆடுவது ரேகாவின் சுபாவத்திற்கே எதிர்ப்பதமானது.

யோசனையில் ஆழ்ந்தபடி சகலத்தையும் மறந்து போய் உட்கார்ந்திருந்த கமலன் வாசல் கதவைத் தட்டிய சப்தம் கேட்டதால் எழுந்துப் போய் திறந்தான்.

எதிரே லலிதா நின்று கொண்டிருந்தாள். வெளியே டாக்ஸி நின்று கொண்டிருந்தது.

''விமலன் இருக்கானா?''

''இல்லை. உள்ளே வா.''

லலிதா 'வரமாட்டேன்' என்று தலையாட்டினாள்.

''ஏன்? எதுக்கு?''

''உங்கள் எல்லோருடைய வீட்டிற்கும் வருகிற அருகதை எனக்கு இல்லை என்று தெரிந்து கொள்.''

''இந்த மாதிரி பேச எப்பொழுது கற்றுக் கொண்டாய்? உள்ளே வா!'' பரிவோடு அழைத்தான் கமலன்.

லலிதா கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள்.

''ஊஹூம், நான் ஊருக்குப் போகிறேன். ரயிலுக்கு நேரமாயிடுத்து. எப்பொழுது வருவான்? இப்போதைக்கு வரமாட்டானா?''

''என்னவோ தெரியாது. இரண்டு நாட்களாய் ஒரே வேலையாய் மூச்சுவிட முடியாமல் சுற்றிக் கொண்டிருக்கிறான்.''

லலிதா ஒரு வினாடி ஏதோ யோசித்தாள். பிறகு கைப்பையைத் திறந்து அதிலிருந்து ஒரு கவரை எடுத்துத் தந்து, "விமலனோடது ஒன்று என்னிடம் இருந்தது. அதை தந்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். இதோ, இதை அவனிடம் கொடு..." என்றாள்.

கமலன் அதை வாங்கிக் கொண்டான்.

"கமல்! அப்பாவிடம் நான் ஊருக்குப் போகிறேன்னு சொல்லி விடு. அதில் அவருக்கு ஒரு கடிதம் வைத்திருக்கிறேன். மிஸ் ஜோஷியிடம் சில நாள் இருப்பேன். அப்புறம் அங்கிருந்து வேறு எங்கேயாவது போவேன். எனக்கு நேரமாயிடுத்து, வரேன்."

"கொஞ்ச நேரம் உள்ளே வந்து உட்கார்ந்து விட்டு போ லலிதா" என்றான் கமலன்.

லலிதா மறுத்து தலையசைத்தாள்.

"ஊஹூம், மாட்டேன். நல்லவர்கள் எனப்படும் உங்களிடம் இருக்கிற தீய குணத்தை நான் அறிவேன். தப்பு பண்ணியவங்களையும், பலவீனமானவங்களையும் நீங்கள் புழுவைப்போல பார்ப்பீங்க. உங்களால் விரல் சுட்டி காட்டப்படுவதை விட நானாகவே தொலைவிற்குப் போய் விடுவது நல்லது. என் தப்பை நீங்கள் மன்னித்தாலும் என்னால் மறந்து போய்விட முடியாது."

"லலிதா."

"வரேன்! பை பை."

வந்த வேகத்திலேயே போய் விட்டாள் லலிதா.

கமலன் பார்த்துக் கொண்டிருந்த பொழுதே லலிதா போய் டாக்ஸியில் உட்கார்ந்ததும், அது கிளம்பி போய் விட்டதும் நிகழ்ந்து முடிந்துவிட்டது.

லலிதா கொடுத்த கவரை மேஜை மீது கொண்டு வந்து வைக்கப் போனவன் தன்னையறியாமல் அதை அப்படியும் இப்படியுமாய் திருப்பினான்.

திறந்திருந்த அதிலிருந்து இரண்டு கடிதங்களும், நாலைந்து போட்டோகளும் நழுவி தரையில் விழுந்தன. கமலன் அவைகளை எடுத்து ஒவ்வொன்றாய் கவருக்குள் வைக்கத் தொடங்கி, ஒரு போட்டோவைக் கையிலெடுத்தவன் திடுக்கிட்டுப் போனான்.

அவன் கண்கள் அகல விரிந்தன.

தன்னையறியாமல் நிமிர்ந்து நின்றான்.

எதிரே இருந்த போட்டோவில் ரேகாவும் விமலனும் இருந்தார்கள்.

இருவர் நெற்றியிலும் கல்யாணத் திலகங்கள் இருந்தன. விமலன் ரேகாவின் தோள்களை சுற்றிலும் கையைப் போட்டுக் கொண்டிருந்தான். ரேகாவின் தலை அவன் தோள்மீது பொருந்தியிருந்தது. ரேகா பரவசமாய் இருந்தாற் போலவோ அல்லது வெட்கத்தால் தலையை நிமிர்த்திப் பார்க்க முடியாமல் இருந்தாற்போலவோ கண்கள் தாழ்ந்திருந்தன.

கமலனின் கண்கள் அகன்றன.

'இது உண்மையா அல்லது பிரம்மையா?' அவனுக்கு உடனே புரியவில்லை.

அவன் நடுங்கும் கரங்களுடன் எஞ்சிய போட்டோகளைக்கூட பார்த்தான்.

எல்லாம் கல்யாண போட்டோக்கள்தான்!

தான் எதை தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தானோ, அந்த சத்தியம் கண்ணெதிரே வந்து நின்றாற்போல இருந்தது.

கமலனுக்கு இவை லலிலாவிடம் எப்படிப் போயிற்று என்று புரியவில்லை. உடனே லலிதா எழுதிய கடிதத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினான்.

அதில் இவ்வாறு இருந்தது:

"விமலன்—

நான் இன்றைக்கு ஊருக்கு போகிறேன். இப் போதைக்கு உங்கள் யாரையும் சந்திப்பேன் என்ற நம்பிக்கை இல்லை உண்மையை சொல்ல வேண்டும் என்றால் தீய கனவைப் போன்ற இந்த கடந்த காலத்தை மறந்து போய் எங்கேயாவது புதிய வாழ்க் கையை தொடங்க வேண்டும் போலிருக்கிறது. அது எனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ தெரியாது விமல்! இந்தக் கடிதத்தோடு சேர்த்து உன் ரகசியத்தை யும் திருப்பி அனுப்பிவிட்டேன். இந்த போட்டோக்கள் என்னிடம் எப்படி வந்து சேர்ந்தன என்று நீ குழம்பிக் கொண்டிருக்கலாம். அப்பா ரேகாவின் பெயருக்கு உயில் எழுதியிருக்கிறார் என்று தெரிந்ததுமே, அதை கண்டிப் பாய் உன்னிடந்தான் பத்திரப்படுத்தி வைத்திருப்பார் என்று முதல் முதலாய் உன் மீதுதான் சந்தேகப்பட் டேன். நீ பம்பாய்க்குப் போயிருந்த பொழுது மாறு சாவி களைக் கொண்டு உன் பீரோவைத் திறந்து பார்த்தேன். அதில் தேடிப் பார்த்த எனக்கு உயில் தென்படவில்லை. நீ ஆதியிலிருந்து ரேகாவின்பால் காட்டி வந்த தோரணை எனக்கு சந்தேகமாகவும் ஆர்வமாகவும் இருந்து கொண்டேயிருந்தது. அந்த சந்தேகத்தை இந்த போட்டோக்கள் உறுதிப்படுத்தி விட்டன. ரேகாவின் மீது எனக்கு தாங்க முடியாத ஆத்திரமும் பொறாமையும் ஏற்படுவதற்கு இவைகூட கொஞ்சம் காரணமாகும். நீங்களிருவரும் கணவன் மனைவியர். ஆனாலும்சேர்ந்து குடும்பம் நடத்தவில்லை. உங்களிவருக்குமிடையே ஏதோ நடந்திருக்கிறது என்று தெரிந்து கொண்டேன்.

விமலன்! உன் இந்த ரகசியத்தைக் கையில் வைத்துக் கொண்டு அன்றைக்கு உன்னை சொல்லக்கூடாத வார்த்தைகளைச் சொல்லி விட்டதற்கு என்னை மன்னித்து விடு. இன்றைக்கு நான் ஊருக்குப் புறப்படப் போகும் சமயத்தில் இவை ஞாபகத்திற்கு வந்தன. உன் மீது எனக்கு எந்த கோபமும் இல்லை என்பதற்கு அடையாளமாய் இவைகளை உனக்குத் திருப்பித் தந்து விட்டேன். என்னைப் புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கையுடன்தான் என் அகங்காரத்தை விட்டுவிட்டு உனக்குக் கடிதம் எழுதுகிறேன்.

இப்படிக்கு,
லலிதா"

கமலன் அக்கடிதத்தை இரண்டு முறை படித்தான். போட்டோக்களை பத்து முறை பார்த்தான். அவன் ரத்தம் சலசலவென்று கொதித்தாற்போல இருந்தது. இவ்வளவு ஆவேசம் அவனுக்கு என்றுமே வந்ததில்லை. விமலன் மட்டும் அந்த சமயத்தில் கண்ணெதிரே தென்பட்டானானால் அவன் மீது பாய்ந்து அடித்துக் கொன்றுவிட வேண்டும் போலிருந்தது.

விமலனும்—ரேகாவும் திருமணம் செய்துகொண்டு விட்டார்கள். எப்பொழுது செய்துகொண்டார்கள்? எப்படிச் செய்து கொண்டார்கள் என்பதெல்லாம் அவனுக்குத் தேவையில்லாதது. அவர்களிருவரும் இப் பொழுது கணவன்—மனைவியர். கமலனுக்கு திடீரென்று மேகங்கள் விலகினாற்போல தெளிவாய் புரியத் தொடங் கிற்று. ரேகா பட்டுக்கொண்டிருந்த துன்பம் புரியத் தொடங்கிற்று.

அவள் மனது விமலனுக்கு அர்ப்பணமாகிவிட்டது என்றும், அவன் மனைவியாகிவிட்டாள் என்றும் சொல்ல முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறாள்!

ஒருக்கால் விமலன் 'கமலன் வருத்தப்படுவான். நானே சொல்லிக்கொள்கிறேன்' —என்று சொல்லியிருப்பானோ என்னவோ? அல்லது அவ்விருவருக்குமிடையே இன்னும் ஏதாவது அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்குமோ? ஆனாலும் விமலனுக்கு என்ன தைரியம்! தான் காலி கட்டிய பெண்ணை ஒன்றுமே அறியாதவனைப் போல இன்னொருவரோடு விவாகத்திற்கு அங்கீகரிக்கிறானா? சீ, சீ! என்ன மனிதர்கள் இவர்கள்? கமலனை ஆவேசம் சூழ்ந்துகொண்டது.

முதலில் இங்கிருந்து போய்விட வேண்டும். இவர்கள் இருக்குமிடத்தை விட்டு தொலைதூரத்திற்குப் போய்விட வேண்டும் என்று தோன்றத் தொடங்கிற்று.

போட்டோக்களையும் கடிதங்களையும் கவரில் வைத்து அதை மேஜைமீது விமலன் வந்ததுமே கண்ணில் படும்படி வைத்தான்.

பிறகு யாரோ துரத்திக்கொண்டு வருவதுபோல வேகமாய் படியேறி தன் அறைக்கு வந்தான்.

அவனுக்கு ஒரு நிமிஷம் அந்த போட்டோக்களை ரேகாவின் முகத்தில் விட்டெறிந்து 'இதற்கு என்ன சொல்கிறாய்?'—என்று கேட்க வேண்டும் போலிருந்தது.

ஆனால் அதற்குள் அந்த உத்தேசம் மாறிவிட்டது. ரேகாவை எதற்குப் பார்க்கவேண்டும்? அதனால் என்ன பிரயோஜனம்?

கமலன் அறை மூலையில் வைத்திருந்த சூட்கேஸை எடுத்துவந்து கட்டிலில் போட்டான். அங்குமிங்கும் சிதறிக்கிடந்த துணிகளைத் திரட்டி உருண்டையாய் சுற்றி அதற்குள் திணிக்கத் தொடங்கினான்.

ரேகாவுக்குத் திருமணமாகிவிட்டது. அதுவும் வேறு யாருடனோ இல்லை, விமலனோடு! இந்த சத்தியத்தை

அவனால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. விமலனின் பெயரை எடுத்தாலே ஆத்திரப்படும் ரேகா, அவனைக் கண்டாலே வெறுப்படையும் ரேகா, அதெல்லாம் நடிப்பா? தன்னை வஞ்சிப்பதற்காக ஆடிய நாடகமா? விமலன் ரேகாவை எவ்வளவு அவமானப் படுத்தினான்? அந்த அவமானத்தையெல்லாம் ரேகா எப்படி மறந்து போனாள்?

யோசிக்க யோசிக்க, அவன் மூளை கொதித்துக் கொண்டிருந்தது.

அதற்குள் படிக்கட்டில் யாரோ வந்த சத்தம் மளமள வென்று காலடிச் சப்தம் கேட்டது.

"என்னைத் தேடிக்கொண்டு யாராவது வந்தாங்களா கங்கம்மா?" என்ற விமலனின் கூவல் கூட கேட்டது.

கமலன் திடுக்கிட்டான். பெட்டியில் மளமளவென்று உடைகளை அடுக்கிக் கொள்ளத் தொடங்கினான்.

விமலன் உள்ளே வந்தான். அவன் நன்றாய் சுற்றி யலைந்துவிட்டு வந்திருப்பது வாடிய அவன் முகத்தைக் கொண்டே தெரிந்தது.

"என்னடா? பெட்டியையெல்லாம் அடுக்கிக்கொண் டிருக்கிறாய்?" கேட்டான்.

"உம்... ஊருக்குப் போறேன்" —அண்ணனை ஏறிட்டுப் பார்க்காமலேயே பதிலளித்தான் கமலன்.

கால் கழுவிக்கொள்வதற்காக பாத்ரூமை நோக்கிப் போய்க்கொண்டிருந்த விமலன் டக்கென்று நின்று விட்டான்.

"ஊரா? எந்த ஊர்?"

கமலன் பதில் பேசவில்லை.

''தனியாகவா? ஜோடியாகவா?'' விமலன் தமாஷ் பண்ணுவது போல கேட்டான்.

''ஜோடியாய் கூடவா? அந்த அதிர்ஷ்டம் இந்த ஜென்மத்தில் இல்லை. தனியாய்தான்'' முணுமுணுத்துக் கொண்டான் கமலன்

''என்னடா முணுமுணுக்கிறாய்? கொஞ்சம் சப்த மாய்தான் சொல்லேன்?''

''ஒன்றுமில்லை, நான் ஊருக்குப் போகிறேன்.''

''அதான், எந்த ஊரு? ஏன்னு கேட்கிறேன்?''

''ஐதராபாத்துக்குப் போறேன். ஏன் என்று போன பிறகு லெட்டரில் எழுதுகிறேன்.''

விமலன் தம்பியிடம் வந்தான். ''உனக்கு ஏதாவது புத்தி இருக்கா? சொல்லாமல் கொள்ளாமல் இதென்ன பிரயாணம்?''

''நீ எல்லோருக்கும் எல்லாவற்றையும் சொல்லி விட்டுதான் பண்ணுகிறாயா? போகட்டும், செய்ததை யாவது சொல்லுகிறாயா?'' கேட்டான் ரோஷமாய்.

அவன் கண்களில் கண்ணீர் பொங்கி வந்துகொண் டிருந்தது. அதை அடக்கிக்கொள்ள அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

''அப்படீன்னால்?'' விமலன் புரியாமல் கேட்டான்.

''அப்படீன்னால் அது அப்படித்தான்''—தலையைச் சிலிர்த்துக்கொண்டே வீறாப்பாய் சொன்னான்.

விமலனுக்கு அவன் தோரணை புரியவில்லை. கொஞ்ச நேரம் நின்று, அவனைக் கூர்ந்து பார்த்து விட்டுக் கேட்டான்.

''ரேகாவிடம் சொன்னாயா?''

''ரேகாவிடம் சொல்லவேண்டிய அவசியம் எனக் கெதற்கு?''

''புத்தி இல்லையாடா உனக்கு? உன் வருங்கால மனைவி...''

''விமல்...'' அதற்கு மேல் தாங்க முடியாதவனாய் பெரிதாய் கத்திவிட்டான் கமலன். ''நீ வேறு என்ன வேண்டுமானாலும் சொல்லு. ஆனால் இதை மட்டும் சொல்லாதே.''

விமலன் வினோதமாய் பார்த்தான். கிட்டே வந்து தம்பியின் தோளில் கையை வைத்தான். ''கமல்! ஏன் இப்படி இருக்கிறாய்? என்னவாயிடுத்து? என்னிடம் சொல்லக்கூடாதது ஏதாவது நடந்ததா? நீயும் ரேகாவும் சண்டை போட்டுக் கொண்டீர்களா?''

''சண்டையா? ஊஹூம். சண்டை போடாமல் இருப்பதற்காகத்தான் நான் போய்விடுகிறேன்.''

''என்ன ஆச்சு?''

''உண்மையைச் சொல்லச் சொல்கிறாயா?''

''சொல்லு.''

''ரேகா என்னை ஏமாற்றிவிட்டாள். அந்த விஷயம் எனக்கு இன்றைக்குதான் தெரிஞ்சுது.''

''கமல்...''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டாளாம். என்னைப் பிடிக்கவில்லையாம்.''

''நிஜமாய். அப்படிச் சொன்னாளா?''

''ஆமாம்.''

''பின்னே, நீ காரணம் கேட்கவில்லையா?''

''இன்னும் காரணம் எதற்கு? என்னவென்று கேட்பேன்? எந்த முகத்தை வைத்துக்கொண்டு இன்னும் அங்கே நிற்பேன்? இந்த வார்த்தைகளைக் கேட்டதும் என் தலை கிர்ரென்று சுற்றிற்று. நீ முதலிலிருந்தே என்னை எச்சரித்துக் கொண்டு வந்தாய். உன் வார்த்தைகளை நான் லட்சியம் பண்ணாமல் போய் விட்டேன். அதற்குத் தகுந்த தண்டனை கிடைத்துவிட்டது. இப்பொழுது அவள் பழைய ரேகா இல்லையே? விஸ்வநாதனின் மகளாச்சே! லட்சக்கணக்கான சொத்துக்களுக்கு வாரிசு. அப்பொழுது என்றால் இந்த கமலனைத் தவிர வேறு யாரையும் பார்த்ததில்லை. இப்பொழுது நிறைய பேர் பரிச்சியம் ஆகியிருப்பார்கள். என்னோடு என்ன வேலை? சீ, சீ, இந்தப் பெண்களையே நம்பக் கூடாது. இவங்கள்ளாம் நம்பிக்கை துரோகிகள்.''

''கமல்! நீ தப்பாய் புரிந்து கொண்டுவிட்டாய்...'' விமலன் ஏதோ சொல்லப் போனான். ஆனால் சொல்ல முடியாமல் நிறுத்திக் கொண்டான். கமலன் தன் தோரணையில்தான் சொல்லிக் கொண்டே போனான்— ''ஆனால் இதனால் உலகமே அஸ்தமித்துவிடுமா என்ன? ரேகாவை விட்டால் வேறு பெண்களே கிடைக்கமாட்டார்களா என்ன? பார்த்துக் கொண்டேயிரு, ஒரு வாரத்திற்குள் ரேகாவைவிட எல்லா விதத்திலும் சிறந்த பெண்ணை கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் போனால் என் பெயர் கமலனே இல்லை. என்னால் எதை வேண்டுமானாலும் சகித்துக்கொள்ள முடியும். ஆனால் சிநேகத்தில் நம்பிக்கை துரோகத்தை மட்டும் சகித்துக்கொள்ள முடியாது. அப்படிப்பட்டவங்களை விட்டு விலகி வெகு தூரத்திற்குப் போய் விடுவேன்''

''கமல்! நீ தப்பாய் புரிந்து கொண்டுவிட்டாய். நான் இதோ போய் ரேகாவைக் கூட்டிக் கொண்டு வரேன். ரேகா ஏதோ தவறுதலாய் பேசியிருப்பாள்.

அதை சரிபண்ணி வைக்கிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. நான் இதோ வரேன். இரு, எங்கேயும் போய் விடாதே.''

விமலன் போக முயன்றான்.

''சாரி விமல்! உன் பேச்சைக் கேட்க முடியாததற்கு மன்னித்துவிடு. நான் போகிறேன். நீ திரும்பி வரும் போது நான் ஸ்டேஷனில் இருப்பேன்'' கமலன் சொல்லிக்கொண்டே பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டான்.

விமலன் இப்பொழுதாவது மனதைத் திறந்து, 'கமல்! இதுதான்டா நடந்தது' என்று உண்மை விஷயத்தைச் சொல்லியிருந்தால் அவனால் தாங்கியிருக்க முடியும். குறைந்தபட்சம் விமலனுக்காகவாவது ரேகாவை மன்னித்திருப்பான். ஆனால் விமலன் இந்த விஷயத்தை மட்டும் வெளிப்படுத்தவில்லை. கமலனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது.

விமலன் கூட கமலனோடு கீழே வந்தான்.

''ஒரு நிமிஷம் இரு. போன் பண்ணி ரேகாவோடு பேசுகிறேன்'' என்றான், ஆபீசு அறையை நோக்கிப் போக முயன்று.

கமலன் அவன் கையைப் பிடித்து தடுத்து விட்டான்.

''ஊஹூம். வேண்டாம் விமல்! உன்னால் முடிந்தால் என்னோடு ஸ்டேஷனுக்கு வா.''

விமலன் வேறு வழியில்லாமல் ஸ்டேஷனுக்கு வந்து தீரவேண்டியிருந்தது. வழியெல்லாம் அவன் குறைந்த பட்சம் இன்றிரவாவது இருந்து விட்டு நாளைக்குப் போய்க்கொள் என்று கெஞ்சிக் கொண்டேயிருந்தான். கமலன் கேட்டுக் கொள்ளவில்லை. யோசித்துப்

பார்க்கப் பார்க்க அவனுக்கு விமலன் மேல் இருந்த கோபம் பறந்து போய்விட்டது. இதில் விமலனின் தப்பு எதுவும் இல்லை. அவனும் விமலனும் சிறு வயதிலிருந்தே அப்படித்தான். இருவரிடையேயும் எப்பொழுதுமே மனம்விட்டுப் பேசிக்கொள்ளும் பழக்கமே இல்லை. அதனால் விமலன் அவனிடம் இந்த விஷயத்தைச் சொல்லாமல் போனது ஆச்சரியம் இல்லை. ஆனால் ரேகா? ரேகாவின் இந்த மூடு மந்திரத்தைதான் அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கடைசியில் ரேகா கூட எல்லாப் பெண்களையும் போன்ற சாதாரணப் பெண்தானா? ரயில் பிளாட்பாரத்தில் வந்து நின்றது. அது புறப்படப்போன பொழுது கமலன் ஏறிக் கொண்டான்.

விமலன் கொஞ்சம் கோபமாகவே சொன்னான்.

"நான் சொன்ன விஷயங்களைக் காதில் போட்டுக் கொள்ளாமலேயே போகிறாயோனோ? போ! நாளைக் காலையில் உன் ரயில் அங்கே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேருவதற்குள்ளாகவே ரேகா அங்கே வந்து இருக்கும் படியாய் பண்ணாவிட்டால் பார். காலை பிளேனில் ரேகாவை அனுப்புகிறேன். நடந்தது எதுவாயிருந்தாலும் சரி, உன்னை வருத்தப்படுத்தியதற்கு ரேகா உன்னிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு தீரவேண்டியதுதான்"

கமலனுக்கு அவன் மனதைப் புண்படுத்தும்படியாய் வெடுக்கென்று ஏதாவது பேசிவிடவேண்டும் போலி ருந்தது ஆனால் எவ்வளவு முயன்ற போதிலும் அவனுக்கு வாயிலிருந்து வார்த்தைகள் பெயரவில்லை.

ரயில் நகர்ந்த பிறகு ஞாபகப்படுத்தினான் கமலன்.

"விமல்! லலிதா வந்துவிட்டுப் போனால் உன்னிடம் தரச்சொல்லி ஒரு கவரைத் தந்தாள். உன்

மேஜை மேல் வைத்தேன். வீட்டிற்குப் போனதும் பார்.''

அந்த இரைச்சலில், அந்தக் கத்தல் சப்தத்தில் கமலனின் வார்த்தைகள் முழுவதுமாய் விமலனின் காதில் விழவில்லை. 'லலிதா வந்தாள்' என்ற வார்த்தைகள் செவியில் விழுந்தபோதிலும் அந்த விஷயததை அவன் மனது அதிகமாய் பொருட்படுத்தவில்லை. திரும்பினான் வீட்டை நோக்கி.

27

ரேகா தந்தையின் அறையில் உட்கார்ந்து மலர்ந்த முகத்துடன் அவர் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

விஸ்வநாதன் மறுநாள் ஊருக்குப் போகவிருந்தார். பிரயாணத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்து முடிந்து விட்டன. இரவு படுக்கப் போவதற்கு முன்னால் மருந்து கொடுப்பதற்காக வந்த ரேகாவை அவர் கையைப் பிடித்துக்கொண்டு, ''ஒரு நிமிஷம் இப்படி உட்காரும்மா. உன்னிடம் சில பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டுப் போகணும்'' என்றார்.

ரேகா அவருக்கெதிரே வந்து உட்கார்ந்தாள். அவர் சுருக்கமாய் தனக்கு இருந்த சொத்து விவரங்களைச் சொல்லத் தொடங்கினார்.

''இந்தப் பொறுப்புக்கள் எல்லாம் எனக்கு வேண்டாம். முதலில் லலிதாவை வீட்டிற்குக் கூப்பிடுங்கள். நீங்கள் போகும் முன்னால் லலிதா இந்த வீட்டிற்கு வர வேண்டியது அவசியம்'' என்றாள் ரேகா. கொஞ்ச நேரம் நிசப்தமாய் இருந்த அவர் கடைசியில் இவ்வாறு சொன்னார்.

''ரேகா! லலிதாவை எந்த விஷயத்திலும் பலவந்தப் படுத்த எனக்குப் பிடிக்கவில்லை. அவள் தானாகவே இந்த வீட்டிற்கு வந்தால் சரி. இல்லாவிட்டால் வரச் சொல்லி பலவந்தம் செய்யமாட்டேன். நான் போன பிறகு வந்தால் 'அப்பா உனக்கு எப்படிப் பிடிக்குமோ அப்படி நடந்து கொள்ளச் சொன்னார். உன் விருப்பத் திற்கு மாறாய் எதுவுமே நடக்காது என்று சொல்லச் சொன்னார் என்று சொல்'' என்றார்.

இதைச் சொன்னதும் அவர் பெருமூச்சு விட்டதை ரேகா கவனிக்காமல் போகவில்லை.

''ரேகா! நான் போவதற்கு முன்னால் இன்னொரு விஷயம்கூட சொல்லணும். உங்கம்மாவுக்கும் உங்க ளுக்கும் நான்...''

''இப்பொழுது நடந்து போனதெல்லாம் எதுக்கு? நடந்தது நடந்து போய்விட்டது. நாம்ப திரும்பி ஒன்று சேர்ந்து விட்டோம்'' என்றாள் ரேகா சட்டென்று.

இதற்கு முன்பே அவர் இதே போல ஏதோ முக்கிய மான விஷயம் என்று தொடங்கியபோது ரேகா பேச்சை மாற்றிவிட்டாள்.

எறும்பிற்குகூட அபகாரம் செய்யாத இவர், தமக்கு வேண்டுமென்றே அநியாயம் செய்யவில்லை என்றும் ஏதோ வயது கோளாறினால் அவசரப்பட்டு செய்த ஒரு சின்ன தப்பின் பலனாய் வாழ்நாளெல்லாம் தண்ட னையை அனுபவித்துவிட்டார் என்றும் உணர்ந்து கொண்டிருந்தாள். ஆனால் அந்த தப்பு எப்படி நிகழ்ந்தது என்று மட்டும் ரேகாவுக்கு தெரியாது.

இன்றைக்கு விஸ்வநாதன் பேசாமல் இல்லை. அவர் பலவந்தமாய் அவளை உட்கார வைத்து சொல்ல தொடங்கினார்.

''என் மனதிலுள்ள இந்த விஷயத்தை சொல்லாமல் போனால் எனக்கு இங்கிருந்து போனாலும் நிம்மதியாய் இருக்காது.

''நான் செய்தது தப்பில்லை என்று இப்பொழுதும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உங்கம்மாவும் நானும் மாமன் மகள்—அத்தைப்பிள்ளை! எனக்கு விவரம் தெரிந்ததிலிருந்தே உங்கம்மாவை என் மனைவி என்று சொல்வார்கள் எல்லோரும். நானும் அவ்வாறே நினைத்துக்கொண்டிருந்தேன். எல்லோரும் சேர்ந்து வசித்து வந்தோம். நான் படித்து முடிப்பதற்குள் எனக்கு திருமணம் பண்ணி வைத்துவிட்டார்கள். நான் பி. ஏ. படித்துக்கொண்டிருந்த பொழுது நீ இரண்டு வயது குழந்தை. எனக்கு வாழ்க்கை சந்தோஷமாய் இருந்தது. நான் லீவில் ஊருக்கு வரும்போது உன்னையும் உங்க அம்மாவையும் பக்கத்து டவுனுக்கு அழைத்துக்கொண்டு போய் சினிமா பார்ப்பது வழக்கம். என் விருப்பம் சட்டம் படித்து லாயராக வேண்டும் என்பதுதான்.

''பி. ஏ. கடைசி வருஷத்தில் இருந்த பொழுது லலிதாவின் தாயோடு பரிச்சியம் ஆயிற்று. அந்த பரிச்சியம் என் ஒருத்தனோடு மட்டுமேயில்லை, என்னை போல பத்து பேர்களுடன் பரிச்சியம் பண்ணிக் கொண்டிருந்தாள் அவள்.

''அவள் தாய் வங்காளப் பெண். தந்தை தமிழர். எல்லோரும் அவள் தாய் தந்தையரை பற்றி வினோதமாய் கதை கதையாய் பேசிக்கொள்வார்கள்.

''அவள் தந்தை எங்களுக்கு லெக்சரர். அடிக்கடி தன் வீட்டிற்கு தேநீருக்கு அழைத்துக்கொண்டிருப்பார் அவர். லலிதாவின் தாய் எங்கள் எல்லோரோடும் மிக சுவாதீனமாய் சிநேகமாய் இருப்பாள். எனக்கு திருமணம்

ஆகிவிட்டதென்றும் ஒரு குழந்தைகூட இருக்கிறது என்றும், நான் அவர்களிடம் எதையும் மறைக்கவில்லை. 'இந்த சின்ன வயதில் அதற்குள் கல்யாணமாகி குழந்தை வேறா?' என்று அவள் தாய் ஆச்சரியப்படுவாள்!

''லலிதாவின் தாய் அடிக்கடி எங்கள் அறைக்கு வந்து போய்க்கொண்டிருப்பாள். என் அறையில் என்னோடு இன்னொரு மாணவனும்கூட இருந்தான். அவன் பெயர் ஆனந்தன். ஆனந்தனுக்கு அவள் மீது விருப்பம் ஏற்பட்டு போய்விட்டதாய் அடிக்கடி சொல்லி கொண்டிருப்பான்.

''லலிதாவின் தாய் எங்கள் அறைக்கு வருவது அதிக மாயிற்று. ஆனந்தன் அவளுக்கு ஏதேதோ புத்தகங் களை தந்துகொண்டிருப்பான். நான் லீவுக்கு ஊருக்கு வந்துவிடுவேன். ஆனந்தன் லலிதாவின் தாயோடு பரிச்சியமான பிறகு லீவிற்கு ஊருக்கு போகாமல் அங்கேயே இருக்க தொடங்கினான்.

''அந்த தடவை லீவு முடிந்த பிறகு நான் திரும்பி வந்தேன். ஆனந்தன் இல்லை. ஊருக்கு போயிருந்தான். காலேஜ் திறந்த பிறகுகூட அவன் ஊரிலிருந்து வரவில்லை. லலிதாவின் தாய் இரண்டு மூன்று தடவை அந்த அறைக்கு வந்து ஆனந்தன் வந்துவிட்டானா என்று கேட்டுவிட்டு போனாள்.

''அவள் ஏதோ பீதியுடன் இருந்ததை நான் கவனித் தேன். ஆனந்தன் வரவில்லை. ஒரு வாரம் கழித்து ஆனந்தனிடமிருந்து உடம்பு சரியில்லை என்றும் இன்னும் சில நாட்கள் வர முடியாது என்றும் கடிதம் வந்தது. அடுத்த வாரத்தில் ஆனந்தன் இறந்துவிட்ட தாய் டெலிகிராம் வந்தது. ஆனந்தன் போய் விட்ட தாய் தெரிந்த பிறகு லலிதாவின் தாய் ஓரிரண்டு தடவை என் அறைக்கு வந்தாள். அவள் தோரணையைப் பார்த்து

பொழுது ஆனந்தனுடன் அவள் பரிச்சியம் கொஞ்சம் விபரீதத்திற்கு போய்விட்டதாய் தெரிந்தது. 'நான் நடந்ததென்னவோ நடந்துவிட்டது, ஆனந்தனை மறந்துவிடு' என்று உபதேசம் பண்ணுவேன்.

''ஒரு முறை அழத்தொடங்கிவிட்டாள். எனக்கு ஏன் என்று புரியவில்லை. கலங்கி போய்விட்டேன். அவளிடம் எனக்கு அவ்வளவாய் நெருக்கம் இல்லை. ஆனாலும் உரிமை எடுத்துகொண்டு காரணத்தை சொல்லும்படி கேட்டேன்.

''அவள் அழுதுகொண்டே தான் தாயாக போவ தாயும், ஆனந்தன் அதற்கு தந்தை என்றும் சொன்னாள். நான் விக்கித்து போய்விட்டேன்.

''தாய் தந்தையருக்கு தெரியுமா?'' என்றேன்.

பயத்தால் சொல்லவில்லை என்றும், தனக்கு ஏதாவது உபாயம் சொல்ல சொல்லியும், தன் தாய் தந்தையருக்கு தெரிந்தால் தன்னை கொன்று போட்டு விடுவார்கள் என்றும் அழத் தொடங்கினாள்.

நான் 'தாய் தந்தையருக்குச் சொல்லிவிடுவதுதான் நல்லது' என்றேன். அவள் மறுநாள் திரும்பி வந்தாள்.

''சொன்னாயா?'' என்று கேட்டேன்

சொல்லவில்லை என்றும், எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை என்றும் சொன்னாள். இனி இதை மூடி மறைக்க முடியாது என்றும், நாலு பேருக்குத் தெரிந்து விடும் என்றும், இந்த அவமானத்தைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாதென்றும், தனக்கு ஏதாவது விஷத்தைக் கொடுக்கச் சொல்லியும் ஒரு நாள் என் காலில் விழுந்து அழுதுகொண்டே சொன்னாள்.

நான் கலங்கிப் போனேன். அவள் வீட்டிற்கு நான் வந்து அவள் பெற்றோரிடம் சொல்வதாய் சொன்னேன்.

அவள் விரும்பவில்லை. மறுபடியும் அடுத்த நாள் வந்தாள். அதற்குள் அக்கம்பக்கத்தார் லலிதாவின் தாய் என் அறைக்கு வருவதைப் பற்றி ஏதேதோ பேசத் தொடங்கிவிட்டார்கள்.

லலிதாவின் தாய் அன்றைக்கு வந்ததும் தனக்கு ஒரு உதவி பண்ணவேண்டும் என்றும் நான் ஒத்துக்கொள்ளாமல் போனால் எதிலாவது விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாகவும் சொன்னாள்.

நான் 'அதென்ன உதவி' என்று கேட்டேன். அவள் தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்படியாகச் சொன்னாள். நான் மணமானவன். ஒரு குழந்தை கூட இருக்கிறது என்று சொன்னேன். 'பரவாயில்லை' என்றாள். என் மகளைத் தன் மகளாய் பாவிப்பதாய் சொன்னாள். தன் மேல் இரக்கங்காட்டச் சொல்லியும் தனக்கு உயிர்ப் பிச்சை போடும்படியும் அழுது கொண்டே சொன்னாள். அவளைப் பார்த்தால் எனக்குப் பாவமாய் இருந்தது. கடைசியில் லலிதாவின் தாய்க்கு உதவி பண்ண தீர்மானித்துக் கொண்டேன். இந்தக் கல்யாணம் ஆகும் வரைக்குந்தான் என் பொறுப்பு. அப்புறமாய் அவள் எப்படியாவது சண்டை போட்டுக் கொண்டு என்னிடமிருந்து பிரிந்து போய்விட வேண்டும். அவள் பிரிந்து போகாவிட்டால் நானே பிரிந்து போய் விடுவேன், நம்மிருவருக்குமிடையே எந்த விதமான சம்பந்தமும் இருக்கக்கூடாது என்றேன். அவள் எல்லாவற்றிற்கும் ஒப்புக் கொண்டாள்.

நான் ஊருக்குத் திரும்பி வந்தேன். சாதாரணமாய் சொன்னால் உங்கம்மா ஒப்புக்கொள்ள மாட்டாள் என்று தெரியும். அதனால் லலிதாவின் தாயின் நிலைமையைப் பற்றிச் சொல்லி விட்டு அவளுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்குத் தந்தை நான்தான் என்று பொய் சொன்னேன். உங்கம்மாவின் முகம் களை

யிழந்து விட்டது. அப்பொழுதுதான் சேகர் பிறந்திருந் தான்.

லலிதாவின் தாய் கர்ப்பமுற்றது என் குற்றந்தான் என்று நம்பிய உன் தாய், உடனே லலிதாவின் தாயோடு என் விவாகத்திற்கு அனுமதி தந்தாள். இந்த விஷயம் வீட்டில் யாருக்கும் தெரியாது. நான் உங்கம்மாவுக்கு எந்த பயமும் இல்லை என்று உறுதியளித்தேன். லலிதா வின்தாய்க்கும் எனக்கும் விவாகம் விமரிசையாய் நடந்து விட்டது. திருமணத்தின்பொழுது எல்லோருக்கும் லலிதா கர்ப்பமாகியிருந்த விஷயம் தெரிந்துவிட்டது. நான்தான் என்று எண்ணிக் கொண்டார்கள். சிலர் நான் பணத்திற் காகப் போட்ட உபாயம் என்றார்கள். வேறு சிலர் லலிதாவின் தாய்க்கு ஆனந்தனோடு சம்பந்தம் இருந்த போதிலும் பணத்திற்கு ஆசைப்பட்டு இந்தக் கல்யாணத் திற்கு ஒப்புக்கொண்டு மனைவிக்கு அநியாயம் செய்து விட்டேன் என்றார்கள். என் இந்த திருமணத்தைப் பற்றித் தெரிந்ததுமே உன் மாமா பெரிய மனிதர்கள் சிலரைக் கூட்டி திருமணப்பந்தலில் நின்று பெரிய ரகளை பண்ணிவிட்டார். லலிதாவின் தாத்தா வந்தவர் களைக் கண்டபடி திட்டித் தீர்த்தார். நான் காயத்ரிக்குத் தெரியப்படுத்திவிட்டு அவள் அனுமதியைப் பெற்றுக் கொண்டுதான் இத்திருமணம் செய்து கொண்டேன் என்று காகிதத்தைக் காட்டினேன்.

உன் மாமா முதலியவர்கள் போய்விட்டார்கள். லலிதாவின் தாத்தா எங்களை ஒரு மாத காலம் டில்லி, ஆக்ரா முதலிய இடங்களுக்கெல்லாம் போய்விட்டு வந்தால் இந்தச் சூழ்நிலையெல்லாம் திருந்திவிடும் என்றார்.

நான் ஊருக்கு வந்தேன். உங்கம்மா என் முகத்தைப் பார்க்கவில்லை. உன் மாமாவும் மாமியும் என்னைக்

கண்டபடி திட்டினார்கள். என்னால் அந்த வார்த்தை களைக் கேட்க முடியாமல் திரும்பி வந்துவிட்டேன்.

நான் பட்டிணத்திற்குத் திரும்பி வந்ததுமே உங்கம் மாவுக்குக் கடிதம் எழுதினேன். அதில் என் மீது நம்பிக்கை வை என்றும், உன்னையும் குழந்தைகளை யும் விட்டு தொலைவிற்குப் போய் விடமாட்டேன் என்றும் எழுதினேன். கூடிய சீக்கிரத்தில் வேறு வீடு பார்த்துக் கொண்டு உன்னையும் குழந்தைகளையும் இங்கே அழைத்து வந்து விடுகிறேன் என்று எழுதி னேன். ஆனால் லலிதாவின் தாய் அக்கடிதத்தைக் கிழித்துப் போட்டு விட்டு போஸ்ட் பண்ணிவிட்டதாய் சொல்லி விட்டாள். இந்த விஷயம் எனக்கு வெகுநாட் களுக்குப் பிறகுதான் தெரிந்தது. நானும் லலிதாவின் தாயும் ஆக்ராவுக்கு வந்தோம். அதற்குள் என் மாமனார் மாமியாரும் கூட வந்து சேர்ந்து கொண்டார்கள். எல்லோரும் அங்கிருந்து கல்கத்தா போனோம். அங்கு மிங்கும் சுற்றிக் கொண்டிருந்தபொழுதே இரண்டு மாதங்கள் ஓடி மறைந்து விட்டன.

ஊருக்கு போக முயன்றபொழுது மாமனார் ஏதோ அவசர வேலையாய் சிம்லாவுக்குப் போகச் சொன்னார். அங்கே அந்த வியாபார விஷயங்கள் முடிவடைவதற்கு ஒரு மாதகாலம் ஆகிவிட்டது. எப்பொழுது நான் வீட் டிற்குப் புறப்பட வேண்டும் என்றெண்ணினாலும் ஏதாவது ஒரு வேலை குறுக்கிட்டு தடுத்து கொண்டே யிருந்தது. கடைசியில் ஒருவாறு புறப்பட்டேன்.

நான் கிராமத்திற்கு வந்த பொழுது வீட்டில் யாரும் இல்லை. காலி பண்ணி விட்டு போய் விட்டதாய் அக்கம்பக்கத்தார்சொன்னார்கள். அந்த ஊரில் முகத்தை காட்ட முடியாமல்—நாலுபேர் நாலு விதமாய் பேசிய தால் தங்கையை அழைத்து கொண்டு உன் மாமா வேறு எங்கேயோ போய் விட்டார் என்று சொன்னார்கள்.

அவர்கள் சொன்னதை வைத்து கொண்டு நான் ஊரெல் லாம் சுற்றினேன். எங்கேயுமே அவர்கள் ஜாடையைக் காணோம்.

சரியாய் அதே சமயத்தில் லலிதாவின் தாத்தா இறந்து விட்டார். லலிதாவின் தாய் தன் தாயோடு சேர்ந்து கல்கத்தாவிற்குப் போய் விட்டாள். அங்கே அவர்களுக்குச் சொத்துகள் இருந்தன. நான் அவர் களோடு போவதற்கு விரும்பவில்லை. ஆனால் லலிதா வின் தாய் வந்து ரகளை பண்ணினாள். வந்துதான் தீரவேண்டும் என்று பிடிவாதமாய் அழைத்துக்கொண்டு போனாள்.

லலிதாவின் தாய்க்கு மகள் பிறந்தாள். லலிதா என்று பெயர் வைத்தார்கள். நான் அங்கே போய் சிரத்தையாய் பார்த்துக் கொண்டதால் வியாபாரத்தில் லாபம் வந்தன. ஆனால் நீங்கள் இருந்த இடம் மட்டும் தெரியவே யில்லை.

''அப்படீன்னால் லலிதா...'' வியப்போடு கேட் டான் ரேகா.

''என் ரத்தத்தைப் பகிர்ந்து கொண்டு பிறக்க வில்லைதான். ஆனாலும் லலிதாவை நான் என்றுமே அப்படிப் பார்க்கவில்லை. ஆனால் லலிதாவின் தாய் நான் லலிதாவைப் பெற்ற மகளாய் பார்ப்பதில்லை என்று என்னை நிந்தித்துக் கொண்டேயிருப்பாள். ஆனால் நாளடைவில் நீங்கள் இனி தென்படமாட்டீர் கள் என்றும் உங்களை நிரந்தரமாய் இழந்து விட்டேன் என்றும் துக்கப்பட்டுக் கொண்டிருந்த அந்த நாட்களில் நான் லலிதாவின் தாயோடு ராசியாகி விட்டேன்.

எங்களிருவருக்குமிடையே உங்கள் விஷயம் எப்பொழுதும் குறுக்குச் சுவராய் இருந்து கொண்டிருக் கும். அவள் தாய் லலிதாவை எனக்கு எதிர்ப்பதமாய்

வளர்த்து வந்து என் மீது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வாள். நாங்களிருவரும் உடலால் ஒன்றானாலும் உள்ளத்தால் எங்களுக்கு ஒற்றுமை ஏற்பட்டதே இல்லை. பிறகு ரஞ்சிதா பிறந்தாள். ரஞ்சிதா பிறந்த பிறகு நான் முற்றிலும் மாறியபோதிலும் லலிதாவின் தாய் மாறவில்லை. அதுவும் ரஞ்சிதா ஊமையாய் இருந்ததால் இன்னும் அதிருப்தியாய் இருந்து வந்தாள். இதெல்லாம் என் கையாலாகாதத்தனந்தான் என்பது போல பேசுவாள். ஆனால் லலிதாவுக்கு இந்த விஷயம் தெரியாது. முன்பு நம்மிருவரின் பந்தத்தைப் பற்றித் தவறாய்ப் புரிந்துகொண்டபொழுது விமலனிடம் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது உன்னிடம் சொல்கிறேன்''—கடந்தகால நினைவுகள் தன் கண்முன் சுழன்றாடிக்கொண்டிருக்க, அவர் சோர்வுடன் நாற்காலியில் சாய்ந்துகொண்டார்.

ரேகா மெதுவாய் அவர் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டாள்.

அவர் கேட்டார். ''ரேகா! இப்பொழுது சொல்! உன் தந்தை மோசம் பண்ணிவிட்டார் என்பாயா? அவர் செய்த அநியாயத்தால் உங்கள் வாழ்க்கை பலியாகி விட்டது என்பாயா?''

ரேகாவின் கண்களில் கண்ணீர் நிரம்பிற்று.

''இல்லை. உங்களைப் போன்ற தந்தைக்கு மகளாய் பிறந்ததற்குப் பெருமைப்படுகிறேன்.''

28

விமலன் ஸ்டேஷனிலிருந்து நேராய் விஸ்வநாதன் வீட்டிற்கு வந்தான். கீழே விளக்குகள் எரியவில்லை. மாடியில் ரஞ்சிதாவின் அறையில் இன்னும் விளக்கு

எரிந்துகொண்டிருந்தது. விமலன் கைக்கடியாரத்தைப் பார்த்துக்கொண்டான். நேரம் அப்படி ஒன்றும் அதிக மாகிவிடவில்லை. கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான். அச்சூழ்நிலையெல்லாம் நிசப்தமாயிருந்தது. ஒரு காலத்தில் இந்த வீடு லலிதாவின் சிநேகிதிகளாலும், குறும்பும் ரகளைகளுடனும், சிரிப்புக்களுடனும் இரவு பன்னிரெண்டு மணிவரை கலகலப்பாய் இருக்கும். இப் பொழுதோ சப்தமே இல்லாமலிருந்தது.

விமலன் உள்ளே வந்து கதவைத் தட்டினான். முன் ஹாலில் விளக்கு எரிந்தது. கதவு திறந்து கொண்டது. வாசலில் ரேகா நின்றுகொண்டிருந்தாள்— விமலனைப் பார்த்ததுமே ரேகா வாயடைத்துப்போய் அப்படியே நின்றுவிட்டாள். இரண்டு மணி நேரமாய் அவள் யாரைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தாளோ, யார் மூலமாய் தன் வாழ்க்கை முடிவில்லாத சூனியமாய் மாறிப்போய்விட்டது என்று வருத்தப்பட்டுக்கொண் டிருந்தாளோ, மனம் இல்லாத கல் என்று குமுறிக்கொண் டிருந்தாளோ அவனே இப்பொழுது கண்ணெதிரே வந்து நிற்கிறான். அவளுக்கு முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே போய்விட வேண்டும் போலிருந்தது. ஆனால் ஏனோ அவளால் அப்படி பண்ண முடியவில்லை.

''அவர் படுத்துக்கொண்டுவிட்டாரா?'' உள்ளே வரும் உத்தேசமே இல்லாதவனைப் போல வெளியே இருந்துகொண்டே கேட்டான்.

ரேகா 'ஆம்' என்று தலையாட்டினாள்.

''ரஞ்சிதா?''

''தூங்கிவிட்டாள்.''

விமலன் ஒரு விநாடி தயங்கினான். பிறகு உறுதி யான குரலில் கேட்டான்.

''உன்னோடு ஒரு விஷயம் பேசணும். வேலை இருக்கு. இப்படி வெளியே வருகிறாயா?''

ரேகா சரேலென்று நிமிர்ந்தாள். ''ஊஹூம். வர மாட்டேன்''—என்று மறுத்துத் தலையசைத்தாள்.

''ஒரு ஐந்து நிமிஷம் போதும்''—அவன் குரலில் கேட்ட கெஞ்சல் அவள் காதில் விழவில்லை.

''ஊஹூம். நான் வரமாட்டேன். எனக்குத் தூக்கம் வருகிறது.'' அலட்சியமாய் சொன்ன ரேகா திரும்பி உள்ளே போக முயன்றாள். விமலன் சட்டென்று அவள் கையைப் பிடித்து நிறுத்தினான்.

''ஒரு ஐந்து நிமிஷம். அதற்குள் ஒன்றும் மிஞ்சிப் போய் விடாது. வா என்னோடு''—என்று ரேகாவின் பதிலுக்காகக் காத்திராமல் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே புல்வெளிக்கு அழைத்துவந்து அங்கிருந்த பெஞ்சில் உட்கார வைத்தான்.

ரேகா கோபமாய் பார்த்தாள். அவனிடமிருந்து விடுபடுவதற்காகத் திமிறினாள். ஆனால் அவன் அவளை விடாமல் தோளை அழுத்திப் பிடித்துக் கொண்டான். ரேகா வேறு வழியில்லாமல் உட்கார்ந்து கொண்டாள்.

''கமலன் ஊருக்குப் போய்விட்டான், தெரியுமா?'' ஒளிவுமறைவில்லாமல் கேட்டுவிட்டான் விமலன்.

ரேகா திடுக்கிட்டவளாய் பார்த்தாள். அவள் முகம் களையிழந்ததை அந்த மங்கலான வெளிச்சத்தில் கண்டான் விமலன்.

''ஏன் அப்படி திடீரென்று போய்விட்டான்?'' கேட்டான்.

''என்னவோ எனக்கென்ன தெரியும்?'' என்றாள் அவள் விறைப்பாய். ரேகாவின் மனம் பற்றியெரிந்தது.

கமலன் போய்விட்டானா? அவளிடம் ஒரு வார்த்தை கூட சொல்லிக் கொள்ளாமலா? அப்படியென்றால் அவள் மீது கோபம் வந்துவிட்டது என்றுதானே அர்த்தம்? இதற்கெல்லாம் காரணமான விமலன் அவளை உலுக்கி எடுத்துக் கொண்டிருப்பது எவ்வளவு வினோதம்!

''உங்களிருவருக்குமிடையே ஏதாவது சச்சரவு வந்ததா ரேகா? அவன் மிக வருத்தத்துடன் போனான்.''

''அவனைப் பண்ணிக்கொள்ள எனக்குப் பிடிக்க வில்லை என்று சொன்னேன்'' என்றாள் ரேகா சோர்ந்துபோய்.

''அதான், ஏன் என்று கேட்கிறேன்?''

ரேகா பதில் பேசவில்லை.

''சொல்லு ரேகா! அவனை ஏன் மறுத்தாய்? காரணம் என்ன?''

''அது என் அந்தரங்க விஷயம். அதைப்பற்றி யாருக்கும் சொல்லிக் கொள்ளவேண்டிய தேவை இல்லை எனக்கு.''

''ரேகா, நான் உன்னை சால்ஜாப்பு கேட்கவில்லை. கமலனை நீ மறுத்திருந்தால் அந்த முடிவு தவறானது என்று எடுத்துச் சொல்வதற்காகத்தான் வந்தேன். கமலனை நீ ஏன் மறுத்தாய் என்று தெரிந்துகொள்ள வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. நீங்களிரு வரும் அபூர்வ சிநேகிதர்கள். அதற்குள் உங்களுக்குள் இந்த அபிப்பிராய பேதம் எப்படி வந்தது? நீ அவனை ஏன் மறுக்கிறாய்?''

ரேகா எழுந்து நின்றாள், ''நானும் நேராய் கேட் கிறேன். நீங்கள் பதில் சொல்லுங்கள் முதலில். ஒருமுறை திருமணம் ஆன பெண், அதை மறைத்து வைத்துக்

கொண்டு, இரண்டாம் கல்யாணத்திற்குச் சம்மதிப் பாளா? அதுவும் சிநேகிதர் என்று பாவிக்கும் ஒருவரை? அது மோசடி இல்லையா? குற்றமாகாதா?''

கொஞ்ச நேரம் நிசப்தம் ஏற்பட்டது

விமலன் சலனமில்லாமல் அப்படியே ரேகாவைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

ரேகா பிசிறில்லாத குரலில் சொன்னாள்.

''சதா தம்பியின் சேமத்திற்காகவே தவித்துப் போகும் பெரிய மனிதரான உங்களுக்கு இந்தச் சின்ன விஷயம் கூட மூளையில் ஏன் ஏறவில்லை?''

''ரேகா! அந்தக் கல்யாணம் உன் விருப்பத்தின் பேரில் நடந்தது இல்லை. அதில் உன் குற்றம் எதுவும் இல்லை. உன் மீது நடந்த அக்கிரமத்திற்கு நீ எப்படிப் பொறுப்பாளி ஆவாய்? கமலன், நீ பண்ணாத குற்றத் திற்கு உன்னை எப்படி நிந்திக்க முடியும்? மொதல்ல இந்த விஷயம் வெளியே தெரிய வேண்டிய அவசியந் தான் என்ன?''

''ஒருக்கால் வெளியே தெரியவந்து கமலனுக்குத் தெரிந்தால்?''

''தெரியாது. ஒருவேளை தெரிந்தாலும் இதில் நல்லது கெட்டத்தைப் பற்றி யோசிக்கக்கூடிய மனத்தத்துவம் அவனுக்கு உண்டு. உண்மையைச் சொல்லு. இதொன்றுதானா உன் ஆட்சேபணை? கடந்த காலத்தில் நடந்த இந்த ராட்சசக்காரியம் அவனுக்குத் தெரிந்துவிடப் போகிறதே என்பதுதானா உன் பயம்?''

ரேகா பதில் பேசவில்லை. தான் குறிபார்த்து வீசி யெறிய வேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்த அம்பு வேலை பண்ணவில்லை. அது விமலனைத் தாக்க

வில்லை. ஏமாற்றத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

விமலன் நயமாய் சொல்வது போல சொன்னான்.

''அதுதான் உன் பயமாய் இருந்தால் நீ கவலை யில்லாமல் இருக்கலாம். அதற்கு நான் உத்திரவாதம் தருவேன். அவனிடம் இதில் உன் தப்பு எதுவும் இல்லை என்றும், இதெல்லாம் என் தப்புதான் என்றும் நயமாய் சொல்லிவிடுவேன். அவன் கண்டிப்பாய் புரிந்து கொள்வான்.''

''அப்படீன்னால் இந்தச் சம்பவம் கேவலம் உங்கள் தவறுதான் என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?''

விமலன் ரேகாவை ஒரு வினாடி கண் கொட்டாமல் பார்த்தான். அவரவர்களின் பேச்சை அவரவர்களின் தலை மீதே கட்டிவிடக்கூடிய சாமர்த்தியம் ரேகாவைக் காட்டிலும் வேறு யாருக்குமே இருக்காது என்று தோன்றிற்று. ஆனாலும் சரி, இன்றைக்குத் தன் பேச்சி லுள்ள மர்மங்கள் எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு உண்மையை அவளுக்கு முன்னால் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று. தான் செய்த தப்பிற்காக கமலனை தண்டிக்கக்கூடாது என்று தோன்றிற்று அதனால் சாந்தமாய் சொன்னான் அவன்.

''நிஜந்தான் ரேகா! தப்புதான்! இல்லை என்று யாரால் மறுக்க முடியும்? என் இந்த தப்பு அன்றைக்கு கமலன் சாந்திநிகேதனுக்குப் போவதற்கு முன்னால் தான் எனக்குத் தெரிந்தது. அந்த நேரத்தில் நான் பட்ட மனத்துன்பத்தை உனக்கு விவரித்துச் சொல்ல முடியாது. அநியாயமாய் அகங்காரத்துடன் உன்னை வருத்தப் படுத்தியதற்குப் பிரதிபலனாய் நாலுபேருக்கு முன்னால் உன்னைத் திரும்பவும் விவாகம் செய்துகொண்டு

எல்லா விதத்திலும் உன்னை சுகப்படுத்த வேண்டும் என்று தோன்றிற்று. ரேகா! திருமணத்தைப்பற்றி உனக்கு இருந்துவந்த அழகிய கனவைப் பற்றி விவரித்து நீ எழுதியிருந்த கடிதத்தை நான் படித்தேன். அதைப் படித்த பிறகு உன்னை என் வாழ்க்கையில் வர வேற்க வேண்டும் என்றும் உன்னை அருமையாய் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தோன்றத் தொடங்கிற்று. இன்னும் கொஞ்ச நாள் இருந்தால் அப்படித்தான் நடந்திருக்குமோ என்னவோ? ஆனால் ஒன்றையடுத்து இன்னொன்றாய் எதிர்பாராதச் சம்ப வங்கள் நடந்து என்னைத் திணறடித்து விட்டன. நீ விஸ்வநாதனின் மகள் என்று தெரிந்தது. பணக்காரப் பெண்ணை மனைவியாக்கிக் கொள்வது என் கற்பனைகளுக்கே எதிர்ப்பதமானது. அதிர்ஷ்ட உன்னை என் வாழ்க்கையில் எட்டுவது போலவே எட்டச் செய்துவிட்டு அதற்குள் தொலைவிற்குத் தள்ளிவிட்டது. சங்கரனின் தங்கைமகளாய் உன்னை என்னால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் லட்சக் கணக்கான சொத்துக்களுக்கு அதிபதியாய் விஸ்வ நாதனின் மகளாய் உன்னை என் வாழ்க்கையில் பிணைத்துக் கொள்வது கஷ்டம் என்று தோன்றிற்று. அதனால்தான் சேகர் விஷயத்தில் உனக்குச் செய்ய முடிந்த உதவிகளைச் செய்யத் தோன்றிற்று. நம்மிரு வருக்குமிடையே தீய கனவாய் நிகழ்ந்த இச்சம் பவத்தை நீ முயன்றால் மறந்து போக முடியாத அளவிற்குப் பெரிய விஷயம் ஒன்றுமில்லை. இப் பொழுது நீ கமலனுக்கு எல்லா விதத்திலும் தகுந்தப் பெண். அவசரப்படாமல் நன்றாய் யோசித்து இந்த முடி விற்கு வரச்சொல்லி வேண்டிக் கொள்கிறேன்.''

ரேகா நிசப்தமாய் கேட்டுக் கொண்டிருந்தாள். விமலன் வாயிலிருந்து சரளமாய் வெளி வந்த இந்த

வார்த்தைகள் ரேகாவின் மனதிலிருந்த அமைதியின்மையையும் ரோஷத்தையும் வினோதமாய் சாந்தப்படுத்தின. ரேகா விரும்புவது எதுவோ விமலனின் வார்த்தைகளில் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவற்றின் அமைப்பு திருப்திகரமாய் இல்லை.

விமலன் அவளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றெண்ணினானாம்! ஆனால் இந்தப் பணம் குறுக்கிட்டு விட்டதாம்! ரேகாவுக்கு இது திருப்திகரமாய் இல்லை. அவள் அனுபவித்துக்கொண்டிருந்த இந்த ஊமை வேதனையை அவன் புரிந்துகொள்ளவில்லை என்று நன்றாகவே தெரிந்தது. அவள் நடந்ததையெல்லாம் மறந்துபோய்விட வேண்டுமாம். கமலனை பண்ணிக் கொள்ள வேண்டுமாம்! பரிகாரத்தை எவ்வளவு சுலபமாய் காட்டிவிட்டான்!

அதனால் ரேகா இவ்வாறு சொன்னாள்—

"உங்கள் ஆசை எனக்கு புரிந்துவிட்டது. பணக்கார பெண்ணை மனைவியாய் ஏற்றுக்கொள்வதற்கு உங்கள் அகங்காரம் குறுக்காய் வருகிறது. அதே சமயத்தில் இந்தச் சொத்து போய்விடுமோ என்ற பயம்! அதனால் தான் கமலனைப் பண்ணிக்கொள் என்கிறீர்கள். உங்கள் தன்மானத்தைக் கூட விட்டுவிட்டுக் கெஞ்சுகிறீர்கள். அப்படித்தானே?"

விமலனின் முகத்தில் ரத்தம் குப்பென்று பொங்கிற்று. ரேகா எழுந்து நின்றாள்—எந்த தயக்கமும் இல்லாமல் சொல்லிவிட்டாள்.

"நீங்கள் என்னை மனைவியாய் ஏற்றுக்கொள்ள நினைத்தீர்களா? என் பணம் குறுக்கிட்டதா? ஐயோ பாவம்! போகட்டும், 'கொஞ்சம் உங்கள் பாதத்தடியிலாவது எனக்கு இடம் கொடுங்கள்'—என்று உங்கள் காலில் விழட்டுமா? அப்பொழுது கருணை காட்டுவீரா?

ஐயோ! என்ன முயன்றாலும் என் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர் வரமாட்டேங்கிறதே! இல்லாவிட்டால் தம்பிக்காகச் செய்கிற உங்கள் தியாகத்திற்கு ஆனந்தக் கண்ணீரை வடித்து உங்கள் கால்களைக் கழுவியிருப்பேன்!''

''ரேகா'' என்றான் அவன் முகம் சிவக்க.

ரேகா அவன் கோபத்தை இன்னும் தூண்டிவிடுவது போல சொன்னாள்—

''உங்கள் ஆலோசனைகள், அறிவுரைகள் எதுவும் எனக்குத் தேவை இல்லை. என் கணவராய் எப்படிப்பட்ட நபரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்று எனக்குத் தெரியும். நிஜந்தான். நீங்கள் சொன்னது போல நான் இப்பொழுது லட்சக்கணக்கான சொத்துக்களுக்கு வாரிசு. இவ்வளவு பணம் இருக்கிற நான் எந்த விதமான கவர்ச்சியும் இல்லாத விமலனைப் பண்ணிக்கொள்ள வேண்டிய தலையெழுத்து எதுக்கு? இதற்கு முன்னால் நீங்கள் அந்தஸ்துக்குப் பொருத்தமில்லாதவள் என்று மறுத்தீர்கள். இப்பொழுது நீங்கள் எனக்குப் பொருத்தமில்லாதவர் என்கிறேன் நான். சரிதானே?''

விமலனின் பலமான கை சீற்றம் கொண்ட பாம்பைப்போல ரேகாவைப் பிடித்துக்கொள்வதற்கு முன் நோக்கி வந்தது. அதை கவனித்த ரேகா மின்னலாய் தொலைவிற்கு ஓடிப்போய் நின்றுகொண்டாள்.

''உங்கள் அண்ணன் தம்பிகள் இருவருக்கும் ஒரு பெரிய கும்பிடு. நான் நாளைக்கு அவரோடு கூட ஊருக்குப் போய்விடப் போகிறேன். இப்பொழுதே என் மனது சில காரணங்களால் தூள்தூளாகிவிட்டது. இனி நான் திரும்பி வரமாட்டேன். நீங்கள் திரும்பவும் உங்கள் கமலனுக்காக வேட்டையைத் தொடங்குவது நல்லது.

நான் ரொம்ப அதிர்ஷ்டசாலியாய் இருப்பதால் உங்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாமல் தப்பினேன்.''

ரேகா போக முயன்றவள் நின்று, திரும்பி பார்த்துச் சொன்னாள் —

''மறந்துவிட்டேன், கொஞ்சம் முன்னாடி நீங்கள் சேகருக்காக ஏதோ செய்ததாய் சொன்னீர்கள். அதன் விலை என்ன என்று சொல்லுங்கள், நாளைக்குப் போவதற்கு முன்னால் தந்துவிட்டு போகிறேன். உங்களோடு எந்த லாவா தேவியும் வைத்துக்கொள்ள எனக்கு பிடிக்கவில்லை. நீங்கள் சாதுரியமானவர். அதை எப்படியாவது திருப்பியடித்து விடுவீர்கள்'' —மள மளவென்று சொல்லிவிட்டு ரேகா ஓட்டமும் நடையுமாய் வராந்தாவிற்குள் போய்விட்டாள். விமலன் சலனம் இல்லாமல் நின்றுவிட்டான். அவன் நவநாடிகளும் குறுகிப்போய்விட்டாற்போல இருந்தது.

வீட்டிற்குள் வந்து கதவைச் சாத்திவிட்ட ரேகாவுக்கு தாங்க முடியா துக்கம் வந்துவிட்டது தன் வார்த்தைகள் அவனைப் புண்படுத்தியதற்கு திருப்தியாய் இருந்தாலும் முற்றிலுமாய் சந்தோஷம் ஏற்பட வில்லை. அவனைப் பழி தீர்த்துக் கொண்டது உண்மையே. ஆனால் அது நிம்மதியாய் இல்லை. கைகசு அகப்பட்ட ஒரே ஒரு அவகாசத்தைக் கைநழுவ விட்டுவிட்டாற்போல இருந்தது. மெதுவாய் நல்ல வார்த்தைகளோடு, ''விமல்! விஷயம் இது'' என்று விவரித்திருந்தால் ஏற்றுக் கொண்டிருப்பானோ என்னவோ?

சிலையாய் நின்றுவிட்ட விமலன் கொஞ்ச நேரங் கழித்து வந்து சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்து

கொண்டான். அவன் கைகள் நடுங்கத் தொடங்கின. அவன் கோபத்தையும் ஆவேசத்தையும் ரேகாவைப் போல வேறு யாராலுமே இப்படித் தூண்டிவிட்டிருக்க முடியாது.

விமலன் கண்டிப்பாய் திரும்பி வருவான் என்றும், கதவைத் தட்டியதுமே திறந்து, அவன் கைகளில் சரிந்து போய் தன் மனதில் உள்ளதையெல்லாம் கக்கிவிட வேண்டும் என்றும் நம்பிக்கையோடும் ஆசை யோடும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரேகாவுக்குக் கொஞ்ச நேரங்கழித்து வாசல் கேட்டைத் திறந்த சப்த மும் தொடர்ந்து மூடிய சப்தமும் கேட்டது. விமலன் போய் விட்டான்.

ரேகாவின் இதயம் ஏமாற்றத்தால் தவித்துக் கொண்டிருந்தது. அவளால் தன்மானத்தை விட முடி யாதது போலவே அவன் அகங்காரத்தை மறக்க முடிய வில்லை. இருவரும் நெருங்குவது என்பது நடக்காத காரியந்தானோ? என்றெண்ணிக் கொண்டாள் ரேகா.

29

"நின்றாய் யோசித்துக் கொள்ளம்மா. நான் போகிற அந்த இடம் உன்னைப் போன்ற இளம் வயதினருக்குச் சரிப்பட்டு வராதும்மா" விஸ்வநாதன் ரேகாவிடம் நயந்து சொன்னார்.

அவர் அன்று மாலையில் போகவிருந்தார். எல்லா விஷயங்களிலும் எல்லா ஏற்பாடுகளையும் பண்ணி விட்ட அவரால் ரேகா விஷயத்தில் மட்டும் ஒன்றும்

பண்ண முடியாமல் போனது அதிருப்தியைத் தந்தது. ரேகா இப்போதைக்குத் திருமணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். ரஞ்சிதாவையும் சொத்தையும், லலிதாவையும் எல்லாவற்றையும் ரேகாவிடம் ஒப்படைத்து விட்டார் அவர். விமலன் மேலிருந்து இவைகளைப் பாத்துக் கொள்வான்.

நேற்றுவரை நன்றாகவே இருந்த ரேகா காலையில் திடீரென்று என்னவாயிற்றோ தெரியாது. தானும் அவரோடு வருவதாய் சொன்னாள். அவர் காரணம் கேட்டார். அவள் சரியாய் பதில் சொல்லவில்லை.

காலையில் காபி குடித்துக் கொண்டிருக்கையில் விமலன் போன் பண்ணினான். நேற்றிரவு லலிதா ஊருக்குப் போய்விட்ட சங்கதியைச் சொன்னான். தான் வீட்டில் இல்லாத சமயத்தில் வந்து விட்டுப் போனாள் என்றும் தனக்கு எழுதிய கடிதத்தோடு கூட அவருக்கும் ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறாள் என்றும் அதைக் கொடுத்தனுப்புவதாகவும் சொன்னான்.

அவர் பெருமூச்சு விட்டார்.

''அந்தக் கடிதத்தில் முக்கியமான விஷயம் ஏதாவது இருக்கா விமல்?'' என்றார் அவர்.

''இல்லை. சாதாரண விஷயந்தான். உங்களைக் கஷ்டப்படுத்தியதற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டிருந்தாள்.''

பிறகு விஸ்வநாதன் ரேகா தன்னுடன் வருவதாய் சொன்ன விஷயத்தைச் சொன்னார். ரேகா கூட அவ்விடத்திலேயேதான் இருந்தாள்.

''பார் விமல்! நான் என்ன சொன்னாலும் கேட்க வில்லை. நீயாவது வந்து சொல்லு'' என்றார். விமல் பேசாமலிருந்தான். அதைக் கேட்டுவிட்டு அவன் எந்த விமரிசனமும் பண்ணவில்லை. விஸ்வநாதனுக்கு விமலனின் தோரணை கொஞ்சம் நிராசையை ஏற்படுத் திற்று.

விமலன் தான் வேலையாய் வெளியே போவதாகவும் பிற்பகலில் வருவதாகவும் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டான்.

ரேகா டிரைவர் வந்ததுமே தனக்கும் ரஞ்சிதாவுக்கும் கூட சீட்டுகளை ரிசர்வ் பண்ணச் செய்தாள்.

விஸ்வநாதன் ரேகாவை கிட்டே வரச்சொல்லி அழைத்தார்.

''பாரும்மா! கடைசி தடவையாய் சொல்கிறேன். நான் எவ்வளவோ கனவு கண்டு கொண்டிருந்த சேகரின் வாழ்க்கை அப்படி ஆகிவிட்டது. லலிதாவோ இப்படி இருக்கிறாள். ரஞ்சிதாவோ வாயில்லாத பெண்! குறைந்தபட்சம் நீயாவது எல்லோரையும் போல சுகமாய் சந்தோஷமாய் இருந்தால் எனக்கு ரொம்பவும் திருப்தி யாய் இருக்கும். குறைந்த பட்சம் எனக்காகவாவது இந்த பிரயாணத்தை விடு. உனக்கு இப்போதைக்கு மணம் செய்து கொள்ளப் பிடிக்கவில்லையென்றால் உன்னை பலவந்தம் செய்யவில்லை. என் உத்தேசப்படி விமலனுக்குதான் முதலிடம் என்றாலும் உனக்கு அந்த உத்தேசம் இல்லாவிட்டால் அந்தப் பேச்சை விடு. ஓரிரண்டு வருஷங்களில் உனக்குப் பிடித்த யாரையாவது பார்த்து மணம் செய்துகொள். நான் போகிற இடம் மனி தனுக்கு இன்னும் வைராக்கியத்தை ஏற்படுத்தும்.

வாழ்க்கை மீது இருக்கும் பாசத்தை விரட்டியடித்து, வைராக்கியத்தை வளர்க்கக்கூடிய நபர்களுக்கிடையே போய்க்கொண்டிருக்கிறேன். அங்கே உன் தந்தையாய், உன் நலனைக் கோருபவனாய் உன்னை என்னால் அழைத்துக் கொண்டு போக முடியாது. என் பேச்சைக் கேளும்மா, என் கண்ணில்லையா?''

ரேகாவின் கண்களில் நீர் சுரந்தது. தான் இங்கே யாருக்காக ஓடிப் போய்விட வேண்டும் என்று முயற்சிக் கிறாள் என்று இவருக்குத் தெரிந்தால் எவ்வளவு நன்றா யிருக்கும்!

''என்ன சொல்கிறாய்?'' ரேகாவைத் திரும்பவும் கேட்டார் அவர்.

ரேகா பதில் சொல்வதற்குள் போன் மணியடித்தது. விஸ்வநாதன் போனை எடுத்தார். மறுமுனையிலிருந்து யார் என்ன கேட்டார்களோ தெரியாது. அவர் புருவங்கள் முடிச்சேறின.

''ஆங்! ஆமாம். இங்கேயேதான் இருக்கிறாள். ஒரு நிமிஷம்'' என்று ரிசீவரை ரேகாவிடம் தந்துவிட்டு, ''யாரோ உன்னைக் கூப்பிடுகிறாங்கம்மா'' என்றார்.

ரேகாவின் மார்பு படபடத்தது. விமலனாய் இருக்குமோ? போனை எடுத்து, ''ஹலோ'' என்றாள். ஒரு வினாடிக்குப் பிறகு ரேகாவின் முகம் வெளுத்துப் போய்விட்டது. ''இதோ வருகிறேன். விலாசத்தைச் சொல்லுங்கள்'' என்றாள் தடுமாற்றத்துடன்.

30

இரவு வெகு நேரமாகிவிட்டது. ஆனாலும் விமலன் வீட்டில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் மனம் இதற்கு முன்னால் என்றுமே அனுபவித்திராத அளவிற்கு வேதனைமயமாய் இருந்தது. அதற்குக் காரணம் அன்று மாலையில் ஊருக்குப் போவதற்கு முன்னால் விஸ்வநாதனைச் சந்திக்க முடியாமல் போய்விட்டதுதான். பிற்பகலில் அவர் வீட்டிற்குப் போகலாம் என்றெண்ணிக் கொண்டிருந்தான். எதிர்பாராமல் புதிய கேசு ஒன்று வந்துவிட்டதால் முடியாமல் போய்விட்டது. மாலையில் ஸ்டேஷனுக்கு வருவதாய் போன் பண்ணினான். மாலையில் வேலை முடிந்ததும் அவசரம் அவசரமாய் ஸ்டேஷனுக்குப் போனான். அதற்குள் கோபாலன் வெளியே வந்துகொண்டிருந்தான். பிளாட்பாரத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அவனைத் தடுத்துவிட்டு ரயில் போய்விட்டதாய் சொன்னான். உண்மையில் அந்த சமயத்தில் விமலன் பட்ட வேதனையை விவரிக்க முடியாது. விஸ்வநாதன் கடைசி நிமிஷம் வரை காத்துக்கொண்டிருந்தார் என்றும் ஏதோ வேலை குறுக்கிட்டு விமலன் வராமலிருந்திருப்பான் என்றும், தான் ஊருக்குப் போனதுமே கடிதம் போடுவதாய் சொன்னதாகவும் சொல்லச் சொன்னதாய் தெரிவித்தான்.

'ரேகா என்ன சொன்னாள்?' என்று கேட்க வேண்டும் என்று தோன்றிற்று. ஆனால் வாயிலிருந்து வார்த்தைகள் பெயரவில்லை.

அவன் வீட்டிற்குத் திரும்பினான். ரேகா போய்விட்டாள். அவளைத் தடுத்து நிறுத்த முடியாமல் போய்

விட்டான். அவன் புத்திசாலித்தனமும் சாதுரியமும் எதற்குமே பயன்படாமல் போய்விட்டன. இந்த விஷயந் தான் அவனை வருத்தப்படுத்திக் கொண்டேயிருந்தது.

அப்படியே கொஞ்சநாள் வெளியூருக்கு எங்கே யாவது போய்விடவேண்டும் போலிருந்தது. அவனுக்கு அந்தச் சமயத்தில் தன்னைச் சுற்றிலும் பின்னிக் கொண்டிருந்த பொறுப்புக்களும், பண்ணவேண்டிய வேலைகளும் கூட வெறுப்பாய் இருந்தன. விமலன் எழுந்து சரியாய் உட்கார்ந்து கொண்டான்.

சாப்பாட்டு அறையில் விளக்கு எரிந்து கொண் டிருந்தது. அந்த வெளிச்சம் லேசாய் அடுத்த அறையி லும் கூட பரவிக் கொண்டிருந்தது.

நிமிர்ந்து பார்த்த விமலன் சட்டென்று நின்று விட்டான். சாப்பாட்டு அறையிலிருந்து அடுத்த அறைக்கு வரும் வாசலுக்கருகில், திரைச்சீலைக்குப் பக்கத்தில் யாரோ நின்று கொண்டிருந்தாற் போல உருவம் நகர்ந்தது. இருட்டில் உட்கார்ந்து கொண் டிருந்த விமலனுக்கு இருட்டும் வெளிச்சமும் கலந்த அந்த இடத்தில் கதவிற்கருகில் நின்றுகொண்டிருந்தது யார் என்று சட்டென்று தெரியவில்லை.

"யாரு?" என்றான்.

அந்த உருவம் சலனமில்லாமல் அப்படியே நின்று கொண்டிருந்ததே தவிர எந்த பதிலும் இல்லை.

"யாரது?" விமலன் இரைந்து கேட்டான். அதற்கும் பதில்லை.

விமலனின் கண்கள் சுறுசுறுப்பாயின. அவன் எழுந்து விளக்கைப் போட்டான். எதிரே திரைச்சீலைக்

குப் பக்கத்தில், சுவற்றில் சாய்ந்துகொண்டு, பொம்மை யாய் ரேகா நின்று கொண்டிருந்தாள். விமலனால் தன் கண்களையே தான் நம்பமுடியவில்லை.

ரேகாவை அங்கே பார்த்தபொழுது, காலையி லிருந்து தன்னை வாட்டிக் கொண்டிருந்த யோசனைகள் உயிர்பெற்று அங்கே நின்று பிரம்மையைத் தோற்று விக்கிறதோ என்று தோன்றத் தொடங்கிற்று.

''நீயா?'' என்றான்.

''விமல்'' கூப்பிட முடியாமல் கூப்பிட்டாற்போல இருந்தது. விமலனுக்கு ஒரே பாய்ச்சலாய் போய் ரேகாவைக் கிட்டே இழுத்துக் கொண்டு மார்போடழுத் திக்கொள்ள வேண்டும் போலிருந்தது. ஆனால் அவ னால் எப்படித்தான் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந் ததோ அவனுக்கே தெரியவில்லை. ஓரடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. சிலையாய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். ரேகா மெதுவாய் அவனை நோக்கி அடியெடுத்து வைத்தவள் பாதியில் நின்றுவிட்டாள்.

''விமல்! நான்...நான்'' அவளால் அதற்குமேல் பேச முடியவில்லை.

ரேகாவின் தோற்றத்தைப் பார்த்தபொழுது அவனுக்கு அவள் ஏதோ சொல்லத் துடிதுடித்துக் கொண்டிருந்தாற் போலவும் ஆனால் வார்த்தைகள் சரியாய் அமையாமல் தடுமாற்றமடைந்து கொண்டிருந் தாற்போலவும் தோன்றிற்று. விமலன் அவளை நெருங்கி வந்தான்.

''நீ...நீ... ஊருக்குப் போகவில்லையா?''

ரேகா 'இல்லை' என்று தலையாட்டினாள்.

''ஏன்?''

ரேகா பதில் பேசவில்லை.

''ஏன் பேசமாட்டேங்கிறாய்? ஏன்?''

''விமல்!''

''போகாவிட்டால் சரி, அது உன்னிஷ்டம்! ஆனால் இங்கே எதுக்கு வந்தாய்? யாரைக் கேட்டுக் கொண்டு வந்தாய்?''

ரேகா பதில் சொல்ல முடியாதவளைப்போல அவன் முகத்தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விமலன் கேலியாய், ஏளனம் மிகுந்த குரலில் கேட்டான். ''என் பாதத்தடியில் கொஞ்சம் இடம் தரச் சொல்லிக் கேட்பதற்காக வந்தாயா? அல்லது உன் கண்ணீரால் என் பாதங்களைக் கழுவலாம் என்று வந்தாயா?''

''விமல்!'' ரேகாவிடம் ரோஷம் புஸ்ஸென்று எழும் பிற்று.

''சட்! அந்தப் பெயரில் என்னைக் கூப்பிடாதே. இன்னும் நமக்குள் அவ்வளவு உரிமை இருக்கிறதா? போ மரியாதையாய்! முன்பே சொல்லிவிட்டேன். இங்கிருந்து இந்த நிமிஷமே போய்விடு. நான் இப் பொழுது மனிதன் இல்லை, மிருகம். நான் என்ன பண் ணுவேன் என்று எனக்கே தெரியாது. நேற்றெல்லாம் நான் எவ்வளவு நரகத்தை அனுபவித்தேன் என்று உனக்குத் தெரியுமா? நான் என்றுமே அனுபவித்திராத

அளவிற்கு வேதனைகளைப் பட்டிருப்பேன். இன்னும் ஒரு நிமிஷம் நீ இருந்தாயானால் அதையெல்லாம் உன் மீது பழிவாங்கிக் கொண்டு விடுவேன்.''

ரேகா சகல சங்கோஜங்களையும் ஒரேயடியாய் உதறிக்கொண்டு சட்டென்று அவள் தோள்களைப் பிடித்துக்கொண்டு அவன் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டாள்.

''விமல்! என்னை மன்னித்து விடுங்கள். என் மனது ஏற்கனவே பீதியடைந்து போயிருக்கிறது. நீங்களும் என் மீது கோபம் கொண்டால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். நான் எவ்வளவு ரோஷத்தையெல்லாம் கொன்று கொண்டு, தன்மானத்தை உதறித் தள்ளி விட்டு உங்களிடம் இப்படி வந்திருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. நேற்றிரவெல்லாம் நான் உங்களைவிட ஆயிரம் மடங்கு வருத்தப்பட்டிருப்பேன்''

விமலன் ரேகாவின் தோளைப் பிடித்து அப்பால் தள்ளிவிடப் போனான். ஆனால் ரேகா அவனுக்கு இன்னும் கிட்டேவந்து நெருக்கமாய் நின்றாள்.

''விமல்! நான் சொல்வதைப் பொறுமையாய் கேளுங்கள். கேட்ட பிறகு பேசுங்கள்'' கெஞ்சுவது போல் சொன்னாள் ரேகா.

''இன்னும் நீ சொல்ல வேண்டியதும், நான் கேட்க வேண்டியதும் கூட பாக்கி இருக்கிறதா?'' கடுமையாய் கேட்டான் அவன்.

''இருக்கிறது விமல்! மேரியிடமிருந்து எனக்கு போன் வந்தது. நான் போனேன். அவளுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. பிரசவம் மிகக் கஷ்டமாகி

விட்டதாம். நான்கு நாள் போனால்தான் மேரி பிழைத்துக் கொள்வாளா மாட்டாளா என்று சொல்ல முடியும் என்று சொல்லி விட்டார்கள் டாக்டர்கள். சேகர் போன செய்தியைக் கேட்டதுமே மேரி மயக்கமாய் விழுந்து விட்டாளாம். அதிலிருந்து ஆள் சரியாகவே இல்லையாம்.''

ரேகா மளமளவென்று சொல்லிக் கொண்டிருந்த இந்த வார்த்தைகளைக் கேட்டதுமே விமலன் முகத்தில் சூழ்ந்துகொண்டிருந்த கடினம் இளகிவிட்டது. ரேகாவின் வார்த்தைகளை கவனமாய் கேட்கத் தொடங்கினான்.

''விமல்! விதியின் விளையாட்டைப் பாருங்கள்! அந்த போன் நான் ஊருக்குப் போன பிறகு வந்திருந்தால்? நான் போய் மேரியின் நிலைமையைப் பார்த்து விட்டு வந்த பிறகு என் கால்களும் கைகளும் ஓடவே இல்லை. மேரியையும் அந்தக் குழந்தையையும் விட்டு விட்டு எப்படிப் போவேன்? பிரயாணத்தை கேன்ஸல் பண்ணிக் கொண்டுவிட்டேன். நான் அவரோடு வருவது அவருக்கே முதலிலிருந்தே பிடிக்கவில்லை. அவர் இச் செய்தியைக் கேட்டதுமே சந்தோஷப்பட்டார்.''

''சரி, இதையெல்லாம் என்னிடம் எதற்காகச் சொல்லுகிறாய்? எனக்கென்ன சம்பந்தம் இருக்கிறது இதில்?''

''விமல்! நான் இப்பொழுது உங்களிடம் லட்சக் கணக்கான சொத்துக்களுக்கு வாரிசான விஸ்வநாதனின் மகளாய் வரவில்லை. சங்கரனின் தங்கை மகளாய் உங்களை உதவி கேட்பதற்காக வந்திருக்கிறேன். அதை நீங்கள் செய்து தீரவேண்டும். மறுக்கக் கூடாது.''

விமலனின் கைகள் ரேகாவை விட்டுவிட்டன.

''ஓஹோ?'' என்றான்.

அந்த வார்த்தையில் ஆயிரம் கேலிகளும் பழிப்புக் களும் தென்பட்டன ரேகாவுக்கு. ஆனாலும் சரி, ரேகா பொருட்படுத்தவில்லை.

விமலன் போய் சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

''அதென்ன உதவி என்று சொல்லுங்கள்'' என்றான்.

''விமல்...'' தொடங்கிய ரேகா நின்றுவிட்டாள்.

''சித்தம்! சொல்லுங்கள்'' என்றான். விமலன் மனதில் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வரை சூழ்ந்து கொண்டிருந்த சூனியம் மாயமாகி விட்டது. ரேகாவின் உருவம் இந்த வீட்டிற்கும் தன் மனதிற்கும் கூட ஒளி யைத் தந்துகொண்டிருந்தாற்போல தோன்றிற்று.

ரேகா மெல்லிய குரலில் நிதானமாய் சொன்னாள்.

''விமல்! நீங்கள் நேற்று என்ன சொன்னீங்க? 'நான் விஸ்வநாதனின் மகளாய் இல்லாமல் சங்கரனின் தங்கை மகளாகவே இருந்திருந்தால் கண்டிப்பாய் ஏற்றுக் கொண்டிருந்திருப்பேன்' என்று தானே சொன்னீங்க? விமல்! நான் இப்பொழுதும் சங்கரனின் தங்கை மகள்தான்! அம்மாவுக்கும் சேகருக்கும் உப யோகப்படாத பணத்தை நான் ஏற்றுக் கொள்வேன் என்றும், அதன் மூலம் சந்தோஷமாய் இருப்பேன் என்றும் நீங்கள் எப்படி எண்ணிவிட்டீங்க? அவர் சொத்தில் ஒவ்வொரு சல்லிக்காசும் லலிதாவுக்கும் ரஞ்சிதாவுக்குந்தான் சேரும். நான் சாதாரண ரேகா

தான். விமல்! நீங்கள்...நீங்கள் என்னை ஏற்றுக் கொண்டால் சேகருக்கு நான் தந்த வாக்குறுதியைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்னால்.''

''ஆஹா! என்ன...'' விமலன் ரேகாவைப் பார்த்து ஏதோ சொல்லப் போனான்.

ரேகா சட்டென்று அவன் வாயைப் பொத்தி விட்டாள்.

''விமல்! போதும்! இன்னும் கேலி அம்புகளை வீசி எறியாதீங்க என்மேல்! நேற்றிரவு நான் சொன்ன வார்த்தைகளுக்குப் பழிவாங்க நினைக்காதீங்க. நான் உங்களைப் புண்படுத்தியிருந்தால் மன்னித்து விடுங்கள். அதற்கு ஆயிரம் மடங்கு நானும் கூட வருத்தப்பட்டு விட்டேன் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.''

விமலன் வெகுநேரம் ரேகாவையே கூர்ந்து பார்த்து விட்டு பிறகு தீவிரமாய் கேட்டான்.

''உம்! அப்படின்னால் சேகரின் மகனை வளர்க்க வேண்டிய நிபந்தனையின் பேரில் என் மனைவியாவதற்கு ஒப்புக் கொள்கிறாய் என்று சொல்லு.''

''அது நிபந்தனை இல்லை, வேண்டுகோள்.''

''சேகரின் மகனை வளர்ப்பதற்கு என் உதவி எதற்கு? அந்தக் காரியத்தை நீயே செய்யலாமே?''

''செய்யலாம். ஆனால் அதில் நிறைய கஷ்டங்கள் உள்ளன. கல்யாணமாகாத பெண் நான். ஒரு குழந்தையைக் கொண்டுவந்து வளர்த்தால் உலகம் சும்மா

யிருக்குமா? என்னென்ன வார்த்தைகளைச் சொல்லும்! அதுமட்டுமில்லை, ஆண் திக்கில்லாமல் தாயால் வளர்க்கப்பட்ட குழந்தைகள்—முக்கியமாய் ஆண் குழந்தைகள் எப்படி கெட்டுப் போவார்கள் என்பதற்கு சேகரின் வாழ்க்கையே எடுத்துக்காட்டு. உங்கள் துணையோடு சேகரின் மகனை நல்ல பண்புள்ள மனிதனால் வளர்த்து ஆளாக்க முடிந்தால் சேகரின் ஆத்மாவுக்கு உண்மையிலேயே சாந்தி ஏற்படும்.''

விமலன் கொஞ்ச நேரம் யோசனையில் மூழ்கி விட்டுப் பிறகு சொன்னான்—

''சரி! ஒப்புக்கொள்கிறேன் என்று வை! ஆனால் பலனை எதிர்பார்க்காமல் நான் என்றுமே எந்தக் காரியத்தையும் பண்ணமாட்டேனே! இதற்கு எனக் கென்ன பரிசு?''

ரேகா ஒரு நிமிஷம் நன்றாய் யோசித்தாள். பிறகு உண்மையான மனதுடன் சொன்னாள்—

''வாழ்நாளெல்லாம் நீங்கள் சொன்னபடி கேட் கிறேன். லட்சிய மனைவியாய் உங்கள் அபிப்பிராயங் களுடன் ஒத்துப்போய் உங்கள் அடிகளைப் பின்பற்றி நடந்துகொள்வேன்.''

விமலன் ஆச்சரியப்படுவதுபோல நடிக்கபோனான். ஆனால் முடியவில்லை. பக்கென்று சிரித்துவிட்டான். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வரை அவன் மன மெல்லாம் பரவியிருந்த எரிச்சல், கோபம், எல்லாம் இருந்த இடம் தெரியாமல் செல்லாச் செதிராய் போய் விட்டன.

அவன் ரேகாவின் கைகளைப் பிடித்து கிட்டே இழுத்துக் கொண்டான்.

''சரி! உன் நிபந்தனைக்கு நான் ஒப்புக்கொள்கிறேன். இதை ஒப்புக்கொள்வதற்கு முன்னால் நான் ஒன்று சொல்கிறேன். அதை செய்கிறேன் என்று வாக்குத் தரணும் நீ எனக்கு.''

அவனுக்கு மிக நெருக்கமாய் வந்துவிட்ட ரேகா நிமிர்ந்து அவன் கண்களைப் பார்த்துக்கொண்டே சொன்னாள்—

''என்ன அது? கண்டிப்பாய் செய்கிறேன். எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் சரி.''

''பெரிய கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் கொஞ்சம் சிரமமானது. மிக நுட்பமாய் நடந்துகொள்ள வேண்டிய விவகாரம். என்னை இந்த சங்கடத்திலிருந்து விடுவிக்க உன் ஒருத்தியால்தான் முடியும்.''

''அதென்ன?'' கேட்டாள் ரேகா.

''கமலனிடம் நம்ப விஷயத்தை எடுத்துச் சொல்லுவது! எப்படி சம்மதிக்க வைப்பாயோ, எந்த விதமாய் நயந்து சொல்வாயோ அது உன்னிஷ்டம். அவன் மனது கொஞ்சமும் வருத்தப்படக்கூடாது. நான் அவனை மோசம் பண்ணீ விட்டேனோ என்ற தவறான அபிப்பிராயம் வந்துவிடக்கூடாது. அவனுக்கு அந்த விதமாய் நீ நயமாய் சொல்ல வேண்டும். ரேகா! அவன் அவ்வளவு திடீரென்று ஏன் போனான் தெரியுமா? நம்ப கல்யாண போட்டோக்கனை பார்த்துவிட்டான். எனக்கு அந்த விஷயம் வீட்டிற்குத் திரும்பி வந்த பிறகுதான் தெரிந்தது. அவன் எந்த விதமான மனஸ்தாபமும் இல்லாமல் திரும்பவும் என்னோடு பழைய மாதிரி பேசும் வரை என் மனம் நிம்மதியாய் இராது. அவன் மீது

உனக்கு இருப்பது வெறும் சிநேகம் மட்டுமே என்பதைத் தெரிந்துகொண்டேன். அதனால்தான் உன்னைத் தயக்கமில்லாமல் ஏற்றுக்கொள்ள முடிகிறது என்னால்.''

ரேகாவின் கண்கள் திருப்தியோடு மின்னின. பரிவோடு சொன்னாள் —

''இந்த சங்கடம் உங்களுக்கு மட்டுந்தானா? எனக்கு மட்டும் இல்லையா? நம்ப சங்கடம் என்று சொல்லுங்கள். கமலனுக்கு நான் நயமாய் எடுத்துச் சொல்கிறேன். அந்த தைரியம் எனக்கு இருக்கிறது. நீங்கள் அந்த விஷயத்தில் கவலையில்லாமல் இருங்கள். கமலனுக்கு வாழ்நாளெல்லாம் நல்ல சிநேகிதியாய் இருந்துகொள்ள விரும்புகிற எனக்கு மென்மையான அவன் மனது வருத்தப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது முதல் கடமை! அதுமட்டுமில்லை, அவன் மனநிலையை புரிந்துகொண்டு எல்லா விதத்திலும் சுகப்படுத்தக்கூடிய சரியான பெண்ணைப் பார்த்து அவனுக்கு விவாகம் செய்துவைக்கும் பொறுப்புகூட என்னுடையதுதான்.''

விமலனின் கைகள் ரேகாவின் தலையை இழுத்து மார்போடணைத்துக்கொண்டன.

''அப்படீன்னால் நாளைக் காலை பிளேனுக்கு டிக்கெட் புக் பண்ணச் செய்கிறேன். ஐதராபாத்திற்குப் போகிறாயா?''

ரேகா 'போகிறேன்' என்று தலையாட்டினாள்.

''என்ன யோசிக்கிறாய்? உன் யோசனைகள் இங்கே இல்லை போலிருக்கே?'' அவள் தோள்களைப் பிடித்து குலுக்கிக்கொண்டே கேட்டான் விமலன்.

ரேகாவின் பார்வை விமலனின் முகத்தின் மீது நிலைத்தது.

''நீங்கள் எனக்கு அநியாயம் செய்துவிட்டதாய் உங்கள் மனதிற்குள்ளேயே மருகிப்போய்க் கொண்டிருப்பதற்கு காரணமான அச்சம்பவம் எனக்கு இந்த விதமாய் சுவர்க்கமாய் மாறிவிடும் என்று நான் கனவிலும் கருதியிருக்கவில்லை. இந்த பச்சாதாபம் மட்டும் உங்களிடம் இல்லாமலிருந்திருந்தால் எனக்கு இவ்வளவு உதவி பண்ணியிருக்க மாட்டீங்க. உங்கள் குளிர்ந்த நட்பு மட்டும் எனக்குக் கைகொடுக்காமலிருந்திருந்தால் நான் இவ்வளவு குழப்பத்தையும் தாங்கிக்கொண்டிருந்திருக்க மாட்டேன். எப்பொழுதோ பைத்தியம் பிடித்திருக்கும் எனக்கு. அந்த சம்பவம் அநியாயம் என்ற உருவில் என்னை ஆட்கொண்ட அதிர்ஷ்டம்! இல்லை என்று உங்களால் மறுக்க முடியுமா?''

''ரேகா!'' விமலன் முகத்தில் ரத்தம் குப்பென்று பரவிற்று.

''எங்கே அந்த போட்டோக்கள்? ஒரு முறை நான் பார்க்கிறேன். இந்தக் கனவிற்கு ஆதாரமான அவற்றை பத்திரமாய் எடுத்து வைத்துக் கொள்கிறேன். அவைகளை எனக்குத் தந்துவிடுங்கள். நான் வைத்துக் கொள்கிறேன், திரும்பவும் எதிர்காலத்தில் எப்பொழுதாவது நீங்கள் ''நீ யார் எனக்கு?'' என்று டபாய்க்க முடியாமல்!''

விமலன் ரேகாவை விட்டான். வெகு நாட்களுக்குப் பிறகு அவன் முகத்தில் குறும்புத்தனத்தோடு கூடிய சிரிப்பு மின்னிற்று.

''மாடியில் என் பீரோவில் இருக்கிறது போ! போய் எடுத்துக்கொள்! உம், ஓடு! இல்லாவிட்டால் இப்பொழுதே சொல்லிவிடுவேன் அந்த வார்த்தைகளை'' என்றான்.

ரேகா எழுந்து படிக்கட்டை நோக்கி நடந்தாள்.

விமலன் அதற்குள், ''நில்'' என்றான்.

ரேகா நின்றாள்.

''இந்தா சாவிக்கொத்து! அதைப் பூட்டியிருக்கிறேன்'' என்று ஜேபியிலிருந்து சாவிக்கொத்தை எடுத்துத் தந்தான்.

ரேகா அவனிடம் வந்து கையை நீட்டினாள்.

''கையில் தருவதா? ஊஹூம்! நான் கொஞ்சம் பழங் காலத்து ஆள்!'' விமலன் ரேகாவின் கையைப் பிடித்து கிட்டே இழுத்துக் கொண்டான். புடவைத் தலைப்பைப் பிடித்து, சாவிக்கொத்தை அதில் முடிந்தான்.

ரேகா எழுந்து போனாள்.

கொஞ்ச தூரம் போனதுமே விமலன் பின்னாலிருந்து திரும்பவும் ''நில்'' என்றான்.

ரேகா நின்றுவிட்டாள். ஆச்சரியமடைந்தவளாய் திரும்பி பார்த்தாள்.

விமலன் சோபாவிலிருந்து எழுந்து வந்தான்.

''வா, இருவரும் போகலாம்'' என்றான்.


''ரேகா! அழகிய கனவு, எதிர்காலம், அதிர்ஷ்டம் என்று ஏதேதோ சொல்கிறாயே, அவைகளை நோக்கி நான் உன்னை இப்படி அழைத்து செல்ல வேண்டும்! இந்த நிமிஷத்திலிருந்து உன் வாழ்க்கையில் எதற்குமே குறை இருக்கக்கூடாது. நீ 'அதிருப்தி' என்ற பதத்தையே

மறந்து போய்விட வேண்டும். எதற்குமே வருத்தப் படக்கூடாது. பரிபூரணமான சுக— சந்தோஷங்களுடன் சிரித்துக்கொண்டும், துள்ளிக்கொண்டும், என்னையும் அதில் இழுத்து, சந்தோஷமாய் இருந்துகொண்டு அதில் பாதியை எனக்கும் பங்கிட்டு தந்துகொண்டிருக்க வேண்டும். இனிமேல் நீ எப்பொழுதும் அந்த விதமாய் இருக்கும்படியாய் பார்த்துக்கொள்வது வாழ்க்கையில் என் முதல் கடமை என்று நான் பாவிப்பதாய் சொன் னால் நீ நம்புவாயா?''

ரேகாவின் கை விமலனின் கழுத்தை சுற்றிலும் படிந்தது. முகத்தை அவன் மார்பில் புதைத்துக் கொண்டாள். அவள் கண்கள் தன்னையறியாமல் குளமாகிவிட்டிருந்தன. விமலன் அவளை மானசீகமாய் கஷ்டங்களிலிருந்தும் பிரச்சனைகளிலிருந்தும் பயங்களி லிருந்தும் உறுதியான தன் கைகளால் தூக்கி நிறுத்தினாற் போல தோன்றிற்று.

வாழ்க்கையில் இவ்விதமாய் சிநேகம், அன்பு நிறைந்த கை துணையாய், நிழலாய் நின்றால் அந்த வாழ்க்கை எவ்வளவு நன்றாய் இருக்கும்! அந்த வாழ்க்கைக்கு எவ்வளவு நிறைவு கிட்டும்!

ரேகாவுக்கு இப்பொழுது நிறைவு கிட்டினாற் போலிருந்தது. வாழ்க்கையில் முதல் முதலாக சந்தோ ஷத்தையும், நிம்மதியையும் அனுபவித்துக்கொண்டிருந் தாற்போல உணர்ந்த அவள் கண்களை மூடிக்கொண் டாள் தன்மயத்துடன்....


கனவுத்தீவு
2 ஆம் பாகம்
எஸ்.டேவிட் ஜெரோம்தாஸ்
சுசீலா கோகுல்நாத்